32°c/24°c

# உதயன்

■ பதிப்பு: ★ ■ விலை: ரூபா 30 | ■ சுடர் 28 ■ கதிர் 125 | ■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 18, ஞாயிறு 31.03.2013 | UTHAYAN - A Lively National Tamil Daily Website: www.onlineuthayan.com




# கிளிநொச்சியில் நேற்று காட்டுமிராண்டித்தனம்

படங்கள் 2ஆம் பக்கத்தில்

## கூட்டமைப்பு எம்.பிக்களை இலக்கு வைத்து கல்வீச்சு

### சிங்கக் கொடிகளுடன் வந்தவர்கள் வன்முறை

கிளிநொச்சி, மார்ச் 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியில் நேற்று நடத்திய கூட்டத்தின் மீது காடையர்கள் சிலர் திடீரென கற்களை வீசித் தாக்கினர். சிங்கக் கொடிகளுடன் ஊர்வலமாக வந்தவர்களே இந்த மூர்க்கத்தனமான தாக்குதலில் ஈடுபட்டனர். பொலிஸாரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்ப்பாதுகாவலர்களும் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்காமல் வேடிக்கை பார்த்தனர் என்று சம்பவ இடத்திலிருந்த எமது செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகத்திலேயே இந்தத்

பார்க்க பக்கம் 04

## மன்னாரில் வெளிநாட்டு தூதுவர்கள்



கொழும்பு, மார்ச் 31

கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகள் குழுவொன்று நேற்று சனிக்கிழமை காலை மன்னாருக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டது.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற இவர்கள் தலைமன்னார் பியர் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள முஸ்லிம் மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அந்த மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தனர்.

தமக்கு வீடு, குடி தண்ணீர், மலசலகூடம், மின்சாரம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்

பார்க்க பக்கம் 04

## இராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் மறியல்

சென்னை, மார்ச் 31

கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 19 பேரையும் உடனடியாக விடுவிக்கக் கோரி நேற்று மதியம் சனிக்கிழமை ரயில் மறியல் போராட்டத்தில் மீனவ அமைப்புக்கள் ஈடுபட்டன.

கடந்த 13 ஆம் திகதி கச்சதீவு அருகே, இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் 4 படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இதன்போது இவர்கள் இலங்கைக் கடல் எல்லை

பார்க்க பக்கம் 04

## தமிழர் வாழ்வில் விளையாடிய உனக்கு ஐ.பி.எல் முக்கியமா?

■ இலங்கை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




சென்னை, மார்ச் 31

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல் போட்டிகள் அனைத்திலும் இலங்கை வீரர்கள் விளையாடுவதை உடனடியாக நிறுத்துமாறு கோரி சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நேற்றுச் சனிக்கிழமை தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பினர் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட

பார்க்க பக்கம் 04

## அரச படைகளின் துணையுடனேயே இந்த அராஜகம்

■ கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31

கிளிநொச்சியில் நேற்று நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் அரசினதும், அரச படைகளினதும் துணையுடன் நடத்தப்பட்ட அராஜகம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கூட்டாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் மக்கள் கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பார்க்க பக்கம் 04

## தாக்குதல்களை நிறுத்துவதற்கு இடைக்கால நிர்வாகமே தீர்வு

■ கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

சர்வதேசத்தின் மேற்பார்வையில் வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதே இவ்வாறான தாக்குதல்கள் நிறுத்தப்படுவதற்கும், தமிழர்கள் பாதுகாக்கப்படுவதற்கும் ஒரே வழி. இந்தப் பொறுப்பையாவது சர்வதேச சமூகம் உணர்ந்து விரைவாகச் செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பார்க்க பக்கம் 04

**60 பக்கங்கள்**

**உதயன் 24**

■ இதயம் சார் நோய் இறப்பு அதிகரிப்பு பக். 5
■ இடம்பெயர்ந்த முஸ்லிம்களை குடியமர்த்த ஏற்பாடு பக். 6
■ போட்டித் தன்மையான ஆடுகளங்கள் வேண்டும் பக். 19

**சூரியகாந்தி 24**

■ வரலாற்றிலிருந்து பாடம் கற்க தவறிவிட்டது இந்தியா பக். 1
■ அலட்சியப் படுத்தப்படும் சர்வதேச ஒப்பந்தங்கள் பக். 04
■ சிக்கலுக்கு உள்ளாகும் வடக்குத் தேர்தல் பக். 21

வர்ணப் பக்கம் 12

## ஏப்ரல் 15 இல் பொது விடுமுறை

கொழும்பு, மார்ச் 31

தமிழ் - சிங்கள சித்திரைப் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதியைப் பொது மற்றும் வர்த்தக விடுமுறை தினமாக அரசு அறிவித்துள்ளது.

இவ்வருட சித்திரைப்

பார்க்க பக்கம் 0

## விபத்தை அடுத்து கோப்பாயில் சீருடையினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

கோப்பாய் சந்தியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூன்று பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சாரதியான தென்பகுதியைச் சேர்ந்தவர் வாகனத்தை எடுக்க முற்பட்டபோது அங்கு கூடிய பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து அங்கு வந்த சீருடையினர் எதிர்ப்புத் தெரிவித்த மக்களை கடுமையாகத் தாக்கினர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பார்க்க பக்கம் 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிளிநொச்சியில் கூட்டமைப்பினர் மீதான தாக்குதலின் பதிவுகள்...



ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவது போல கூட்டமைப்பு அலுவலகத்தை நெருங்குகின்றனர்.


சிறிய கற்களைப் பொறுக்குகின்றனர்


கூட்டமைப்பு அலுவலகத்தை நோக்கி கல் வீசுகின்றனர்


வேடிக்கை பார்த்த பொலிஸார்


கொட்டன் தடிகளுடன் தாக்குதலுக்கான எத்தனம்


வேடிக்கை பார்த்த பொலிஸாருடன் தர்க்கம் புரிகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்


பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட குழப்பவாதி ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வரம் பகுதி முழுவதும் மின்சாரம் வழங்கப்பட்டதா?

## முழுப் பொய் என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

*வலி.வடக்கில் நகுலேஸ்வரம் பகுதிக்கு மின்சாரம் பூரணமாக வழங்கப்பட்டுள்ளது என்று மின்சார சபையின் வடக்கின் வசந்த செயல்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்று வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன் குற்றம் சாட்டியுள்ளார்.*

வலி.வடக்கின் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் ஊடாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

நகுலேஸ்வரம் பகுதிக்கு 8.61 மில்லியன் ரூபா செலவில் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்று மின்சார சபையால் யாழ். மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த பகுதியிலுள்ள வீடுகளுக்கோ பாடசாலைக்கோ மின்சாரம் வழங்கப் படவில்லை என்று வலி. வடக்கின் பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

நகுலேஸ்வரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மின்மாற்றியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள கோயிலுக்கும் அருகிலுள்ள வியாபார நிலையத்துக்குமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.


ஆனால் ஒரு கிலோ மீற்றர் நீளமான தாழ் அழுத்த மின் வயர் இழுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார சபை குறிப்பிடுவதன் பிரகாரம் பார்த்தால் நகுலேஸ்வரம் வித்தியாலயத்திற்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கின் வசந்த திட்ட முகாமையாளர் குணசீலனிடம் கேட்டபோது:

நாம் முதல் கட்ட வேலைகளை நிறைவுறுத்தியுள்ளோம். அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் முதல்கட்ட வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. நாம் மதிப்பீடு எடுத்த பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்தால் அவர்களுக்கு மின்சாரம் வழங்க முடியாது. எனவே, இரண்டாம் கட்டத்தில் அவர்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.- என்றார். (ம-5)

## கோப்பாய் பாலத்தில் பயணிப்பதில் ஆபத்து



யாழ்ப்பாணம்,மார்ச் 31

கைதடி - கோப்பாய் பாலத்திலுள்ள இரும்புத் தகடு ஒன்று அண்மைக் காலமாக மேல் உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் இப் பாலத்தில் பயணம் செய்வோர் பெரும் அவலங்களை சந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலத்தில் அண்மைக் காலமாக இந்த இரும்புத் தகடு உயர்ந்த நிலையில் உள்ளது. இதனால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் விபத்துக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு மேலாக ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்த இரும்புத் தகட்டை சீர் செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபை இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது பெரும் வேதனையளிக்கிறது என்று பயணிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக் கவனம் எடுத்து இப் பாலத்தில் ஏற்பட்டுள்ள குறையை சீர் செய்து மக்களின் போக்குவரத்துக்கு வசதி செய்ய வேண்டும் எனவும் பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

## தனியார் கல்வி நிலையத்துக்குள் புகுந்து தாக்கியதில் மாணவன் காயம்

தென்மராட்சி, மார்ச் 31

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றினுள் புகுந்த வெளியார் அங்கு நின்ற மாணவர்களைத் தாக்கியதில் ஒரு மாணவனுக்கு தலையில் பலத்த காயமேற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் இடம்பெற்றது.

கல்வி நிலைய வளாகத்தினுள் சைக்கிளில் ஓடிச் செல்ல வேண்டாமென தடுத்ததால் அங்கு கல்வி பயிலும் மாணவனின் உறவினரால் தாக்கப்பட்டதாக பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மந்துவில் வடக்கைச் சேர்ந்த சிவஞானமூர்த்தி விஜிதரன் (வயது 21) என்னும் மாணவனே தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை, மீசாலைப் பகுதியில் தனியார் கல்வி நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த மீசாலை பங்களா வீதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கிருஷாந்த் (வயது 18) என்னும் மாணவன் விபத்துக்குள்ளானார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

### வலி. தென்மேற்கு பிரதேச சபை

## தற்காலிக வியாபார நிலையங்களில் வரி வசூலிப்பதற்கு ஆலோசனை

வலி.தென்மேற்கு,மார்ச் 31

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள், இப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள், தேவாலயங்களில் விழாக்காலங்களில் அமைக்கப்படும் தற்காலிக வியாபார நிலையங்களில் இருந்து வரி வசூலிப்பது பற்றி ஆலோசித்துள்ளார்கள்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது நடைபாதை வியாபாரிகள், அங்காடி வியாபாரிகள் ஆகியோரிடமிருந்து வரி வசூலிப்பது சம்பந்தமாக உரையாடப்பட்டது.

இருபத்தெட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட இப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை. இதனால் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாத நிலை பிரதேசசபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சபையின் வருமானத்தை அதிகரிப்பது பற்றி கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இப் பிரதேசத்தில் நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அவர்களிடமிருந்து கணிசமான அளவில் வரி அற விடப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள், தேவாலயங்களில் இடம்பெறும் வருடாந்த விழாக்களின் போதும் பெரும் எண்ணிக்கையான வியாபார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அவர்களிடம் இருந்தும் வரி அறவிடப்பட வேண்டும் என்று கூறினர். (ம-115)

## இரு வேறு விபத்துகளில் மூவர் காயமடைந்தனர்

வலி வடக்கு,மார்ச் 31

மல்லாகத்தில் இரு வேறு விபத்துகளில் மூவர் காயமடைந்தனர்.

வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சுமார் ஐந்து நிமிட இடைவெளியில் இந்த இரண்டு விபத்துகளும் இடம் பெற்றுள்ளன.

மல்லாகம் நீதிமன்றத்துக்கு அண்மையாக இடம் பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற சைக்கிளை மோதியதால் சைக்கிள் சேதம் அடைந்ததுடன் சைக்கிளில் வந்தவரும் காயமடைந்தார். மற்றுமொரு விபத்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூர இடைவெளியில் இடம்பெற்றது.

இதில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இருவர் காயங்களுக்கு உள்ளாகினர்.(ம-86)

## சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் தண்ணீரில்லை

கொடிகாமம்,மார்ச் 31

கொடிகாமத்தில் இயங்கும் சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அங்கு தண்ணீர் இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கான தலைமை அலுவலகக் கட்டடம் 4 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. இதன்போது வளாகத்தினுள் கிணறும் நிர்மாணிக்கப்பட்டது.

கடந்த வருடம் தலைமை அலுவலகம் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கிய காலத்தில் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் பவுசர் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டது. பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டது.

மழை காலம் ஆரம்பித்ததால் கிணற்று நீர், குடிதண்ணீருக்கு அன்றி ஏனைய தேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது கிணற்றில் தண்ணீர் இல்லாததால் அங்கு கடமையாற்றுவோர் இயற்கைத் தேவைகளுக்கு தண்ணீர் இன்மையால் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைமை அலுவலகத்துக்குத் தேவைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் அங்கு குடிதண்ணீர் இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குடிதண்ணீர் இன்மை தொடர்பாக பிரதேச சபையின் உயர் அதிகாரியிடம் பொதுமக்கள் முறையிட்டால், உதயன் பத்திரிகைக்கு முறையிடுங்கள், அவர்கள் தண்ணீர் தருவார்கள் என்று பொறுப்பற்ற வகையில் பதிலளிப்பதாக பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்த வருடம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தின் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்குவதாக 'உதயனில்' செய்தி வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

### நிகழ்வுகள்
## இன்று

கெருடாவில், மார்ச் 31

புற்றளை மகா வித்தியாலய பாடசாலைக் கல்வி அபிவிருத்திக் கூட்டம் காலை 9 மணிக்கு அதிபர் எம்.அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் கலந்து கொள்வார். (ம-253)




எல் பி மோட்டார் சைக்கிள் லீசிங்

காப்புறுதி பணத்தில் 50% சேமிப்பு

அங்கு இங்கு எங்கு சென்றாலும்
குறைந்த பகுதிக்கட்டணம் எம்மிடமே!

தொடர்புகளுக்கு
0777 571082

* நிபந்தனைகளுக்குட்பட்டது

யாழ்ப்பாணம் - 0212 219455, 0214 920310-1
சுன்னாகம் - 0777 718412, 0214 920331-9
மானிப்பாய் - 0212 255955, 0214 923356-7
நெல்லியடி - 0777 718426, 0214 923358-9
சாவகச்சேரி - 0777 718428, 0214 923360-1
கிளிநொச்சி - 0777 718407, 0214 923362-3

LB FINANCE

எல் பி ஃபினான்ஸ் பி எல் சி
இல.275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை,
கொழும்பு 07. www.lbfinance.com
தொலைபேசி 011 4 521000

(C/7250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் இன்னும் கருத்துச் சுதந்திரம் இல்லை

## 'இந்தியா ருடே' கூறுகிறது

சென்னை,மார்ச் 31

வடக்கில் இன்னமும் கருத்துச் சுதந்திரம் நிலை நாட்டப்படவில்லை. தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்கி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய கட்டுப்பாடு இலங்கை அரசுக்குள்ளது என 'இந்தியா ருடே' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

'இந்தியா ருடே' சஞ்சிகையின் அட்டைப் படச் செய்திக்காக, பிரதி ஆசிரியர் சந்தீப் உன்னித்தன் மற்றும் பிரதி ஒளிப்பட ஆசிரியர் ரூபன்கில் இருவரும் இலங்கைக்கு வந்திருந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் சென்று தமிழ் மக்களை நேரடியாகச் சந்தித்தனர்.

இதன் போது தமிழ் மக்கள் கருத்துக்களை வெளியிடத் தயங்கியுள்ளனர். தாம் ஊடகவியலாளர்கள் என்பதை அவர்கள் வெளிக்காட்டிய பின்னரும் மக்கள் கருத்துக்களை வெளியிடத் தயங்கியுள்ளனர்.

தாம் கருத்துக்களை வெளிப்படுத்துவதால் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும் என்று மக்கள் அவர்களிடம் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசு உட்கட்டுமான வசதிகளை செய்து கொடுத்திருக்கின்றது. ஆனாலும் தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்குகின்ற வழியிலும், பாதுகாப்பையும், சம உரிமைக்கான உறுதிப்பாட்டையும் வழங்கும் விதமாகவும் இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று 'இந்தியா ருடே' ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-5)

**இலங்கை அரசு உட்கட்டுமான வசதிகளை செய்து கொடுத்திருக்கின்றது. ஆனாலும் தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்குகின்ற வழியிலும், பாதுகாப்பையும், சம உரிமைக்கான உறுதிப்பாட்டையும் வழங்கும் விதமாக இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.**

# பிரதேச சபையின் காணி பறிப்புக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் படையினர் நிரந்தர படைமுகாம் அமைத்து வருவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாதகல் காட்டுப்புலம் ஆதாரவைத்திய சாலையின் பின்னால் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான 42 பரப்புக் காணியுள்ளது.

இந்தக் காணியில் கடந்த 13 ஆம் திகதியிலிருந்து நிரந்தரப் படைமுகாம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை 51 ஆவது படைப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி காணியைத் தமக்கு வழங்குமாறு இராணுவத்தினர் பிரதேச சபையிடம் கோரியிருந்தனர்.

இருப்பினும் குறித்த காணியை வழங்குவதற்குப் பிரதேச சபை சம்மதிக்காத நிலையில், இராணுவத்தினர் நிரந்தரப் படைமுகாம் அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு எதிராகப் பிரதேச சபையினால் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்படவுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

இந்த வாரம் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## ஏப்ரல்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

புதுவருட பிறப்பானது எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளான விடுமுறை தினங்களில் வருவதினால் ஏப்ரல் 15ஆம் திகதியைப் பொது விடுமுறை தினமாக அறிவிப்பது தொடர்பில் பரிசீலனை செய்யப்பட்டது.

இதற்கமைய 15ஆம் திகதி பொது மற்றும் வர்த்தக விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார். (த)

## மன்னாரில்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

என அந்த மக்கள் இராஜதந்திரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இந்தக் குழுவில் பலஸ்தீனம், பாகிஸ்தான், ஈரான், ஈராக், இந்தோனோசியா, பங்காளதேஷ் மற்றும் மலேசியா உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் அடங்கியிருந்தனர்.

இவர்களுடன் அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகியோரும் வந்திருந்தனர். (த-12)

## தமிழர்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

னர். இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் முயன்றதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது

இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் எந்த மாநிலத்திலும் இலங்கை வீரர்கள் வந்து விளையாடக் கூடாது என்பதை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக மாணவர் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

அத்துடன், பூந்தமல்லி சிறப்பு முகாமை உடனே இழுத்து மூட வேண்டும், உடனடியாக முகாமில் உள்ள மக்களுக்கான அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்,

திருச்சியில் மாணவர்களைத் தாக்கிய காங்கிரஸ் குண்டர்களைக் கைது செய்ய வேண்டும், மாணவர்களைத் தாக்குமாறு ஏவிவிட்ட காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் உட்படப் பல்வேறு கோரிக்கைகள் மாணவர்களால் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, நமண சமுத்திரத்தில், தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என கோரி வர்த்தகர்கள் கடையடைப்பில் ஈடுபட்டனர்.

சீர்காழியில் கலை, அறிவியல் கல்லூரி மாண வர்களும் பூம்புகாரில் ஒட்டோச் சாரதிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட னர். (த-5)

## தாக்குதல்களை...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

கிளிநொச்சியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் அவர்களைச் சந்திக்கச் சென்ற பொதுமக்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்தச் சம்பவத்தைத் தனியொரு சம்பவமாக நோக்க முடியாது. முஸ்லிம்கள் மீதும் இவ்வாறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேச மட்டத்தில் இலங்கை கவனிக்கப்படும் ஒரு நாடாக உள்ள நிலையிலும், இலங்கைக்கு எதிராக ஐ.நா. சபையில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை வெறுமனே கண்டித்துக் கொண்டிருப்பதால் பயனில்லை. எங்களை - தமிழர்களை - பாதுகாக்க நாங்கள் வழிமுறைகளைத் தேட வேண்டும். இலங்கை அரசால் தமிழர்களுக் குப் பாதுகாப்பில்லை என்பதைச் சர்வதேச சமூகம் உணர வேண்டும்.

பாதிக்கப்படும் சமூகம் சர்வதேசத்தால் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பொறுப்பைச் சர்வதேசம் நிறைவேற்ற வேண்டும்.

இறுதிப் போரில் இங்கு நடத்தப்பட்டுக் கொண்டிருப்பது இனப் படுகொலைதான் என்பதை நாம் அப்போதே பலமுறை சொல்லியும் சர்வ தேசம் கேட்கவில்லை. சர்வதேசம் தனது பொறுப்பிலிருந்து தவறியது.

இனியாவது சர்வதேசம் தனது பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும். இங்கு தொடரும் தாக்குதல்களிலிருந்து தமிழர்களை பாதுகாக்கக் கூடிய ஒரேவழி இடைக் கால நிர்வாகம் தான். சர்வதேச சமூகம் தனது இந்தப் பொறுப்பை விரைவாக நிறைவேற்ற வேண்டும்- என்றார். (த-5)

## கோப்பாயில்.....

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

இவ்வாறு தாக்கப்பட்ட ஒருவரை வாக்குமூலம் பெற வேண்டும் என்று கூறிப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நீர்வேலியைச் சொந்த இடமாகக் கொண்ட தங்கராஜா தயாபரன் (வயது-45), தயாபரன் குகராணி (வயது-45), தயாபரன் தயாணிகா (வயது-20), தயாபரன் சுவாணிகா (வயது-18) ஆகியோர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் தயாபரன் குகராணி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நீர்வேலியைச் சேர்ந்த தயாபரன் தனது மனைவி மற்றும் மகள்மார் இருவருடன் தனது ஓட்டோவில் யாழ்ப்பாணத்தில் இருந்து நீர்வேலி நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

கோப்பாய் சந்தியில் ஓட்டோ பயணித்துக் கொண்டிருந்த போது கைதடி - மானிப்பாய் வீதியூடாக கைதடி நோக்கி வந்த ' இன்ரர் கூலர்' வாகனம் ஒன்று சந்தியில் பிரதான வீதியைக் குறுக்கறுத்து வேகமாகச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றது.

'இன்ரர்கூலர்' வாகனத்தின் சாரதி தென் பகுதியைச் சேர்ந்தவர். அந்த வாகனத்தில் சீனப் பிரஜைகளே பயணித்தனர்.

விபத்தில் ஓட்டோ தடம்புரண்டது. அதில் ஓட்டோவில் பயணித்த நால்வரும் காயமடைந்தனர்.

விபத்தையடுத்து தென்பகுதியைச் சேர்ந்த சாரதி வாகனத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டார். அதற்கு அங்கு கூடிய ஏராளமான மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து பொலிஸார் வந்த பின்னரே வாகனத்தை எடுத்துச் செல்ல அனுமதிப்போம் எனக் கூறினர். இதன்போது அங்கு திடீரென வந்திறங்கிய சீருடையினர் வாகனத்தைத் தடுத்து வைத்திருந்த பொதுமக்களை கண்டபடி தாக்கினர் என்று மக்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான வயோதிபர் ஒருவரை வாக்குமூலம் பெற வேண் டும் என்று கூறி சம்பவ இடத்தில் இருந்து கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத் துக்கு அழைத்துச் சென்றனர். வாகன சார தியை கைது செய்துள்ளனர் எனவும் கோப்பாய் பொலிஸார் உறுதிப்படுத்தினர். விபத்துக்குள்ளான ஓட்டோவும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. (த-4-5-17-ரி)

## அரச...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டப்பகலில் பகிரங்கமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் வீதியால் ஊர்வலமாக வந்து எம் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்த ஊர்வலத்தை நடத்துவதற்குத் தாம் அனுமதி வழங்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். அப்படியிருந்தும் பொலிஸ் நிலையத்தைத் தாண்டி, வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் துணையுடன் எவ்வாறு ஊர்வலம் நடந்தது?

எம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த பொழுது இங்கிருந்த பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். தாக்குதலில் ஈடுபட்டவர்களை மக்கள் பிடித்துக் கொடுத்த போதும் பொலிஸார் அவர்களை விடுவித்து விட்டனர்.

இந்தத் தாக்குதல் அரசினதும், அரச துணைப் படையினரின் ஆதரவுடனும் நடத்தப்பட்டதென்பது இதிலிருந்து தெரிகின்றது .

வன்முறையைத் தூண்டுவது யார் என்பதை மக்கள் இதிலிருந்தே இனங்கண்டு கொள்ள வேண்டும், கடந்த கால வரலாற்றிலும் இதுவே நடந்தது - என்றனர். (த -5)

## இராமேஸ்வரம்..

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

யுள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்பட்டு இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது கடந்த 28 ஆம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. கடந்த 28 ஆம் திகதி இவர்கள் நீதி மன்றில் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில்தடுத்து விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மீனவர்கள் வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 15 நாள்களாகத் தொழிலுக்குச் செல்லாமல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம், மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் ரயில் மறியலில் ஈடுபடப்போவதாக மீனவர்கள் எச்சரித்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் நந்தகுமார் மீனவர் அமைப்புக்களுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

மீனவர்களை எதிர்வரும் புதன்கிழமைக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார். இதனை எதிர்த்த மீனவர் அமைப்புக்கள் நேற்றுப் பிற்பகல் முதல் தங்கச்சி மடத்தில் ரயில் மறியலில் ஈடுபட்டனர். (த-5)

## கிளிநொச்சியில்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

தாக்குதல் இடம்பெற்றது. இதில் பத்திரிகையாளர் உட்பட 13 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். கற்களை எறிந்த மூவரை தமது ஆதரவாளர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தபோது அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அங்கு பொது மக்களும் வந்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உரையாற்றியதன் பின்னர் மாவை. சேனாதிராஜா உரையாற்றிக்கொண்டிருந்தார். அவரது உரை நிறைவடையும் நேரத்தில் அலுவலகத்துக்கு வெளியே கோஷம் எழுப்பும் சத்தங்கள் கேட்டன.

''போக்குவரத்துப் பொலிஸார் முன்னே வர அவர்களின் பின்னால் 30 பேர் வரையானோர், சிங்கக் கொடியை கையில் ஏந்தியவாறு வந்துகொண்டிருந்த னர். இவர்கள் சத்தமிட்டவாறு கூட்டமைப் பின் அலுவலகக் கதவை நெருங்கினர். உடனடியாக அங்கு நின்ற ஒருவர் அலுவலகத்தின் 'கேற்றை' பூட்ட முயன்றார்.

அதனைக் கா[illegible] உள்ளே நுழைந்த [illegible] 'கேற்றை' பூட்ட முயன்றவரை இரும்புக் குழாய் ஒன்றினால் தாக்கி னர். அத்துடன் வாசல் அருகில் நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களையும் அவர்கள் கண்டபடி தாக்கினர்'' என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

பின்பு அங்கிருந்து அலுவலகத்தின் மீதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும், மக்கள் மீதும் சரமாரியான கல்லெறித் தாக்குதலை அவர்கள் மேற்கொண்டனர் என்று எமது செய்தியாளர்கள் கூறினர். '' இதனை அங்கு கடமையிலிருந்த பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்''.

''தொடர்ச்சியாக கல் வீசித் தாக்கத் தொடங்கியதுடன் கோஷங்களையும் அவர்கள் [illegible] தொடங்கி 20 நிமிடங்[illegible] பின்னர் அங்கு வந்து சேர்ந்த பொலிஸார் கல் வீசித் தாக்குதல் நடத்தியவர்களை பாதுகாப்பாக அலுவலகத்தை விட்டு வெளியேற்றினார்கள்'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இதன் பின்னர் பொது மக்கள் அங்கு நின்ற சிலரைப் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தனர். கல் வீசித் தாக்குதல் நடத்திய குழுவில் அவர்கள் இருந்தனர் எனத் தெரிவித்தே மக்கள் அவர்களைப் பிடித்துக் கொடுத்தனர்.

அவர்களில் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று தனது அடையாள அட்டையைக் காட்டியவேளை, அவர் தம் மோடு வந்தவர் என்று தெரிவித்து பொலி ஸார் அவரை விடுவித்தனர்.

தாக்குதல் நடத்திய கும்பலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சி கிளையைச் சேர்ந்தவர்களும் இருந்தனர் என்று கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர். இது தொடர்பில் சுதந்திரக் கட்சியினரின் கருத்தை அறிய முடியவில்லை. (உ-த-5-6-420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வழிபாட்டுக்கு முட்டுக்கட்டை; நிலக் கபளீகரத்தின் முன்னோட்டமா?

பங்குனி மாதம் பிறந்து விட்டால், நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வெய்யோன் தன் கெட்டித் தனத்தைக் காட்டத் தொடங்கிவிடுவான். அவன் உமிழும் வெய்யிலும், அதன் வழி வெப்பமும் நாளாந்தம் உயர்ந்து கொண்டே செல்லும்.

மனிதர்கள்-மக்கள்-மட்டுமன்றி, அவர்களின் தொழில்களுக்கு உதவியாகப் பணி செய்யும் பிராணிகளும் ஏனையவும் அதிகரித்த வெப்ப நிலையால் நோய்களுக்கு ஆளாகும் நிலை ஆண்டுதோறும் ஏற்படுவது வழமை.

அதனால், எமது முன்னோர், வெப்ப கால நோய்களிலிருந்து தப்புவதற்காக, மருத்துவம் சார் வழிமுறைகளை மட்டுமன்றி, தெய்வங்கள் சார் சடங்குகளையும் நிகழ்த்தினர். குறிப்பாகக் கூறுவதாயின் மருந்து மாத்திரைகளை விட, தெய்வங்களின் சக்தி மேல் அதீத நம்பிக்கை கொண்டவர்களாக விளங்கினர்.

பொங்கல், படையல், பூசை முதலானவற்றை மக்கள் தாமாகவே ஆற்றி, வழிபாடியற்றும் மரபுகளே கிராமங்களில் மேலோங்கியிருந்தன. தமிழகத்தில் மட்டுமன்றி எமது ஈழத்திலும்- அதன் வடக்கு, கிழக்குப் பிரதேங்களிலும் தமிழர்களின் வாழ்விட வலயங்களில் சிறிய ஆலயங்களில் தெய்வ வழிபாட்டுச் சின்னங்களை வைத்து வழிபடும் மரபு சரித்திர காலம்தொட்டு பண்டைக் காலம் முதற்கொண்டு நடைமுறையில் இருந்து வந்தது; அவை பல நூற்றாண்டு காலமாக ஈழத்தில் தொடர்கிறது.

வெப்ப கால நோய்கள் தம்மைப் பீடிக்காமல் காப்பற்ற வேண்டுமென்றும், வந்து நோய் விரைந்து குணமடைய வேண்டும் என்றும் நேர்த்தி வைத்து வழிபாடு இயற்றுவதும் அப்போதைய வழக்கமாக, பண்பாடாக இருந்து வந்தது.

அந்த மரபு எம் மக்கள் மத்தியில் இப்போதும் தொடர்கிறது. அம்மன், காளி, வீரபத்திரர், ஐயனார், நாகதம்பிரான், நீலி, அண்ணமார் போன்ற தெய்வங்களுக்கு, அவரவர் இஷ்டங்களுக்கு ஏற்ப பூசை வழிபாடுகள் நடத்தும் மரபு இன்னமும் தொடரவே செய்கின்றன.

ஆனால் பலப்பல நூற்றாண்டுகளாக, தமிழ், இந்து மக்களின் சமய பண்பாட்டுப் பாரம்பரியங்களாக ஊன்றி வளர்ந்துள்ள பூசை வழிபாடுகளுக்குத் தடை விதிக்கும் ஏகாதிபத்தியத்தின் பாற்பட்ட ஒடுக்கு முறையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறுப் பகுதியில் நடைபெற்றுள்ளது!

நாயாறுப் பகுதி மணலாறுப் பிரதேசத்தை அண்டியதாகும். அங்குள்ள நீராவியேற்றப் பிள்ளையார் கோவில் நாயாறுப் பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது.

பங்குனி உற்சவத்தை முன்னிட்டு வழமைபோன்று, வருடாந்தம் தாம் இயற்றி வரும் நேர்த்தியை நிறைவேற்றுவதற்காக சுமார் இருபது குடும்பங்களைச் சேர்ந்த இந்து மக்கள், உரிய ஆயத்தங்களுடன் ஆலயத்துக்குச் சென்றிருந்தனர். ஆனால் பரம்பரை பரம்பரையாக பல ஆண்டுகளாக இயற்றிய ஆலய வழிபாட்டை, நேர்த்தியை இயற்ற முடியவில்லை. இங்கே வரவேண்டாம் ஓடிப்போய்விடுங்கள் என்றவாறு அரசாங்கத்தின் அங்கம் ஒன்றினால்-படைத்தரப்பினரால்-விரட்டப்பட்டனர் என்று சொல்லப்பட்டதாகத் தகவல்.

இங்கு யாரும் பொங்கக் கூடாது; பொங்குவதாக இருந்தால் நாயாறுப் பாலத்துக்கு அப்பால் சென்று பொங்குங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட நீராவியேற்றம் மற்றும் கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகியன தமிழர் பிரதேசங்களாகவும் அவற்றுக்கு இரண்டு புறங்களில் உள்ள நாயாறு, வெலிஓயா [முன்னைய மணலாறு] ஆகியன சிங்களப் பிரதேசங்களாகவும் உள்ளன.

நீராவியேற்றப் பகுதியில் உள்ள ஆலயத்துக்கு தமது சமயக் கடமைகளை நிறைவேற்றச் சென்ற தமிழ் மக்கள் விரட்டப்பட்டமை அரசின் உள்நோக்கத்தைப் புலப்படுத்துகிறது.

ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் அநேகமாக இன்னும் சில மாதங்களில் அரச உடந்தையுடன் பெரும்பான்மையினர் பிரதேசமாக மாற்றப்பட்டுவிடும் என்பதற்கான குறியீடே அது எனலாம். வடமாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடத்தப்படும் என்ற அறிவித்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முந்திய முன்னோட்டமா இது?

### இலங்கையில் கடந்த 50 வருடங்களில்

# இதயம் சார் நோய் இறப்பு 24 வீதமாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கையில் கடந்த 50 வருடங்களில் இதயம் சார் நோய்களால் ஏற்படும் இறப்பு வீதம் மூன்று சதவீதத்திலிருந்து 24 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அதேவேளை தொற்று நோய் சார்ந்த உயிரிழப்புக்கள் 42 சத வீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

உலக வங்கியின் சுகாதாரப் பிரிவால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்காக உலக வங்கியால் இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கடனாக வழங்கப்படுவதற்கான அனுமதி கடந்த 27 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய் மற்றும் குழந்தைகளுக்கான சேவைகள் மற்றும் பல வித நோய்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாகப் பெரும்பாலான சுகாதார குறிகாட்டிகளில் ஆச்சரியமிகு எல்லைகளை இலங்கை தொட்டுள்ளது. இருப்பினும் புதிய சவால்கள் உருவாகி வருகின்றன.

அதிக எண்ணிக்கையான மக்கள் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த அதிகரிப்பானது துரிதமாக வளர்ச்சியடையும் வயதானவர் எண்ணிக்கை, பொருளாதார அபிவிருத்தி, நகர மயமாக்கல், அதிகரித்த வாகனப் பயன்பாடு, வாழ்க்கைமுறை மாற்றங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது.

அதிக ஊட்டச்சத்து மற்றும் குறைந்த ஊட்டச் சத்து என்ற இரு வகையான ஊட்டச் சத்து நிலை மாற்ற சவாலையும் இலங்கை எதிர்கொண்டுள்ளது.

வாகன விபத்துகள், இயற்கை அனர்த்தங்கள், தொழிற்சாலை விபத்துகள், தீ விபத்து, நீரில் மூழ்கல், விழுதல் மற்றும் வன்முறை என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கணிசமான காயமடைதல்களும் உள்ளன.

இவற்றால் வருடாந்தம் 15 சதவீதமான உயிரிழப்புப் பதிவுகளும் அதேவேளை 18 சதவீதம் பேர் காயமடைகின்றனர் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-5)

## பன்றித்தலைச்சி ஆலய கேணியில் ஷம்போ, சவர்க்காரம் பாவிக்கத் தடை

தென்மராட்சி, மார்ச் 31

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய கேணியில் நீராடும் அடியார்கள் ஷம்போ, சவர்க்காரம் ஆகியவை பாவிப்பது சுகாதாரப் பகுதியினரால் தடை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாள் தீர்த்தமாடும் கேணி நீரில் அடியார்கள் நீராட அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர்களால் ஷம்போ, சவர்க்காரம் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் கேணி நீரை அடியார்கள் பொங்கல் மற்றும் சமையல் வேலைகளுக்கு பயன் படுத்துவதால் நீர் அசுத்தமடை வதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

நாளை திங்கட்கிழமை ஆலயத்துக்கு வரும் அடியார்கள் கேணியின் வெளியே நீராடும்போது ஷம்போ, சவர்க்காரம்பயன்படுத்தவேண்டாமென தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-9)

## நாளை மூன்றாம் திங்கள்

தென்மராட்சி, மார்ச் 31

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் மூன்றாம் திங்கள் நாளை இடம்பெறவுள்ளது.

இதற்கு பெரும் எண்ணிக்கையான அடியார்கள் வருகை தரலாமென எதிர்பார்க்கப்படுவதால் அடியார்களை தங்க நகைகள் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-9)

## திருட்டுச் சந்தேகநபர் அகப்பட்டார்; திருட்டுப் போன நகைகளும் மீட்பு

வலி வடக்கு, மார்ச் 31

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அண்மையாக தனிமையில் வாழ்ந்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரின் வீட்டில் இருந்து சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிய திருடன் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எல்.துஸ்மந்த தலைமையிலான பொலிஸ் குழுவினரால் 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டதுடன் நகைகளும் மீட்கப்பட்டன.

ஓய்வு பெற்ற ஆசிரியை தனது வீட்டில் இருந்து வியாழக்கிழமை நண்பகல் சுன்னாகம் நகரப் பகுதிக்குதமக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்குச் சென்றுள்ளார்.

இதனைச் சந்தர்ப்பமாகப் பயன் படுத்திய திருடன் வீட்டை உடைத்து அலுமாரியில் வைக்கப் பட்டிருந்த சுமார் ஆறு பவுண் நகைகளைத் திருடிச்சென்றுள்ளான்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எல்.துஸ்மந்த தலைமையிலான பொலிஸ் குழுவைச் சோந்த குற்றத் தடுப்பு உப பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் சாஜண்டான தமயந்த விக்கிரமரத்தின மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான தென்னக்கோன், பிரசாத், சத்துரங்க இணைந்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் ரயில் நிலையத்தடியில் வைத்து கைது செய்யப் பட்ட குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட நிலையில் அவரிடம் இருந்து நகைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## யாழ். போதனா வைத்தியசாலையில் உயர்கின்றது நோயாளர் எண்ணிக்கை

### கடந்த நான்கு வருடங்களாக

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை வருடாவரும் தொடர்ச்சி யாக அதிகரித்துச் செல்கின்றது என்று யாழ்.போதனா வைத்திய சாலையின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவுக்கு 2009 ஆம் ஆண்டு 2 லட்சத்து 39 ஆயிரத்து 677 பேர் சிகிச்சை பெற வந்துள்ளனர். 2010 ஆம் ஆண்டு 2 லட்சத்து 68 ஆயிரத்து 922 பேரும், 2011 ஆம் ஆண்டு 2 லட்சத்து 82 ஆயிரத்து 946 பேரும், 2012 ஆம் ஆண்டு 2 லட்சத்து 93 ஆயிரத்து 744 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு 92 ஆயிரத்து 546 பேர் விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெற்றுள்ளனர். இது 2010 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 79 பேராகவும், 2011 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 15 ஆயி ரத்து 842 பேராகவும் 2012 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 604 அதிகரித்திருந்தது. கிளினிக்குகளில் 2009 ஆம் ஆண்டு 4 லட்சத்து 56 ஆயிரத்து 934 பேரும், 2010 ஆம் ஆண்டு 4 லட்சத்து 76 ஆயிரத்து 616 பேரும், 2011 ஆம் ஆண்டு 5 லட்சத்து 31 ஆயிரத்து 350 பேரும், 2012 ஆம் ஆண்டு 6 லட்சத்து 37 ஆயிரத்து 361 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

2009ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 358 பிரசவங்களும், 2010 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 969 பிரசவங்களும், 2011 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 69 பிரசவங்களும், 2012ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 888 பிரசவங்களும் இடம்பெற்றுள்ளன.

பெரிய சத்திரசிகிச்சைகள் 2009 ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 939, 2010 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 762, 2011 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 727, 2012 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 642 எனஇடம் பெற்றுள்ளன.

சிறிய சத்திர சிகிச்சைகள் 2009 ஆம் ஆண்டு 20 ஆயிரத்து 251, 2010 ஆம் ஆண்டு 22 ஆயிரத்து 860, 2011 ஆம் ஆண்டு 26 ஆயி ரத்து 555, 2012 ஆம் ஆண்டு 26 ஆயி ரத்து 809 என இடம்பெற்றுள்ளன.

சிஸேரியன் மூலமாக 2009 ஆம் ஆண்டு ஆயிரத்து 711 பிரசவங்களும், 2010 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 45 பிரசவங்களும், 2011 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 83 பிரசவங்களும், 2012 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 128 பிரசவங் களும் இடம்பெற்றுள்ளன என்று அந்தப் புள்ளி விவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களைக் குடியமர்த்த ஏற்பாடு

**மன்னார் மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

மன்னார்,மார்ச் 31

நீண்ட காலமாக உள்ளக இடப்பெயர்வுக்குள்ளான முஸ்லிம் மக்களில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை அடுத்த மாதம் 30 ஆம் திகதி மீள்குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று வடமாகாண ஆளுநர் செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கையில் அகதிகள் எவரும் இல்லை என்று இலங்கை அரசுடன் இணைந்து அரச அதிகாரியான பாதுகாப்பு செயலர் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார்.

ஆனால், இதற்கு முரணாக ஜனாதிபதியின் வடமாகாண பிரதிநிதியான வடமாகாண ஆளுநரும் அரசின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ரிசாட் பதியுதீனும் உள்ளக இடப்பெயர்வால் இடம்பெயர்ந்த முஸ்லிம் அகதிகளை மீளக் குடியமர்த்துவது தொடர்பில் கடந்த 28 ஆம் திகதி கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள ஆளுநரின் அலுவலகத்திலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமரும் மக்களுக்குக் காணிகள் வழங்கல், வாழ்வாதார உதவிகள் வழங்கல் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களிடம் உதவிகள் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதற்கமைய மீளக்குடியமர வேண்டிய முஸ்லிம் குடும்பங்களின் பெயர்கள் ஒழுங்கமைக்கப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## குடிதண்ணீர் பெற அவதியுறும் வவுனியா வலய அலுவலர்கள்

### கிணற்றுக்குள் குரங்கு வீழ்ந்து இறந்தமையே காரணம்

வவுனியா,மார்ச் 31

குரங்கு தவறுதலாக விழுந்து இறந்து மாசடைந்த கிணறு பூரணமாக சுத்திகரிக்கப்படாததால் குடிதண்ணீரைப் பெறுவதற்கு வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள அலுவலர்கள் குடிதண்ணீருக்கு பயன்படுத்தும் கிணறு ஒன்றினுள் அண்மையில் குரங்கு வீழ்ந்து இறந்துள்ளது. இறந்த சில நாள்களின் பின் அது மீட்கப்பட்ட போதும் கிணறு முழுமையாகச் சுத்திகரிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் தொழிலாளர்களைக் கொண்டு சுத்திகரிப்பு மேற்கொள்ளப்பட்ட போது சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர் ஒருவர் கிணற்றினுள் மயங்கியமையை அடுத்து சுத்திகரிப்புப் பணி இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் அந்த நீரையே பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது.

இறந்த குரங்கின் மயிர், பல் உட்பட அதன் உடற் சிதைவுகள் கிணற்றிலிருந்து முழுமையாக அகற்றப்படவில்லை. இந்த நிலையில் அந்நீரை எவ்வாறு பருகுவது என்று வலயத்தில் பணிபுரியும் அதிகாரிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தக் கிணறு முழுமையாகச் சுத்திகரிக்கப்படாமையால் வலயத்தில் பணிபுரியும் அலுவலர்கள், விடுதிகளில் தங்கியிருந்து பணிபுரிபவர்கள் மற்றும் கடமை நிமித்தம் அலுவலகம் செல்வோர் உட்பட அனைவரும் குடிதண்ணீரைப் பெறமுடியாது திண்டாடி வருகின்றனர் என்று கூறப்பட்டது. (ம-410)

## மாற்றுவலு உடையவர்களுக்கு விசேட செயலமர்வு

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மாற்றுவலுவுடையவர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

**கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் விசேட தேவைக்கு உட்பட்ட மாற்றுவலுவுடையவர்களுக்கான உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சமூகத்தில் அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்கக் கூடிய வகையில் எதிர்காலத் திட்டங்களை வகுத்தல் என்பன தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.**

கடந்த 28 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் தருமபுரத்தில் அமைந்துள்ள நெசவு மண்டபமொன்றில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள மாற்றுவலுவுடையவர்கள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொண்டனர். (க-6)

## மகா கும்பாபிஷேகம்

வவுனியா ஓமந்தை வண்ணாங்குளம் அரசர் பதி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கிரியாகால ஆரம்பம் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 09 ஆம் திகதி காலை 9 மணி முதல் மறுநாள் பிற்பகல் 3 மணி வரையும் இடம்பெறும். அதற்கு மறுநாள் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் தென்னிந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இதில் கலைமாமணி மாணிக்க விநாயகர், கலைமாமணி எல்.ஆர். ஈஸ்வரி, மாலதி உட்படப் பல கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வீணைக் கச்சேரியை கலைமாமணி ராஜேஸ் வைத்யா வழங்குவார். (க-402)

## கோம்பாவில்- திம்பிலி வீதியை திருத்தக் கோரும் மக்கள்

புதுக்குடியிருப்பு,மார்ச் 31

புதுக்குடியிருப்பு கோம்பாவில் -திம்பிலி வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர்.

திம்பிலி கிராமத்தில் இருந்து புதுக்குடியிருப்பு நகருக்கு பயணம் செய்யும் முக்கிய மார்க்கமாக இந்த வீதி காணப்படுகிறது.

கடந்த 30 வருடங்களாக கற்களையோ அல்லது மக்கியையோ இந்த வீதி காணவில்லை. இந்த வீதியின் இருமருங்கிலும் மழை நீர் வழிந்தோடுவதற்கான வடிகால் அமைப்புகள் இல்லை. இதனால் வீதியினூடாக வழிந்தோடும் நீர் வீதியை அரித்து பெரும் பள்ளமாக்கியுள்ளது.

மழை காலங்களில் 4 அடி உயரத்துக்கு மேல் நீர் தேங்கி நிற்கும் என்றும் அக் காலப் பகுதியில் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாது சிரமப்படுவதாகவும் அந்தப் பகுதி பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாதை ஊடாகவே புதுக்குடியிருப்பு சந்தை, அந்தப் பகுதியிலுள்ள பாடசாலை மற்றும் பிரதேச செயலகம் உட்பட அனைத்துத் தேவைகளுக்குமாகப் பயணம் செய்யவேண்டியுள்ளது.

தற்போதும் இந்த வீதியூடாக மழை நீர் வழிந்தோடிய வண்ணம் உள்ளதால் அந்தப் பகுதி மக்கள் அவ்வீதியைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் பல கிலோ மீற்றர் சுற்றியே புதுக்குடியிருப்பு நகரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக நடந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் இந்தப் பாதையூடாகச் செல்ல முடியாத நிலையில் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலை செல்லாது நிற்கும் நிலைமை மழை காலங்களில் காணப்படுகின்றது.

எனவே இந்தப் பகுதி மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு இந்த வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-400)

## ஆசிரிய வாண்மை விருத்தி கற்கைக்கு துணுக்காயில் அனுமதி கிடைக்கவில்லை

### இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

துணுக்காய்,மார்ச் 31

ஆசிரிய வாண்மை விருத்தி கல்விமாணி கற்கை நெறியைத் தொடர்வதற்கான அனுமதிக்கு துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர்கள் கையெழுத்திடவில்லை. இதனால் கல்விமாணி கற்கை நெறியை முன்னெடுக்கும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் நாளை திங்கட்கிழமை மேலதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் கையெழுத்திடாமல் விட்டமை கண்டிக்கத்தக்கது என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்ததாவது:-

ஆசிரிய வாண்மை விருத்திக்கான கல்விமாணி கற்கை நெறியைத் தொடர்வதற்கு பதிவை மேற்கொண்டவர்களில் துணுக்காய் வலயத்துக்குட்பட்ட 15 ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர்.

அவர்கள் தமது மேற்படிப்பை முன்னெடுப்பதற்காகத் துணுக்காய் வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையெழுத்துப் பெறச் சென்றுள்ளனர்.

ஆனால் வலயக் கல்விப் பணிப்பாளர் அங்கு இருக்கவில்லை. பதிலாக உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் கையெழுத்து பெறச் சென்ற போது அவரும் மறுத்துவிட்டார். கையெழுத்திட வேண்டாம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கூறியதாகக் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இன்றாகும். இந்த நிலையில் அதிகாரிகளின் இந்தச் செயற்பாட்டால் குறித்த ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் மேற்படிப்பு மேற்கொள்வது மாணவர்களுக்கு பயனுடையது. அதனைத் தடுப்பதாகவே இந்தச் செயற்பாடு உள்ளது. இது தொடர்பில் நாளை மேலதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வு பெறமுடியும் என்று ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (ம-4)

## கால்வாயை புனரமைக்குமாறு கோரிக்கை

வவுனியா, மார்ச் 31

வவுனியா பஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள கழிவு நீர் செல்லும் கால்வாய்களைப் புனரமைத்து வழங்குமாறு சுகாதாரப் பகுதியினரிடம் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பஸ் நிலையத்தின் அருகில் அமைந்துள்ள இந்தக் கால்வாய்கள் உடைந்த நிலையிலும் அசுத்தமாகவும் காணப்படுகின்றன. மேலும் இவற்றிலிருந்து துர்நாற்றமும் வீசுகின்றது.

இதனால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இங்கு வரும் வாடிக்கையாளர்களும் சுகாதார ரீதியிலான பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (க-402)

## முல்லை. அதிபர், ஆசிரியர்களுக்கு விரைவில் சம்பள நிலுவைகள்

**ஆளுநருக்கு இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளனர்.**

புதுக்குடியிருப்பு, மார்ச் 31

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு இது வரை வழங்கப்படாத சம்பள நிலுவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நீண்டகாலமாக சம்பள நிலுவைகள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாகப் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையிடப்பட்ட போதும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த வாரம் முல்லைத்தீவில் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் ஆசிரியர்களுக்கான நிலுவைகளை உடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை அடுத்து வடமாகாண ஆளுநருக்கும் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று அண்மையில் இடம்பெறவுள்ளது.

ஆளுநரின் கவனத்துக்கு இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளனர்.

இதுவரை சம்பள நிலுவைகள் கிடைக்காத முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் தமது விவரங்களை எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்க முல்லைத்தீவு மாவட்டத் தலைவர் க.புலேந்திரராசா கேட்டுள்ளார். (ம-400)

## புதுக்குடியிருப்பு 8 ஆம் வட்டாரத்துக்கு மின் இணைப்புக் கிடைத்தது

புதுக்குடியிருப்பு,மார்ச் 31

பல வருடங்களுக்குப் பின்னர் புதுக்குடியிருப்பு 8 ஆம் வட்டாரப் பகுதிக்கு இலங்கை மின்சார சபையால் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருட கால போரால் மின்சார வசதியற்ற ஒரு கிராமமாக இந்தப் பிரதேசம் காணப்பட்டது. இடப்பெயர்வுக்குப் பின் இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்ததை அடுத்து மின்சாரம் வழங்குவதற்கு மின்சார சபை முன்வந்தது.

புதுக்குடியிருப்பு பிரதேச இராணுவ அதிகாரி மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்தே தமது பகுதிக்கான மின்சார இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என்று மக்கள் தெரிவித்தனர்.

தற்போது இலங்கை மின்சார சபையால் மின் கம்பங்கள் நடப்பட்டு மின் வயர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இன்னும் ஓரிரு தினங்களில் மின்சாரம் தமக்கு கிடைத்து விடும் என்றும் பல தசாப்தங்களின் பின் தமது பிரதேசமும் மின்னொளியைக் காணப் போகிறது எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலப் பகுதியில் இந்தப் பகுதிக்கு மின் பிறப்பாக்கிகள் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின்சாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-400)

## சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம்

வவுனியா,மார்ச் 31

வவுனியா நகர சிவில் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி அதன் தலைவர் தா.சலசலோகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வவுனியா நகரில் இளைஞர்களால் பாடசாலைக்கு சென்று திரும்பும் மாணவிகள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுதல் மற்றும் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்துதல் தொடர்பாக ஆராயப்பட்டது

மேலும் பிரயாணம் மேற்கொள்ளும்போது பஸ்களில் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் சமுகமளித்திருந்த பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டது. இதில் அதிக கவனம் செலுத்துமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சிவில் பாதுகாப்பு குழுக்களுக்குப் பொறுப்பான பொலிஸ் பரிசோதகரும் கலந்து கொண்டார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகிறார் அசோக் காந்தா அடுத்து வரப்போவது யார்?

புதுடில்லி,மார்ச் 31

இலங்கைக்கான இந்தியத் தூதுவராகக் கடமையாற்றும் அசோக் கே காந்தா இந்திய வெளிவிவகார அமைச்சில் செயலாளர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார். இவர் இந்திய வெளிவிவகார அமைச்சில், கிழக்காசியாவுக்குப் பொறுப்பான செயலராக நியமிக்கப்படவுள்ளார். இவரது பெயர் அமைச்சரவைக் குழுவின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளவர் யார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

பா.ஜ.கவின் மூத்த தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான யஸ்வந்த் சின்ஹாவின் மருமகனே அசோக் கே காந்தா என்ற போதிலும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அவரை வெளிவிவகார அமைச்சின் செயலர் நிலைக்கு உயர்த்தவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்ததால் இலங்கையுடனான உறவில் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது.இந்த நெருக்கடியான வேளையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளவர் குறித்துக் கடும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

பா.ஜ.கவின் மூத்த தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான யஸ்வந்த் சின்ஹாவின் மருமகனே அசோக் கே காந்தா என்ற போதிலும், ஐக்கிய முற்போக்குகூட்டணி அரசு அவரை வெளிவிவகார அமைச்சின் செயலர் நிலைக்கு உயர்த்தவுள்ளது.

இராஜதந்திரத்துறையில் சிறப்பான பணியும், கிழக்காசிய விவகாரத்தில் இவருக்குள்ள பரந்த அனுபவமுமே இந்தப் பணிக்கு அவர் தெரிவு செய்யப்படக் காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்சீனக் கடல் விவகாரத்தில் இந்தியாவின் நலனைப் பாதுகாப்பதற்கு வசதியாகவே அசோக் கே காந்தா இந்தப் பதவியில் நியமிக்கப்படவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சில் கிழக்காசியப் பிரிவின் இணைச் செயலராக அசோக் கே காந்தா முன்னர் பணியாற்றியிருந்தார். மலேசியாவுக்கான தூதுவராகவும் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உள்ளது.

தற்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்காசிய விவகாரங்களுக்கான செயலராக உள்ள சஞ்சய் சிங் ஏப்ரல் மாதத்துடன் ஓய்வுபெறவுள்ள நிலையிலேயே அந்தப் பதவிக்கு அசோக் கே காந்தா பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, 'இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் இறுக்கமாகியுள்ள நிலையில், இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்படவுள்ள இந்தியத் தூதுவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

(த)

## அமைச்சர் வாசனின் கருத்து தனிப்பட்டது

அமைச்சர் நாராயணசாமி கூறுகிறார்

பொதுநலவாய மாநாடு நவம்பரில் இடம்பெறவுள்ளதால் அது தொடர்பில் முடிவெடுக்கக் காலம் இருக்கின்றது.

சென்னை, மார்ச் 31

இலங்கையில் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்த கருத்தானது அவரது தனிப்பட்ட கருத்தென்றும் இந்திய மத்திய அரசின் கருத்தல்ல என்றும் பிரதமர் அலுவலக மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் பொதுநலவாய மாநாடு இடம்பெறக் கூடாது. இதன் தலைவராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருப்பதை அனுமதிக்கக் கூடாது.

பொதுநலவாய மாநாட்டை வேறுநாட்டில்நடத்த அனைத்து நாடுகளும் இணைந்து முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

இது அவருடைய தனிப்பட்ட கருத்து என்றும், மத்திய அரசின் கருத்தல்ல என்றும் அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார். பொதுநலவாய மாநாடு நவம்பரில் இடம்பெறவுள்ளதால் அது தொடர்பில் முடிவெடுக்கக் காலம் இருக்கின்றது. என்ன முடிவு எடுக்கப்பட்டதென்பதைப் பிரதமரே தெரிவிப்பார் என்றும் இணை அமைச்சர் நாராயணசாமி மேலும் கூறினார்.

(த-5)

## மத நெருக்கடிகளால் அபாயகரமான பிரச்சினை

### மனித உரிமை ஆணைக்குழு கவலை

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் காணப்படும் மத நெருக்கடிகளின் காரணமாக அபாயகரமான தேசிய பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டில் சட்ட ஆட்சியை செயல்படுத்துவதற்கும் அமைதியை நிலை நாட்டுவதற்கும் பொறுப்பான அரச நிறுவனங்கள் இந்த விடயத்தில் அமைதி காத்து வருவது கவலையளிப்பதாக இருப்பதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மத நெருக்கடியானது பல்வேறு சமூகங்களுக்கிடையில் அவநம்பிக்கையை உருவாக்குவதாகவும் அமைந்துவிடும். அதனால் சமூகங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று வெவ்வேறாகப் பிரிந்து போகும் நிலை ஏற்படும் என்று ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

இந்த நிலைமையானது சமூகத்தின் வளர்ச்சிக்கு குந்தகமாக அமையும். இந்தப் பிரச்சினையை சமூகக் கலந்துரையாடல்கள், விவாதங்கள், பேச்சுக்கள் போன்றவற்றின் மூலமே தீர்த்துக் கொள்ள முடியும் என்பது தெளிவு. பல்வேறு மத அமைப்புகளின் தன்னிச்சையான செயற்பாடுகள் அவர்களின் மதத் தத்துவங்களை மீறுபவையாக அமைந்துள்ளன. சமூக முன்னேற்றத்தையும் பாதிக்கின்ற அபாயம் எற்படுகின்றது. எந்த கட்சியும் எந்த விதமான நோக்கத்தைக் கொண்டும் செயல்படலாம். ஆனால் மத வெறித்தன்மைகளுடன் சமூகம் ஒத்துப்போக முடியாது; அது நிராகரிக்கப்படவேண்டும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல்கட்சிகள், குழுக்கள் அல்லது வேறு நிறுவனங்களாக இருந்தாலும் இந்த நிலைமையைத் தமது அரசியல் அல்லது வேறு முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாகாது என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

(ப)

## மாத்தளைப் புதைகுழி; விசாரணை அவசியம்

### ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 31

மாத்தளை புதைகுழி தொடர்பாக முழு அளவிலான விசாரணையொன்று அவசியமென ஜே.வி.பி. கோரியுள்ளது. இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் புதைக்கப்பட்டவர்கள் யாரென அறிவதற்கு உறவினர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டுமெனவும் அதற்காக ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட அநுரகுமார, மேற்படி உடல்கள், அம்மை நோயால் உயிரிழந்தவர்களுடையது எனக்கூறி விசாரணைகளைத் தடுக்கப் பலர் முயன்றனர் என்றும் சுட்டிக் காட்டினார்.

(த)

## புலிகளுக்கு உதவியவர்களின் தகவலை வெளியிடுவேன்

### மிரட்டுகிறார் கருணா

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு உதவிகளை வழங்கிய நாடுகள் மற்றும் அரசியல்வாதிகள் பற்றிய தகவல்களை வெளியிடப்போவதாக பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா)தெரிவித்துள்ளார்.



இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கிய நபர்கள் பற்றிய முழுமையான விவரங்கள் எனக்கு மட்டுமே தெரியும். நோர்வே, சுவிற்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளுக்கு நான் பயணம் செய்திருக்கின்றேன்.

409 ரக ஆயுதங்கள் தொடர்பான பட்டியல் ஒன்றைப் பாங்கொக் ஹோட்டல் ஒன்றில் வைத்து ஐயர் என்ற நபருக்கு நானே வழங்கினேன். இந்தப் பட்டியலை வழங்குமாறு பிரபாகரன் எனக்குப் பணிப்புரை விடுத்தார். நோர்வே ஆயுத நிறுவனங்களுக்கும் நான் பயணம் செய்திருந்தேன். கண்ணாடி மாளிகைகளிலிருந்து கற்களை எறிய வேண்டாம் என அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கேட்கின்றேன். அரச சார்பற்ற நிறுவனங்களும் புலிகளுக்கு உதவிகளை வழங்கியிருந்தன.

துப்பாக்கிக் குண்டு துளைக்காத பிராடோ ரக வாகனமொன்றை அரச சார்பற்ற நிறுவனமொன்று பிரபாகரனுக்கு வழங்கியிருந்தது-என்றார்

அண்மையில் விநாயகமூர்த்தி முரளிதரனின் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு மனித உரிமை கண்காணிப்பகம் கேள்வி எழுப்பியிருந்தது. இந்த கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் முரளிதரன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

(த)

## இலங்கைப் பெண் தற்கொலை முயற்சி

குவைத்தில் பணிப் பெண்ணாகச் சேவையாற்றி வரும் இலங்கைப் பெண்ணொருவர் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் வீட்டு எஜமானியால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டின் எஜமானி குறித்த பணிப் பெண்ணின் அறைக்கு தற்செயலாகச் சென்று பார்த்தபோது அந்தப் பெண் மயக்க நிலையில் இருந்ததை அடுத்து அவரை வைத்தியசாலையில் அனுமதித்ததாக அரப் நியூஸ் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அந்நாட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர் எதற்காக இந்த முயற்சியை மேற்கொண்டார் வீட்டு உரிமையாளர்களால் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பன தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ)

## இந்தியாவால் இப்போது எதுவும் செய்ய முடியாது

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானங்களையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை

மட்டக்களப்பு, மார்ச் 31

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவினால் எதனையும் செய்ய முடியாது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, நேற்று சனிக்கிழமை பகல் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நான் கடந்த காலத்தைப் பற்றி பேச விரும்பவில்லை. எல்லோரும் தவறு விட்டிருக்கின்றோம். நான் ஒன்று கூறினால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா என்று தெரியவில்லை. இருப்பினும் நான் அதைக் கூறியே ஆக வேண்டும். 2005ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது பொதுமக்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வாக்களிக்கச் செல்ல விடாதமையினால் மக்களுக்குப் பெரிய ஒரு சிக்கலை உருவாக்கியிருக்கின்றார் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் அவர் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது நாட்டின் ஏனைய இன மக்களுக்கும் சிக்கலான நிலையையே ஏற்படுத்தியுள்ளார்.

பிரபாகரனின் வாரிசுகளும் இன்று அரசுடன் இணைந்து செயல்படுகின்றனர். பிரபாகரனை ஏற்றிச் செல்ல வந்த கப்பலுக்கு என்னவாயிற்று? எல்லாக் கதைகளும் முடிந்து விட்டன. இப்போதாவது நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடன் சேர்ந்து பேச்சு நடத்தியது. தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவினால் எதனையும் செய்ய முடியாது. இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. மற்றையது தற்போது இலங்கையின் பிரச்சினை அந்நியப் பிரச்சினையாகி விட்டது- என்றார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எபநேசர் ஜெப ஆலயத்தின்
போதகர் **மாறன் சுப்பிரமணியம்** (மோகன்)
அவர்களின் அன்புத் தாய்


### திருமதி மாறன் மேரி

நேற்றுமுன்தினம் 29.03.2013 கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.04.2013) திங்கட்கிழமை மு.ப. 11மணிக்கு 19/1, பீச் றோட், கல்கிசையில் நடைபெறும்.

**எபநேசர் ஜெப ஆலயம்,**
**வட்டுக் கோட்டை.**

(சி/801#1)(23/6,16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**தோற்றம்**
**10.08.1930**

**மறைவு**
**01.03.2013**

**அமரர்**

### இராசையா சுப்பிரமணியம்

காலங்கள் பிரிவை ஏற்படுத்தினாலும்
கனவிலும் நினைவிலும் பதிந்திருக்கும்
உம் அன்புருவம்
உங்களுடன் வாழ்ந்த பசுமையான
நினைவுகளை என்றென்றும் நினைவூட்டும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனிடம்
வேண்டி நிற்கின்றோம்.

இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அழைக்கின்றோம்.
இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### வரதராஜா பாஸ்கரன்

(தபால் திணைக்களம்,அனுராதபுரம்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், அனுராதபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வரதராஜா பாஸ்கரன் 29.03.2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வரதராஜா-(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்-அனுராதபுரம்) சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு புத்திரரும், பிரேமா(உள்ளூராட்சித் திணைக் களம்,வடமத்திய மாகாண சபை) அவர்களின் பாசமிகு கணவரும்,ஜனோஜா, கவினி, இமேஷா, பிரபாஷி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகரன் (ராஜா) ரஜனி, முரளிதரன் (ஆசிரியர்,கிளி/மத்திய கல்லூரி),வதனி (லண்டன்), ஜதீஸ் கரன் (அதிபர்,வவு/நீலியா மோட்டை சரஸ்வதி வித்தியாலயம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காஞ்சனா (அதிபர்,கிளி/ மத்திய ஆரம்ப வித்தியாலயம், விமலேந்திரன் (செல்வாநகர்), சுகாஜினி (சாவகச்சேரி), சுப்பிரமணியம் (லண்டன்), மேரியூடிற்(ஆசிரியை,வ/இறம் பைக்குளம் மகளிர் ம.வி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சனோஜ் (மாணவன்,கிளி/ கிளிநொச்சி ம.வி), பானுஜன் (மாணவன், யா/சாவ கச்சேரி இந்துக் கல்லூரி), அஷ்விஜன் (மாணவன்,யா/சண்முகானந்தா வித்தியாலயம்-சாவகச்சேரி), பிரமோத்ஜன், சுபேதா, கபிஷன், கிஷிகேஸ், ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இல.11,டிப்போ வீதி,ஆனந்தநகர், கிளிநொச்சி யில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று(31.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனந்தநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11, டிப்போ வீதி,
ஆனந்தநகர், கிளிநொச்சி.

(26263)(5.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் வீடு வாடகைக்கு.
(தனியார் அரச நிறுவனங்களுக்கு உகந்தது.)
தொடர்பு: 075 544 0503 (தி/7258)(6.7)

## வீடு வாடகைக்கு

கோப்பாய் றோட், உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 9153536 (தி/7259)(6.7)

## கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு

இங்கிலாந்து, அஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு 100% விசா உத்தரவாதத்துடன் பெற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 0727193322/ 0774193321 (தி/7253)(6.7)

## ஆசிரியர்கள் தேவை

தரம் 6 - 9 வரையான வரலாறு,
புவியியல் கற்பிக்கக் கூடியவர்களும்,
தரம் 1 - 5 வரையான சகல பாடங்களும்
கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களும் தேவை.
தொடர்பு- 0774598440
(சி/8012)

## காணி விற்பனைக்கு

பண்டாரிவயல் இல. 66/38, இல் 18ஏ (கோப்பாய் தெற்கு) 8பரப்பு 15.25 குளியும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 4003751

## குத்தகைக்கு

மாரியம்மன் வீதி, திருநெல்வேலியில் 1½ பரப்பு காணி குத்தகைக்கு உண்டு.
தொடர்பு: 077 676 3799
077 511 8388
(35198)(6.7)

## காணி குத்தகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை A9 வீதி மாம்பழம் சந்திக்கு அருகில் காணி குத்தகைக்கு - 0755440503

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
by ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 424, k.k.s. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
TEL. 077 6751619

## கார் வாடகைக்கு

திருமண வைபவங்களுக்கு புதிய வெள்ளை நிறக்கார் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்
0777 062 349

## வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்குப் பிரதேசத்தில் 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- 0775294464

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியில் A9 வீதிக்கு மிக அண்மையில் 7½ பரப்பு காணி பகுதியாகவோ/ முழுமையாகவோ உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777291673 (தி/7260)(6.7)

## காணி விற்பனை

ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கில், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கிணற்றுப்பங்குடன் கூடிய 2½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு, (தி/7261)(6.7)
தொடர்பு: 021 205 3324

## கார் விற்பனைக்கு

KR தொடரிலக்கமுடைய VXI மொடல் Maruthi Zen Estilo புதிய கார் விற்பனைக்குண்டு.
யா/ இந்து மகளிர் கல்லூரி அருகில்
தொடர்பு:- 021 221 9177

## வாகனம் விற்பனைக்கு

Np PR xxxx தொடரிலக்கமுடைய TATA 207 Cap மொடல் வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 0040806

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் மூன்று கடையுடன் சேர்ந்த களஞ்சிய அறையும் உடைய மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**0777 301 248**
RG ads

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- **1985, திருவோணம்,** Physiotherapist, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- **1983, அஷ்வினி 4,** Nurse, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- **1982, பரணி,**Management Assistant, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- **1981, மூலம் 2,** Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- **1982, புனர்பூசம் 3,** Engineer,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- **1977,அனுஷம்,**Healthcare Professional,London Citizen,Divorced மணமகளுக்கு மணமகன் தேவை
- **1970, அனுஷம் 2,** Quantity Surveyor, Oman மணமகனுக்கு மணமகள் தேவை
- **1982, அவிட்டம்,** BSc, MSc, London மணமகனுக்கு மணமகள் தேவை
- **1982, மகம்,** Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- **1980, சித்திரை 2,** Bank Officer,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- **1977, அனுஷம் 4,** Doctor, Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- **1986, அவிட்டம் 4,** Accountant, London மணமகனுக்கு மணமகள் தேவை

MMW

**Real Matrimony(Pvt)Ltd**
இல.05, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
**Tel : 021 4923 739 / 864 / 738**
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com

## WEBSTAR TECHNOLOGY

Complete IT Solution
Jaffna Road, Alady Junction,Manipay.
Tel 021 2255600 / 077 7448623
Web www.webstartechnology.net
E-mail info@webstartechnology.net

STUDY IN ABROAD

**Tution Fee After the Visa**

Canada, UK, U.S.A, Switzerland, Malta, Netherland, Malaysia, Singapore, Bintan, NewZealand

**Registration Now on**

Webstar Technology
Aalady Junction, Manipay
0212255600 / 0777448623

(c/8003)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஈஸ்ரர் வாழ்த்துக்கள்

★ கர்த்தர் அருள் நாடும் கிறிஸ்தவ திருமணமா?
★ இறைவன் திருவருள் கூடும் இந்துக் கலாசார திருமணமா?
★ இறையருள் நிறைந்த இஸ்லாமிய திருமணமா?

**எக் கலாசாரத்துக்குமேற்ற தூய 22கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்சியம்**

**அன்ரனி ஜுவல்ஸ்**

இல. 149-3B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4392

**Antony Jewels**

சகல விதமான ஆபரண கட்டிங் வேலைகளுக்கும்.

## அன்ரனி ஜுவல்ஸ் டிசைனேர்ஸ்

இல. 149-4A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 6264650

இல. 21B, கச்சாய் வீதி, சாவகச்சேரி,
077 2713896

(35512)(6.16.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மல்டி லக்' பரிசில் நிகழ்வு



சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு 'மல்டிலக்' பெயின்ட் நிறுவனத்தால் மாபெரும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு சகல விற்பனை நிலையங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களில் 'மல்டிலக்' நிறுவனத்தால் புதுவருடக் கொண்டாட்டங்களின்போது வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையிலேயே பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தன. இந்த வருடம் விசேடதிட்டமாக குறிப்பிட்ட அளவு 'மல்டிலக்' பெயின்டைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 12 லீற்றர் பெயின்ற் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு சுடுநீர்ப் போத்தலும், 20 லீற்றர் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மிக்சர் கிரைண்டரும், 30 லீற்றர் பெயின்ற் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு றைஸ் குக்கரும், 50 லீற்றர் பெயின்ற் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு சமையல் காஸ் குக்கரும் உடனடிப் பரிசாக வழங்கப்படும்.

யாழ்.மாவட்ட வாடிக்கையாளர்களுக்கான பரிசில் வழங்கும் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம், ஓட்டுமடம், மல்லாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ள மல்ரிலக் பெயின்ற் விற்பனை முகவர் நிலையங்களில் இடம்பெற்றது.

இந்தப் பரிசில் வழங்கும் நிகழ்வில் 'மல்ரிலக்' நிறுவனத்தின் பொது முகாமையாளர் ரமேஸ் பெரேரா, விற்பனை முகாமையாளர் எம்.ஜே.எம். பௌமி ஆகியோர் கலந்து கொண்டு வாடிக்கையாளர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்தனர். (த-14)

# பிரதேச அபிவிருத்தி வங்கி 263 கிளைகளுடன் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 31


நாடளாவிய ரீதியில் 263 கிளைகள் ஊடாக பிரதேச அபிவிருத்தி வங்கி தனது வங்கிச் சேவையை விஸ்தரித்துள்ளது என்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.சிவநேசன் தெரிவித்தார்.

கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு நடுத்தரக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான கடன் உதவிகளை வழங்கும் வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி மக்களின் தேவைகளை மையப்படுத்தி தற்போது புதிய கிளைகளையும் விஸ்தரித்து வருகிறது.

நாடளாவிய ரீதியில் தற்போது 263 கிளைகளை பிரதேச அபிவிருத்தி வங்கி விஸ்தரித்துள்ளது.

வடமாகாணத்தில் 6 கிளைகளைக் கொண்ட பிரதேச அபிவிருத்தி வங்கி யாழ்ப்பாணம், மருதனார்மடம், கிளிநொச்சி, கனகராயன்குளம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி வங்கி தற்போது போரால் பாதிப்படைந்த மக்களுக்கான வாழ்வாதார, சுயதொழில் கடன் திட்டங்களை முன்னெடுத்துவருகிறது எனவும் தெரிவித்தார். (த-14)



ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபன LIC யாழ்ப்பாணக் கிளையின் வாடிக்கையாளரான கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இராசலிங்கம் காந்தலிங்கம் அகால மரணமடைந்ததை அடுத்து அவருக்கான இழப்பீட்டுத் தொகையினை அவரது சகோதரியிடம் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் ஆர்.பார்த்தீபன் வழங்குகிறார். அருகில் விற்பனை மேற்பார்வையாளர் எஸ்.கோபிதாஸ் உள்ளார்.

# போரால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி உதவி

அரச ஈட்டு முதலீட்டு வங்கி யாழ்.மாவட்டத்தில் கடந்த 3 வருட காலப்பகுதிக்குள் போரால் பாதிப்படைந்த அரச உத்தியோகத்தர்கள் 100 பேருக்கு வாழ்வாதாரக் கடன் உதவிகளை வழங்கியுள்ளது என்று அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் க.நடராஜமூர்த்தி தெரிவித்தார்.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது கடந்த 3 வருடங்களாக தனது வங்கிச் சேவையை ஆரம்பித்துள்ள நிலையில் அரச உத்தியோகத்தர்களுக்கு நலன் பேணும் பல்வேறு திட்டங்களை வங்கிச் சேவையூடாக வழங்கி வருகிறது.

இலங்கையில் 80 வருட கால வங்கிச் சேவையை வழங்கிவரும் நிலையிலும் வடமாகாணத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களும் பயன்பெறக்கூடியதாக யாழ்.நகரில் தனது வங்கிச்சேவை நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வங்கிச் சேவையை ஆரம்பித்த கடந்த 3 வருட காலப்பகுதிக்குள் 100 பேருக்கு வாழ்வாதாரக் கடன் உதவிகளை அது வழங்கியுள்ளது. இந்தக் கடன் உதவிகளைப் பெற்றவர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பள அடிப்படையில் தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு மேலும் கடன் உதவிகளை வழங்க வங்கி முன்வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (த-14)



ஜனசக்தி காப்புறுதி கம்பனியின் சாவகச்சேரி கிளையினால் அதன் வாடிக்கையாளராகிய நியூ மல்ரி சென்ரர் உரிமையாளருக்கு பொது காப்புறுதி இழப்பீட்டுத் தொகையான 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை யாழ் பிராந்திய முகாமையாளர் எஸ்.நிரஞ்சன் கையளிக்கிறார். அருகில் உதவி முகாமையாளர் எஸ்.ரகுபரன் மற்றும் வியாபார உத்தியோகத்தர் எஸ்.மயூரன் ஆகியோர் உள்ளனர்.



செலான் வங்கியின் 25ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் சாவகச்சேரி கிளையில் இடம்பெற்றபோது தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் பரிசுபெற்ற சிறார்களில் ஒருவருக்கு பரிசில்களை வழங்குகிறார். (த-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

WA-xxxx இலக்கமுடைய 2010 இல் பதிவு செய்த 9300 k.m ஓடிய 48cc Loncin LX 480 மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

தொடர்பு: 0728926661 (34946) (10,6,7)

## விற்பனைக்கு

35 நாள் நிறைந்த ஒறிஜினல் ஜேர்மன் செப்பேட் அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:M. இராயேந்திரன் MS வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில். (34937) (10,6,7)

## உடனடியாகத் தேவை

யாழ்/ கொழும்பு பிரதேசங்களுக்கு கட்டட நிர்மாணத்துறையிலுள்ள மேசன்/ கை உதவியாளர்கள் உடனடியாகத் தேவை 18 -50 வயதினர். உணவு தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் 20,000/=, 45,000/= வரை. விரைவாக அழையுங்கள் -

(26203) (6.7) **077 556 1883**

## தவறிவிட்டது

புளியம் பொக்கணை ஆலய உற்சவத்துக்கு சென்று கிளிநொச்சிக்குத் திரும்பி வரும்போது வவுனியா சென்ற தனியார் பேருந்தில் இராசலிங்கம் ஜெயதீபன் அவர்களின் தேசிய அடையாள அட்டை சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை, ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க.இராசலிங்கம், பிராந்திய சுகாதார சேவைப் பணிமனை A9 வீதி கிளிநொச்சி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

**தொடர்பு: 077 3036 851** (26261) (6.7)

## Wanted

for immediate employment in a modern multispecialty hospital

1. Qualified and Experienced Nurses, mid-wives

*From govt. or private sector on Part Time /Full Time basis*

2. Pharmacist with experience
3. Three wheel Drivers with license.

**Attractive salary offered.**

Prospective Candidates requested to Send your CV to the following address

**Director, Human Resources**
**Northern Central Hospitals ( Pvt ) Ltd**
**342, Palaly Road, Jaffna**
077 431 9732 (34978)(5.6.7)

## இரு கடைகள் வாடகைக்கு

யாழ். முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள இரு கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு:
**0776932524** (34918) (10,6,7)

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் C.T.B டிப்போவுக்கு முன்பாக ஆறு அறைகள் கொண்ட நாற்சார வீடு வாகனத் தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **0776061983** (34915) (10,6,7)

## காணி விற்பனை

கரடிப்போக்கு சந்தியில் இருந்து உருத்திர புரம் வீதியில் ஒரு கி.மீ தூரத்திலுள்ள 05ஆம் வாய்க்காலில் வீதியோரத்தில் ½ ஏக்கர் மேட்டு நில தென்னங்காணி விற்பனைக்குண்டு .

L.M.R. Enterprises மரக்காலைக் காணி

தொடர்பு: **0778454559, 0777780544, 0775101462.** (34925) (10,6,7)

## காணியும் வீடும் விற்பனைக்கு

வேலணையிலிருந்து ஊர்காவற்றுறை வீதியில் (தபால் கந்தோரில் இருந்து மூன்றாம் வீடு) உறுதியுடன் உள்ள 20 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**0779825027** (34911) (10,6,7)

## 30 PEOPLE NEEDED IMMEDIATELY

விஸ்தரிக்கப்பட்டு வரும் எமது சர்வதேச கம்பனியின் புதிய கிளைகளுக்குரிய பயிற்சியுடன் கூடிய தொழில் வாய்ப்புக்கள்.

* Office/Administrations
* Inventory Customer Services
* Sales/Promotional Marketing
* Trainee Managers

**Training period - 12,000/=**
**After training - 40,000/=+ + +**
Management Opportunity for the right People

**Call: 0773 999 155, 0778 213 839** (34975) (6.7)

## வீடு வாடகைக்கு

மீசாலை மேற்கு, பங்களா வீதிக்கு அருகில் "துவாரகா" 3 அறைகள், மாபிள் பதித்த Hall, மற்றும் தண்ணீர் வசதி கொண்ட புதிதாகக் கட்டப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
**0778413705, 0774519986** (27805) (10,6,7)

## வீடு விற்பனைக்கு

அராலி வீதி, சங்கானையில் பத்துப் பரப்பு காணியுடன் கிணறு, சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள நாற்சார வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: **0212221329, 0774733893, 0776253040** (34899)(5,6,7)

## கடை வாடகைக்கு

இல.08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த 40×19 சதுர அடி கொண்ட மாபிள் பதித்த கடை வாடகைக்கும் ✱லைற் இஞ்சின் விற்பனைக்கும் உண்டு.

**தொடர்பு: 077 563 2526** (34948)(6.7.11)

## HOUSE AVAILABLE FOR RENT - Kilinochchi

A two storeyed house, with all facilities, consisting 2500 Sq.ft floor area in Kilinochchi town available for rent.

**NGO/ Organizations prefered**
**Contact No: 0773 604 012** (34924) (6.7)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
23.09.1959

உதிர்வு
18.03.2009

அமரர்
**நாகராணி மாயவன்**

திதி: 31.03.2013 (ஸப்தமி)

அயராது அரவணைத்து அன்பு காட்டி
சீராக வளர்த்திட்ட எம் அன்னையே!
எமை விட்டு நான்காண்டுகள் சென்றாலும் நம்ப முடியாமல்
எமது உள்ளத்தில் உன் நினைவுகளை நிலை நிறுத்தி
எம் உயிருள்ள ஒவ்வொரு கணமும்
உன் நினைவுகளுடன் வாழ்ந்திருப்போம்.

அண்ணாசிலையடி,
கரணவாய், கரவெட்டி.

(35311)(6.7.11)

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## நோத் சீ லிமிடெட்

பாரம்பரியக் கைத்தொழில் மற்றும்
சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

### வேலை வாய்ப்புக்கான விண்ணப்பம்

கணக்காளர் *(Accountant)* வெற்றிடம் - 01 (ஆண்)

யாழ். குருநகரில் இயங்கிவரும் வலைத் தொழிற்சாலையில் நிரந்தர அடிப்படையில் பணிபுரிவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமை**

Intermediate level ICASL / CIMA (Part Qualification)/ ACCA/Degree in Management or Commerce/ HNDA தரச் சான்றிதழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**வேலை அனுபவம்**

யாதாயினும் ஒரு கணக்காய்வு நிறுவனப் பயிற்சிப் பட்டறையில் குறைந்தது 2 வருடங்கள் பூர்த்தி செய்திருப்பதுடன் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை/கம்பனி/ தனியார் கம்பனிகள் போன்றவற்றில் குறைந்தது 3 வருடங்கள் கணக்கியல் மற்றும் நிதிமுகாமைத்துவத் துறையில் முகாமைத்தரத்தில் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனுபவம் விசேட தகுதியாகக் கொள்ளப்படும்.

**வயது எல்லை**

விண்ணப்ப முடிவுதிகதியில் 25 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள மற்றும் நியமனம்**

அரச சம்பள அளவுத்திட்டம் தரம் (MM 1-1: 25,640/=-3 X 665/=-7 X 735/=-15 X 925/= 46,655/= அத்துடன் அரசால் அங்கீகரிக்கப்படும் இதரபடிகள் வழங்கப்படுவதுடன், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன செலுத் தப்படும்.

**விண்ணப்பங்கள் யாவும் அனுப்பி வைக்க வேண்டிய விவரம்:**

தமது சுயவிவரம் (CV) உறுதிப்படுத்தப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் கல்வி, வேலை அனுபவச்சான்றிதழ் போன்றவற்றின் பிரதிகளைப் பின்வரும் முகவரிக்கு 05.04.2013 அன்று அல்லது அதற்கு முன்னதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
நோத் சீ லிமிடெட், வலைத்தொழிற்சாலை,
குருநகர், யாழ்ப்பாணம்.
(சீ/7397) (45.6.7)

தொ.பே. 021 2222 733,
தொ.நகல்: 021 2220 112
மின்னஞ்சல்: northsealtd@sltnet.lk

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08.03.1980



மறைவு
11.04.2012

**திருமதி மஞ்சுளா சுரேஸ்**
(மஞ்சு)

ஓர் ஆண்டு ஆனதுவோ
உன் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீ
நித்தம் புலம்புகின்றோம்
உன் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(34913) (45.6.7)

முடவேம்படி,
சுன்னாகம்.

உன் நினைவுடன்
குடும்பத்தினர்
சுரேஸ் (கணவர்), லோஜிதன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு**

Toyota 2L எஞ்சின்கள், நிசான் எஞ்சின்கள், மிற்சுபி எஞ்சின்கள், கையுண்டாய் KIA. எஞ்சின்கள், லேத் மிசின், அவுட் மோட்டார், கார் Lights, லோடர், றோலர் எஞ்சின் மற்றும் ட்ரக்டர் உதிரிப்பாகங்கள் என்பன விற்பனைக்கு உண்டு.

(35453) (6.7) தொடர்பு: 0775 824 663

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் சுப்பிரமணியம்

லோட்டன் றோட், மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சுப்பிரமணியம் (29.03.2013 ) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரி பத்மராணியின் அன்புக் கணவரும், சங்கர் (சுந்தர்சன் எலக்ரிக் ஷொப் ஊழியர்), உதயணன் (ஆசிரியர்,மானிப்பாய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர், பவாநந்தினி ஆகியோரின் மாமனாரும், டில்சாந், ஜெய்சாந், தரினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.03. 2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத் தில் மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் றோட்,
மானிப்பாய். (35484)(6.7.11)
தகவல்:
குடும்பத்தினர்.

**Study in MALAYSIA**
**மலேசியாவில் உயர்கல்வி**

மலேசிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY
**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகைமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகைமை:கணிதம், ஆங்கிலம் உட்பட O/L சித்தி.

ஏப்ரல் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

**Call : 0777-767818**
Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte, Colombo 06.
(35457)(6.7)

## தந்தை செல்வாவின் நினைவஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்31

தமிழரசுத் தந்தை அமரர் சா.ஜே.வே. செல்வநாயகத்தின் நினைவஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரது நினைவாலய வளாகத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

## கும்பாபிஷேகம்

வவுனியா ஸ்ரீ அபிராமி உபாசவி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு யாக பூசையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து விசேட அபிஷேகங்களும் தீப ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

(ந-13)

## மணவாளக் கோல சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வண்ணை ஸ்ரீ அங்குசபாச (கீரிப்பிள்ளையார்) ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு யாக பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நவோத்ர சகரஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு மாகேஸ்வர பூஜை இடம்பெறும். மாலை 5 மணிக்கு நித்திய பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல் ஆகியன இடம்பெற்று விநாயகப் பெருமான் வெளி வீதியுலா வருவார். (ந)

**Royal Veterinary Hospital (pvt) Ltd.**
**றோயல் கால்நடை வைத்தியசாலை(தனியார்)**

மேற்படி வைத்தியசாலையின் சேவைகளை வாரத்தின் ஏழுநாள்களும் (விடுமுறை நாள்கள் உட்பட) காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
(திருநெல்வேலி சந்திக்கும் விவசாயப்பண்ணைக்கும் இடையில்)

தொடர்பு: 021 320 7561, 021 320 2220 (35474) (6.7)

**அச்சுவேலி தர்சா தமிழ்ப் பதிப்பக ஆதரவில்**

உதயன் பத்திரிகை வசந்தம் தொலைக்காட்சி
ஊடக அனுசரணையுடன்
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும்

**HINDU PREMIER LEAGUE**

**NORTHERN CHAMPIONSHIP AVARANGAL**
**இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும்**

காலம்: இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 5.00மணி

இடம் : இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானம், ஆவரங்கால் மேற்கு.

தலைமை
**அ.கமலறேகன் அவர்கள்**

முதன்மை விருந்தினர்
**கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள்**
(நாடாளுமன்ற உறுப்பினர், உதயன் பத்திரிகை நிறுவுனர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

HPLஒருங்கிணைப்புக் குழு,
இந்து இளைஞர் வி. கழகம்.
077 229 9535, 077 175 1340
(சீ/7234)(5.6.7)

# நெஞ்சம் கனக்கும் ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 1959.10.17 | ஆண்டவன் அடியில் 2012.04.11

திதி: 31.03.2013

## அமரர் நாகமுத்து சோதிலிங்கம்



எங்கள் குல விளக்கே! எங்கள் ஆருயிரே அப்பா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த அந்த நாள் ....
எப்படி மறப்போம். கண்ணற்ற காலன் கணப்பொழுதில்
தங்களைப் பறித்துச் சென்ற மாயம் தான் என்ன அப்பா?
இன்னும் இந்த வினாவுக்கு விடைதெரியாது தவிக்கின்றோம்.
நீங்கள் என்றும் எங்களுடன் இருக்கின்றீர்கள்
என்ற நினைவுடனேயே நாங்கள் வாழ்கின்றோம். அப்பா.
அப்பா இல்லை என்று நினைக்கவே எங்கள்
உள்ளம் நோகுதப்பா, என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்களுக்காய் வாழ்வோம். எங்கள் உயிர் உள்ள வரை
உங்கள் ஆத்ம சாந்திக்காய் வேண்டி நிற்போம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

என்றும் உங்கள் பிரிவால் வருந்தி நிற்கும்
சோ.கனேசமலர் (மனைவி),
பிள்ளைகள்: நிசோபன், நிதுர்சன், நிவேதன், நிவேகா,
சகோதரர், மைத்துனர், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெ.செல்வநாயகம் அவர்களின்
அன்பு மாமியார்

**அமரர் முருகர் சிவயோகம்**

இறைபதம் அடைந்தமையையிட்டு 31ஆம் நாள் நினைவஞ்சலியில் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(34983)(10,6,7)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30.03.1935

மறைவு
31.03.2003

**அமரர் சோமசுந்தரம் குலேந்திரன்**

அன்பு அப்பாவே!
காலச்சுமை தாங்கி போல மார்பில்
எமைத் தாங்கி விழும் கண்ணீர் துடைத்தாய்
இப்போ எம் கண்ணீர் துடைக்க நீங்கள்
இல்லையே அப்பா.....
என்றும் உங்கள் நினைவுடன்

இணுவில் தெற்கு, இணுவில். (34991)(5.6.7) குடும்பத்தினர்.

## சங்கானையில் அலுவலக கட்டடம் தேவை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு

ஆகக்குறைந்து 1,800 சதுர அடி நிலத்தளத்தையும், வீதியை நோக்கியதாக 30அடி அகலமான வாகன தரிப்பிடத்தையும் கொண்ட 3,000 தொடக்கம் 4,000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட வர்த்தகக் கட்டட மொன்று சங்கானை நகரத்தில் தேவைப்படுகின்றது.

தயவு செய்து பின்வரும் விவரங்களையும், விலையையும் கொண்ட விண்ணப்பத்தை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கட்ட டம் - சங்கானை"** எனக் குறிப்பிட்டு கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 2013.04.19 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**1. தொடர்பு விவரங்கள் 2. தள வரைபடம்**

உதவிப் பொது முகாமையாளர்
(ஆதனங்களும் சேவைகளும்)
கொமர்சல் வங்கி,
21, சேர் ரசீக் பரீட் மாவத்தை,
கொழும்பு - 01.

தொலை பேசி: 011- 248 6236
தொலை நகல்: 011 -234 1313 (சி/7361)(6.7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
10 * 02 * 1937

உதிர்வு
01 * 03 * 2013

**அமரர் சிவயோகம் முருகர்**

கடந்த 01.03.2013 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி சிவயோகம் முருகர் அவர்களின் மறை வுச் செய்தி அறிந்து நேரில் வந்து உதவிகள் புரிந்தோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவளை, இயற்றாலை, கொடிகாமம். (34713)(10,6,7) குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதி, காளி கோயிலடியில் (பலாலி வீதியில் இருந்து 500 யார்) 2 பரப்பு 11 குளி அளவுடைய காணி விற்பனைக்குண்டு. நான்கு புறமும் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. (34996)(6.7.11)

தொடர்பு: 077 871 0061/ 078 301 7454.

## மேல்மாடி வீடு வாடகைக்கு

யாழ்நகர மத்தியில் இருந்து 1Km இற்குள் சகல வசதிகளையுமுடைய வீடு வாடகைக்கு உண்டு. 3500 சதுர அடி 10 அறைகள், வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது (34938)

தொடர்பு: 077 781 3646 (6.7)

## தென்மராட்சியில் திருமணங்கள்

51 வருடங்களாக, நன்மதிப்புற்ற தனித்துவமான சேவையால் உலக புகழ் பெற்ற "சர்வதேச புலவர் திருமண சேவையான்" தொடர்பு கொண்டு, நீங்கள் விரும்புகின்ற படி உள்நாட்டு, வெளிநாட்டுத் திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

106, கச்சாய் வீதி,சாவகச்சேரி.
T.P-021 490 0733, 075 528 7045, 071 335 2215 (34993)(6.7.11)

## காணி விற்பனைக்கு

சுன்னாகச் சந்திக்கு வடக்காக கே.கே.எஸ். வீதியில் பெற்றோல் விற்பனை நிலையத்துக்கு பின்புறமாக இரண்டாவதாக உள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ளளவை.

தொடர்பு: 071 2828 041, 071 4806 309. (34998) (45.6.7)

## வாகனம் விற்பனைக்கு

NP-PS - XXXX தொடரிலக்கமுடைய
Mahindra Bolero PIK -UP (Power Steering)
விற்பனைக்கு உண்டு. (34988) (6.7)

தொடர்பு: 077 284 4951

## புதிய கார் விற்பனைக்கு

KR - LATEST ENGLISH இலக்க PROTON SAGA புதிய கார் ஒரு வருடம் மட்டும் பாவித்த நிலையில் விற்பனைக்குண்டு. (34994) (6.7)

தொடர்பு: 077 431 9780

## அல்சேஷன் நாய் விற்பனைக்கு

1½ வயது நிரம்பிய அல்சேஷன் ஆண் நாயும் கூடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: A.G.செல்வம்
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (34985)(5-6-7)

## வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு

58 அடி நீளமும், 11 ¼ அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.

- ★ தனியார் வசதிகள்.
- ★ வெளிநாட்டு பயண ஒழுங்குகள் செய்வதற்கு.
- ★ தரகர்கள் தேவையில்லை.

முகவரி: இல. 66 1/1, இரண்டாவது மாடி, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா. தொ.பே. 024 222 0112 (26195) (45.6.7)

## பணியாளர்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறையகத்தில் காவல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்பு: 077 3033 803 (26201)(6.7.11)

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004, அனுராதபுரம். (26200)(6.7.11)

## ஒளிபரப்பு சீராக்கம்

மாதாந்த கட்டணங்கள் எதுவுமின்றி, கலைஞர் (6 அலை வரிசைகள்), மெகா(3), ஏஞ்சல், மக்கள், புதிய தலைமுறை, வசந்த், பொலிமர் உட்பட 20க்கும் மேற்பட்ட தொலைக் காட்சி ஒளிபரப்புகளை நேரடியாக உங்களின் வீடுகளில் தெட்டத்தெளிவாக கண்டு மகிழ எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு: 072 1480 635 (35452)(6.7)
(இரவு 6.00-7.30வரை)

## நிரந்தர வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் நிரந்தர வேலை வாய்ப்பு. பிஸ்கட், சொக்லேட், பெப்சி, மைகோலா, க்ளவுஸ், பொலித்தீன் போன்ற மேலும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி,லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு ஆண்/பெண் (வயது 17-50 வரை) உடனடியாகத்தேவை. சம்பளம் (20,000/=, 25,000/=, 32,000/=)உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் தரப்படும். வருகை தரும் நாளில் வேலை வாய்ப்பு உண்டு. தம்பதியினர், நண்பர்கள் குழுக்களாகவும் ஒரே தொழிற்சாலையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 0776838240 (26202)(6.7.11)

## 47ஆம் நாள் நினைவு கூரல்



31.03.2013

மண்ணுலகம்
1991.04.09

விண்ணுலகம்
2013.02.13

**அமரர் யோகதாஸ் றெபேக்கா**

என் அன்பின் குல விளக்கே
என்னை தவிக்க விட்டு எங்கே சென்று விட்டாய்
காலன் அவன் பிரித்தானோ?
கர்த்தர் உன்னை அழைத்தாரோ?
உன் முகம் பார்க்க என் ஈரவிழி ஏங்குதம்மா!
ஒரு நொடி உன் முகம் காட்டீரோ ...
ஓம் சாந்தி.... ஓம் சாந்தி....

ஜெயபுரம் தெற்கு,
C.S.I றோட், கிளிநொச்சி.
T.P: 077 8942641 (C 7385)(10,6,7)

உன் நினைவால் தவிக்கும்
உன் பாசமிகு
யோகதாஸ் (கணவர்),
சுவப்னா (மகள்)

## விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20.06.1938

இறப்பு
31.03.2008

**அமரர் சுப்பிரமணியம் யோசேப் பூராசா**

(ஓய்வு பெற்ற அதிபர், முன்னாள் செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், தெய்வக் குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குநர்.)

நீங்கள் கிறிஸ்துவோடு இறந்து விட்டீர்கள் - உங்கள் வாழ்வு
அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது
கிறிஸ்து தோன்றும் பொழுது நீங்களும்
அவரோடு மாட்சி பொருந்தியவராய் தோன்றுவீர்கள்
அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இறைவனிடம் வேண்டுகின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (34862)(6.7.11) குடும்பத்தினர்.

## மாவட்ட நீதிமன்றம்- பருத்தித்துறை பின்முற்றான தீர்வை

வழ.இல :-853/11
தன்மை: மணநீக்கம்

வில்வேஸ்வரன் பெண்
சாந்தகுமாரி
(வேலாயுதம் மகள்
சாந்தகுமாரி)
எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.
-வழக்காளி-

எதிர்

வில்லியம் வில்வேஸ்வரன்
"யோகவாசா"
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
-எதிராளி-

இந்த வழக்கு 2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி பதில் மாவட்ட நீதிபதி பொ.குமாரசாமி அவர்கள் முன்னிலையில் இறுதி நடவடிக்கைக்காக எடுக்கப்பட்ட போது வழக்காளியும், அவர் சார்பில் சட்டத்தரணி சபா ரவீந்திரனும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்க முடியாத பட்சத்தில் பத்திரிகை பிரசுரத்திற்கு பிரசுரித்து எதிராளி மன்றுக்கு சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் வழக்கு ஒரு முக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு பிராது, வழக்காளியின் சாட்சியம், வழக்காளியின் சாட்சியின் சாட்சியம், வழக்காளி மன்றில் அணைத்த "வ.1" என்ற ஆவணம் என்பவற்றை மன்று பரிசீலனைக்கு உட்படுத்தி அவற்றில் மன்று திருப்தி அடைந்து பின்வருமாறு கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1994.04.11 ஆம் திகதி நடந்த பதிவுத் திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

மேலும் வழக்காளி தனது கன்னிப்பெயரால் அழைக்கப்படவும் திருமணமாகாத பெண்களுக்குரிய சகல சலுகைகள், உரிமைகள் என்பவற்றை அனுபவிக்க உரித்துடையவர் என்றும் கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

மேலும் பதிவு செய்யப்படும் இப்பின் முற்றான தீர்வையின் பிரதி எதிராளிக்கு சேவிக்கப்பட்டு எதிராளியினால் ஆட்சேபனை தெரிவிக்கப்படாத பட்சத்தில் மூன்று மாதங்களின் பின்னர் முற்றான தீர்வையாக்கப்படும் என கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

**2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி**

வரைபு: (ஒப்பம்)
வழக்காளியின் சட்டத்தரணி (34788)(6.7.11) மாவட்ட நீதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 109

# நோயுற்ற வேளையில் உணவூட்ட வேண்டுமா?

**வைத்தியர்:** காய்ச்சல் உள்ள இந்த மூன்று நாளிலும் என்ன சாப்பாடு கொடுத்தீர்கள்?

**தாய்:** அதிகமாக பிஸ்கட்டும், பிளேன்டீயும் தான். சோறும் கேட்டவன். நான் கொடுக்கவில்லை.

**வைத்தியர்:** ஏன்?

**தாய்:** காய்ச்சலோட சமிக்காது என்றுதான். மற்றது சாப்பாடு கொடுத்தா சத்தி வந்தாலும் பிள்ளைக்கு கஷ்டம் தானே...!

வைத்தியர் குமுதினி கலையழகன்
குழந்தை நல வைத்தியர்,
யாழ். போதனா வைத்தியசாலை.



குழந்தைகளின் உணவூட்டல் சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்களின் தினசரிச் சவாலாக அமைகின்றது. ஆனால் குழந்தை நோயுற்ற வேளைகளில் உணவூட்டல் பற்றி எழுகின்ற பல வினாக்கள் பொதுவாக எல்லாப் பெற்றோர்களிடையேயும் காணப்படுகின்றன. நோயுற்ற வேளைகளில் உணவூட்டலைப் பாதிக்கின்ற சில நிலைமைகள் நோய் காரணமாக எழுகின்றன. அவையாவன:-

★பசிக்குறைவு

★வயிற்றுப்பிரட்டல்

★வாந்தி

★வாயில் ஏற்படும் புண்கள்

★தொண்டை நோவுடன் கூடிய விழுங்க முடியாத தன்மை.

★உணவூட்டல் சுவாசத்தைச் சிக்கலாக்கும் நிலைமைகள். [மூக்கடைப்பு, ஆஸ்துமா]

★சீரிய கிருமித் தொற்றுகளும், மோசமான உடல் நலக்குறைவும்.

★மருந்துகளினால் ஏற்படும் பக்க விளைவுகள். உ+ம்: வாந்தி, நாக்கிலுள்ள சுவையுணரும் தன்மை வேறுபடுதல்.

ஆயினும் நோயுற்ற வேளையில் உணவூட்டல் வைத்தியர்களால் தவிர்க்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர, உணவூட்டலைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளுவது மிக முக்கியமான ஒரு விடயமாகும். நோய்க்குரிய சிகிச்சையைப் போன்றே பொருத்தமான உணவூட்டலும் நோய்க் காலப் பராமரிப்பில் மிக அவசியமான ஒரு அம்சமாகும்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற சில காரணிகள் உணவூட்டலில் சிரமத்தை ஏற்படுத்தினாலும் தொடர்ச்சியான உணவூட்டலைச் செய்வது சாத்தியமான ஒரு விடயமே ஆகும். ஆனால் பொதுவாகக் காணப்படுகின்ற சில தவறான நம்பிக்கைகள் உணவைத் தவிர்க்கவும் குழந்தை யின் நோய் நிலைமை மோசமடையவும் காரணமாகின்றன. அத்தவறான நம்பிக்கைகளாவன:

★நோய்க் காலத்தில் சமிபாடு குறைவு

★உணவு கொடுத்தால் வாந்தி ஏற்படும்.

★வயிற்றோட்டத்தின் போது உணவுண்டால் நிலைமை இன்னும் மோசமடையும்.

★வயிறு காய்ந்தால் கிருமி பெருகுவது குறைவு.

★சத்துள்ள உணவுகள் [முட்டை, இறைச்சி] சமிபாடடைவது குறைவு.

★பிஸ்கட், பிளேன்டீ [தேநீர்] போன்றனவே இலகுவாகச் சமிக்கக்கூடியவை.

★சில நோய் நிலைமைகளின் போது சைவ உணவுகளை மட்டும் எடுக்கின்ற மரபும் புரத உணவுகளைத் தவிர்க்கின்ற நிலைமையும்.

★பழவகைகள் உண்பதைத் தவிர்த்தல்

மிகப் பொதுவாகக் காணப்படுகின்ற இத்தவறான நம்பிக்கைகள் குழந்தையின் உடல் நிலையை மோசமாக்கவும் சடுதியான நிறைக் குறைவை ஏற்படுத்தவும் காரணமாகின்றன.

★மாறாக, நோய் நிலைமைகளின் போது போஷாக்குள்ள உணவூட்டலைச் சாதாரண நாள்களை விடவும் கூடிய கவனத்துடன் மேற்கொள்ளப் பல காரணங்கள் உள்ளன.

★நோயின்போது ஏற்படும் நீரிழப்பை ஈடு செய்தல். [உ+ம்: காய்ச்சல், வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நிலைமைகள்]

★இரத்தத்திலுள்ள வெல்லம், உப்புக்களின் அளவைப் பேணுதல்.

★கிருமித் தொற்றுகள்/ நோய் நிலைமைகளின் போது ஏற்படுகின்ற அதிகரித்த அநுசேபத் தொழிற்பாடுகளினால் குழந்தையின் உடலிலிருந்து அதிக சக்தி இழப்பு ஏற்படுகின்றது. இதை ஈடு செய்ய போஷாக்குள்ள உணவுகளை வழங்குவது அவசியம்.

★நோய் சார்ந்த காரணிகளும், தவறான உணவூட்டல் முறைகளும் குழந்தையின் நிறைக் குறைவில் பங்களிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக போஷாக்கான உணவூட்டலை நோய் நிலைமைகளின் போதும் தொடர்வது அவசியமாகும். இதற்காகப் பின்வரும் முறைகளைக் கையாள முடியும்.

★சிறிய அளவில் அடிக்கடி உணவூட்டுதல்.

★பிள்ளைக்கு விருப்பமான வாசனை/ சுவையுள்ள வகையில் உணவைத் தயாரித்தல்.

★உண்பதற்கு இலகுவான விதத்தில் உள்ள உணவை வழங்குதல்.

★பாற்கஞ்சி

★சூப் வகைகள்

★ஜெலி

★புடிங்

★பழவகைகள்

★யோகட், சீஸ், பால்

பொதுவாகக் காணப்படும் நோய் நிலைமைகளில் [உ+ம்: காய்ச்சல்] நாளாந்த உணவை எடுக்கக்கூடிய நிலையிலுள்ள பிள்ளைகளில் வழமையான உணவைத் தொடர முடியும்.

ஆகவே நோயுற்ற நிலைமைகளில் ஏற்ற சிகிச்சையைப் போன்றே உகந்த உணவூட்டலும் மிக அவசியமானது. உணவுத் தவிர்ப்பு வைத்தியரால் பரிந்துரைக்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய நோய் நிலைமைகளில் உணவூட்டலைச் சரியான விதத்தில் தொடர்வது பின்வரும் நன்மைகளை ஏற்படுத்துகின்றது.

★நோய்க்காலத்தில் பிள்ளை மிக மோசமாகப் பாதிக்கப்படுவதைக் குறைக்கிறது.

★நோய்க்கு எதிராகப் போராடவும். விரைவில் குணமடையவும் உதவுகின்றது.

★நோயின் பின்னான போஷாக்குக் குறைவுள்ள நிலைமையையும், நிறைக்குறைவையும் தவிர்க்கின்றது.

# உணவு வகைகளின் சத்துப் பெறுமானங்களை அறிந்து கொள்வோம்

எமது நாளாந்த வாழ்வில் உணவுத் தெரிவு என்பது மிகவும் முக்கியமானது. சந்தையில் காலத்துக்குக் காலம் கிடைக்கும் உணவுகளில் மலிவாகக் கிடைக்கும் உணவுகள், எமக்கு மிகவும் விருப்பமான உணவுகள் என்று எமது உணவுத் தெரிவுப் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

எம் அனைவர் மத்தியிலும் பொதுவாகக் காணப்படும் ஓர் அபிப்பிராயம் பணம் அதிகம் கொடுத்து வாங்கும் உணவில் சத்துக்கள் அதிகம் உள்ளது என்பதே. அது மிகவும் தவறானது. பணத்திற்கும் சத்திற்கும் எதுவித தொடர்பும் கிடையாது.

மக்கள் தங்களுடைய நோய் நிலைமைகளையும் கருத்தில் கொண்டே நாளாந்த உணவைத் தெரிவு செய்ய வேண்டும். அதற்கு எந்த உணவில் எந்தெந்த சத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதை நாம் அறிய ஆவலாக உள்ளோம் அல்லவா. இதோ சில உணவு வகைகளும் சத்துக்களின் அளவுகளும்:-

இங்கே கொடுக்கப்பட்டுள்ள உணவு வகைகள் அனைத்தும் உண்ணக் கூடிய 100 கிராமுக்கு கணக்கிடப்பட்டுள்ளது.

| உணவு வகைகள் | புரதம் (g) | கொழுப்பு (g) | மாப்பொருள் (g) | சக்தி (kcal) | நார்ப்பொருள் (g) | கல்சியம் (mg) | பொஸ்பரஸ் (mg) | இரும்பு (mg) |
|---|---|---|---|---|---|---|---|---|
| புழுங்கலரிசி (கைக்குத்து) | 8.5 | 0.6 | 77.4 | 349 | - | 10 | 280 | 2.8 |
| புழுங்கலரிசி (மில்லில் அரைத்தது) | 6.4 | 0.4 | 79.0 | 346 | 0.2 | 9 | 143 | 1.0 |
| பச்சையரிசி | 6.8 | 0.5 | 78.2 | 345 | 0.2 | 10 | 160 | 0.7 |
| தவிடு (அரிசி) | 13.5 | 16.2 | 48.4 | 393 | 4.3 | 67 | 1410 | 35.0 |
| கோதுமை மா. | 11.0 | 0.9 | 73.9 | 348 | 0.3 | 23 | 121 | 2.7 |
| பாண் | 7.8 | 0.7 | 51.9 | 245 | 0.2 | 11 | - | 1.1 |
| உழுந்து | 24.0 | 1.4 | 59.6 | 347 | 0.9 | 1.54 | 385 | 3.8 |
| கௌபி | 24.1 | 1.0 | 54.5 | 323 | 3.8 | 77 | 414 | 8.6 |
| பயறு | 24.0 | 1.3 | 56.7 | 334 | 4.1 | 124 | 326 | 4.4 |
| கடலை | 17.1 | 5.3 | 60.9 | 360 | 3.9 | 202 | 312 | 4.6 |
| துவரம் பருப்பு | 22.3 | 1.7 | 57.6 | 335 | 1.5 | 73 | 304 | 2.7 |
| சோயா அவரை | 43.2 | 19.5 | 20.9 | 432 | 3.7 | 240 | 690 | 10.4 |
| பீற்றூட் | 1.7 | 0.1 | 8.8 | 43 | 0.9 | 18.3 | 55 | 1.19 |
| கரட் | 0.9 | 0.2 | 10.6 | 48 | 1.2 | 80 | 530 | 1.03 |
| உருளைக்கிழங்கு | 1.6 | 0.1 | 22.6 | 97 | 0.4 | 10 | 40 | 0.48 |
| வெங்காயம் (சிறியது) | 1.8 | 0.1 | 12.6 | 59 | 0.6 | 40 | 60 | 1.2 |
| மரவள்ளிக்கிழங்கு | 0.7 | 0.2 | 38.1 | 157 | 0.6 | 50 | 40 | 0.9 |
| பாகற்காய் | 1.6 | 0.2 | 4.2 | 25 | 0.8 | 20 | 70 | 0.61 |
| கத்தரிக்காய் | 1.4 | 0.3 | 4.0 | 24 | 1.3 | 18 | 47 | 0.38 |
| முருங்கைக் காய் | 2.5 | 0.1 | 3.7 | 26 | 4.8 | 30 | 110 | 0.18 |
| வெண்டிக்காய் | 1.9 | 0.2 | 6.4 | 35 | 1.2 | 66 | 56 | 0.35 |
| பூசணிக்காய் | 1.4 | 0.1 | 4.6 | 25 | 0.7 | 10 | 30 | 0.44 |
| புடலங்காய் | 0.5 | 0.3 | 3.3 | 18 | 0.8 | 26 | 20 | 1.51 |
| தக்காளி | 0.9 | 0.2 | 3.6 | 20 | 0.8 | 48 | 20 | 0.64 |
| தேங்காய்ப் பால் | 3.4 | 41.0 | 11.9 | 430 | - | 15 | 140 | 1.6 |
| முட்டை | 13.3 | 13.3 | - | 173 | - | 60 | 220 | 2.1 |
| பால் (பசு) | 3.2 | 4.1 | 4.4 | 67 | - | 120 | 90 | 0.2 |
| மோர் | 0.8 | 1.1 | 0.5 | 15 | - | 30 | 30 | 0.1 |
| ஆட்டிறைச்சி | 21.4 | 3.6 | - | 118 | - | 12 | 193 | |



[இந்த அளவுகள் INDIAN COUNCIL OF MEDICAL RESEARCH ஆல் (ICMR) பரிந்துரைக்கப்பட்ட அளவுகள்]

மக்களின் வருமான மட்டத்துக்கும், சத்தானதாகவும் நோய் நிலமைகளின் தன்மைகளுக்கு ஏற்றவாறு உணவுத் தெரிவை மேற்கொள்ள இப்பட்டியல் மிகவும் உதவியாக அமையும்.

ஷாலினி புவனேசமூர்த்தி
[B.Sc. Foods Nutrition and Diet Therapy]
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரியை வெளியேற்றுங்கள்

## கூட்டமைப்பின் இளம் தலைவர் போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தொடர்ச்சியாக விமர்சித்துக் கொண்டிருக்கும் ஆனந்தசங்கரி போன்றவர்களை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் சேர்த்து வைத்திருந்தால், கூட்டமைப்பின் கொள்கை களிலும் செயற்பாடுகளிலும் இளைய சமுதாயம் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோண மலை மாவட்ட இளைஞர் அணித் தலைவரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஜெ.ஜெனார்த்தனன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு அர்ப்பணிப்போடு செயற்படுவதாக வெறும் வார்த்தையளவில் மட்டும் கூறிக்கொண்டிருக்கும் ஆனந்தசங்கரியின் செயற்பாடுகளிலோ அல்லது அறிக்கைகளிலோ அவ்வாறு செயற்படுவதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இருப்பினும் அப்பட்டமாக பொய்யுரைக்கும் மனத்தைரியம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்திற்கு இருப்பதைக் கண்டு நாம் மெய் சிலிர்க்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று அனைத்து தமிழர்களும் சர்வதேசமும் அங்கீகரித்து இருக்கின்ற இந்த வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏக பிரதிநிதிகள் இல்லை என்று விமர்சித்திருப்பது எந்த வகையில் அறிவுபூர்வமானது என்பதை எங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை கேள்விக் குறியாக்கி, மக்களின் நம்பிக்கையை இழிவாக்கும் நோக்கில் ஆனந்த சங்கரி போன்ற அரசியல் தலைவர்கள் பல அறிக்கைகள் வெளியிட்டபோதும், பொறுமையாக இந்த விடயத்தை கையாளும் பக்குவம் கொண்ட அரசியல் பலம் மிக்க தலைவரான சம்பந்தனை ஆனந்த சங்கரி விமர்சித்திருப்பதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இல்லையென்று ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியில் நின்றுதான் அவர் தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார் என்பதைப் புலப்படுத்துகிறது. கூட்டமைப்பின் அங்கமாக அவர் உணர்ந்திருந்தால் இவ்வாறு பிரித்து பேசியிருக்கமாட்டார்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் ஆனந்தசங்கரி போன்றவர்களின் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க இளைய சமுதாயம் ஆவலாக இருக்கின்றது- என்று தெரிவித்துள்ளார். (உ-5-12)

# பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறில் மாணவர்களுக்கு பரீட்சையா?

## பெற்றோர் விசனம்

தென்மராட்சி, மார்ச் 31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கிறிஸ்தவ மக்களின் பரிசுத்த தினமான பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு ஆகிய தினங்களில் பரீட்சைகள் நடத்தப்படுவது குறித்து பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளுக்கான கணித நுண்ணறிவு பரீட்சை நேற்றுமுன்தினம் சாவகச் சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நடை பெற்றது. பரீட்சையில் கலந்து கொள்ளும் பிள்ளைகளை பெற்றோர் பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் சென்றதால் தேவாலயங்களில் இடம்பெற்ற பெரிய வெள்ளி வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியாத நிலை பலருக்கு ஏற்பட்டது.

மேலும் இன்று உயிர்த்த ஞாயிறு தினத்தன்று வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறவுள்ளதால் தரம் 4 தொடக்கம் தரம் 13வரையான மாணவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். இதனால் தேவாலயங்களில் நடைபெறும் உயிர்த்த ஞாயிறு வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத நிலைகாணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த சமயங்களின் புனித நாள்களில் மாணவர்களுக்கு பரீட்சைகள் நடத்துவதற்கு கல்வித் திணைக்களத்தினர் தடை விதிக்க வேண்டுமெனவும் பெற் றோர் விசனம் தெரிவித்தனர். (ந-9)

# வளர்மதி மாதர் சங்கத்தின் மகளிர் தின விழா

கைதடி, மார்ச் 31

சாவகச்சேரி மகளிர் தினத்தை முன்னிட்டு கைதடி வளர்மதி மாதர் சங்கம் நடத்தும் மகளிர் தின விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வளர்மதி அரங்கில் நடைபெறவுள்ளது.

வளர்மதி மாதர் சங்கத் தலைவர் திருமதி சுவந்தினிதேவி யாழ்வேந்தன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் து.தர்சினி கலந்து கொள்வார்.

பிற்பகல் வளர்மதி மாதர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன. (ந-288)

# தாலிக்கொடி அருந்தப்பு; ஓடி மறைந்தான் இளைஞன்

## சுதுமலையில் நேற்றுமுன்தினம் சம்பவம்

வலி.தென்மேற்கு, மார்ச் 31

அதிகாலை நேரம் கணவனுடன் சைக்கிளில் ஆலயத்துக்குச் சென்றுகொண்டிருந்த பெண்ணின் தாலிக் கொடியைக் கத்தியைக் காட்டி அபகரிக்க முயன்ற இளைஞன் ஒருவன் அந்தப் பெண்ணின் அபயக் குரலினால் காரியம் கைகூடாமல் தலை தப்பினால் போதும் என்று ஓடிமறைந்துவிட்டான்.

பதற்றமுற்ற அந்தப் பெண் கணவருடன் வீட்டுக்குத் திரும்பிச் சென்று தாலிக் கொடியைக் கழற்றி வைத்து விட்டு வெறுங் கழுத்துடன் ஆலயத்துக்கு மீண்டும் சென்றுள்ளார்.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த பெண்ணொருவர் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் அதிகாலைப் பூசையில் கலந்து கொள்வதற்காக தினசரி கணவருடன் சைக்கிளில் செல்வது வழக்கம்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையும் வழமை போன்று ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, இவர்களின் வரவை எதிர்பார்த்து ஒழுங்கையில் மறைந்திருந்த நபரொருவர், சைக்கிளை மறித்துக் கத்தியைக் காட்டித் தாலிக்கொடியை அபகரிக்க முயன்றுள்ளான். "அம்பாளின் அருளால் தாலிக் கொடி தப்பி விட்டது'' என்று அந்தப் பெண் கூறினார். (ஒ-115)

# திங்கள் - வியாழன் வரை மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 31

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை திங்கட்கிழமை கோண்டாவில் பலாலி வீதியிலிருந்து அன்னங்கை வரையான பிரதேசம், பளை மாசார் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அச்செழு, யாக்கருப் பிரதேசம், நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம், கரணவாய் அண்ணா சிலையடிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-3ஆம் திகதி புதன் கிழமை கோண்டாவில் பலாலி வீதியிலிருந்து அன்னங்கை வரையான பிரதேசம், நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, வதிரிப் பிரதேசம், அல்வாய் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம் ஆகிய இடங்களிலும்-

4 ஆம் திகதி வியாழக்கிழமைகுஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித் துறை, தொண்டமானாறு, உடுப்பிட்டி, சுப்பர்மடம் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** இன்று பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப்பேசுவீர்கள். தாயின் உடல் நிலை சீராக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.



**இடபம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பீர்கள்.



**மிதுனம்:** மனதில் பட்டதை பளிச் சென்று பேசுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கணவன்-மனைவிக்குள் அன்யோயம் பிறக்கும். உறவினர்களால் மனநிம்மதி கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.



**கடகம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயல்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மை உண்டு. முன்கோபத்தைத் தவிருங்கள்.



**சிங்கம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். நட்பு வட்டாரம் விரியும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உடல் நிலை சீராக அமையும். உறவினர்களின் வருகையுண்டு. கனவுத்தொல்லை, தூக்கமின்மை விலகும். பணவரவு திருப்தி தரும்.



**கன்னி:** இரண்டு மூன்று நாள்களாக தடை பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்து போவீர்கள். சொந்தம்-பந்தங்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

நாளை

பங்குனி-19 திங்கட்கிழமை 01.04.2013
திதி: பஞ்சமி காலை 06.38 வரை
ஷஷ்டி பி.ப. 4.16 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ. 03.40 வரை
சுபநேரம்: 12.11- 01.41 வரை
இராகுகாலம்: 07.41- 09.11 வரை



**துலாம்:** பிள்ளைகளால் அலைச்சல் அதிகரிக்கும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் நேரம் ஒதுக்கி வேலை பார்க்க வேண்டி வரும்.



**விருச்சிகம்:** கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். சகோதர வகையில் மனஸ்தாபம் வரும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.



**தனுசு:** பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். குடும்பவருமானத்தை உயர்த்த ஆலோசனை செய்வீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள்.



**மகரம்:** இன்று திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளைப் பொறுப்பாக வளர்க்க வேண்டும் என எண்ணுவீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். கையில் காசு பணம் தேவையான அளவு இருக்கும்.



**கும்பம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். வாகனத்தைச் சீர்செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும்.



**மீனம்:** முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. நன்றி மறந்த [illegible] படுவீர்கள். [illegible] முதலீடுகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி புதிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | | | | 7 |
| 7 | 2 | | | | 4 | 9 | 3 | |
| 8 | 3 | 5 | 7 | | | | | 4 |
| | 5 | | | 6 | | | | 8 |
| | 8 | 9 | 4 | | 3 | 7 | 2 | |
| 3 | | | | 7 | | | 9 | |
| | | | | | 7 | 1 | 5 | 2 |
| | 1 | 8 | 5 | | | | 7 | 9 |
| 5 | | | | | | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 8 | 3 | 2 | 9 | 1 | 7 |
| 1 | 2 | 8 | 9 | 7 | 4 | 3 | 5 | 6 |
| 9 | 7 | 3 | 6 | 1 | 5 | 4 | 8 | 2 |
| 3 | 8 | 5 | 2 | 4 | 1 | 6 | 7 | 9 |
| 7 | 6 | 9 | 5 | 8 | 3 | 2 | 4 | 1 |
| 2 | 4 | 1 | 7 | 6 | 9 | 5 | 3 | 8 |
| 6 | 9 | 4 | 1 | 5 | 7 | 8 | 2 | 3 |
| 5 | 1 | 2 | 3 | 9 | 8 | 7 | 6 | 4 |
| 8 | 3 | 7 | 4 | 2 | 6 | 1 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட விலைக் கழிவு

தினசரி பாவனைக்குரிய (Daily use) நைலெக்ஸ் சாறிகள் நாளை (01.04.2013) முதல் 15.04.2013 வரை விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஏகாம்பரம் புடைவை மாளிகை,**
74(7), பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 2151/021 222 5938 (8/7343) (6.7)

## கருங்கல்

சான்பிளாஸ்ட் மூலம் எழுத்துக்கள் பொறித்து வழங்க 1 சதுர அடிக்கு கல்லுடன்
3500/= மட்டுமே
S.S.JASOTHARAN ARTS
0777 110 610

## காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, காளிகோயிலடியில் "நீலன் தோட்டம்" 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 4917 403
077 7280 086 (35487)(6.7.45)

## கடை வாடகைக்கு

யாழ் நாவலர் வீதியில் இல. 334 இல் அமைந்த இரு கடைகள் வாடகைக்கு உண்டு. (35489)
தொடர்பு 075 6676 328 (6.7)

## விற்பனைக்கு

XBxxxx தொடரிலக்கமுடைய Pulsar - 150 மோட்டார் சைக்கிள் ( Black) விற்பனைக்கு உண்டு.
தொ.பே : 0778715649 (27811) (6.7)


# மரண அறிவித்தல்

## திருமதி தனபாக்கியம் இராசையா



சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் நோர்வே (Sandnes) யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் இராசையா 26.03.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை -அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, கந்தையா, துரைராசா மற்றும் மனோன்மணி (கிளி-ஊரெழு), லவேந்திரராஜா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குகனேஸ்வரி(சிறுப்பிட்டி), கமலேஸ்வரி (கனடா), கனகேஸ்வரி(பேபி-நோர்வே), வசந்தி (நோர்வே), தேவபாலன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா(சிறுப்பிட்டி), காலஞ்சென்ற செல்வராஜா (கனடா) மற்றும் யோகலிங்கம் (நோர்வே), ஆனந்த் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆனந்தன்-சரஸ்வதி (நீர்வேலி), யேந்தினி-சத்தியேந்திரா(சிறுப்பிட்டி), மாலினி- ராகவன் (ஜேர்மனி), ராசன்-விஜிதா (ஆஸ்திரேலியா), பிரபா(கனடா), ஜதீஸ், ஜெனி, ஜொனார்தன்(கனடா), தீபா, துஷ்யந்தன், துஷா, அர்ஜீன், நிஷா அன்டர்ஸ் (நோர்வே), டுலக்சி -டிலான்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரஜீந்த், கஜீபனா(சிறுப்பிட்டி), சினேகா, யுவேதா (சிறுப்பிட்டி), ஜதுசன், மிதுசன், திருஷிகா (ஜேர்மனி), சஞ்ஜெய், அபிஷா(ஆஸ்திரேலியா), மெலிண்டா, செலினா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 31.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு Soma Kapell Sandnes நோர்வே என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்கை அம்மன் கோயிலடி,
சிறுப்பிட்டிவடக்கு, நீர்வேலி. (35485)(6.7.11)

தகவல்:
திரு.திருமதி நடராசா
(கிளி- மகள்)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பரராசசிங்கம்



குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரராசசிங்கம் 29.03.2013 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-இரத்தினம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பத்மாவதி (சுவிஸ்), நடேஸ்வரலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் பிரசாயினி ஆகியோரின் தந்தையும், சித்திரநாதன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), நிமலன் ஆகியோரின் மாமனாரும், ஸ்ரீபன், சுபேசன், சானுகா, சாருகா, சாத்திகா, சந்தியா, டனுசியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03. 2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரக்கோட்டம்,
கோண்டாவில். (35490)(10.6.7)

தகவல்:
குடும்பத்தினர்
0214915556, 0776576452


**பற்களின் கூர்உணர்ச்சி என்பது நீங்கள் எண்ணுவதை விடவும் பாரதூரமான ஒன்றாக அமையலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?**

சூடான, குளிரான, புளிப்பான அல்லது இனிப்பான, ஏதேனும் ஒன்றை நீங்கள் உள்ளெடுக்கும் சமயத்தில் உங்களுடைய பற்களில் சிறிய நேரத்திற்கு ஏற்படுகின்ற கூரிய வலியே பற்களின் கூர் உணர்ச்சி எனப்படுகின்றது. பற்களில் கூர்உணர்ச்சி உள்ள போது கூரிய வலி ஏற்படுவதும், பின்னர் அற்றுப்போவதுமான நிலைமை காணப்படுகின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளாத பட்சத்தில் நிலைமை மோசமாக மாறலாம்.

**உரிய காலத்தில் சிகிச்சையை மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து உங்களுடைய வாழ்வில் மோசமான பாதிப்பிற்கு முகங்கொடுக்க வேண்டாம்**

பற்களின் கூர்உணர்ச்சிக்கு உரிய சிகிச்சையை மேற்கொள்வது மிக முக்கியமானது. உங்களுடைய பல்வைத்தியரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களையும், உரிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியத்திற்கான இச்செய்தியை உங்களுக்கு வழங்குவது இலங்கை பல் மருத்துவர்கள் சங்கம்

வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்பு - கிளக்ஸோஸ்மித்கிளைன்

SRI LANKA DENTAL ASSOCIATION

GlaxoSmithKline

GREY


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



மலர்வு
10.07.1952

உதிர்வு
01.03.2013

அமரர்
### தம்பிராசா சிவகுருநாதன் (அப்பன்)

*(உரிமையாளர், பானு ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்)*

கடந்த 01.03.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தம்பிராசா சிவகுருநாதன் அவர்களின் மரணச் செய்தி கேட்டவுடன் வந்து ஆறுதல் கூறியும், எமது துயரத்தில் பங்கு கொண்டு உடன் கருமங்கள் ஆற்றியும், தொலைபேசியூடாக அனுதாபச் செய்தி அனுப்பியும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டும், இன்னும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**3/2, கல்வளை வீதி,**
**சண்டிலிப்பாய்.** (35488)(10,6,7) **குடும்பத்தினர்.**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**20 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், தையல் மற்றும் சிகை அலங்கார வகுப்புக்கள் நாளை முதல் ஆரம்பம். சர்வதேச மட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.**



(35483)(6.7)

**தொடர்பு: 021 221 9936/ 077 044 7103**

## தேவை

யாழ் நகரத்திலிருந்து (10 கிலோ மீற்றருக்குள்) பலாலி வீதி, கே.கே.எஸ்வீதி, மானிப்பாய் வீதி, A9 வீதி உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பான சூழலில் களஞ்சியப்படுத்தக்கூடிய களஞ்சியசாலை உடன் தேவை.

**தொடர்பு: 077 722 2715** (34999)(6.7.11)

## தேவை

யாழில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு குறைந்தது 5 வருட அனுபவம் உள்ள களஞ்சியப் பொறுப்பாளர் உடன் தேவை.

**தொடர்பு: 077258 0972** (35000)(6.7.11)

## மரண அறிவித்தல்



### கிருபாகரன் நிர்மலாதேவி

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபாகரன் நிர்மலாதேவி 29.03.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் வடக்கு,**
**சண்டிலிப்பாய்.** (35469)(10.6.7)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

ஜெய் குருதேவ்
## வாழும் கலைப் பயிற்சி

பாகம் -I (Basic Course)



பூஜ்ய ஸ்ரீ.ஸ்ரீ. ரவிசங்கர் குருஜி அவர்களால் உருவாக்கப்பட்ட யோகாசனம்,தியானம், பிராணாயாமா என்பவற்றோடு சுதர்சனக்கிரியா எனும் சக்திவாய்ந்த மூச்சுப் பயிற்சியையும் உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி.

உடல் மனம் சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வினைத்தரும் பயிற்சி.

**அறிமுக உரை: நாளை(01.04.2013) திங்கள் மாலை 5 மணி.**
**இடம்:- மகேஸ்வரன் மணி மண்டபம் - நல்லூர்.**
**நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி.**
**தொடர்பு:- 077 665 5408/077 760 7008**

(35470)(5.6.7)

## Personal Classes

A/L மாணவர்களுக்கான இணைந்த கணிதம், இரசாயனவியல் பாடங்களுக்கான வகுப்புக்களும், துரித மீட்டல், Passpaper வகுப்புக்களும் வீடு வந்து கற்பிக்கப்படும்.(Repeat மாணவர்களுக்கும்)

T.P: 077 879 9397 (35486)(6.7.11)

## வீடு வாடகைக்கு

கட்டுடை மானிப்பாய் வீதியில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு. (35462) (6.7)

தொடர்பு 0777 298 108

## 3D Glasses for Sale

Computer களிலும் TVகளிலும் 3D திரைப்படங்களை கண்டுகளிக்க... Piraha 3D, Avathar 3D, Resident Evel இன்னும் UN 3D Movies இலவசம். 1110/= மட்டுமே.

தொ.பே 077 0365 001 (35173) (6.7)

## விற்பனைக்கு

1) MOBILE PHONES & I PHONE 4.S 16 GB Full செற் U.K 02
2) SONY ERICSSON SATIO 3G 12.1 m.p CAMERA 3.5 TOUCH SCREEN
3) I PHONE, I POD SAMSUNG GALAXY சகல போன்களுக்கும் சார்ச் செய்து கொள்ள க் கூடிய PORTABLE POWER BANK BATTERY யும் விற்பனைக்கு தனியாகவும், மொத்தமாகவும் உண்டு.

தொடர்பு: 0776657771 (27810)(6.7.11)

## காணி விற்பனைக்கு

யாழ் நாவலர் வீதியில் TCT சுப்ப மாக்கேட் அருகில் சுற்றுமதில் கிணற்றுடன் கூடிய 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை

தொடர்பு : 077 153 4191 (35181) (6.7)

## கார் விற்பனை

16- XXXX தொடரிலக்கமுடைய Toyata கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 592 7010 (35491) (6.7)

## வீடு வாடகைக்கு

தெல்லிப்பழை, துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு
(35465) (6.7) (வைத்திய சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு உகந்த இடம்)

தொடர்பு 0771 971 223/ 0212059819

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 168/4, முத்தமிழ் வீதி, கொட்டடியில் (யாழ் நகரத்திலிருந்து 1½ கி.மீ தூரத்தில் ) சுற்றிவர அத்திபாரமிடப்பட்ட நிலையிலுள்ள இரண்டு பரப்பு உறுதிக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 900 7380, 026 320 4843 (C/7389)(6.7.11)

## தவறிவிட்டது

W.I 4541 இலக்கம் உடைய மோட்டார் சைக்கிள் புத்தகம், இன்சூரன்ஸ், ரக்ஸ், 23.03.2013 அன்று முள்ளியவளை மாமூலை வேதக் கோயிலுக்கும் கிருஸ்ணர் கோயில் சைவப் பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் இந்த இலக்கத்தில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும். 0770409484 / 0770461246 (சன்மானம் வழங்கப்படும்)

விநாசித்தம்பி புஸ்பராஜா,
தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை. (35464) (6.7.11)

## தேவை

யாழ்ப்பாணம், வன்னி வைத்திய நிலையங்களுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை

- வைத்தியர் (MBBS,MD, RMP, RMO)
- அனுபவமுள்ள தாதிமார் (35466) (6.7)

தொடர்பு : 0777 750391

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள Annexed வீடு வாடகைக்கு உண்டு. சிறிய பண்பான குடும்பம் விரும்பத்தக்கது. விவரங்களுக்கு (35501) (6.7)

0776093255

## வீடு வாடகைக்கு உண்டு

No.35, மருதடி வீதி, நல்லூரில் (இந்தியத் துணைத் தூதரகத்திற்கு அருகில்) 5 பரப்பில் அமைந்துள்ள 4 அறைகளுடன், வாகனத் தரிப்பு வசதியடங்கிய வீடு நிறுவனங்களுக்கு வாடகைக்கு உண்டு. (35476) (6.7)

தொடர்பு 0712446926

## கடைக்கு வேலையாள் தேவை

S.K. ஏஜேன்சி, இல. 128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள கடைக்கு திட்டமிடல் எழுதுநர் (ஆண்) தேவை. தகைமை (O/L) சித்தி (35482) (6.7)

தொடர்பு : 075 047 0828

## வீடு வாடகைக்கு

ஆடிய பாதம் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. (பெண்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு 0773249205 (35177) (6.7)

## முல்லைத்தீவு மாவட்ட வர்த்தகர்களது சேதமுற்ற வியாபார நிலைய புனர்நிர்மாணம் தொடர்பில் இந்திய அரசின் நிதியுதவி கோரியவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

போரினால் சேதமுற்ற வியாபார நிலையங்களின் புனர் நிர்மாணம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியத்தினூடாக இந்திய அரசின் நிதியுதவிகோரியவர்கள், உடனடியாக தங்களின் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வியாபார நிலையத்திற்கு முன் நின்று எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் 05.04.2013 இக்கு முன் எம்மை தொடர்பு கொள்ளவும்.

கடையின் அமைப்பு அதன் பெயர்ப் பலகை என்பவற்றுடன் தெளிவாகத் தெரியத்தக்க விதத்திலும் அளவிலும் எழுதப்பட்ட தங்கள் பெயரையும் கொண்டிருக்க வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு:
**விலாசம்: முல்லைத்தீவு மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம், A9 வீதி, மாங்குளம்.**
**தொ.பேசி.இல. 0212060025, 0779487980**

**குறிப்பு**

இந்த அறிவித்தல் கிளிநொச்சி மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றிய வியாபார நிலைய புனர்நிர்மாணம் தொடர்பில் இந்திய அரசின் நிதியுதவி கோரிய பயனாளியினருக்கும் பொருந்தும்.

மேலதிக தகவல்களுக்கு:
**விலாசம்: கிளிநொச்சி மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம், 57, புகையிரத வீதி, கிளிநொச்சி.**
(26262) (6.7.11) **தொ.பேசி.இல. 0212285601, 0776169666**

## பணிநிலை வேண்டுகை




மேற்படி பணிநிலைக்கு அனுபவம் உள்ளவர்கள் 01ஆம், 02ஆம் திகதிகளில் (01.02-04-2013) மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை நேரில் வரவும்.

(C/7309)(4.5.6.7)

பைண்டிங், ஸ்கிறீன் பிறிண்டிங் பழக விருப்பம் உள்ளவர்களும் (பெண்) நேரில் வரவும்.
குறிப்பு: எமது நிறுவனத்தில் இருந்து 3Kmக்குள் வசிப்பவர்கள் மட்டும்

**கரிகணன் பிறிண்டேர்ஸ்**
**681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி ஐயாத்தம்பி



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஐயாத்தம்பி 28.03.2013 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், இராமன்-சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, காசிப்பிள்ளை மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் சகோதரரும், பத்மாவதி, கோமதி, அற்புதஜெயம், திலகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்ன ராசா, பாஸ்கரன், காமினி (லண்டன்), பாலசுப்பிரமணியம் ஆகி யோரின் மாமனாரும்,சத்தியா (ஆசிரியை, யா/வரணி ம.வி), அருள் மோகன் (லண்டன்), வனஜா, நிலாஜினி (யாழ்.பல்கலைக் கழகம்), சுகன்யா, தனபதி (ஜேர்மனி), இலக்சனா, லம்போதரன், கமிஷா (லண்டன்), கமேஷ் (லண்டன்), மகிலேஸ்வரன், சிவானந்தன் (ஜேர்மனி), கோகுலநாதன் (கனடா), கமலராஜ் (பிரான்ஸ்) ஆகி யோரின் பேரனும், கவினயா (ஜேர்மனி), ஷகின் (ஜேர்மனி) ஆகி யோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 9.30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு, வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமாவில், மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**
**077 8893919, 0774745107** (C/7236)(10.6.7)

**தகவல்:**
**சி.பாலசுப்பிரமணியம் (மருமகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்த்தி அபிஷேகம்

வடமராட்சி,மார்ச் 31

புலோலி, மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி குளிர்த்தி அபிஷேகம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

(ந-8)


## சேவை

UK, Canada, Australia, Italy, German, France, Swiss ஏனைய நாடுகளுக்கும் Student Visa, Visit Visa அத்தோடு Sponsor வசதி Bank Balance. இவை அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.
0773637864 (Colombo -06) (சி/7256) (6.7)

## கடை வாடகைக்கு

NO.124D, பலாலி வீதியில் (இலுப்பையடிச் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில்) அமைந்துள்ள கடைத்தொகுதியில் ஒரு கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 5819704


## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை தங்கேஸ்வரன்

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தங்கேஸ்வரன் நேற்று முன்தினம் (29.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - இராசம்மா தம்பதியரின் மருமகனும், நிர்மலா தேவியின் அன்புக் கணவரும், அருள்குமரன், பார்த்தீபன் (லண்டன்), பிரியங்கா (யா/மெதடிஸ்த்த பெண்கள் உயர்தர பாடசாலை - மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றெசீனா (லண்டன்) வின் மாமனும், அஜீஸ்ஷிடானின் (லண்டன்), பேரனும், மகேஸ்வரன், சகுந்தலாதேவி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான புவனேந்திரராசா, சிவ ஞானம் மற்றும் சந்திரன், இறஞ்சினி, சுபாஷ், பார்வதி, ஆகியோரின் மைத்துனரும், கீதாகுமுதினி, ஜெகநாதன், நாதஸ்வரூபினி ஆகியோரின் சகலனும், கௌசிகன், தர்ஷிகன் ஆகியோரின் பெரிய தந்தையும், கீர்த்தன், துவாரகன், சாயிசரணி, தேஜஸ்விழினி, தேஜோசுலக்ஸ்மி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று திக்கம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளைப்புலியடி,
நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 8060 274 (35313) (45.6.7)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கணபதிப்பிள்ளை (சூடாமணி)

(புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மத்திய குழு உறுப்பினரும், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியரும் தொழிற்சங்கத் தலைவரும்)



காங்கேசன்துறை, தையிட்டியை பிறப்பிடமாகவும், வீமன்காமம் வடக்கை வதிவிடமாகக் கொண்டவரும், தற்போது வவுனியாவை வதிவிடமாகக் கொண்டவருமான கார்த்திகேசு கணபதிப்பிள்ளை (சூடாமணி) 29.03.2013 வெள்ளிக்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-செல்லம் தம்பதியரின் அருமைப் புத்திரரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், தங்கத்தின் அன்புக் கணவரும், செல்லத்துரை, இரத்தினாவதி,காலஞ்சென்ற டாக்டர் இராஜதுரை, தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும் வையந்திமாலா (ஆசிரியர், கூமாங் குளம், சித்திவிநாயகர் வித்தியாலயம்) காலஞ்சென்ற ஜெயகுணா, ஜெயதாசன், மேஜெயா (மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோ தகர், வவுனியா), ஜெயரத்தினா (ஆசிரியர், சைவபிரகாச, மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சுந்தரராஜ் (ஆசிரியர், பாவற் குளம் மகாவித்தியாலயம்), ஜெயரஞ்சினி (ஆசிரியர், சிவபுரம் அ.த.க பாட சாலை), தமயந்தி (இளவேனில் பாலர் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஜெனனி, துவாரகா, யதுசன், திசாலினி, கனிமதி, மகிழ்மதி, சாதுரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் 63/3, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா இல்லத்தில் நாளை (01.04.2013) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெற்று 2 மணிக்கு பூந்தோட்டம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0242221210, 0777585908
0777589722 (35469)(10.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின்
விளையாட்டுத்துறை முதல்வர்
சு. உதயனன் அவர்களின்
அன்புத்தந்தை

**சோ. சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அவர் தம்
குடும்பத்திற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய்
இந்துக் கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,கல்வி சாரா
ஊழியர்கள், (C/8002)(6.7.11)


## விசா

- அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, இத்தாலி, துருக்கி
நாடுகளிற்கான பயண ஒழுங்குகள்
3 கிழமைகளுக்குள் செய்து கொடுக்கப்படும்
- வேலை (work permit விசா) Cyprus, Fiji Island, Belarus,
- Student Visa - UK, USA

**வங்கி பணவைப்பு**
அனைத்து நாடுகளிற்கும் Student, Visit, Business விசாக்களிற்கான வங்கிப் பணவைப்புக்கள் செய்து கொடுக்கப்படும்.

Galaxy International (Pvt) Ltd,
198/A/1/1, காலி வீதி, தெகிவளை.
Tel : 0112 721 072 Mobile : 0774 740 040

RG ads

## பொமேரியன் விற்பனைக்கு

மண்நிறமும், கறுப்பும் கலந்த பெண் (1½வயது), வெள்ளை நிற ஆண் (6 மாதம்) நாய்க் குட்டியும் விற்பனைக்கு உண்டு. (35509)
தொடர்பு:0771766815 (6.7)

## வீடு வாடகைக்கு உண்டு

126/3, கோயில் வீதி, நல்லூரில் 3 அறைகளைக்கொண்ட சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 222 1095
0771789637 (35509) (6.7)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சிங்கப்பூரில் பொறியியலாளராகத் தொழில் புரியும் 13.03.1986 இல் பிறந்த அச்சுவினி நட்சத்திரம், 4 இல் செவ்வாயுள்ள மணமகனுக்குப் பொருத்தமான அழகிய டாக்டர்/ கணக்காளர்/பொறியியலாளர் மணமகள் தேவை.
தொடர்பு: விளம்பர இல 4448, மே/பா உதயன், 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (35496) (6.7)

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது)
தொடர்பு:
0778486515 (35508) (10,6,7)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச்சந்திக்கு அருகில் 3 அறைகள் மற்றும் சகல அடிப்படை வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு
தொடர்பு:
0754353005 (35493) (10,6,7)

## வீடு விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கோயில் வீதிச் சந்திக்கு அருகில் இல. 838 இல் ஐந்து பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0212229752, 0777498865 (35503) (10,6,7)

## மணமகள் தேவை

இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1990, மூல நட்சத்திரம் 4ஆம் பாதம், 7 இல் செவ்வாய், பாவம் 38 ½ உடைய அழகிய மணமகளுக்கு மணமகன் தேவை. (வெளிநாடு, விவாகரத்து பெற்றவரும் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 0786128061 (35505) (10,6,7)

## SPOKEN ENGLISH SINHALA

இருமாதங்களில் சிங்களம் பேசலாம்.
ஓய்வு பெற்ற ஒருவரினால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ அல்லது குழுவாகவோ அடிப்படையில் இருந்து இலக்கணத்துடன் இலகு முறையில் விரைவாக கற்றுக்கொடுக்கப்படும். வெளிநாடு செல்பவர்கள், உத்தியோகத்தர்கள் உயர்தர மாணவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 0774041904 (35506) (6.7)

## வாகன பெர்மிட் விற்பனைக்கு

வாகன இறக்குமதி தீர்வைச் சலுகையுடைய அனுமதிப்பத்திரம் (பெர்மிட்) நேர்மையான வாடிக்கையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு உண்டு. (தரகர் வேண்டாம்)
தொடர்பு: 0776845712 (35504)
0773715798 (6.7)

## வீடு வாடகைக்கு

யாழ் விதானையார் வீதி, கண்டுக்குளியில் 6 அறைகள் 2Hall, சாப்பாட்டு அறை, சமையலறை, 2 குளியலறை, வேலையாள் குளியலறை உடையமாடி வீடு வாகனத் தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு. தங்குவதற்கோ அல்லது அரச, தனியார் NGO அலுவலக பாவிக்கவோ உகந்தது.
தொடர்பு: 011 263 6692 (C/7254)
077 299 1176 (6.7.11)

## கடை வாடகைக்கு

403, மணிக்கூட்டு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட இரு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 210 0909/077 844 5932 (C/7255)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் க. செல்லத்துரை- இரத்தினம் தம்பதியினரது கனிஷ்ட புதல்வரான **செ.நடேசன்** அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சகோதரர்கள்,உறவினர்கள்,
நண்பர்கள்.
077 719 7145

வட்டுக்கோட்டை. (35500) (6.6.7)


## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மருந்து, மருத்துவ உபகரணங்களின் மொத்த விற்பனை நிலையம், செவிபுலன் சுக நல நிலையம் ஆகிய எமது நிறுவனங்களுக்கு

முகாமையாளர்
விற்பனைப் பிரதிநிதி
அலுவலக உதவியாளர் தேவை

5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

**Medcon (Pvt) Ltd,**
23 'A', Pagoda Road, Nugegoda.
Phone : 0773166537, 0777313672
E.mail:cssivak@gmail.com
Fax: 011 2816644

(35469)(10.6.7)

## மாணவர்களுக்கான அறிவித்தல்

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மற்றும் புதுமுக மாணவர்களுக்கான புதிய CIMA பிரிவு ஏப்ரல் 20 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. இப் பிரிவில் 60 மாணவர்களை மட்டுமே உள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

CAPSTONNE
154, A/1, Navalar Road, Jaffna.
021 222 0727/021 720 0777
(35494)(6.7.11)

## பதவி வெற்றிடம்

டுபாயைத் தலைமையகமாக கொண்டு இலங்கையின் வடக்கு/கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளுக்கு

முகாமையாளர்
சந்தைப்படுத்தல் அதிகாரி
மேற்பார்வையாளர்
விற்பனையாளர்

போன்ற பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.
பயிற்சியின் போது 30,000/= வருமானம், பின்னர் 60,000 /= இற்கு மேல் வருமானம் அதிகரிக்கவும் வாய்ப்புண்டு.
O/L சா/த கல்வித் தகைமை போதுமானது.
வயதெல்லை 18-35 (பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு:
021 221 9995, 075 0985088
(35492)(10.6.7)

## FIRE EXTENGUISHER
## தீ அணைக்கும் கருவிகள்

யாழ்.நகரில் தீ அணைக்கும் கருவிகள் விற்பனைக்குண்டு



வியாபாரத் தாபனங்கள்,
காரியாலயங்கள், வீடுகளுக்கும் தேவையான
சகல விதமான கருவிகளும் எம்மிடம்
விற்பனைக்குள்ளது.



(35502)(5.6.7)

**YARL FIRE PROTECTORS**
146,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
146, KANNATHIDDY ROAD, JAFFNA.
T.P.: 021 221 9905


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அண்ணாமலை சற்குணசிங்கம் (G.T.Z - பாதுகாப்பு உத்தியோகத்தர்)



வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், ஜின்னா லேன், மானிப்பாய் வீதி,யாழ்ப் பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அண்ணாமலை சற்குணசிங்கம் 29.03.2013 வெள்ளிக்கிழமை அகால மரண மானார்.

அன்னார் அண்ணாமலை காலஞ்சென்ற தங்கமணி தம் பதியரின் அன்பு மகனும், சீவ ரத்தினம் (லக்ஸ்மி இஞ்சினி யரிங் மெக்கானிக் மேற்பார் வையாளர்)- நேசரத்தினம் தம்பதியரின் அருமை மருமக னும், கௌரிமலரின் (அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்), அன்புக் கணவரும், ஹரிதரன் (தரம் 8 புனித பத்திரிசியார் கல்லூரி) சாமினியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சற் குணராசா மற்றும் தவமணிதேவி, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் சிவனேஸ்வரி, இளங்கோ, யோகேஸ்வரி, சசிகலா ஆகியோ ரின் சகோதரனும், சிவகுமார் (சாரதி, யாழ்.பல்கலைக் கழகம்), சசிக்குமார் (தொழில்நுட்பக் உத்தியோகத்தர் EESPL, வத் தளை), காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2013) அவரது இல்லத்தில் இடம் பெற்று மு.ப 11.00 மணிக்கு தகனக் கிரியைக் காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**ஜின்னா லேன், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.** (35497)(6.7.11) **மனைவி, பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா மார்க்கண்டு



துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், விதானையார் கமம், D-5, பெரியபரந்தன் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா மார்க்கண்டு கடந்த (28.03.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார்- மார்க் கண்டு (விதானையார்-ஆனையிறவு)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பகவதி அன்னம்மா, கதிர்காமநாதன், தனலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியும், விஜயலக்சுமி, திருநாவுக்கரசு, தனலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்-கள்ளியடி), ஆனந்தலட்சுமி, மோட்சலிங்கம் (கனடா), யோகலட்சுமி (வெள்ளவத்தை), பாஸ்கரலிங்கம் (பாடசாலை பணியாளர்- கிளிநொச்சி இந்துக்கல்லூரி) திருநாமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் தாயும், பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்- உடையார் கட்டு), கணேசம்மா, காலஞ்சென்ற கந்தசாமி (தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்- ஆனையிறவு) மற்றும் சந்திரராணி (பிரான்ஸ்), கேதீஸ்வரி, நடராசா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்-வடமராட்சி கிழக்கு), லதா (கனடா), இந்திரபாலன் (கனடா), பிறேமாவதி, சந்திரவதனி (லண்டன்) ஆகியோரின் மாமியும், புஸ்பகரன்-பொன்மலர் (இத்தாலி), சோமகேசன்-பொன்மதி, தயாபரன் (வலயக் கல்விப் பணிமனை-முல்லைத்தீவு), யசீதா (உடுப்புக்குளம் த.வி), ஸ்ரீரூபன் (RDD கிளிநொச்சி), சர்மிளா (குரவில் த.வி-ஆசிரியை), அபராஜிதன் (ஆசிரியர்-கச்சாய் அ.த.க.பா), காலஞ்சென்ற அஜந்தா (கிராம அலுவலர்) மற்றும் நிஷாந்தினி (ஆசிரியை, புதுமுறிப்பு, விக்னேஸ்வரா வித்தியாலயம்), ரவீந்திரா (ஆசிரியர்- மட்டக்களப்பு), நிமலேந்திரா (RDA வவுனியா), சுகிர்தா, நிக்ஷன், பிரசாந்தினி, பிரபாஜிதன் (SADPகளநிலை உத்தியோகத்தர்), கிருஸ்ணவாணி (ஆசிரியை-முன்பள்ளி) றொசாந்தினி, நடேஸ்வரன்-சுபாசினி (காணி மாவட்ட பதிவகம், கச்சேரி, கிளிநொச்சி), ரமேஸ்நாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)- ரோகினி (RDD கிளிநொச்சி), அசோக் குமார்-தர்ஷிகா (கனடா), குகதாஸ்-வினோதினி (பிரான்ஸ்), வினோரூபன்- துவாரகா (லண்டன்), தமிழினி, தாரணி, கிரிஜாகரன் (பிராந்திய இணைப்பாளர், சனச காப்புறுதி கம்பனி, கிளிநொச்சி), நிவேதினி (பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு), ரதீஸ்வரன் (ஆசிரியர் -விபுலானந்தா கல்லூரி, வவுனியா), நிறோபா (ஆசிரியை, புனித அந்தோனியார் றோ.க.வி), லோஜனா (பல்கலைக்கழக மாணவி), சனாதனன், மிதுனன், பவந்தி (கனடா), கணேஸ்-றேணுகா (லண்டன்), ஜெகன்-மேனகா (லண்டன்), ரஜீவன்-விபுசாயினி (லண்டன்), பிரசாத், பிரசன்னா, சுபாசினி, சோபிகா, பிரகாஸ், பிருந்தாயினி (இந்தியா), திருசிகாயினி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், மிதுஷா, சீதுஷா, தர்சா-சுரேஸ், கானிலா, தசாங்கி டினோலக்ஷன், அபிசாங்கி, கம்ஷா, லக்ஸிகா, கருவூலன் கேஸ்மி, ஷசான், குகந்திகா, கியானா, தேர்விந்தன், கவிந்தன், ரூபிகா, மர்சிகா, சஞ்சய், வைஷாலி, வைஷன், நிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை திருநகர் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விதானையார் கமம், D-5, பெரியபரந்தன்.** (C/7400)(10.6.7) **தகவல்: குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 16.06.1948

மறைவு 01.03.2013

## அமரர் வட்டர் வடிவேல்

யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும், கள்ளியடியை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாயில் வசித்தவருமாகிய வட்டர் வடிவேல் கடந்த (01.03.2013) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

எமது குல விளக்காய் திகழ்ந்த வட்டர் வடிவேல் அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு உடன்வந்து ஒத்தாசை நல்கியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளிலும் ஊர்வலத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமக்கு உதவிய வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் கூறிக்கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிகாரி வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 0777066989, 0779667910.**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

(35510)(10,6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இது அம்மாவின் வெற்றி

■ சென்னையிலிருந்து ஜெரா

அமைதி நிலைக்கும், மாற்று வடிவங்களுக்கும் திரும்பிக் கொண்டிருக்கின்றது தமிழக மாணவர் போராட்டம். எனினும் இந்தியாவில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

மத்திய, மாநில அரசுகளில் அங்கம் வகிக்கும் கட்சிளின் கொள்கைப் போக்கில் என்றுமில்லாத பதற்றத்தையும் தடுமாற்றத்தையும் மாணவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். முதல் தடவையாக மாணவர்களால் அரசியல்வாதிகள் வழிநடத்தப்படும் சூழல் ஒன்று உருவாகியுள்ளது.

இதை சாதித்த பெருமை தமிழகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இருக்கின்ற கல்லூரி மாணவர்களையே சாரும். அவர்களின் போராட்டத்திற்குள் அரசியல்வாதிகளையோ, அரசியல் கட்சிகளையோ அனுமதிக்காத கொள்கை, மைய அரசியல் ஓட்டத்திலேயே விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

### முதல் விளைவு

முதல் தடவையாக கருணாநிதி வழிக்கு வந்திருக்கின்றார். அவரது அரசியல் நாடகத்தின் துன்பியல் பாகம் இந்த வழிக்கு கொண்டுவந்து விட்டிருக்கின்றது.

மாணவர் போராட்ட கொள்கைகளை முன்னிறுத்தி மத்திய அரசுடன் அரசியல் பேரம் பேசினார். அது தோல்வியில் முடியவே முதல்தடவையாக சொன்னதை செய்துகாட்டினார் கருணாநிதி. தனது கூட்டணியோடு மத்திய அரசிலிருந்து விலகிக் கொண்டார்.

மத்திய அரசுக் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்படவிருந்த நிலையில், தானாக வெளியேறிவிட்டார் என்ற கிசுகிசுப்புக்களும் உண்டு.

### அனைத்தும் அம்மா வசம்

தனக்கு எதிரணியில் இருக்கும் கருணாநிதியின் இந்த முடிவு ஜெயலலிதாவிடமும் திடீர் திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியது. அல்லது வேறுவழியின்றி, அவ்வாறானதொரு முடிவுக்கு ஜெயலலிதா இழுத்து வந்து விடப்பட்டார். கருணாநிதியின் முண்டுவிலகலுக்கு பதிலடியாக அவரின் சட்டசபை தீர்மானம் நிறைவேற்றல்கள் அமைந்தன.

தனித்தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு, இலங்கை மீது பொருளாதாரத் தடை, போர்க்குற்ற விசாரணை, இலங்கை வீரர்கள் விளையாடும் ஐ.பி.எல். போட்டிகளுக்கு சென்னையில் தடை எனப் பல தீர்மானங்களை ஒரேநேரத்தில் நிறைவேற்றினார்.

அதாவது கருணாநிதியும், போராடும் மாணவர்களும் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் ஒரே கைப்பிடியில் அள்ளியெடுத்து தன தாக்கிக் கொண்டார் ஜெ.

### இப்போது ஜெ ஈழத்தாய்

இதனால் ஜெயலலிதா,இப்போது ஈழத்தாயும் ஆகிவிட்டார். அதாவது ஈழப்பிரச்சினையில் தமிழருக்கு சார்பான முடிவுகளை தமிழக முதல்வர் எடுத்துவருவதால் அவருக்கு இறுதியாக கிடைத்திருக்கும் பட்டப்பெயர் ஈழத்தாய்.

கடந்த ஒரு மாதமாக நிலைகொண்டிருக்கும் மாணவர் போராட்டத்தின் விளைவினால் ஜெயலலிதா ஈழத்தின் தாயாகிவிட்டார்.

வேறுவகையில் சொல்வதென்றால், இதுவரை காலமும் ஈழத்துக்காக, மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய அனைத்துத் தரப்பினரது போராட்டங்களையும் முந்தள்ளி முன்னிடத்துக்கு வந்துவிட்டார் ஜெயலலிதா.

இனி ஈழம் குறித்த போராட்ட கோரிக்கையாக முன்வைப்பதற்கு எதுவுமில்லை. சின்னசின்ன விடயங்களை முன்வைத்து வேண்டுமானால் போராட முடியும். அது அவ்வளவு தூரம் அணிதிரட்டக் கூடிய சக்திமிகு பிரச்சினையாக இருக்காது. மாணவர்களிடம் கடன் வாங்கிய ஜெயலலிதாவின் தீர்மானங்களை, மீண்டும் கடன் வாங்கியே மாணவர்களும் போராட வேண்டிய கட்டத்தை அவர் உருவாக்கியளித்திருக்கின்றார்.

**எந்தவகையான போராட்டங்களும் மக்களின் கையில் இருக்கும் வரைக்கும்தான் அதற்கான வீரிய மும், உண்மைத் தன்மையும் உயிரோடு இருக்கும். கட்சிகளுக்குள்ளும், அறைகளுக்குள்ளும் அது கலந்தாலோசிப்புக் களுக்காக இடம்பெயர்க் கப்பட்டால் அதன் மீதான முதல் நம்பிக்கை சிதைந்து விடும்.**

### அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா

உண்மையில் தமிழக மைய அரசியலில் ஏற்பட்டிருக்கும் இந்தப்பெரும் மாற்றம் மாணவர்களின் போராட்டத்தின் விளைவினால் உருவானதே. அந்த விளைவு மாணவரது போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாயினும், அதுவே மைய அரசியலில் கலந்த பின் அதற்கான பெறுமானத்தை பெற்றுக்கொள்வதென்பது சாத்தியமாகாது.

இவ்வளவு காலமும் மாணவரினதும், அவர்களால் திரட்டப்பட்ட மக்களினதும் கோரிக்கைகளாகவும், தீர்மானங்களாகவும் இருந்த விடயங்கள் இனி அரசியல் கட்சிக்குரிய அரசியலாகப் போகின்றது. எனவே இதில் அரசியல் கட்சிகளுக்கும் பங்கு கிடைக்கப்போகின்றது. அரசியலில் பங்கு என்றால் அது வியாபாரத்துக்கு சமமானதுதானே. கோரிக்கைகளும், தீர்மானங்களும் பணத்துக்குரிய பண்டப்பொருள்களாக மாற்றம்பெற்று விடும். பணப்பெட்டிகள் கைமாறப் படும் இடத்தில் கோரிக்கைகளும் கைவிடப்படும் சூழல் உருவாகும். தமிழக, இந்திய ''அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா'' நிலை பல்வேறு காலகட்டங்களிலும் அனுபவிக்கப் பட்டவைதானே.

### நீர்த்து போகும் போராட்டங்கள்

எந்தவகையான போராட்டங்களும் மக்களின் கையில் இருக்கும் வரைக்கும்தான் அதற்கான வீரியமும், உண்மைத்தன்மையும் உயிரோடு இருக்கும்.

கட்சிகளுக்குள்ளும், அறைகளுக்குள்ளும் அது கலந்தாலோசிப்புக்களுக்காக இடம்பெயர்க்கப்பட்டால் அதன் மீதான முதல் நம்பிக்கை சிதைந்து விடும். இப்போது தமிழக மாணவர் போராட்டங்கள் மூடிய அறைகளுக்கும், ஏ.சி அறைகளுக்கும், அரசியல்வாதிகளின் அலுவலகங்களுக்கும், ஊடகங்களின் கேட்போர்கூடங்களுக்கும் மாறியிருக்கின்றது.

தெருவில் நின்று, பலரும் சேர்ந்து உருவாக்கிய தீர்மானங்களை மூவர் மட்டுமே ஊடகங்களில் முன்னின்று பிரச்சாரப்படுத்துகின்றனர். அதற்குள் கட்சி அடையாளங்களையும் தம்மை மீறி போட்டுடைத்துவிடுகின்றனர். இதனால் போராட்டத்துக்கு எதிரான முணுமுணுப்புக்கள் போராட்ட களத்திலேயே கேட்கத் தொடங்கியிருக்கின்றன. இந்த முணுமுணுப்புக்களோடு, ஜெயலலிதாவின் தீர்மானங்களும் போராடுவதற்கான தேவையை மலினப்படுத்தியிருக்கின்றன. உள ரீதியில், ''அம்மாவே தீர்மானம் கொண்ணந்துட்டாங்க, இனி எதுக்குப் போராடணும். இனியும் போராடி எவனையும் ஹீரோவாக்கி விடக் கூடாது'' என்ற பேச்சரவங்களோடு கல்லூரிகளுக்கு திரும்பும் மாணவர் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது.

ஆக, அம்மா சரியான தருணத்தில் சாதுரியமான அரசியல் செய்து எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத் திருக்கின்றார் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

முற்றுப் புள்ளி வைத்ததோடு நின்றுவிடாது தன் சாணக்கியத்தின் அடிப்படையில் அனைத்து வெற்றிகளையும் தன் தேர்தல் கால பிரச்சார வங்கியில் வைப்பிட்டும் கொண்டார்.

### தமிழகக் குரல்கள் கேட்கப்படுவதில்லை

இந்த விடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிடல் வேண்டும். இதுவரை தமிழக சட்டசபையில் ஈழம் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட எந்தத் தீர்மானங்களும் மத்திய அரசின் கவனிப்பைப் பெறவில்லை. கருத்திலெடுக்கப்படவில்லை.

சட்டசபைக்கு அப்பால், வடக்கில் இருக்கும் இந்திய பெரும் அரசு, தெற்கில் இருக்கும் தமிழர்களை தன் நாட்டு மக்களாக கணக்கிலெடுப்பதேயில்லை. தமிழகத் தமிழர்களின் வாழ்வுரிமையில் எந்தவித அக்கறையையும் நடுவண் அரசு எடுப்பதில்லை.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டபோதும், அது பற்றி எவ்வித நடவடிக்கையையும் மத்திய அரசு எடுப்பதில்லை. இப்படியான கவனிப்பில் இருக்கும் மக்களின் போராட்டங்களை இந்திய அரசு ஏற்குமா? அத்தோடு சதாகாலமும் காங்கிரஸ் அரசோடு மல்லுக்கு நிற்கும் ஜெய லலிதாவின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்குமா? தமிழகத்துக்கு அடுத்த மாநிலமான கர்நாடகாவிலிருந்து காவிரி நதி நீரைக் கொண்டு வருவதற்கே தமிழகத் தமிழர்கள் 30 ஆண்டுகளுக்கு மேல் போராட வேண்டியிருந்தது.

இந்த நிலையில் தமிழக மைய அரசியல் சக்திகள் ஈழ விடயம் தொடர்பில் முன்வைக்கும் தீர்மானங்கள், தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தினாலும், காலநீட்டிப்பில் அவை அர்த்தமற்றவை என்ற புரிதலுக்கு அவர்கள் வரவேண்டிவரும். ★

வீடு வாடகைக்கு
பிறவுண் வீதியில் நாவலர் வீதிக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0779906063

வாடகைக்குண்டு
யாழ்.நகர் கே.கே.எஸ் வீதியில் சத்திரச்சந்திக்கு அருகில் களஞ்சியம்/ காரியாலயம் ஆக பயன்படுத்தக்கூடிய அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777062349, 0771171517

புதுக்கடை திறப்புவிழா
NEW LOVERS Corner
நாளை (01.04.2013) மு.ப 9.00 மணிக்கு எமது பான்சி அழகுப்பொருள் வியாபார ஸ்தாபனமான
நியு லவ்வேர்ஸ் கோணர்
தனது சேவையினை கோலாகலமாக தொடங்க இருப்பதனால் வாடிக்கையாளர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.
நியூ லவ்வேர்ஸ் கோணர்
உரிமையாளர்- இ.ஜெகதீஸ்வரன்,
இல 164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)
தொடர்பு- 0212219499, 0777606356
ஸ்ரார் றெஸ்ட்
(35526)

மரண அறிவித்தல்

## கனகராசா ஜெயக்குமார்(ரவி)



கனகராசா வீதி, திருநகர் வடக்கு கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா ஜெயக்குமார் நேற்று(30.03.2013) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எழில்கம், கிளிநொச்சி.

தகவல்:
ஜெயமங்களராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## கணபதிப்பிள்ளை நடேசன்

**(ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர், இ.மி.ச)**

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடேசன் நேற்றுமுன்தினம் (29.03.2013) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், வள்ளியம்மையின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, செல்வராசா, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
(35517) குடும்பத்தினர்.

## கனகசுந்தரம்மோகனதாஸ்



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் மோகனதாஸ் (விசாகன்) நேற்று (29.03.2 013) சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கனகசுந்தரம்-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் -சௌந்தரி தம்பதியரின் அன்பு மருமகனும், அருட்சோதியின் பாசமிகு கணவரும், கார்த்திகனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றதிருநாவுக்கரசு மற்றும் அன்னலட்சுமி, விமலாதேவி, ஒப்பிலாமணி, காலஞ்சென்ற இலங்கேஸ்வரன் மற்றும் சித்திரா, சறோசா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனிப்புலி, சிங்கமுதலியார், வேலுப்பிள்ளை(சோதி), சிவமலர், சரஸ்வதி, குலேந்திரபாபு, தேவராசா, அருட்குமரன், அருட்செல்வி ஆகியோரின் மைத்துனரும், யோகேஸ்வரன், சந்திராதேவி ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பயிரிக்கூடம்,
காரைநகர்.
077 6006525

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானமுத்து பிலோமினா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து பிலோமினா கடந்த (27.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யோண் ஞானப்பு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான யோண் ஞானமுத்துவின் அன்பு மனைவியும் சிவஞானம், நவமணி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும் கத்தறின், ஞானேஸ்வரி, அன்ரன், மங்களேஸ்வரி, மரீனா, ஜெக்குமார், யோகேஸ்வரி, அனுசியா, காலஞ்சென்ற பிலிப்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் அமரசிங்கம், மனோகரன், பபிஸ்ரா, அன்ரனிராசா, சிறீதரன், றூபி, சந்திரன், டேவிட் ஆகியோரின் அன்பு மாமியும் மோகனா, காஞ்சனா, றமேஷ், சாளினி, கரோ, டயஸ், நிலாணி, இன்பா, நிலோ, நிக்ஷன், லீசா, மென்சா, மேனா, பிலோமின், பிலிப், பிரியா, தாஸ், கிளேயா, சியானாஸ், லியானூஸ், அனோலின், அபிஷன், ஆஸ்லி, அனஷ்ரிகா, நிஷாந், நிறோமி, நிறோஜன், டினோ, டிசாத், ஸ்ரெவாணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சாரா, சபீரா, சர்வி, சறுண், ஷைனிகா, கெவின், கவின், காவியா, அஸ்வின், அக்ஷரா, பிறின்ஸ்ரன், ஒக்ஸ்ரன், நிக்ஸ்ரன், அஸ்ரன், பிளஷ்சியா, ஆகியோரின் பூட்டியும் அன்னம்மா, இராசரட்ணம், செல்வராணி, விசுவாசம், மாக்கிறேட், காலஞ்சென்றவர்களான, யோசப், திரேசம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.04.2013) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் குழமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(35522) (23,16-14)

தகவல்:
பிள்ளைகள்.

# ஓய்வூதியர்கள் இணையவும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வலி.தென்மேற்கில் உள்ள ஓய்வூதியர்கள் பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைய போதிய விழிப்புணர்வும்- சங்கத்தின் நலச் சேவைகள் தொடர்பான அறிவும் இல்லாத தன்மையே சங்கத்தில் இணையாததற்குக் காரணம் என முன்னாள் ஓய்வூதியர் சங்கத் தலைவர் வை.செகராஜசிங்கம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சங்கத்தில் தற்போது வலி. தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட35 வீதமான ஓய்வூதியர்களே பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

ஓய்வூதியம்பெற்று இதுவரை உறுப்பினர்கள் ஆகாதவர்கள் சங்கத்தின் தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தத்துடன் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பூர்த்தி செய்யவும். உறுப்பினராகி ஓய்வூதிய நலச் சேவைகளை அனுபவிக்கவும் என்றார். (எ-50)

## மொழித்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலானதமிழ் மொழித்திறன் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பின்வரும் பிரிவு களில் வெற்றி பெற்றுள்ள னர்.

நடனம் தனி பிரிவு 05 முதலாமிடம் க.கௌதமன், பேச்சு பிரிவு 02 முதலாமிடம் உ.அனோஜன் பேச்சு பிரிவு 05 இரண்டாமிடம் ச. டிசாந் தன், பேச்சு பிரிவு 01 இரண் டாமிடம் கோ.சஞ்சய், நடனம் தனி பிரிவு 03இரண்டாமிடம் ம.ஜெனார்த்த ன்,

நடனம் குழு 01 முதலாமிடம், மேடை நாடகம், முத லா மிடம் விவாதம் முதலாம் இடம் ஆகிய பிரிவு களில் மத்திய கல்லூரி வெற்றிபெற்றுள்ளது. (எ)

## 25 பிரிவுகளில் மாதாந்த உதவிப் பண மீளாய்வு

சங்கானை, வலி. மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவுகளில் மாதாந்த உதவிப் பண மீளாய்வு இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலக சிரேஷ்ட சமூக சேவை அதிகாரி வி.அருந்தவராஜா தலைமையில் இந்த மீளாய்வுப் பணி இடம்பெறவுள்ளது. இந்த மீளாய்வுப் பணியின் போது மாதாந்த உதவிப் பண அட்டை, குடும்ப அட்டை என் பனவற்றை கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உதவிப்பண மீளாய்வுப் பணிகள் இடம்பெறும் நாளும் கிராம அலுவலர் பிரிவும் வருமாறு:-

எதிர்வரும் 2 ஆம் திகதி ஜே/ 163, ஜே/ 164 அராலி கிராம அலுவலர் பிரிவுகளிலும் 4 ஆம் திகதி ஜே/165 வட்டு தெற்கிலும் ஜே/166 வட்டு தென் மேற்கிலும், 5 ஆம் திகதி ஜே/ 167வட்டு மேற்கிலும் ஜே/ 168 தொல்புரம் கிழக்கிலும்-

எதிர்வரும் 9 ஆம் திகதி ஜே/169 தொல்புரம் மேற்கிலும், ஜே/170 பொன்னாலையிலும் காலை9 மணி முதல் 12 மணிவரையும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரையும் கிராம அலுவலர் பிரிவுகளில் இடம் பெறவுள்ளன. (எ-41)

## புத்தாண்டில் வைப்பிடுபவர்களுக்கு பரிசில்கள்

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று மக்கள் வங்கி பணம் வைப்பிலிடு வோருக்கு பரிசில்களை வழங்கவுள்ளது.


அன்றைய தினம் மக்கள் வங்கிக் கிளைகள் காலை 8.00 மணி தொடக்கம் புதுவருட கைவிசேடத்துக்காக திறந்திருக்குமென வும் புதுவருடக் கொடுக்கல் வாங்கல் களுக்காக வைப்பிலிடும் அனைவருக்கும் கைவிசேடம் வழங் கப் படுமெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. அத்துடன் 50 ஆயிரம் ரூபா வைப்பிலிடு பவர்களுக்கு காஸ் அடுப்பும், 25 ஆயிரம் ரூபா வைப் பிலிடுபவர்களுக்கு கிறைண்டரும், 10 ஆயிரம் ரூபாவைப்பிலிடுபவர்களுக்கு சுவர் மணிக்கூடும், 5 ஆயிரம் ரூபாவைப்பிலிடுபவர்களுக்கு குடையும் பரிசாக வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)


**கடை வாடகைக்கு**

NO.124D, பலாலி வீதியில்
(இலுப்பையடிச் சந்திக்கும்
அம்மன் வீதிக்கும் இடையில்)
அமைந்துள்ள
கடைத்தொகுதியில் ஒரு கடை
வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 5819704

**கணினி மலிவு விற்பனை**



D/core 3.2 GHZ,
19"LED MONITOR
250GB HDD,



2GB RAM, DVD WR, SPEAKER
FREE-4GB PENDRIVE / WEB CAMARA
39,500/=

**SKY COMPUTER**
162, MAIN STREET, JAFFNA.
0750698608, 0212224865
(15ஆவது வருட சேவையில்)

**விற்பனைக்குண்டு**

ISUZU கன்ரர் வாகனம்
விற்பனைக்குண்டு. 14 அடி நீளம்,
அலுமினியம் பொடி.
Wp LE xxxx
தொடர்பு- 0714312730


# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா அம்பலம்



காரைநகர், பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா அம்பலம் நேற்று (30.03.2013) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோவிந்தர்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ராஜசூரியர், இராசையா, சீவரட்ணம், நல்லையா, திருமதி ராணி செல்வரட்ணம், தம்பிராசா, தேவதாசன் ஆகியோரின் அன்பு சகோதரியும் பாக்கியவதி, புஸ்பவதி, அரசரட்ணம்(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் மேவின், கீத்தா, அஜித், நிரூபா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க யாத்திரை வழிபாடு இன்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

தகவல்:
பாக்கியவதி(மகள்)


**கணக்காளர் சேவைப் போட்டிப்பரீட்சைக்கான துரித மீட்டலும் பரீட்சை வழிகாட்டலும்**

எதிர்வரும் ஏப்பிரல் 27,28ஆம், மே மாதம் 5ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் கணக்காளர் சேவை போட்டிப்பரீட்சைக்கான துறை சார் விரிவுரையாளர்களின் வழிகாட்டலுடன் கூடிய துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்.

ஆரம்பம் எதிர்வரும் சனிக்கிழமை (06.04.2013) முதல் வார இறுதி நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை. கிழமை நாள்களில் திங்கட்கிழமை (08.04.2013) முதல் மாலை 4 மணியில் இருந்து 6 மணி வரையும் பின்வரும் துறைசார் விரிவுரையாளர்களினால் நடத்தப்படும்.

*பொது நிதி முகாமைத்துவம் - திரு.செ.நாகராஜா (ஓய்வு பெற்ற கணக்காளர்)
* நிதிக்கணக்கீடு - திரு.பா.பிரதீபன் (துறைசார் விரிவுரையாளர்)
*முகாமைக்கணக்கீடு - க.திருக்குமார் (துறைசார் விரிவுரையாளர்)
*கணக்காய்வும் புலனாய்வும் - பிரபல துறைசார் விரிவுரையாளர்

குறிப்பு- முன்கூட்டியே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

விவரங்களுக்கு-
அருள்நங்கை (நிர்வாகி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகராயன்குளம் மகளிர் அணி வலைப்பந்தாட்டத்தில் ஆதிக்கம்

மாங்குளம்,மார்ச் 31

வவுனியா வடக்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கனகராயன்குளம் மகா வித்தியாலய மகளிர் அணியினர் ஆதிக்கம் செலுத்தினர்.

வவுனியா வடக்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அண்மையில் ஓமந்தை மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

இதில் முதலில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயமும் - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயமும் மோதின. ஆரம்பம் முதல் இறுதி வரை போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் சம பலத்துடன் மோதினர். இதனால் இரு அணி வீராங்கனைகளும் பெறுபேறு எய்த முடியாது திணறினர். இதனால் முதல் பாதி ஆட்டத்தில் 4:4 என்ற புள்ளி அடிப்படையில் சமனிலையில் இருந்தனர்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும் இரு அணி வீராங்கனைகளின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. முன்னையதை விட ஆட்டம் மேலும் விறுவிறுப்பாகவும் விரைவாகவும் இடம்பெற்றது. இதனால் மாறி மாறி புள்ளிகள் எகிறிய வண்ணம் இருந்தன. இருந்த போதும் இறுதியில் கனகராயன் குள மகா வித்தியாலய மாணவர்களின் நுணுக்கமான புத்தி சாதுரிய விளையாட்டின் மூலம் 22 புள்ளிகள் உயர்வாகப் பெற்று 9:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இப்போட்டியில் மூன்றாமிடத்தை குளவிசுட்டான் அ.த.க பாடசாலை பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப்பிரிவினருக்கான ஆட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயமும் பூம்புகார் கண்ணகி வித்தியாலயமும் மோதின. இதில் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி 11:06 என்ற புள்ளி அடிப்படையில் பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தைத் தோற்கடித்து சம்பியனாகியது.

இப் பிரிவில் மூன்றாமிடத்தை புதுக்குளம் மகா வித்தியாலயம் பெற்றது.

அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் கனகராயன் குளம் மகா வித்தியாலயமும் தவசியார் குளம் வித்தியாலயமும் மோதின.

ஆரம்பத்தில் இருந்து தவசியார் குளம் வித்தியாலய வீராங்கனைகளின் கையே மேலோங்கியிருந்தது. இச்சூழ்நிலையில் 6:01 என்ற புள்ளிகள் அடிப்படையில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி உத்வேகத்துடன் கடுமையாக விளையாடிய போதும் தவசியார் குளம் வித்தியாலயத்திடமிருந்து வெற்றியைத் தட்டிப் பறிக்க முடியவில்லை. அவர்களுடைய முயற்சி வீணாகியது.

இறுதியில் 11:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் தவசியார் குளம் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

இப் பிரிவில் மூன்றாமிடத்தை தரணிக்குளம் அ.த.க பாடசாலை பெற்றுக்கொண்டது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் அடுத்த கட்டமாக மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன என வவுனியா வடக்கு வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் கே.மங்களகுமார் தெரிவித்தார்.

(த-400,422)

## இன்றைய ஆட்டங்கள்



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப. 4.மணி

கலைமதி வி.க. எதிர் கரணவாய் கொலின்ஸ் வி.க.

★ ★ ★

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின்னொளியில் நடத்தப்படும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டித்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

இரவு 7 மணி

தெல்லிப்பழை நண்பர்கள் 'பி' அணி எதிர் உடுவில் சம்பியன் 'ஏ' அணி.

இரவு 8.30மணி

தொட்டிலடி ஞானவைரவர் 'ஏ' எதிர் உடுவில் சம்பியன் 'ஏ' அணி.

★ ★ ★

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு வைத்தியர்கள் அணிக்கும் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை 9.15 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் வலிகாமம் ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.

இறுதிச்சுற்றில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(த-23-13-288)

# ஆண்களில் அல்பாலா பெண்களில் விக்ரறிஸ்

## மன்னார் எல்லேயில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மன்னர் பிரதேசசெயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் எருக்கலம்பிட்டி அல்பாலா விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் பேசாலை சென்.விக்றறிஸ்விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுச்சம்பியனாகின.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் எருக்கலம்பிட்டி அல்பாலா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுக்குடியிருப்பு அல்அரபா விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

இதில் எருக்கலம்பிட்டி அல்பாலா விளையாட்டுக் கழகம்1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

இரண்டவதாக இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பேசாலை சென். விக்ரறிஸ் விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து தாழ்வுபாடு சென்அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

ஆட்டநேரமுடிவில் இரு அணியினரும் எதுவிதபுள்ளியும் பெறாமையால் ஆட்டம்சமனிலையில் முடிவடைந்தது.

இரு அணியினருக்கும் மேலதிகமாக பந்துகள் வழங்கப்பட்ட போதும் அதுவும் சமநிலையில் முடிவடைந்தது எனவே நாணயச் சுழற்சியில் பேசாலை சென். விக்ரறிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

(த-23)

## கலந்துரையாடல்

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தில் தாச்சி நடுவர்களாக அங்கம் வகிப்போருக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவிலில் உள்ள சங்க அலுவலகத்தில் தலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட இருப்பதனால் தாச்சிச் சங்க நடுவர்களை கலந்து கொள்ளுமாறு செயலாளர்வை. ஆனந்த ஜெஸ்கரன் கேட்டுள்ளார்.

(த-288)

## தெரிவுப் போட்டிகள்

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியின் தெரிவுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

(த-23)

# பாத்திமா, அன்ரனிஸ் அணிகளுக்கு கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் பெண்கள் பிரிவில் பாத்திமா விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்று சம்பியனாகின.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யமாலியா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகஅணி 3:2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சிவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாத்திமா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பாத்திமா விளையாட்டுக்கழக அணி1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப் பந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகளின் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

கிரிக்கெட் (பெண்கள்)

முதலாமிடம் -யாறுக் விளையாட்டுக்கழகம் இரண்டாவது இடம் - மேரியன் விளையாட்டுக் கழகம்

கிரிக்கெட் (ஆண்கள்)

முதலாமிடம்- விபுலனந்தர் விளையாட்டுக் கழகம். இரண்டவது -இடம் யாறுக் விளையாட்டுக் கழகம்.

வலைப்பந்தாட்டம்

முதலாமிடம் மேரியன் விளையாட்டுக்கழகம். இரண்டவது இடம்- அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.

(த-23)

## பள்ளிமுனை லூசியஸ், தாழ்வுபாடு அன்ரனிஸ் மன்னார் உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம். மார்ச் 31

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் பள்ளி முனை சென்.லூசியஸ் விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் தாழ்வுபாடு அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று சம்பியனாகின.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பள்ளி முனை சென்.லூசியஸ் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துப் பனங்கட்டிக் கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோலை அடித்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பள்ளி முனை சென்.லூசியஸ் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தாழ்வுபாடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பனங்கட்டிக் கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் தாழ்வுபாடு அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 4:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

(த-23)

## இன்றைய போட்டிகள்

முல்லைத்தீவு,மார்ச் 31

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்டமட்ட போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஒட்டுசுட்டான் விளையாட்டுக்கழக மைதானத்தில் கபடி, உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இடம் பெறவுள்ளன.

(த-23)

# பெண்கள் கரப்பந்து சம்பியன் மகாஜனாவுக்கு

வலி- வடக்கு,மார்ச் 31

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும் வரை இரு அணிகளும் வெற்றி வாய்ப்பை பெற வேண்டும் என்ற துடிப்புடன் மோதிக் கொண்டன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 19 வயதுப் பிரிவு அணி கடந்த பல வருடங்களாக கோட்ட சம்பியனாக வந்த நிலையிலும் கூட இப் போட்டியில் அருணோதயக் கல்லூரி பலத்த எதிர்ப்பைக் காட்டியமை மகாஜனக் கல்லூரியை சற்று தடுமாறச் செய்ததென்றே குறிப்பிடலாம்.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப் போட்டியில் முதல் சுற்றில் அருணோதயக் கல்லூரி 25:21 புள்ளிகள் என்ற நிலையில் வெற்றி பெற்றது.

இரண்டாம், மூன்றாம் சுற்றுக்களை இரு அணிகளும் பலத்த போட்டியின் மத்தியில் சந்தித்த போதிலும் மகாஜனக் கல்லூரி தொடர்ந்து இரண்டு இறுதிச் சுற்றுக்களிலும் முறையே 25:22, 26:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி 02:1 என்ற சுற்றுக்கள் கணக்கில் வெற்றி பெற்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டித் தன்மையான ஆடுகளங்கள் வேண்டும்

## மொஹமட் ஹபீஸ்



பாகிஸ்தான் உள்ளூர்ப் போட்டிகளில் போட்டித்தன்மையான ஆடுகளங்கள் தேவை எனப் பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் அணி மோசமான திறமை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்ததோடு, அதிக விமர்சனங்களையும் சந்தித்திருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மொஹமட் ஹபீஸ், உள்ளூர்ப் போட்டிகளுக்கான ஆடுகளங்கள் போட்டித்தன்மையானவையாக மாற்றப்பட வேண்டுமெனவும், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் பங்கும் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் வீரர்களே பாகிஸ்தானுக்குத் தெரிவு செய்யப்படுவதாகத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், எனினும் அவ்வீரர்கள் வெளிநாடுகளில் தடுமாற்றத்தை எதிர்கொள்வதாகத் தெரிவித்தார்.


இந்நிலையை மாற்றுவதற்கு ஆடுகளங்கள் போட்டித்தன்மையானவையாக மாற்றப்படுவதே ஒரே வழியெனக் குறிப்பிட்ட அவர், வீரர்கள் திறமையானவர்களாக இருந்தபோதிலும், குறித்த வகை ஆடுகளங்களில் பழக்கமற்ற நிலை காணப்படுவதால் தடுமாறுவதாகக் குறிப்பிட்டார். (த)

# புனே வாரியர்ஸில் ஆரோன் பிஞ்ச்



ஆறாவது ஐ.பி.எல் போட்டியில் விளையாடவுள்ள புனே வாரியர்ஸ் அணியில் மைக்கல் கிளார்க்குக்குப் பதிலாக ஆஸ்திரேலியாவின் மற்றொரு துடுப்பாட்ட வீரரான ஆரோன் பிஞ்ச் சேர்க்கப்பட்டுள்ளார். மைக்கல் கிளார்க் முதுகு வலிப் பிரச்சினை காரணமாக ஐ.பி.எல் போட்டியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து, பிஞ்ச் சேர்க்கப்பட்டுள்ளார். ஆரோன் பிஞ்ச் 3ஆவது ஐ.பி.எல் அணிக்கு மாறியுள்ளார். முன்னதாக ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் டெல்லி டேர்டெவில்ஸ் அணிகளுக்காக அவர் விளையாடினார்.(த)

# முதல் 10 இடங்களில் கோலி, ரெய்னா





சர்வதேச டி20 பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இந்தியாவின் விராட் கோலி 8ஆவது இடத்தையும், சுரேஷ் ரெய்னா 9ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். இந்தியாவின் யுவராஜ் சிங் 14ஆவது இடத்திலும், கௌதம் கம்பீர் 18ஆவது இடத்திலும் உள்ளனர். இவர்கள் தவிர வேறு எந்த இந்திய துடுப்பாட்டவீரரும் முதல் 20 இடங்களுக்குள் இல்லை. நியூஸிலாந்து அணித் தலைவர் பிரெண்டன் மக்கலம் 810 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

பந்து வீச்சாளர் தரவரிசையில் அஸ்வினைத் தவிர வேறு எந்த இந்தியரும் முதல் இருபது இடங்களுக்குள் இல்லை. அவர் 19ஆவது இடத்தில் உள்ளார். மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். அணிகள் பிரிவில் இந்தியா 3ஆவது இடத்தில் உள்ளது. இலங்கை முதலிடத்திலும், நடப்புச் சாம்பியன் மேற்கிந்தியத் தீவுகள் 2ஆவது இடத்திலும் உள்ளன. (த)

# டில்லி, புனே, பெங்களூர் அணிகளுக்குப் பாதிப்பு

6ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி முதல் மே 26 ஆம் திகதி வரை சென்னை உள்பட இந்தியாவின் 12 நகரங்களில் நடக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினை காரணமாக சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக இலங்கை வீரர்கள் சென்னை போட்டியில் பங்கேற்க மாட்டார்கள் என்று ஐ.பி.எல். அமைப்பு அறிவித்தது. இதற்கு சில அணிகளின் உரிமையாளர்கள் ஐ.பி.எல். அமைப்பின் மீது அதிருப்தியை வெளியிட்டனர். இந்த ஐ.பி.எல். போட்டியில் 13 இலங்கை வீரர்கள் பஞ்சாப் அணியை தவிர மற்ற 8 அணிகளில் விளையாட ஒப்பந்தமாகி இருந்தனர்.

சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாட முடியாமை ஐ.பி.எல்.லில் விளையாடும் சில அணிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. டெல்லி டேர்டெவில்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், புனே வாரியர்ஸ் போன்ற அணி களுக்கு இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடாததால் இழப்பு ஏற்படும்.

டில்லி அணிக்கு இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தன தலைவராக உள்ளார். இலங்கை வீரர் ஜீவன் மெண்டீசும் அந்த அணியில் உள்ளார். டெல்லி அணியில் உள்ள பீற்றர்சன், ரைடர் இந்த ஐ.பி.எல். போட்டியில் ஆடவில்லை. இந்த இருவரும் இல்லாததால் அந்த அணி தலைவர் ஜெயவர்த்தனவை அதிகம் நம்பி உள்ளது.

ஜெயவர்த்தனவும் சென்னையில் நடைபெறும் போட்டியில் ஆட முடியாதது பாதிப்பை ஏற்படுத்தும். சென்னைப் போட்டிக்கு ஷேவாக் அல்லது ஜோன் போத்தா டெல்லி அணிக்கு தலைவராக இருக்கலாம். புனே வாரியர்ஸ் அணியில் தலைவர் மத்தியூஸ், அஜந்த மெண்டீஸ் ஆகிய 2 இலங்கை வீரர்கள் உள்ளனர். அந்த அணியில் கிளார்க் காயம் காரணமாக விளையாடவில்லை. இலங்கை வீரர்களும் சென்னையில் ஆடாமல் விடுவதால் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அந்த அணி நிர்வாகம் கருதுகிறது.

இதேபோல பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியிலும் பாதிப்பு இருக் கலாம். டில்சான், முரளிதரன் ஆகிய இலங்கை வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் தலைவர் சங்ககார, பெரேரா ஆகியோர் உள்ளனர். சென்னையில் ஆட முடியாததால் தங்கள் அணிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று ஐதராபாத் அணி பயிற்சியாளர் ரொம் மோடி கூறியுள்ளார். அவர் கூறும்போது, நாங்கள் சென்னையில் முதல் ஆட்டத்திலேயே விளையாடவில்லை. சில ஆட்டங்களில் விளையாடிய பிறகே சென்னையில் ஆடுகிறோம். இதனால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் நுவான் குலசேகர, அகில தனஞ்சய ஆகியோர் உள்ளனர். இந்த இருவரும் சென்னை அணிக்கு முக்கியத்துவம் இல்லை. இதனால் சென்னை அணிக்கு இவர்களால் எந்த பாதிப்பும் இல்லை. மும்பை [மலிங்க], கொல்கத்தா [சேனநாயக்க], ராஜஸ்தான் [குஷால் பெரேரா] ஆகிய 3 அணிகளில் ஒரே ஒரு இலங்கை வீரர் இருப்பதால் எந்தவித பாதிப்பும் இல்லை.[த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த அலுமாரி வழங்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம், நிலையத் தலைவர் கே. தர்மலிங்கத்திடம் அதனைக் கையளித்துவிட்டு உரையாற்றுகிறார். (ம-17)



கொழும்பு திசொற அமைப்பின் ஏற்பாட்டில் வலிகாமம் பகுதியில் உள்ள மாற்றுவலுவுள்ள பிள்ளைகளின் உள விருத்தியை மேம்படுத்தும் 'ஆற்றுகை நிகழ்வுகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது இந்தியத் துணைத் தூதரக துணை அதிகாரி சுரேஸ் மேனன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (ம-135)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் சுண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்வில் பங்குகொண்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ம)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் 50 இலட்சம் ரூபா செலவில் மீளப்புனரமைக்கப்பட்ட நடராசா ஞாபகார்த்த மண்டபம் மீள் திறப்பு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. புனரமைக்கப்பட்ட மண்டபத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நாடா வெட்டித் திறந்து வைக்கிறார். (ம-250)



கைதடி நவபுரம் மக்களால் இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து பண்டாரவளை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற சி.மதியழகன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலராகப் பதவி உயர்வு பெற்ற வே.தபேந்திரன், மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற க.சிறிதரன் ஆகியோருக்கு அண்மையில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.
அவர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-9)



இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் இடம்பெற்ற மகா சிவராத்திரி விழாவில் பளைப் பிரதேசத்தில் சமய சமூகப் பணியில் ஈடுபட்டுவரும் இருவர் கௌரவிக்கப்பட்டனர். முன்னாள் மேலதிக கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், முன்னாள் கிராம அலுவலர் சி.விநாசித்தம்பி ஆகியோருக்கு பளைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.ஜெயக்குமார் பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவித்தார். (ம-9)



செயண்ட் நிறுவனத்தால் யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மக்கள் பங்கேற்புடன் தயாரித்த அனுபவப் பகிர்வு அமர்வு- பிரதேச அபிவிருத்தி திட்டம் சமர்ப்பித்தலும், அமுலாக்கம் பற்றிய கலந்துரையாடலும் என்னும் நிகழ்வு அண்மையில் காங்கேசன்துறை வீதி, செல்வமகால் மண்டபத்தில் நடை[illegible] சிவில் சமூக அமைப்புக்கள், அரச திணைக்களங்கள், சர்[illegible] நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குகொண்டனர். (ம)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் [illegible] தங்கியுள்ளோரின் அடிப்படைத் தேவைகளுக்காக சுவிஸ் நாட்டில் [illegible] கைதடி தெற்கைச் சேர்ந்த திருமதி பாலச்சந்திரன் கனகாம்பிகை ஒரு தொகை நிதியை அண்மையில் வழங்கினார். (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111


## SANKEN CONSTRUCTION (PVT) LTD JAFFNA

உங்களது கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான
சகலவிதமான கொங்கிறிற்களுக்கும்
நாடவேண்டியது **சங்கென்**
விபரங்களுக்கு
தவநிரூபன்-0718643645, நிரஞ்சன்-0718643636

## நாய்க்குட்டி விற்பனைக்கு

டொபமன்
நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
மல்ரிபாம்
0759880000

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teachers' Panel & Individual Attention

BCHS

### Diploma in English *(2 Months)*

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### Spoken English With Grammar-Quick Learning Course *(1½ Months)*

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

### Advanced Diploma in English *(4 Months)*

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக்கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

### IELTS Academic / General — Duration : (2½ Months)

(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

### A1 Exam-Sponsor/Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

### B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன்

Duration : 2 Months

### Young Learners for English (YLE) — (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.
- British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March 15ஆம் திகதிக்கு முன் பதியவும்.
- பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May 8ஆம் திகதிகளில் நடைபெறும்.

Batch I - 01-04-2013 Batch II - 06-04-2013 Batch III - 08-04-2013 Batch IV - 17-04-2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL — Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds A1 A2 B1 B2** — Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR** (Quick learning programme) — Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH** — Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறைமூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## தவற விடாதீர்கள்

மாபெரும் தளபாட மலிவு விற்பனை.
இல.230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
077 3583879, 077 8314201

## கொங்கிறீற் கல் விற்பனைக்கு

உயர் தரத்திலான கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு 0777716243
விலை 48/=

## STUDY in LONDON

- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.

Apral/May intake admission

வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது.

தகுதியான மாணவர்களிற்கு, "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவு செய்கின்றது.


கடந்த வாரம் UK சென்ற மாணவி

பெற்றோரின் நம்பிக்கையையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் அடிப்படையாகக்கொண்டே எமது நிறுவனம் இவ்வாறான வீசா-ஆலோசனை நடைமுறையை மேற்கொண்டுவருகின்றது.

சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்...
0779 265 447 YOUR FUTURE GATEWAY
WORLD EDUCATION CONSULTANCY WEC
சங்கத்தானை சாவகச்சேரி.

## LONDON METROPOLITAN COLLEGE Computer Courses

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing cs6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

## Album Designer தேவை

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள studio விற்கு Album Designing செய்யக்கூடிய அனுபவம் மிக்க வேலை ஆட்கள் தேவை. தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு;-
077 5002035

## மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

பவுடோல் கம்பனி, செக்லைட் கம்பனி, பிஸ்கட் கம்பனி ஆகியவற்றிற்கு தொழிற்சாலையில் வேலை செய்யக் கூடிய இளைஞர்கள் 4பேர் மட்டும் தேவை.
இம் மூன்று நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்பு அதிஉயர் சம்பளம் சிங்கப்பூர் நாட்டில் 2மாதம் visit சென்று வேலை செய்ய விருப்பமானவர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு;- Lanka Voice
075 065 0084

## யாழ். நகரில் கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி புதிய பிரிவுகள் ஆரம்பம்

Mobile Phone Repairing Course — K.Ganesh

Just 4 days Course ஆரம்பம் 02.04.2013

வடமாகாணத்தில் உங்கள் பிரதேசத்தில் நீங்களும் ஓர் சுயதொழிலொன்றை மேற்கொள்ள அரியசந்தர்ப்பம். கல்வி அறிவு, ஆரம்ப அறிவு, ஆங்கில அறிவு எதுவும் அவசியமில்லை. பகுதி நேரமாகவும் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். வயது எல்லை கிடையாது. மாதம் ஒரு இலட்சத்துக்கு மேல் சம்பாதிக்க முடியும். முதல் நாளில் இருந்தே Phone Repairing பயிற்றுவிப்பதோடு நீங்கள் கொண்டுவரும் பழுதடைந்த Phone இரண்டு இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

கட்டணம் 9500/=

ISSEEES NALLUR CAMPUS
762, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA.
0212224728, 0777444225

## பிரத்தியேக வகுப்புகள்

English, Tamil Medium
GRADE 6 To GRADE 11
* Science * Maths
* I.C.T
தொடர்பு- 0772055224
(34909)

## கார் விற்பனைக்கு

Toyato 1997 மொடல் (301-xxxx) AC, Power steering, power mirror, Auto Gear, Additional in. fo Alloy Wheel, Pioneer sound system, 16km per Litter, Good condition car விற்பனைக்கு.
விலை 1590000/=
தொடர்பு:- 0721854186

## வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில் 45 அடி நீளம், 16 அடி அகலம் கொண்ட 2மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் மொத்த வியாபாரம் செய்ய உகந்தது.)
தொடர்பு:-
021 320 5260

## STUDY IN UK

உங்கள் LONDON செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

GCE(O/L) தகமை போதுமானது
April/ May Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## வீடு, வளவு விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு, கோப்பாய் வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் வீடு (4 படுக்கை அறைகள், வீட்டுடனான 2 குளியல் அறைகள் ரைல்ஸ் பதித்த குசினியறை, பூந்தோட்டம், கிணறு) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
0776343568 (34923)(8.6)

## காணி விற்பனைக்கு

நல்லூரடி, 2ஆம் குறுக்கு வீதியின் பொன்னி அம்மன் லேனில் அமைந்துள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு-0779905269, 0754000374, 0756403115. (34952)(8.6)

## வெல்க்கம் பமிலி WELCOME FAMILY

எம்மிடம் தரமான குத்தரிசி 5Kg - 10Kg பொதிகள் கிடைக்கும். குறித்த இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஓடர் செய்தால் உங்கள் வீடுகளுக்கு தருவித்துக் கொடுப்போம். டெலிவரி சாச் எதுவும் அறவிடப்பட மாட்டாது. முதல் நாள் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு- 0779550363
(K.R.S -கலைவாணி- A.V.S அரிசிகள்)

## யாழில் கொழும்பு பிறிண்டர்ஸ்

விசிட்டிங்காட் - பில்புத்தகம் - லேபல்கள் - நினைவுமலர்கள்
பருவகால மலர்கள் - சஞ்சிகைகள் - போஸ்டர்கள் - லேட்டபாட்
சான்றிதழ்கள் - அழைப்பிதழ்கள் - CD கவர்கள் - CD ஸ்ரிக்கர்கள்
சகலவிதமான பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் நவீன உயர்தொழில் நுட்பத்தில் செய்திட
கலர் பிறிண்ட்

666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875
கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




06 -07

வெளியுறவின் பெயரிலான....



பழைய துரோகம்
புதிய பழிவாங்கல்

02




உள்ளே விடு
அல்லது
உட்புகுவோம்

03

அடங்குமா ஆணவம்..?




12

காந்தியும் காங்கிரஸும்: அகிம்சையும்....



24


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 31 மார்ச் 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


*நிலாந்தன்*



# வரலாற்றிலிருந்து பாடம் கற்க தவறிவிட்டது இந்தியா

அமெரிக்காவுக்கோ, மேற்கு நாடுகளுக்கோ ஈழத்தமிழர்கள் மீது காதல் கிடையாது.

அவர்களுக்கென்று நீண்ட கால நோக்கிலான ஒரு நிகழ்ச்சி நிரல் உண்டு. அந்த நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட ஒரு கருவியே ஈழத்தமிழ் அரசியல்.

புதுடில்லிக்கும் ஈழத் தமிழர்கள் மீது காதலோ பாசமோ கிடையாது. அவர்களுக்கென்றும் ஒரு நிகழ்ச்சி நிரல் உண்டு.

ஜெயலலிதாவிற்கும் ஈழத்தமிழர்கள் மீது பாசம் கிடையாது. அவருக்கும் வாக்கு வேட்டை அரசியலுக்குரிய ஒரு நிகழ்ச்சி நிரல் உண்டு.

கருணாநிதிக்கும் அப்படி ஒரு நிகழ்ச்சி நிரல் உண்டு.

ஆனால், தமிழ் நாட்டின் மாணவர்களுக்கோ அல்லது கட்சி சாரா அமைப்புகளுக்கோ மனித நேய நிறுவனங்களுக்கோ அல்லது மனித உரிமை ஆர்வலர்களுக்கோ மேற்கண்டவாறான சூதான உள்நோக்கமுடைய நிகழ்ச்சி நிரல்கள் எதுவும் கிடையாது. அது ஒரு தன்னியல்பான பரிசுத்தமான எழுச்சி.

**அசைக்கப்பட்ட டில்லி**

பொதுவாக பல்கலைக்கழக மாணவர்கள் அதிகாரத்துக்கும் அரசுக்கும் எதிரானவர்கள். எது தீவிரமானதோ அதன் பின்தான் அணிதிரள்வார்கள். நசியும் மிதவாதிகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. யாழ். பல்கலைக்கழகமும் இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணியை முன்பு நிராகரித்திருக்கிறது. இப்பொழுதும் தீவிரமாகத் தமிழ்த் தேசியம் பேசுவோருக்கே அவர்களின் ஆதரவு அதிகம்.

எனவே, சூதான நிகழ்ச்சி நிரல்கள் எதுவுமற்ற சமரசத்திற்குப் போகத் தயாரற்ற தமிழக மாணவர் எழுச்சியானது அதன் தர்க்கபூர்வ விளைவாக கருணாநிதியையும் ஜெயலலிதாவையும் அசைத்திருக்கிறது. ஏன் புது டில்லியைக் கூட ஓரளவிற்கு அசைத்துத்தானிருக்கிறது.

ஜெனிவாக் கூட்டத்தொடரின் தொடக்க நாள்களில் தீர்மானத்தின் கடுமையைத் தணிப்பதற்கு இந்தியா முயற்சித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், தீர்மானம் வெளிவர இருந்த இறுதி நாள்களில் இந்தியா அதன் கடுமையைக் கூட்ட எத்தனித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது, தமிழக மாணவர்கள் புதுடில்லியை அதன் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களில் தடுமாறச் செய்திருக்கிறார்கள். இதனை முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் கன்வல் சிபல் "ஒருதர்மசங்கடமான ஒழுங்கின்மை" என்று கூறியிருக்கிறார். மார்ச் 26ஆம் திகதி 'இந்தியா டுடே' யில் எழுதிய ஒரு கட்டுரையில் அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

ஆயின், சூதான நிகழ்ச்சி நிரல் எதையும் கொண்டிராத மாணவர்களின் எழுச்சியானது நலன்சார் வெளியுறவுத் தீர்மானங்களில் சலனங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

**தமிழ்[illegible]**

மாணவர்களின் போராட்டம் உச்சமாகவிருந்த நாள்களில் 'ஹிந்து' பத்திரிகை தனது தலையங்கம் ஒன்றில் தமிழ்நாடு இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்க முடியாது என்ற தொனிப்பட எழுதியிருந்தது.

அண்மையில் பி.பி.சிக்குப் பேட்டியளித்த 'ஹிந்து' ராம், தமிழ்நாட்டை மட்டும் கவனத்தில் எடுத்து இந்தியா தன் வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியாது என்ற தொனிப்படக் கூறியிருந்தார்.

கன்வல் சிபலும் ஏறக்குறைய இப்படித்தான் சொல்கிறார் தமிழ் நாட்டின் உணர்வுகளின் அடிப்படையில் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வகுக்கப்படுமாயிருந்தால், பின்னர் எதிர்காலங்களில் பங்களாதேஷ் தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது மேற்கு வங்கத்தின் உணர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அதேபோல நேபாளத்தைக் குறித்து முடிவெடுக்கும்போது உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரின் முடிவுகளை பொருட்படுத்த வேண்டியிருக்கும் என்று கன்வல் சிபல் கூறுகிறார்.


(சூரியகாந்தி 22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய துரோகம் புதிய பழிவாங்கல்

## தமிழக எழுச்சி குறித்த ஓர் சிங்களப் பார்வை

**'மஹிம' ஞாயிறு பத்திரிகையில் உப்புல் யோசெப் பெர்னாண்டோ, எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்.**

**மொழியாக்கம் செய்தவர் வி.எஸ்.ரி**



இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் இருப்பது ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனின் அவதாரமா?

இது, இலங்கைக்கு எதிராக இந்த நாள்களில் தமிழ்நாட்டில் தீவிரமடைந்து வரும் எதிர்ப்பலைகளை விரிவாக ஆராய்ந்த அரசியல் ஆய்வாளரொருவருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம்.

''அன்று ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் கண்டி இராச்சிய அரச பிரதானிகள் ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இன்று தமிழ்நாட்டில் சிங்கள அரசியல்வாதிகள் மீது மட்டுமன்றி பௌத்த மதத் துறவிகள் மீதும் தாக்குதல் நடத்துகிறார்களே'' என்கிறார் அந்த ஆய்வாளர்.

ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனது வரலாற்றை ஆராய்ந்தால் அவரது அந்தக் கருத்தில் உண்மை உள்ளமை புலப்படும்.

இலங்கையின் கடைசி சிங்கள மன்னனான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்கு சிங்கள அரச பிரதானிகள் செய்த துரோகம், காட்டிக்கொடுப்பு என்பனை குறித்து வரலாறு தெளிவாக விளக்கியுள்ளது.

தமிழ்நாட்டின் மதுரை நாயக்கர் வம்ச அரச பரம்பரை அந்த வேளையில் இந்தியாவின் தென் பகுதியில் பலமிக்க அரச பரம்பரையாக இருந்து வந்தது. அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவனே இலங்கையின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன். அவனை ஆங்கிலேய ஆட்சியாளர்களிடம் காட்டிக் கொடுத்தவர்கள் மன்னனின் கீழ் சேவையாற்றிய சிங்கள அரச பிரதானிகளே.

இந்த விடயத்தில் பண்டாரநாயக்க பரம்பரையினருக்கும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பரம்பரையினருக்கும் தொடர்புண்டு.

ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னன் ஆங்கிலேயர்களிடம் அகப்படாது ஒளித்து மறைந்து வாழ்ந்த இடத்தைக் காட்டிக் கொடுத்தவர்களும், அவனைக் கைது செய்து ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தவர்களும் இந்த இரு பரம்பரைகளையும் சேர்ந்தவர்களே.

விக்கிரமராஜசிங்க மன்னனைக் காட்டிக் கொடுத்ததன் பின்னர், ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டதன் மூலம் கண்டி இராச்சியத்தின் நிர்வாகத்தை ஆங்கிலேயர்களிடம் தாரை வார்த்துக் கொடுத்தனர் சிங்களவர்கள்.

கண்டி இராச்சியத்தின் நிர்வாகத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள், தம்மிடம் பிடிபட்ட சிங்கள கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை தமிழ்நாட்டின் வேலூர் சிறையில் அடைத்தனர். மன்னனது இரு மனைவியரும் அங்கு சிறை வைக்கப்பட்டனர்.

சிறையில் வாடிய ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் கடைசியில் வேலூர் சிறையிலேயே உயிரிழந்தான்.

போர்க் குற்றங்களுக்காக இலங்கை அரசைச் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமென அமெரிக்கா, பிரிட்டன் தலைமையிலான மேற்குலக நாடுகளும், தமிழ்நாட்டு மக்களும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் பார்த்தால், என்னிடம் கேள்வி கேட்ட அரசியல் ஆய்வாளரின் சந்தேகம் உண்மையாய் இருக்கக் கூடுமோ என்ற எண்ணம் மனதில் வலுக்கிறது.

தமிழக அரச பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனைக் காட்டிக் கொடுத்து கண்டி இராச்சியத்தின் நிர்வாகத்தை ஆங்கிலேயரிடம் கையளித்த சிங்கள அரச பிரதானிகளுக்கு எதிராக இன்று மேற்குலக நாடுகளும், தமிழ்நாட்டு மக்களும் ஒன்றிணைந்து விட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனது மறு அவதாரமே என்றொரு கதையும் ஒரு கால கட்டத்தில் நிலவியதுண்டு.

தம்மைக் காட்டிக் கொடுத்த சிங்கள மக்களையும் பண்டாரநாயக்க, ஜயவர்த்தனா பரம்பரையைச் சேர்ந்த ஜே.ஆர் மற்றும் சிறிமாவோவின் அரசாட்சியை நாசப்படுத்த ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனது ஆவி பிரபாகரனைப் பயன்படுத்துவதாகவும் அந்தக் கதை கூறியதுண்டு.

தமிழ்நாட்டின் சோழ மன்னர்களது சோழ சாம்ராச்சிய கனவு போன்றே பிரபாகரனும் தமிழீழக் கனவுடன் செயற்பட்டார்.

சோழ இராச்சியத்தின் இலச்சினையான புலிச் சின்னத்தையே பிரபாகரனும் தமது இயக்கத்தின் கொடியாக்கிக் கொண்டார். பிரபாகரனை ஒழித்துக்கட்ட வட இந்திய ஆட்சித் தலைவர்களும், தென்னிலங்கை ஆட்சியாளர்களும் ஒன்றிணைந்து போரை முன்னெடுத்த போது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுமே போரை நிறுத்திவிட அணிதிரண்டு குரல் எழுப்பினர்.

வட இந்திய அரசியல் பரம்பரையின் பட்டத்துக்குரிய தலைவர் ராஜீவ் காந்தி, பிரபாகரனின் தலைமையிலான விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதன் காரணமாகவே வட இந்திய ஆட்சித் தலைமைகள் பிரபாகரனை ஒழித்துக்கட்ட மன வைராக்கியம் பூண்டன.

இன்று பிரபாகரனதும் விடுதலைப் புலிகளதும் சோழ சாம்ராச்சியக் கனவு சிதைந்து போயுள்ளது. ஆனால் பிரபாகரனை ஒழித்துக் கட்டிய இலங்கை சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கும் நோக்குடன் தமிழ்நாட்டு மக்கள் அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்திய மத்திய அரசு, மஹிந்தவின் தலைமையிலான இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படுவதை உணர்ந்து, மேற்குலக நாடுகளுடன் இணைந்துள்ளது தமிழ்நாடு. இந்திய மத்திய அரசை இலங்கைக்கு எதிராக செயற்படத் தூண்ட அது முயன்று வருகின்றது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படும்வரை தமிழ்நாடு செயற்பட்ட விதத்திலிருந்து இது தெளிவாகப் புலனாகின்றது.

தமிழக மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டும், அரசியல் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பம் ஏற்படுத்தியும், இந்திய மத்திய அரசை [illegible] ஆதரவை விலக்க வைப்பதில் வெற்றி கண்டனர்.

இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்குச் சார்பாகச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டி மத்திய அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் விலக்கிக் கொள்ளுமளவுக்கு நிலைமை தீவிரம் கண்டது.

போர்க் குற்றச்சாட்டு தொடர்பாக இன்று இலங்கை அரசை விட இந்திய மத்திய அரசே கடும் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் மேற்குலக நாடுகளுடன் இணைந்து தமிழ்நாட்டு மக்களும் , தமிழக அரசும் ஈழத் தமிழர்கள் மீது காட்டும் ஆதரவும் அனுதாபமுமே.

இதைக்கண்டு இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்படக் கூடுமோ என இந்திய மத்திய அரசு அஞ்சுவதில் தவறு காண இயலாது.

அதே போன்று இலங்கைப் போர்க் குற்றங்களை விசாரிக்க இடமளித்தால் என்றோ ஒரு நாள் காஷ்மீரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து தன் மீதும் விசாரணை வரும் என்று இந்திய மத்திய அரசு அஞ்சுவதிலும் நியாயம் உண்டு.

இதனாலேயே இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணையின் இறுக்கத்தை இளக வைக்கும் தேவை இந்திய மத்திய அரசுக்கு ஏற்பட்டது.

இந்திய மத்திய அரசு சிக்கிக் கொண்டுள்ள இந்த தமிழ்நாடு- அமெரிக்க மேற்குலகக் கூட்டுப் பொறியிலிருந்து இந்தியாவை விடுவிக்க ஜனாதிபதி மஹிந்தவால் மட்டுமே இயலும்.

விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க இந்தியாவின் உதவியைப் பெறுவதற்காக மஹிந்த டில்லிக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றுவதே அதற்கான வழி. இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றை வழங்கி தமிழர் பிரதேசங்களில் தமிழ் மக்கள் மத்தியில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும்.

அத்தகையதொரு நிலையை ஏற்படுத்த மஹிந்த அரசு தவறினால் தான் சிக்கிக் கொண்டுள்ள பொறியிலிருந்து விடுபட ஒரு வழியாக இந்திய மத்திய அரசு மஹிந்தவின் அரசைக் கவிழ்த்து மாற்றமொன்றை ஏற்படுத்தும். ஏனெனில் தனது சொல்லுக்குக் கட்டுப்பட மறுக்கும் ஜனாதிபதி மஹிந்த, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கும் அண்டை நாட்டு அரச தலைவராகவே இந்திய மத்திய அரசின் பார்வைக்குத் தோன்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே விடு அல்லது புகுவோம்!!

■ டிலீப்

1990.06.13 ஆம் திகதி புதன்கிழமை.

ஊறணி அந்தோனியார் பெருவிழாவுக்காக ஊரே கூடியிருக்கின்றது. வெளியிடங்களிலிருந்து வந்திருந்தவர்கள், உள்ளூரைச் சேர்ந்தவர்கள் என்று பல்லாயிரக்கணக்கானோரால் வீதிகள் நிறைந்திருந்தன. வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட சுற்றுச்சூழல். அந்தோனியாரின் பக்திப் பாடல்கள் ஒலிபெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஊறணி அந்தோனியாரின் திருவிழா என்றாலே வலி.வடக்கு மக்கள் மட்டுமல்ல முழு யாழ்ப்பாணத்துக்குமே கொண்டாட்டம்தான். அன்றும் திருவிழா சிறப்பாக முடிந்தது. அந்த மக்கள் மறுநாள் தமது மீன் பிடித் தொழிலுக்கும் சென்றனர்.

1990.06.15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை

பெரும்பாலான மீனவர்கள் அன்றைய தினமே தமது வேலைகளை முடிப்பதற்கு வெளியூர்களுக்குச் செல்வது வழக்கம். மேலும் வெள்ளிக்கிழமைகள் தான் அந்தப் பகுதி மீனவர்களின் ஓய்வு நாள். சந்திகளிலும், வாசிகசாலைகளிலும் அரட்டையடித்துக் கொண்டிருக்கின்றனர் அந்த மக்கள்.

பி.ப 3 மணி

திடீரென ஹெலிச் சத்தம். இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சண்டை நடந்த காலம் என்பதால், ஹெலிச் சத்தத்தைக் கேட்டதும் மக்கள் பாதுகாப்புத் தேடத் தொடங்கினர். அதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை இராணுவ இயந்திர வல்லூறுகள்.

மக்கள் ஒவ்வொருவரையும் தேடித் தேடித் தாக்கியது ஆமி. "ஹெலியைப் பதிச்சு ஒவ்வொரு வீட்டையும் பார்த்து பார்த்து கலிபரால அடிச்சான். ஜாம் போத்தலுக்குள் கிரனேட்டை அடைச்சு சனத்தின்ர வீட்டுக்கு மேல போட்டான். பங்கருக்க சனம் பதுங்குகிறத்துக்கும் சந்தர்ப்பம் கொடுக்கேல்ல. திடீரென்று அவன் அடிச்சதால நாங்கள் ஓடத் தொடங்கிட்டம். எப்பிடியும் பகல் அடிச்சுப் போட்டு விட்டுவான் என்று நினைச்சுக் கொண்டு எல்லோரும் வெளிக்கிட்டம் '' என்கிறார் 80 வயதான ஆரோக்கியநாதன். பலாலிச் சந்தியைச் சொந்த இடமாகக் கொண்ட ஆரோக்கியநாதன் இன்னமும் கடல் தொழில் தான் செய்து கொண்டிருக்கின்றார்.

ஹெலியின் தாக்குதலில் மயிலிட்டியில் 4 பேரும், பலாலியில் 2 பேருமாக அன்றைய தினம் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

திடீரென தொடங்கப்பட்ட இந்தத் தாக்குதல் காரணமாக வலி.வடக்கின் கரையோரக் கிராமங்களான மயிலிட்டி, காங்கேசன்துறை, மற்றும் பலாலியைச் சேர்ந்த மக்கள் இரண்டு மணி நேரத்துக்குள் முற்று முழுதாக தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறினர்.

'' இப்பிடி வழமையா நடக்கிறதுதானே. அண்டைக்கு இரவு திரும்பி வருவம் எண்டதால சமைச்ச சாப்பாட்டுப் பாத்திரத்தையும் கழுவி வைக்காமத்தான் வெளிக்கிட்டனாங்கள். போட்டது போட்டபடி கிடக்கத்தான் வெளிக்கிட்டனாங்கள்'' என்றார் மயிலிட்டியைச் சேர்ந்த சிவஞானராசா.

பெரும்பாலான மக்களுக்குத் தாம் தம் ஊர்களில் இருந்து பெயர்க்கப்படுகிறோம் என்று தெரிந்திருக்கவில்லை. ஊரோடு ஊராக தாக்குதலிருந்து தப்பிச் சென்றனர். தாக்குதல் முடிந்ததும் மீண்டும் வீட்டுக்குத் திரும்பலாம் என்றே நினைத்தனர்.

'' நான் மனுசியோட ரவுணுக்குப் போயிருந்தனான். திரும்பி வரேக்க சொன்னாங்கள் ஆமி ஹெலியால அடிக்கிறான் என்று. அதால எனக்கு திரும்பி உள்ளுக்க போகேலாமல் போட்டுது. என்ர பிள்ளை மயிலிட்டியில வீட்டிலை தனிய நிண்டது. உள்ளுக்க நாங்கள் இறங்கேலாத மாதிரி ஹெலி அடிச்சுக் கொண்டிருக்கு. நான் மூண்டு நாளைக்குப் பிறகுதான் என்ர பிள்ளையை துர்க்கையம்மன் கோயிலடியில இருந்த சனத்துக்க இருந்து கண்டுபிடிச்சனான் .'' என்றார் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம்.

தாக்குதல் முடிந்ததும் அன்றைய இரவிலேயே வீடு செல்லலாம் என்ற நினைப்பில் இடம்பெயர்ந்து வந்த இந்த மக்கள் இன்று 23 வருடங்கள் கடந்தும் தமது சொந்த மண்வாசனையை நுகர முடியாமல் இருக்கின்றனர்.

'' பலாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 9 ஆம் வகுப்பு படிச்சுக் கொண்டிருக்கேக்க வெளிக்கிட்டனாங்கள். இண்டைக்கு எனக்கு 37 வயதாகிப் போச்சுது. இன்னும் சொந்த இடத்துக்குப் போகேலாமல் கஷ்டப்படுகிறம். என்கிறார் பலாலியைச் சேர்ந்த தயாபரன்.

'' இடம்பெயர்ந்து வந்து 23 வருசமாப் போய்ச்சு. இந்தா விடுறம் அந்தா விடுறம் என்று எங்களைப் பேக்காட்டுறாங்களே ஒழிய, விடுறதாய் தெரியேல்லை. இந்த 23 வருசத்தில நான் மட்டும் 21 வீடு மாறிப் போட்டன்'' என்கிறார் தர்மரட்ணம்.

மயிலிட்டி, பலாலியைச் சேர்ந்த மக்கள் இலங்கையில் முதல் முதலாக இடம்பெயர்ந்தவர்கள் என்ற பெயருக்குரியவர்கள். கடைசியாகக் கூட தங்களின் சொந்த இடம் திரும்ப முடியாமல் இருப்பவர்களும் அவர்கள்தான்.

அவர்கள் இடம்பெயர்ந்து பருத்தித்துறைக் கரையோரமாக தங்கினர். பருத்தித்துறை மக்களும் அவர்களுக்கு வாடகைக்கு வீடுகள் வழங்கினர். காணிகள் வழங்கினர். தொழில் செய்வதற்கு இடமும் வழங்கினர். ஆனால் அவர்களால் தொடர்ந்து [illegible]

'' [illegible] பிள்ளையள் தொழிலுக்கு போறதெண்டாலும் போர்ட் கட்ட இடமில்லை. நாங்கள் இஞ்ச அவஸ்தைப்படுகிறம். அங்க எங்கட 12 கிலோமீற்றர் நீளமான கடலைப் பிடிச்சு வைச்சிருக்கிறாங்கள். எங்களை அங்க விட்டாலொரு பிரச்சினையும் இல்லை'' என்றார் குணபாலசிங்கம்.

இப்போது அவர்களின் ஒரே நோக்கம், கோரிக்கை தமது சொந்த மண்ணுக்குத் திரும்ப வேண்டும் என்பதுதான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பின்னர் இப்போது பொறுமை இழந்துள்ளார்கள் அந்த மக்கள். தாம் நடத்திய அறவழிப் போராட்டங்களுக்கு அரசும், படையினரும் மதிப்பளிக்காத ஆத்திரத்தில் இருக்கின்றார்கள். மண் திரும்புவதற்காக எதைச் செய்யவும் துணிந்திருக்கின்றார்கள்.

''நானும் இப்ப தொழிலை விட்டிட்டு வியாபாரத்திலை தொடங்கிட்டன். கருவாடு வியாபாரம் செய்யிறன். இதுவரை காலமும் எனக்கு தெரிஞ்சு எங்கடயாக்கள் யாருமே தொழிலை விட்டது கிடையாது. எனக்கும் தொழிலைவிட வேணும் எண்டு ஆசையில்லை. என்ன செய்யிறது? இடமில்லை. சாப்பாட்டுக்கு வழி பார்க்க வேணுமே? அதுதான் வியாபாரத்தில தொடங்கிட்டன் '' என்றார் தயாபரன்.

ஊர் திரும்பினால்தான் இனித் தொழில் செய்ய முடியும் என்பது அவரது நிலை. விடாவிட்டால் வலிந்தாவது போக வேண்டும் என்கிறார் உணர்ச்சிவசப்பட்டு.

'' நாங்கள் மீன்பிடித் தொழில் செய்யிறனாங்கள். எங்களை கரையோரமாத்தான் இருத்த வேணும். எங்களைக் கொண்டு போய் வேற இடத்தில நீங்கள் குடியமர்த்த முடியாது. அது எங்கட உயிர் இருக்கிற வரைக்கும் நடக்காது. நீங்கள் எங்களை எங்கட இடத்தில விடுங்கோ''

''இஞ்ச தொழில் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறம். போதாக்குறைக்கு நிவாரணத்தையும் நிப்பாட்டிப் போட்டாங்கள். நாங்கள் என்ன செய்யிறது? எங்களை எங்கட காணிக்கை விட்டாப் போதும். உங்களின்ர எந்த உதவியும் தேவையில்லை. எங்கட உழைப்பில நாங்கள் இருப்பம்'' என்று ஆத்திரப்படுகிறார் ஆரோக்கியநாதன்.

நாங்கள் என்னத்தை செய்யிறது. எங்கட காணியை எடுத்துக் கொண்டு நஷ்டஈடு தாறதாய் சொல்லுகினம். யாருக்கு உந்த நஷ்டஈடு வேணும். நாங்கள் கேட்டனாங்களோ. இல்லை எங்கட காணியைத்தான் உங்களுக்கு தாறதெண்டு சொன்னனாங்களோ? '' அவரது முகத்தில் கோபம் கொப்பளிக்கின்றது.


'' முந்தியும் நாங்கள் அங்க ஆமியோடதான் இருந்தனாங்கள். இஞ்சையும் இப்ப ஆமியோடதான் இருக்கிறம். நாங்கள் அங்க ஆமியோட சேர்ந்து இருக்கிறதுக்கு தயாராத்தான் இருக்கிறம். எங்களை அங்க இருக்க விடுங்கோவன்.

''விடாட்டில், நாங்கள் கடைசிக் கட்டமாக எங்கட உயிர் போனாலும் பிரச்சினையில்லை என்று 'காம்பு'க்களுக்குள் புகுவோம் '' என்றனர் மக்கள் ஒரே குரலில்.

மயிலிட்டி, பலாலியைச் சேர்ந்த மக்கள் தற்போது தங்கியுள்ள இடங்களில் தொழில் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். அவர்கள் தங்களுடைய சொந்த இடங்களுக்கு செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்கின்றனர். தங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் எதுவும் தேவையில்லை. சொந்த மண்ணை மிதிக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

மயிலிட்டி மாதா கோயில், மயிலிட்டி சித்தி விநாயகர் கோயில், பலாலி ஆரோக்கிய மாத கோயில் திருவிழாவுக்காக 2010 ஆம் ஆண்டு வரையில் தங்களைச் சென்று வர அனுமதித்த இராணுவம் தற்போது அதற்குத் தடை போட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அந்தத் திருவிழாவுக்குச் செல்லும் போதாவது தங்களது மண்ணை மிதிக்கும் கொஞ்ச நஞ்ச சந்தோசமும் இப்போது இல்லாது ஆக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

"இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது சொந்த மண் என்பதால் அம்பாந்தோட்டையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்றார். அவர் தனது சொந்த மண்ணை மிதிக்கலாம். ஆனால் வலி.வடக்கு மக்கள் தங்கள் சொந்த மண்ணை மிதிக்கக் கூடாதோ ? '' அந்த மக்களின் நியாயமான கேள்வி அதிகாரத்தின் இரும்புச் செவிகளிலும் அதன் அடிவருடிகளின் பாம்புச் செவிகளிலும் விழுமா ?★



மயிலிட்டித் துறைமுகத்தின் தற்போதைய நிலை


மயிலிட்டி மாதா கோயில் 1985 களில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலட்சியப்படுத்தப்படும் சர்வதேச ஒப்பந்தங்கள்

சந்திரசேகர ஆஷாத்



உலக அரசியல் அரங்கில் இரு நாடுகளுக்கிடையே செய்யப்படும் ஒப்பந்தங்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அவை சில சமயங்களில் குறிப்பிட்ட நாடுகளின் எல்லைகளைத் தாண்டி பாதிப்புகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்து விடுவதுண்டு. உலகின் போக்கையே திசை திருப்பி விடுவதுமுண்டு. ஆனால் இந்த ஒப்பந்தங்கள் ஒரு தலைப்பட்சமாக ஒரு தரப்பால் மீறப்படும் போது மீறும் தரப்புக்கு உடனடியாகச் சில சாதகமான பலாபலன்களை வழங்கினாலும் கூட நீண்டகால நோக்கில் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

### ஸ்டாலின் ஹிட்லர் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம்

இரண்டாவது உலகப் போரின் ஆரம்ப கட்டத்தில் சோவியத் யூனியன் அதிபர் யோசேப் ஸ்டாலினுக்கும் ஜேர்மனிய அதிபர் ஹிட்லருக்குமிடையே ஒரு தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு முன்னேறிய ஜேர்மன் படைகள் வால்கா நதியின் மேலுள்ள சோவியத் பிரதேசங்களைக் கைப்பற்றியதுடன் லெனின் கிராட், ஸ்டாலின்கிராட், மொஸ்கோ ஆகிய நகரங்களையும் முற்றுகையிட்டன. தங்கள் மண்ணைப் பாதுகாக்க சோவியத் மக்கள் நடத்திய போரில் 2 கோடி உயிர்கள் பலி கொள்ளப்பட்டன. ஒப்பந்தம் மீறப்பட்ட சில மாதங்கள் ஹிட்லருக்குச் சாதகமாகவே அமைந்தன. ஆனால் 18 மாதங்களில் முற்றுகை உடைக்கப்பட்டது மட்டுமன்றி ஜேர்மன் படைகள் பேரழிவுடன் தலைநகர் பேர்லின் வரையில் துரத்தியடிக்கப்பட்டன. ஹிட்லர் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டான். ஜேர்மனி இரண்டாப் பிரிக்கப்பட்டு கிழக்கு, சோவியத் சார்பு அதிகாரத்தின் கீழும் மேற்கு, நேசநாடுகளின் கண்காணிப்பின் கீழும் கொண்டு வரப்பட்டன.

ஒரு ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமாக மீறப்பட்டதன் பாதகமான விளைவுகளை ஜேர்மன் தேசமும் அதன் அதிபர் ஹிட்லரும் பேரழிவாக அனுபவித்தனர்.

வரலாறு முழுவதுமே இப்படியான பாடங்கள் ஏராளம் இருந்தபோதும் பல ஆட்சியாளர்கள் அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதில்லை.

### சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இதுவரை மூன்று ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. முதலாவது சிறிமா - சாஸ்திரி உடன்பாடு. இது அட்சரப் பிசகின்றி அமுல்படுத்தப்பட்டு மலையக மக்களைப் பெரும் அவலத்தில் தள்ளியதை நாமறிவோம்.

இரண்டாவது 1974 இல் கச்சதீவு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சிறிமா - இந்திராகாந்தி ஒப்பந்தம். அதன் மூலம் சில நிபந்தனைகளுடன் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாக்கப்பட்டது.

### சிறிமா- இந்திராகாந்தி ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தத்தின் படி கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்ட போதிலும் அங்கு இந்திய மீனவர்கள் ஓய்வெடுக்கவும் வலைகாயப்போடவும் அதன் எல்லைகளில் மீன்பிடிக்கவும் அனுமதி உண்டு. ஆரம்பத்தில் அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டும் வந்தது. பின்பு போர் காரணமாக இந்திய மீனவர்கள் கச்சதீவில் இறங்குவது இலங்கைக் கடற்படையால் தடுக்கப்பட்டது. அது மட்டுமன்றி அந்தக் கடல் பகுதியில் ஏராளமான தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் தாக்கிப் படுகாயப்படுத்தப்பட்டனர். பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள், மீன்கள் என்பன கொள்ளையிடப்பட்டன. அல்லது சேதமாக்கப்பட்டன. அப்போதெல்லாம் அவற்றை இலங்கை அரசு மறுத்து வந்தது. போர் முடிந்த பின்பும் இதேநிலை தொடர்வதுடன் இந்திய மீனவர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

இது தொடர்பாக நாகபட்டினம், இராமநாதபுரம், கோடிக்கரை மீனவர்கள் பெரும் போராட்டங்களை நடத்தினர். இன்னும் இராமநாதபுரம் மீனவர்களின் போராட்டம் இரு வாரங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் இலங்கை அரசோ, இந்திய மத்திய அரசோ இந்தப் போராட்டங்கள் தொடர்பாக அக்கறை காட்டுவதில்லை. இந்திய மத்திய அரசு பொய்வாக்குறுதிகளை வழங்கி தமிழக மீனவர்களை ஏமாற்ற முனைகிறது.

மத்திய அரசு சிறிமா- இந்திரா காந்தி ஒப்பந்தத்தில் உள்ள இந்திய மீனவர்கள் கச்சதீவைப் பயன்படுத்துவது தொடர்பான நிபந்தனையை அமுல்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசுக்கு எவ்வித அழுத்தமும் கொடுப்பது கிடையாது. அதைப் பற்றிப் பேசுவது கூட இல்லை. ஆனால் இலங்கையின் அரச படைகளோ தொடர்ந்து இந்திய மீனவர்களை வேட்டையாடி வருகிறது. இப்படியான ஒரு நிலையில் தான் தமிழகச் சட்டசபையில் கச்சதீவை இந்தியா மீளப் பெற வேண்டும் எனத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராமால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசில் ஆளுந்தரப்பான காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துள்ளனர்.

இது இந்தியாவின் ஒரு மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டாலும் ஒரு மாநில மக்களின் ஒட்டுமொத்தமான குரல் என்ற வகையில் இது இந்திய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை வெறும் மறுத்து விட முடியாது. இது இந்திய மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் பல நெருக்கடிகளை ஏற்படுத்தவதைத் தவிர்த்து விட முடியாது. இது இரு நாடுகளுக்கிடையேயான ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஒரு நேர்மையான நிலைப்பாட்டை இலங்கை எடுக்கத் தவறியமையால் கிடைத்த விளைபலனாகும்.

இந்தத் தீர்மானம் தொடர்பாக இந்திய மத்திய அரசு வழமைபோலவே உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கப் போவதில்லை என்பது உண்மை. ஆனால் இன்று தமிழகத்தில் நிலவும் சூழல் இதை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றல் என்ற எல்லையுடன் மட்டுப்பட அனுமதிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

ஞாயிறு காரம்

இப்போது அங்கு இடம்பெறும் மாணவர் போராட்டங்கள், மீனவர்கள் போராட்டங்கள், திரைப்படத்துறையினர் போராட்டங்கள், வழக்கறிஞர்கள் போராட்டம் என்பன மேலும் விஸ்வரூபம் எடுத்து இந்தத் தீர்மானத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் நிலைமையே ஏற்படும். இது இந்திய அரசைத் தனது மௌனம் காக்கும் வழிமுறையிலிருந்து இறங்கி வர நிர்ப்பந்திக்கும் ஒரு நிலைமையையே உருவாக்கும். இது இலங்கை தொடர்பாக இந்தியா கையாளும் விட்டுக் கொடுத்துக் கட்டிப்பிடிக்கும் ராஜதந்திரம் பயனற்றுப் போகும் நிலைமைக்கே முகம் கொடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தும்.

### ராஜீவ்காந்தி- ஜே.ஆர். ஒப்பந்தம்

மூன்றாவது 1987 இல் கைச்சாத்தான ராஜீவ்காந்தி- ஜே.ஆர். ஒப்பந்தம். இதன் அடிப்படையிலேயே அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போதே 13 ஆவது திருத்தச் சட்டம் வெறும் எலும்புக்கூடாக மாற்றப்பட்டுவிட்டது. வடக்கு, கிழக்கு பிரிப்பு, பொது நிர்வாக பொலிஸ் அதிகாரங்கள் பறிப்பு, திவிநெகும சட்ட மூலம் என்பனவற்றின் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டம் அர்த்தமிழக்க வைக்கப்பட்டது. இந்திய மத்திய அரசு அதுபற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை. மாறாக இலங்கை அரசை அது சர்வதேச அரங்கில் நெருக்கடிகளைச் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை காப்பாற்றியே வந்துள்ளது.

மத்திய அரசின் இந்த நிலைப்பாட்டை மாற்றக் கோரி தமிழகமெங்கும் பெரும் போராட்டங்கள் வெடித்தன. அரசை விட்டு தி.மு.க. வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இன்று தமிழகமெங்கும் போராட்டங்கள் வெடித்துவிட்டன. மாணவர் போராட்டங்கள் ஏனைய மாவட்டங்களிலும் பரவும் அறிகுறிகளும் தென்படுகின்றன. இலங்கையின் போர்க் குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை, தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு எனப் போராட்டங்கள் இன்னொரு பரிமாணத்தை எட்டிவிட்டன.

அதேவேளை இலங்கையில் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை தமிழக சட்டசபையும் நிறைவேற்றியுள்ளது. மேலும் காங்கிரஸ் தலைமையிலான புதுச்சேரி சட்டசபையின் தலைவர் கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக் கூடாது எனக் கோரியுள்ளார்.

இப்படியாக ஜே.ஆர்.- ராஜீவ் ஒப்பந்தத்துக்கு விரோதமான முறையில் இலங்கை செயற்பட்டமையும் அதற்கு இந்தியா பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியமையும் இந்திய மத்திய அரசைப் புதிய நெருக்கடிகளுக்குள் தள்ளியுள்ளன.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான ஒரு நேர்மையான நிலையான தீர்வு என்ற கோரிக்கை புறந்தள்ளப்பட்ட நிலையில் தமிழகம் தமிழீழம் என்ற கட்டத்துக்கு வந்து விட்டது.

### ஒப்பந்தங்கள் மீறப்பட்டமையின் பாதிப்புக்கள்

இதேவேளை இன்னொரு புறம் இலங்கை சந்திக்கும் நெருக்கடிகளைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. முதலாவதாக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்காக ஜி.பி.எஸ். பிளஸ் வரிச் சலுகையை நிறுத்தி விட்டது. இதன் காரணமாக முப்பதுக்கு மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கின்றனர். பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளை மாற்ற ஆரம்பித்துவிட்டனர். ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த வருடமும் இந்த வருடமும் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் இந்தியாவால் வலுவிழக்கச் செய்யப்பட்ட போதிலும் அதன் தாக்கத்தைச் சாதாரணமாக எடுத்துவிட முடியாது. இலங்கை சர்வதேச அரங்கில் அவமானப்பட்டு நிற்கின்றது. ஜெனிவாத் தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றாவிடில் அடுத்த கட்டம் பற்றி யோசிக்கப்படும் என அமெரிக்கா மிரட்டுமளவுக்கு இலங்கை இக்கட்டுக்குள் மாட்டுப்பட்டுப் போய் நிற்கிறது.

அடிப்படையில் சிறிமா- இந்திராகாந்தி ஒப்பந்தம், ஜே.ஆர்.- ராஜீவ்காந்தி ஒப்பந்தம் என இரு உடன்படிக்கைகளுமே நேர்மையான முறையில் இலங்கையால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தியாவும் அந்த கபடத்தனத்துக்கு எல்லாவித உதவிகளையும் வழங்கியது.

அதன் பயன் இன்று இரு நாடுகளுமே அம்பலப்பட்டு தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் மீள முடியாத நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு விட்டன. அதன் பாதிப்பு நிச்சயமாக சாதாரணமானதொன்றாக இருக்கப் போவதில்லை. சர்வதேச அளவில் இணக்கப்பாடு காணப்பட்ட ஒப்பந்தங்களை மீறுவதில் இலங்கை ஆட்சியாளர்களின் இன்னுமொரு அநாகரிக உதாரணத்தை இங்கு குறிப்பிடாமல் விட முடியாது.

லண்டன் பி.பி.சியின் தமிழோசை, ஒப்பந்த அடிப்படையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒலி பரப்பப்பட்டு வந்தது. ஏற்கனவே அதில் குழப்பங்களை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் மேற்கொண்டபடியால் அது இடைநிறுத்தப்பட்டது. பின்பு சில மாதங்களின் பின் தேசிய சேவையில் தமிழோசை ஒலிபரப்பு அஞ்சல் செய்யப்பட்டது. மீண்டும் அதற்குள் தேசிய சேவையை உட்புகுத்தி தமிழோசையில் அவை ஒலிபரப்பப்படுவது போன்ற ஒரு மாயை ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் கபடத்தனத்தைத் தமிழோசை அம்பலப்படுத்தியது மட்டுமன்றி தமது சேவையை அஞ்சல் செய்வதையும் நிறுத்தி விட்டது. இப்படி ஒரு அவமானம் தேவையா? ஒப்பந்தங்களை மதிக்காமை இலங்கை ஆட்சியாளர்களின் அரசியல் பாரம்பரியமாக இருக்கலாம்.

ஆனால் அதன் விலையாக அவமானங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இலங்கை மக்களின் கௌரவம் காற்றில் பறக்க விடப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பணியுமாம் என்றும் பெருமை

த.அஜந்தகுமார்

தமிழுக்கும் அதன் உயிர்ப்புக்கும் பாடுபட்ட பல அறிஞர்கள் இன்று இல்லை. ஆனால் அவர்களின் பணிகளால் தமிழ் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது. அவர்களும் தமிழோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஈழம் தந்த அறிஞர்களில் பேராசிரியர் கா.சிவத்தம்பியை யாரும் அறியாமல் இருக்க முடியாது.

2004-2008 காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் தமிழைச் சிறப்புக் கலையாகப் பயின்று கொண்டிருந்த போது நான் படிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களில் முதன்மையானவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

அவரை ஒருமுறையாது காணவேண்டும் - கதைக்க வேண்டும் என்பது என் ஆசையாக இருந்தது. நாவலர் கலாசார மண்டபத்தில் சினிமாவும் பண்பாடும் எனும் தலைப்பிலே உரையாற்றுவதற்காக அவர் வந்திருந்தார். காரிலே இருந்து இறங்கிய அவரைத் 'தெய்வ தரிசனம்' செய்ததாய் மகிழ்ந்தேன். அவரது உரையில் - அவரது ஒவ்வொரு வார்த்தையும் என் மனக்கதவைத் தட்டி புளகாங்கிதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

2009 ஆம் ஆண்டு தங்கையின் திருமணத்துக்காக கொழும்பு சென்றபோது கொழும்பில் நான் காண நினைத்த முதல் மனிதர் அவராகத்தான் இருந்தார்.

அவரது எழுத்து நடையில் எனக்குத் தனிப் பிரியம் இருந்தது. சிலர் அவரது வசன நடையைக் குழப்பம் மிகுந்ததாக இனங்கண்டு விமர்சிக்கிறார்கள். ஆனால் அவரது வார்த்தைகளின் கம்பீரம் எப்போதுமே புதுப்பரவசத்தைத் தருவது. நல்லதொரு ஆய்வாளனுக்கான மௌனங்களையும் முடிச்சுக்களையும் புது ஆய்வுக்கான கதவுகளையும் அவரது கட்டுரைகள் எப்போதுமே கொண்டிருக்கும்.

எனது கவிதைத் தொகுதிக்கான அணிந்துரையினை அவரிடம் வாங்கவேண்டும் என ஆசைப்பட்டிருந்தேன். அது கனவாகவே போய்விட்டது.

நானும் நண்பர் நடராஜா சுஜீவனும் வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டுக்குச் செல்லத் தயாரானோம். ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன் மூலமாக அவரது தொலைபேசி இலக்கத்தைப் பெற்று உரையாடினேன். சந்திக்க விரும்புவதாகச் சொன்னேன். யாரென்றே தெரியாத என்னைச் சந்திக்கச் சம்மதித்தார். முகவரி சொன்னார்.

நாங்கள் முகவரியைத் தவறாக விளங்கி அலைந்தோம். தொடர்பு கொண்டு கேட்ட போது மிக நிதானமாக வழி சொன்னார். அவரது வீட்டுக்குள் ஒரு பயபக்தியுடன் நுழைந்தேன்.

அவர் மடியில் தொலைபேசியுடன் அமர்ந்திருந்தார். 'வாங்கோ தம்பி' என்று வரவேற்று இருத்தினார். என்னை நான் அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

தமிழ்த்துறை மாணவன் என்ற அறிமுகமே எங்கள் உரையாடலுக்குப் போதுமாக இருந்தது. துணைவேந்தராக இருந்த அமரர் பேராசிரியர் துரைராஜாவின் வீட்டுக்கு அருகில் இருக்கிறேன் என்பது என் இருப்பிட அறிமுகமாக இருந்தது. பேராசிரியர் துரைராஜாவின் எளிமை - அறிவு என்பன பற்றி சிலாகித்துப் பேசினார். தனது இந்த நிலைக்கு 'சந்திரமுருகன்' தான் காரணம் என்றார்.

அப்போது யாரோ அவரைத் தொலைபேசியில் அழைத்து ஆங்கிலச் சொல் ஒன்றுக்கான தமிழ் விளக்கத்தை வினாவினார்கள். அந்தத் துறையில் அவரது பங்களிப்பும் அப்போது உடனடி ஞாபகத்துக்கு வந்தது. இன்றைக்கு அவர் இல்லை. அந்தத் தேவை நிரப்பப்பட முடியாத வெற்றிடமாகவே இருக்கின்றது. 'திசை' இதழின் சிறுகதைகளைப் பற்றி ஆய்வு செய்துள்ளேன் என்று கூறினேன். நல்லது நல்லது இன்னும் ஆய்வுகள் செய்யுங்கள் என்றார்.

'இப்ப வாற சிறுகதைகளைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் தெரியவில்லை. கொஞ்சம் சொல்லு தம்பி' என்றார்.


நான் விக்கித்துப் போய்விட்டேன். தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் - வளர்ச்சியும் என்ற நூலை எழுதிய, உயிர்ப்புகள் தொகுதியிலே காத்திரமான பின்னுரை ஒன்றினை எழுதி எண்பதுகளின் பின்னான சிறுகதைப் போக்கினைச் சிலாகித்தும் விமர்சித்தும் இருந்த பேராசிரியரின் கேள்வி எனக்குச் சாதாரணமாக இருக்கவில்லை. எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமே வரவில்லை. வாயில் வந்த சிலவற்றை மட்டுமே என்னால் சொல்ல முடிந்தது.

அறியாததை அறிந்ததாய்க் காட்டும் அறிஞர்கள் மத்தியில் எழுத்தாளர்கள் மத்தியில் பேருருவாய் அவர் தோன்றினார். பார்வைக் கோளாறுகள் மத்தியிலும் 'அறிதொறும் அறியாமை' காணுகின்ற அவரின் புலமை நலன் இன்றுவரை எனக்கு வியப்பினையே அளிக்கின்றது. இன்று அவர் இல்லை. ஆனால் அவரின் எழுத்துக்கள் ஆய்வுப் பாதையை நோக்கி எம்மை வழிப்படுத்திய படியே இருக்கின்றன.



**அறியாததை அறிந்ததாய்க் காட்டும் அறிஞர்கள் மத்தியில் எழுத்தாளர்கள் மத்தியில் பேருருவாய் தோன்றியவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி. பார்வைக் கோளாறுகள் மத்தியிலும் 'அறிதொறும் அறியாமை' காணுகின்ற அவரின் புலமை நலன் இன்றுவரை வியப்பினையே அளிக்கின்றது. இன்று அவர் இல்லை. ஆனால் அவரின் எழுத்துக்கள் ஆய்வுப் பாதையை நோக்கி எம்மை வழிப்படுத்தியபடியே இருக்கின்றன.**

## கடவுளிடம் பேசுகிறேன்...



கடவுளிடம் பேசுகிறேன் நான்
நடந்து முடிந்தவை பற்றியும்
பற்றியெரிகிற நாள்களில்
மேசையில் விருந்துண்டு கைகுலுக்கி
முடிந்து முறிந்துபோன நாள்களிலெல்லாம்
கடவுளின் ஆசீர்வாதம் எட்டவுமில்லை
கைவிடப்பட்ட கருணைவெளியில்
புல்மீது நடந்த கணம்
நீயே என் மீது இரக்கமில்லாது
பாடுகிறாய் சபித்து
மோசமான படுமோசமான தீயில் எரிக்கிறாய்
என்னுயிர்ச் சிலுவையை
சாத்தான்கள் திரியும் வீதியில் புலம்பும்
காணாமற் போனோரின் கண்ணீரின் முகங்கள்
எல்லாப் புதல்வர்களும் நீளும் வாளுடன்
கருணையை [illegible]
அதில் நேரமிருக்காது மன்னிப்புமிருக்காது

ஆரம்பம் அதுவாகவே இருக்கும்
ஆளும் நாளில் புலம்பும் சொல்லொன்றும் வேண்டாம்
அழைப்பு அன்பானதாக இருக்கட்டும்
தெருநீளம் காவித்திரியும் மனதில்
உறக்கமற்ற வல்லவர்கள் உறங்கட்டும்
நியாயமில்லாதவர்கள் பரலோகத்திலும் வாழ்வதாக
இருக்க வேண்டாம்
வஞ்சிக்கப்பட்ட வாழ்வு வதைபடவும் வேண்டாம்
எனவே நான் கடவுளிடம் பேசுகிறேன்
இரங்கப்பேசுகிறேன்
நடந்து முடிந்தவை எதையும் மறக்கும் போக்கு
வேண்டாம்
இருள் மரணம் சபித்த திருநாட்டில்
பிரமாண்டமாய் வளருவதென்ன ஒப்பாரிகள்
இடர்பட்டு இரத்த ஆறு ஓட
மூச்சுருண்டு மண்ணி விழுவதென்ன
நான் பேசுகிறேன் கடவுளிடம்

- சத்தியமலரவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியுறவின் பெய

செந்தூரி

'மாணவர்களே நீங்கள் ஏன் அரசியல் செய்கிறீர்கள், நாங்கள் எப்போது படித்திருக்கின்றோமா?" வேகமான தொழில்நுட்ப உலகினால் பொய்யாக்கப்பட்ட இந்த நகைத் துணுக்குக்கான தற்கால பிரயோகப் புள்ளியாக, 'லேர்வின் சில்வா', 'அழகிரி' போன்ற சிலரே இன்னமும் எச்சம். மக்கள் பிரதிநிதிகளாக கோடு காட்டப்படுகின்ற அரசியல்வாதிகளின், கல்வியறிவு தொடர்பில் நூற்றாண்டுகளை கடந்த விவாதங்கள் இருக்கின்ற போதிலும், பொருளாதார மேதை மன்மோகன் சிங்கினை விட மதிப்பும், மரியாதையும், மூன்றாம் வகுப்பே படித்த கர்மவீரர் காமராஜரிடம் மக்களால் வைக்கப்படுகின்றது! நாடு கடந்து படித்த ஒபாமாவை விட, தெருவிளக்கில் படித்த லிங்கனுக்கு இன்னும் அமெரிக்கா தலை வணங்குகின்றது.! ஆச்சாரம் மிக்க சுப்பிரமணிய சுவாமிக்கு கிடைப்பதிலும் நூற்று மடங்கு மேலதிகமான பக்தி கலந்த மரியாதை, வாரமொருமுறை கூட குளிக்க மறுக்கும் ஈ.வே.ரா பெரியாருக்கு கொடுக்கப்படுகின்றது.! மழிக்கப்பட்ட முகமும், சட்ட வரம்புக்குள் மாற்றமும் கொண்டு வந்த மாவோ சேதுங்கை விட, பரட்டைத் தலையும், வருடத் தாடியும்- பரந்த புரட்சியும் கொண்ட 'சே' வை இன்னமும் நினைவில் வைத்திருக்கிறது உலகு! 'அது ஒரு உளக் கிளர்ச்சியின் வெளிப்பாடு' என்று வரம்பு கட்டிவிட முடியாத வெகுஜன விருப்பம் காரணமாக, மக்களால் கொண்டாடப்படுபவர்களாக அரசியல் வாதிகள் இருந்த காலம், விரைந்தோடும் அறிவுப் புரட்சிக்குரிய சகாப்தங்களில் மாற்றத்தினை சந்திப்பது தவிர்க்க முடியாதது.

மேற்கத்தைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், கீழைத்தேய நாடுகள் இன்னமும் தமக்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையில், கண்மூடித்தனமான கொள்கைகளை பின்பற்றுபவர்களாகவே இருந்து வருகின்றனர். 'வாரிசு அரசியல்', 'கதாநாயக விம்பம்', 'கவர்ச்சிகரமான பேச்சாற்றல்' போன்ற தூர நோக்கில்லாத தகுதிகள் காரணமாக, மீள முடியாத ஜனநாயகத்தின் பெயரிலான சர்வாதிகாரத்துக்குள் சிக்கிக் கொள்வது, ஆசியக் கண்டத்து நாடுகளுக்கு அத்துப்படி! அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னுள்ள பிரச்சார காலங்களில் சூடு கிளப்பும், 'வேட்பாளர் விவாதங்கள்' போன்ற பகிரங்கப்படுத்தப்பட்ட ஜனநாயக முறைகளின் மீதான ஆர்வம் குறைந்த பட்சமேனும் ஏற்படுத்தப்படாத பிறப்புரிமையியல் வாக்காளர்களையே இந்த நாடுகளில் காணலாம்.

போராட்டங்களின் விளைவில் வெற்றியை விளைவாக்குவதைவிட மாற்றம் ஒன்றினை சம்பாதித்துக் கொள்வதில் அக்கறையுடையவர்களாக முக்காலங்களிலும் திகழும் சக்தி மாணவர்களுக்கு உண்டு. ஒருங்கிணைக்கப்படுவதற்கான காரணங்களில் இருக்கும் 'நியாயத்தன்மையின்' வீரியத்துக்கு ஏற்ப காலங்களை வென்று வரலாறுகளில் வாழும் இருப்பு, கடந்து போன பல உலக தேசங்களின் நேற்றைய நாள்களின் சாட்சி! நான்காண்டுகளை அண்மித்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழனின், இந்த நூற்றாண்டுக்கான சோகத்துக்கு, ஆண்டுத் திவசம் கொண்டாட வந்து அகிலவுலக நாடுகள் ஆண்டுக்கொருமுறை கூடி அழுது கலைந்து போகின்றன. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சுயலாபத்துக்காக பிரேரிக்கப்படும் தீர்மானத்தின் இடையிடையே நிறமூட்டப்பட்ட 'இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள்' பாதிக்கப்பட்ட ஈழத்தமிழனுக்கு மாத்திரையளவு தீர்வேனும் கொடுத்து விடாத நிகழ்வுகளே கடந்த வருடங்களிலும் சரி, இந்த வருடமும் சரி ஐக்கிய நாடுகள் பெருமன்றத்தில் நிகழ்த்தப்பட்டன. இந்து சமுத்திர பிராந்தியத்துக்குட்பட்ட சிறு தீவொன்றில் கண்டு கொள்ளப்படாத கொலைகளுக்கு, நான்கு வருடங்கள் கழித்து நீதி தேடி நடத்தப்படும் போராட்டங்களின் மீது, பாதிப்புக்குள்ளான நேரடித் தரப்பான ஈழத்தமிழர்களோ, புலம்பெயர் தமிழர்களோ வைத்திருக்கும் 'விடிவு நோக்கியதான நம்பிக்கைகளுக்கு மீள உயிர் கொடுத்த தமிழகத்தின் 15 நாள்கள் இலகுவில் மறக்கப்பட முடியாதவை.

குறிப்பாக, பின்னணியெதுவுமில்லாத இன உணர்வுடன், நீதி விசாரணைகளுக்கான நெறிகளை தெரிவு செய்வதற்காக உலகின் கவனத்தை ஈர்த்த விதம் 2013 ஆம் ஆண்டுக்கான ஜெனிவா தீர்மானத்தின் சம நாள்களில் வெகுவாக பேசப்படும் செய்தியாக மாற்றம் பெற்றது. "மதிப்பீடுகள் (EVALUATION), செயன் முறையாக்கலின் இறுதியில் மட்டுமே நிகழ்த்தப்படுமாயின், அவை பிரேத பரிசோதனைகளுக்கே ஒப்பிடக் கூடியவை." சோதனைக்குள்ளாக்கப்படும் நிகழ்வுக்கு எந்த விதப் பயனையும் தருபவையாக, அம் மதிப்பீடுகள் தொழிற்பட முடியாது. ஆனால் இறந்த உடல்ஒன்றில் நிகழ்த்தப்படும் பரீட்சித்தல்களின் மூலமான கண்டுபிடிப்புகள் - அவதானங்கள் - தவறுகள் யாவையும் திரட்டப்படுகின்ற 'முடிவுகள்' வாழுகின்ற உடல்களின் முற்பாதுகாப்புக்கு பயன் மீதுற உதவும் என்ற உண்மை மறுக்கப்பட முடியாததே! யாராலும் தூண்டப்படாமல், எந்தவொரு சுயலாப அரசியல் பற்றும் கலக்காமல், மாணவர் தமிழகம், தன்னைத் தானே மதிப்பீடு செய்து கொண்ட போராட்ட நாள்களின் பங்களிப்பு சம நாள்களில் ஏற்படுத்திய தாக்கங்களை விட, எதிர் காலங்களில் கொண்டு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்ற மாற்றங்கள் மிகவும் புதுமையானவை. பொது வாழ்வில்-சக மனித நேசமும் கலந்த தமிழகத்தில் வாழும் அறிவு ஜீவிகள் சிலரின், தொலைக்காட்சி நேர்காணல்களிலிருந்து துண்டாக்கப்பட்ட வார்த்தைகள், தமிழக மாணவர்களின் 'தான்தோன்றி எழுச்சி' உலகத் தமிழனின் உறுதியான விடிவுக்கான திறவுகோலாக செதுக்கப்பட்ட விதம் பற்றி விவரிப்பதைக் காண லாம். ஐக்கியநாடுகளின் -மனிதவுரிமைப் பேரவையின் இந்த ஆண்டுக்கான கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், 'இலங்கையின் மீதான தீர்மானம்- இனப்படுகொலை, போர்க்குற்றம், பன்னாட்டு விசாரணை, தனித்தேசத்துக்கான வாக்கெடுப்பு போன்ற விடயங்களையும் உள்ளடக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் கோரிக்கைகளை பின்னியதாக, நேற்றைய எடுத்துக்காட்டுகளையும், நாளைய எதிர்வு கூறல்களையும் ஆதாரங்க ளோடு விவாதித்த தனியார் தொலைக் காட்சி நிகழ்வொன்றிலிருந்து பிரதி யெடுக்கப்பட்ட பதிவுகள் இவை.

**"தேசமொன்றின் உள்நாட்டுக் கொள் கைகளின் நீட்சியே, வெளியுறவுக் கொள்கைகளாக பரிண மிக்கின்றன. உள்நாட்டு மக்களின் ஆணை மூலமாகவே ஒருநாடு தனது அண்டை நாடுக ளுடனான வெளியுறவுக் கொள்கை களை தீர்மானிக்க முடிகின்ற போது, வெளியுறவுக் கொள்கைகள் என்ற வார்த்தையிடல் மூலம் வெளிப்படுத் தப்படுபவை அந்த நாட்டுக்குரிய மக் களின் விருப்பு வெறுப்புக்களேயாகும்.**

**இந்தியா தனது வெளியுறவுக் கொள்கை என்ற விடயத்தில் தனது ஆள்கைக்குட்பட்ட தமிழக மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்க மறுப்பதாயின் 'இந்திய இறையாண்மை'' என்றொரு விடயம் ஏன் இன்னமும் இருக்க வேண்டும்? 'அண்டை நாடுக ளுடன் பலமான உறவொன்றை பேண வேண்டும்' , எனும் முடிவில் இந்திய கொள்கை வகுப்பாளர்களும், ஆட்சியா ளர்களும் இறுக்கமாக இருக்க விரும்புவ தாயின் சகல அண்டை நாடுகளுடனும் அதே விதமாக இருக்கத் தயாராக விருக்கின்றார்களா இந்திய மக்கள்? பாகிஸ்தான் என்ற தேசம் இலங்கையை விட நெருக்கமான இந்தியாவின் அண்டை நாடு, நிலப்பாகத்தினால் எல்லையிடப் படுகிறது. இலங்கையைப் போல் இடையில் கடல் இல்லை! மேலும் இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற தொரு தேசம். ஆனால் காஷ்மீர் பிரச் சினை என்று வரும்போது மட்டும், பாகிஸ் தான் எம் அண்டை நாடு? என்று பாசம் பாராட்டும் உரிமை ஏன் இல்லை உங் களிடம்?**

**காரணம் பாகிஸ்தானோடு [illegible] தால், [illegible] வேண்டிய காஷ்மீரின் நிலவுரிமையினை விட மதிப்புக் குறைந்தவையாக தெரிகின்ற ஈழத்தமிழனின் லட்சோபலட்சம் உயிர்கள், இலங்கை விடயத்தில் மட் டும் 'நேச நாடுகள்' என்ற வார்த்தைக ளால், சுயநலம் பேணப்படுகின்றமையே!''** என்று, வடக்குக்கும், தெற்குக்கும் இரட்டை வேடமிடுகின்ற இந்திய அயலுறவுக் கொள்கைகளை கேள்விக் குள்ளாக்கியவர் காந்திய மக்கள் இயக்க தலைவரும், தலைசிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான "தமிழருவி மணியன்".

**"ஆனால் இன்றைக்கு வெகுமக்கள் பொருளாதாரக் கொள்கையே, இந்திய அயலுறவுக் கொள்கையாக கொள்ளப் படுகின்றது. பொருளாதார நலன்களில், தமக்கான இலாபமீட்டலை அடிப்படையாகக் கொண்டு தமக்கான எல்லைகளை வரையறைப் படுத்துபவர் களே ஆட்சி பீடத்திலிருக்கின்றார்கள். தனியார் பன்னாட்டு மீனுற்பத்தி நிலையங்களுக்கு உரிமம் எழுதப்படுகின்ற இந்துமா கடலில், வயிற்று பிழைப்புத் தேடும் மீனவர்களை இலங்கையர்கள் கொன்று குவிப்பதும், இந்தியா கண் டும் கண்மூடியிருப்பதும் கூட கார்ப்ப ரேட் வியாபாரத்தின் ஓரங்கம் தான்.**

**இவர்களின் மும்முனை ஒப்பந்தங்களில் குறுக்கிடும் அன்றாடங் காய்ச்சிகளை உயிரிழப்புக்குள்ளாக்குவதில், நீடித்த பொருளாதார ஈட்டலை இலக்காகக் கொண்டு செயற்படும் இந்திய அரசு, தானே முன் வந்து அயல் தேச மக்களின் உயிரிழப்புகளுக்கு நீதி தேடும் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம்''** என்று நெற்றியில் விழுகின்ற நீள முடிகளை நீவிவிட்டபடி குமுறினார் சமூக ஆர்வலரும், மனித உரிமைப் போராளியுமான கவிஞர் "மனுஷ்ய புத்திரன்''

**பதவிகளுக்குப் பின்னால் கோஷ மிடுபவர்கள் மக்கள் என்ற நிலமை முற்றிலும் மாற்றப்பட வேண்டும். உள் நாட்டுப் பிரச்சினைகளில் புரிந்துணர்வுடையவர்களாகவும், வெளி நாட்டு தாக்கங்களில் ஆர்வமுடை யவர்களாகவும் மக்கள் மாற்றப் பட வேண்டும் என்ற விருப்பம் ஜனநாய கப் பேரறிவுடைய எல்லோருக்கும் எழ வேண்டும். இந்தியாவின் பெரும்பான் மையான மக்கள் கடந்த காலங்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிலான வேள்விகள்



களில் அவ்வாறான புரிதல்களின்றி இருந்த தன் பிரதிபலனே இன்றைவரைக்கும் பிராந்திய வல்லாதிக்கம் என்ற இலக்கு இந்தியாவுக்கு கிட்டாது போயிருக்கின் றது!''

''மக்கள் நலன் சார்ந்து இயங்கு கின்ற அரசியல் வாதிகளை டில்லி கொண்டிருக்கவில்லை. மாநிலங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்க ளால் வலுவூட்டப்படுகின்ற மத்திய அரசின் செயற்பாடுகள், அதே மக்க ளின் விருப்பத்துக்கு முற்றிலும் எதிர் மாறாக இருப்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். இன்றைக்கு ஈழத்தமிழர்களின் மீட்சிக்கான இன்னொரு புது வெளிச்சமாக, தமிழக மக்களின் ஒற்றுமை உலகுக்கு உணர்த்தப் பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பான்மை யினரான சிங்களவர்களால் சிறுபான்மை யினரான தமிழர்கள் ஒடுக்கப்படுவதை வேடிக்கை பார்க் கும் நிலையில் தமிழக மக்கள் இருப்பார்களாயின், நாளைக்கு மலேசியாவிலும், தென்னாபிரிக்காவி லும், ஏனைய நாடுகளிலும் சிறு பான்மை யினராக உள்ள தமிழக உறவு கள் ஒதுக்கப்படுவதையும், ஒதுங்கி நின்றே பார்க்க நேரிடும். பெற வேண் டிய நேரத்தில் குறி காட்டப்பட்டுள்ள இளைய சமூகத்தின் எழுச்சி மூலம், தமிழர்கள்- மத்திய இந்திய அரசுட னான நேரடியான போராட்டத்துக்கு தயாராகிவிட்டனர் எனும் செய்தியே இடித்துரைக் கப்படுகின்றது. தமிழகத் தில் மையம் கொண் டுள்ள மாணவர்க ளின் எழுச்சி, தமிழக மக்களின் போராட் டமாக பரிணமிக்கின்ற போதிலும் இன்ன மும் பெரிய வெற்றிகள் நம் வசமாகும்'' என்று மாணவர் போராட்டங்கள் அடுத்த தளங்களைப் பற்றி விவாதித்தார் எமக்கு நன்கு அறிமுகமான வரும், தமிழர் தேசிய இயக்கத் தலைவருமான தமிழுணர்வாளர் ''பழ நெடுமாறன்''

இறுதியாகப் பேசியவருக்கான அறிமுகம் கொஞ்சம் பெரிது. வேகமாக உணர்ச்சி வப்படும் ததும்பும் குரலில் வெண்ணிற முறுக்கு மீசை சூடிய கம்பீரத்தில் பேசிய ஈழத்தின் நெடுந்தீவில் பிறந்தவரும், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கு சொந்தமானவரும், பேராசி ரியர் கைலாசபதி அவர்களால் 'பொல் லாத முரடன் ஆனால் நல்ல கவிஞன்' என்று விமர்சிக்கப்படுபவருமான எம் மண்ணுக்குரிய மரபுக்குரிய எழுத் தாளர்.!

அறிமுகங்கள் யாவற்றிலும் பிரபல மானவராக எமக்கு நன்கு தெரிந்த தேசிய விருது வென்ற 'ஆடுகளம்' திரைப்ப டத்தின் பேட்டை க்காரனாக வீற்றி ருந்த கவிஞர் ''வ.ஐ.ச.ஜெயபாலன்.

''பல்தேசிய மக்களையுடைய இந் தியா போன்ற நாடுகளின் பொதுவு டமை என்றைக்கும் கேள்விக்குட்படுத் தப்படாத சமத்துவத்தில் பேணப்பட்டி ருக்க வேண்டும். ஆனால் அது நடப் பதாக இல்லை! இந்தியாவில் வாழும் இனங்களில் ஏனைய உலக நாடுகளி லும் செறிந்து வாழும் இயல்புடைய மக் கள். தமிழ் நாட்டுக்கும் மேற்கு வங்கத் துக்கும் சொந்தமானவர்களே! இவ்விரு மக்களையும், மாநிலங்களையும் ஏனைய மாநிலங்களின் உலக இயல்புகளோடு ஒப்பிட்டுக் கணித்துக் கொள்ள முடியாதளவு சர்வதேச செல் வாக்கு வாய்ந்தவர்கள்! உலக மயமாக் கலின் பிற்காலக் கொள்கைளின் படி வாங்காளிகள் + தமிழர்கள் என்ற இணைப்பு சாத்தியமாகும் பட்சத்தில் அதுவொரு உலக இணைப்பாக மாற் றம் பெறும். இன்றைக்கு மேற்குவங்க நலம்சார் அரசாக இயங்குகின்ற இந்திய அரசு அதேயளவு சம முக்கியத்துவ முடைய தமிழக மக்களின் கோரிக்கைக் கும் செவிசாய்ப்பதே உலகளவில் இந்தியாவின் நீடித்த வளர்ச்சிக்கு துணை செய்யும்!

இந்திராகாந்தி காலத்தில் கடைப் பிடிக்கப்பட்ட ''தமிழகத்தின் நலனே இந்தியாவின் நலன்'' போன்ற தென்ன கத்தவர்களுக்குச் சார்பான வாதங்கள் இன்றைக்கு முற்றிலும் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளன. அதிகாரத் தீர் மானங்கள் அதிகாரிகளால் செய்யப்படுகின்ற நிலைமை மாற்றம் பெற்று பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதி களின் ஏகோபித்த முடிவாக இறுதி செய்யப்படு கின்ற சோவியத் மாதிரிகள் பின்பற்றப்படுவதே எதிர் கால நலன்'' என்று முடித்தார். முரட்டுக் கவிஞர். இவ்வாதங்களை தவறவிட்ட யாழ்ப்பாணத் தின் 'கேபிள்' தொலைக் காட்சி நேயர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் மட்டுமே!

அறிஞர் பெருமக்களின் சங்கமத் தில், ''இந்திய கொள்கை வகுப்பாளர் கள், ஆட்சியாளர்கள் திருந்திக் கொள்ள வேண்டிய முறைகள்'' தொடரில் பெரிதும் விவாதிக்கப்பட்ட போதும், மாண வர் சக்தியின் மகத்தான எழுச்சிக்குப் போதுமான உடனடித் தீர்வு கிடைக்க வில்லை என்பதே. தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் பின்னான நிலைமை! ஆயினும் தமது கோரிக்கை களிலும்

> மேற்கத்தைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், கீழைத்தேய நாடுகள் இன்னமும் தமக்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையில் , கண்மூடித்தனமான கொள்கை களை பின்பற்றுபவர்களாகவே இருந்து வருகின்றனர். 'வாரிசு அரசியல்', 'கதாநாயக விம்பம்', 'கவர்ச்சிகரமான பேச்சாற்றல்' போன்ற தூர நோக்கில்லாத தகுதி கள் காரணமாக, மீள முடியாத ஜனநாயகத்தின் பெயரிலான சர்வாதிகாரத்துக்குள் சிக்கிக் கொள்வது, ஆசியக் கண்டத்து நாடுகளுக்கு அத்துப்படி! அமெ ரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னுள்ள பிரச்சார காலங்களில் சூடு கிளப்பும், 'வேட்பாளர் விவா தங்கள்' போன்ற பகிரங்கப்படுத் தப்பட்ட ஜனநாயக முறைகளின் மீதான ஆர்வம் குறைந்த பட்ச மேனும் ஏற்படுத்தப்படாத பிறப் புரிமையியல் வாக்காளர்களையே இந்த நாடுகளில் காணலாம்.

கொள்கைளிலும் உறுதியாக நிற்கின்ற மாணவ சமூகத்தின் 'அரசி யல் அறிவு'சார்-மீ திறன் வெளிப்பாடு, அமெரிக்க தீர்மானத்தின் வெற் றியை சிறிதளவேனும் கண்டு கொள்ளாமலும் கொண்டாடாமலும் அடுத்த கட்டத்துக் கான நகர்வுகளில் உறுதியாக நிற்பதன் மூலம் இந்திய அரசியல் வாதிகளுக்கு ஓங்கி அறைந்து புரியவைக்கப்பட்டுள் ளது.

''கூட்டணியிலிருந்து வெளிவந்த மறுநாளே, தி.மு.க. முக்கியஸ்தர் வீடு களுக்கு சி.பி.ஐ. அனுப்பி சோதனை செய்வித்த மத்திய அரசும்'', ''மாண வர் போராட்டம் உச்சத்தினை எட்டும் நிலையில், ஜெனிவாவில் இந்திய மாண வர் போராட்டங்கள் தாக்கம் செலுத்தும் பரபரப்புச் சூழலில்-தமிழகத்தின் 2013- 14 க்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்து ஊடகங்களை திசை திருப்பும் புண்ணிய காரியத்தை கச்சிதமாக முடித்து விட்ட மாநில அரசும்'' அந்தக் குழந்தைப் போராளிகளிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே காத்திருக்கின்றன. ''ஈழத்தில் சிந்திய இரத்தம்-எங்கள் இரத்தம், எங் கள் இரத்தம்'' பத்தாவது நாளில் நிற்கின்ற இந்தப் பதாகைகளில் மட்டுமல்லாது, அவர்களின் நம்பி க்கைகளிலும் தொங்கலாக முடிவடைய தொடர்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் கொடுத்த ஜெய்ப்பூருக்கு கை கொடுப்பார் யாரோ....?


■ நேர்கண்டவர்:- போசுதாஸ்.

மனிதன் தன் இயல்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வாழ்வியலில் சுதந்திரமான நிலையை அடைய உதவுவன தன்னம்பிக்கையும் ஆரோக்கியமான உடல் உறுப்புக்களுமேயாகும். உடல் உறுப்புகள் அனைத்தும் ஒருமித்து உழைப்பதன் மூலமே சிறப்பான மனிதவலு வெளிக்கொணரப்படுகிறது.

ஆனால் இன்று எமது மண்ணில் அவயவங்களை இழந்ததால் ஆயிரக் கணக்கானோர் வாழ்வை நகர்த்த முடியாது வேதனையுடன் மூலைக்குள் முடங்கிக் கிடக்கும் நிலை. இத்தகைய அவயவ இழப்புக்கள் என்பது இயற்கையாகவும் புறக்காரணிகளாலும் ஏற்படுகின்றன. இந்தப் புறக் காரணிகளில் போர்விளைவுகள், விபத்துக்கள் முதலிடம் வகிக்கின்றன.

இவ்வாறு அவயவங்களை இழந்து, மனமுடைந்து, சுதியற்றவர்களாக விரக்தியின் விளிம்பில் ஊசலாடும் வலுவிழந்தோருக்கு உறுதியான உள்ளமிருந்தால் ஊனம் ஒரு பொருட்டல்ல என்ற விழிப்புணர்வை ஊட்டி சராசரி மனிதனைப் போல இயல்பு நிலையைத் தோற்றுவித்து ஊன்றுகோலாகமாறி சேவையை 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றுகின்றது உன்னத மனிதநேய நிறுவனமாக யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.

இந்த நிறுவனத்தின் முதுகெலும்பாக ஆரம்ப காலமுதல் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் நிர்வாகத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி, பொருளாளர் திருமதி செ.தெய்வேந்திரன் ஆகியோருடனான கருத்துப் பகிர்வு இது.





கே:-காலத்தின் தேவையறிந்து சேவை செய்யும் நோக்கில் ஜெய்ப்பூர் நிறுவனம் அமையப்பெற உந்து சக்தியாக இருந்த காரணிகள் எவை?

ப:- 1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையாலும் வேறுபல காரணிகளாலும் அங்கவீனர்களாகி வலுவிழந்து செய்வதறியாது வீடுகளில் முடங்கியிருந்தோரை மாற்றுவலுவுள்ளோராக சமூகத்துடன் இணைந்து செயற்பட வகைசெய்ய வேண்டும் என்ற மனிதநேயமே ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தோற்றத்துக்கு அடிப்படை. அதேநேரத்தில் அந்த நாள்களில் கொழும்புக்குச் சென்று செயற்கை அவயவங்களைப் பொருத்துவதில் போக்குவரத்து, நிதி, மொழி, பாதுகாப்பு, காலவிரயம், தங்குமிடம், உள்ளிட்ட பல சிரமங்களும், இடர்ப்பாடுகளும் மக்களுக்கு இருந்தன. அப்பொழுது யாழ். அன்னையர் முன்னணியில் அங்கம் வகித்த சிலர், குறிப்பாக திருமதி லலிதா பூறுடி, திருமதி தேம்மா குணநாயகம், திருமதி சுற்றா மேதர், திருமதி நீனி யோகநாதன் போன்றோர் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் செயலர் திருமதி ஸ்வர்ணாபோடினின் உதவியோடு ஜெய்ப்பூர் நிறுவனத்தை ஆரம்பிக்க எடுத்த முயற்சிக்கு ''நொறாட்'' நிறுவனத்தின் பிரதிநிதி ஜோண் வெக்கிசன் அனுசரணை வழங்க முன் வந்தார். கோப்பாய் கோமான் கு.வன்னிய சிங்கத்தின் மனைவி வாடகைக்கு இந்தக் கட்டடத்தை தந்து உதவினார். (பின்னர் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளது) ஒரு முகாமையாளரையும், இருமாற்றுவலுவுடைய தொழில்நுட்ப உதவியாளர்களையும் கொழும்பு த்துய்சங்கமானநட்புறவுச் சங்கத்துக்கு அனுப்பி பயிற்றுவித்தோம். அருட் சகோதரி லூட்ஸின் முயற்சியாலும் கொழும்பு நட்புறச் சங்கம் யாழ்.கிளை என்ற பெயரில் 1987 இல் ஆரம்பித்து பின்னர் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயருடன் இயங்கிவருகிறது.

கே:- ஜெய்ப்பூர் நிறுவனம் மாற்றுவலுவுள்ளோருக்கு எவ்வகையான சேவைகளை வழங்கி வருகின்றது?

ப:-செயற்கை அவயவங்கள் பொருத்துதல், அவற்றைப் பழுது பார்த்தல், பிறப்பினாலும் போலியோ போன்ற பல்வேறு காரணங்களாலும் பாதிக்கப்படுகின்றவர்களுக்குத் தேவையான சாப்புறுப்புக்கள் தயாரித்தல், விசேட தேவையுடையோர் பயன்படுத்தும் சக்கரநாற்காலிகள், முச்சக்கரவண்டிகள், சக்கரஇருக்கைகள், நடைதாங்கிகள், ஊன்றுகோல்கள் என்பனவற்றை உற்பத்தி செய்தல், இயன் மருத்துவசேவைகள், சுயதொழில், கல்வி ஊக்குவிப்பு, உளவளத்துணை வழங்குதல் போன்றவற்றை ஜெய்ப்பூர் நிறுவனம் வழங்கி வருகிறது. மாற்றுத் திறனாளிகளின் வாழ்வை வளப்படுத்துவதே எமது குறிக்கோள்.

கே:- ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவை யாழ்ப்பாணத்துக்கு மட்டும் தானா?

ப:-அப்படியல்ல. ஆரம்பத்தில் யாழ்.குடாநாட்டுக்குள் மட்டுமே சேவையை வழங்கிய ஜெய்ப்பூர் நிறுவனம் இன்று வடபகுதியெங்கும் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. இறுதிப் போரின்போது அங்கவீனமடைந்த ஏராளமான மக்களுக்கு எமது உதவி தேவைப்படுகிறது. ஆயினும் அத்தகைய பலருக்கு ஜெய்ப்பூர் தொடர்பான செய்திகள் எட்டாதுள்ளன. கிராமங்களில் உள்ள அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் அத்தகைய தேவையுடையோருக்கு வழிகாட்ட வேண்டும். எமது செயற்கை அவயவத்தின் தரத்தை உணர்ந்தவர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சேவையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

கே:- செயற்கை அவயவங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா? அல்லது இங்கேயே உற்பத்தி செய்யப்படுகின்றனவா?

ப:- ஆரம்பகாலத்தில் பிரதான உபகரணங்களும் மூலப்பொருள்களும் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டாலும் தற்போது சில முக்கிய மூலப்பொருள்களைப் பெற்று முற்றிலுமாக இங்கேயே எமது தொழிற்சாலையில் நவீன முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆரம்பகாலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த அலுமினியம் தொழில்நுட்பசெயற்கை அவயவங்களுக்குப் பதிலாக 1996 ஆம் ஆண்டிலிருந்து நவீன தொழில்நுட்ப முறையில் உலகத் தரமுடைய செயற்கை அவயவங்கள் தயாரிக்கப்படுகின்றன. பயனாளிகளின் அங்க அளவுகள், பருமன், நிறம், எடை என்பவற்றுக்கு அமைய வடிவமைக்கப்பட்ட செயற்கை அவயங்களைப் பொருத்தி அவை இசைவாக்கம் பெறும்வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை பயனாளிகளின் வளர்ச்சி, செயற்பாட்டுத் தேய்மானங்களுக்கமைய மீண்டும் மீண்டும் புதிய அளவுகளில் தயாரித்து பொருத்தப்படுகிறது.

கே:- இத்தனை சேவைகளை செவ்வனே நிறைவேற்றும் பெரும்பணித்தொகுதி தங்களிடம் உள்ளதா?

ப:- சுமார் 30 இற்கும் மேற்பட்டோர் பணியாளர்களாக கடமை புரிகின்றனர். இவர்களில் அனேகமானவர்கள் ஜெய்ப்பூரின் பயனாளிகள் தான். தம்போன்ற சகோதரர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் உறுப்புக்களைத் தயாரிப்பதில் இவர்கள் நேர்த்தியுடன் ஈடுபடுகின்றனர். இவர்களில் பலர் வியட்நாம், எத்தியோப்பியா, இந்தியா போன்ற இடங்களில் பயிற்சி பெற்றவர்கள்.

கே:25 ஆண்டுகளில் ஜெய்ப்பூரால் பயனடைந்தோரின் புள்ளி விவரங்களைக் கூற முடியுமா?

ப:இதுவரை செயற்கை அவயவங்கள் 5812, சாப்புறுப்புக்கள் 2490 என்பன தயாரித்துப் பொருத்தப்பட்டுள்ளன. 5278 நடமாடும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவைதவிர இயன் மருத்துவ சேவைகள் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன், கல்வி ஊக்குவிப்பு என்பனவும் ஏராளமானோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கே:-வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஏற்படும் பெரியளவிலான செலவினத்தை எவ்வாறு சமாளிக்கிறீர்கள்?

ப:-எமக்குத் தேவையான நிதிவளங்களை சர்வதேச உள்ளூர் சமூகசேவை நிறுவனங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு பரோபகாரிகள் வழங்கினர். ஆரம்பகாலத்தில் நொறாட், றொட்டறிக்கழகம், லயன்ஸ் கழகம், ரீ.ஆர்.ஆர்.ஓ,ஐ.சி.ஆர்.சி. போன்ற நிறுவனங்கள் தேவைக்கேற்றவாறு உதவி வந்தன. போர்க் காலத்தில் ஐ.சி.ஆர்.சி. ஓ.எஸ்.சி.எவ்., ஐ.எம்.எச்.ஓ.,யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர். மற்றும் வெளிநாட்டு சமூக நிதி நிறுவனங்கள் வழங்கி வந்தன. சமூக சேவைகள் திணைக்களமும் உதவுகின்றது.

கே:- தற்போதைய நிலையில் தொடர்ந்தும் போதிய நிதிமூலங்கள் கிடைக்குமென நம்புகிறீர்களா?

ப:- அதுதான் இப்போது பெரும் சவாலாக உள்ளது. கடந்த பல வருடங்களாக எமக்கு உதவி வந்த பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து உதவ விரும்பினாலும் அவர்களுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக ஐ.சி.ஆர்.சி. தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளைப் படிப்படியாகக் குறைத்து தனது உதவிகளை 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முற்றாக நிறுத்த விருக்கின்றது. இது போன்ற இடர்களால் ஜெய்ப்பூர் நிறுவனத்தை நம்பியிருக்கும் பயனாளிகளும் எதிர்காலத்தில் சேவையை நாடி வருவோரும் ஏமாற்றத்தை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தான் ஏற்பட்டுள்ளது.

கே:-இந்தச் சவாலை சமாளிக்க வேறு வழிகள் இல்லையா?

ப:-இத்தனை வருடங்களாக இந்த மண்ணில் வலுவிழந்தோருக்கு ஆதாரமாக விளங்கிய இந்த நிறுவனத்தைப் பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும். தொடர்ந்தும் சேவையாற்றக்கூடிய செயற்திட்டங்கள் மனிதவளம்,நவீன தயாரிப்பு உபகரண வசதிகள் போன்றன எம்மிடம் இருந்தும் நிதிநிலைமைக் குறைவினால் செயற்பாடுகள் முடக்கமடையக் கூடும் இது மனிதநேய உணர்வுக்கு உகந்தல்ல. எனவே அரச அரசசார்பற்ற வெளிநாட்டு,உள்நாட்டு நிதி நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள், ஆலயங்கள் தாராள உதவியை வழங்கி ஜெய்ப்பூர் நிறுவனம் உயிர்ப்புடன் நீடித்து நிலைக்க உதவ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்



உடலமைப்பு ரீதியாகவும், உடற்றொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண்பெண் இரு பாலாரையும் ஒப்பிட்டுப்பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில், ஆண்கள் பெண்களைவிட கூடியவர்களாகவே உள்ளனர்.

அந்தக் காலத்தில் இருந்து இன்றுவரை பெண்ணியம் பற்றிய ஆய்வு நூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன. ஆண்கள் வேலை செய்பவர்களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதும், வீட்டுவேலைகளைக் கவனிப்பவள் என்ற ரீதியில் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது. கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. இன்று பெண்கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்லுகின்றனர். களத்தில் ஆண்களுக்குச் சரிக்குச் சமனாக நின்று எதிரியை எதிர்த்துச் சமராடுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும், வைத்திய நிபுணர்களாகவும், கட்டிட பொறியிலாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் வயலில் ஆண்களுடன் சேர்ந்து வேலையைப் பங்கு போட்டுச் செய்கின்றனர்.


உடலமைப்பு ரீதியாகவும், உடற்றொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண்பெண் இரு பாலாரையும் ஒப்பிட்டுப்பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில், ஆண்கள் பெண்களைவிட கூடியவர்களாகவே உள்ளனர். மேலும் பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகின்ற உடற்றொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் , மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை 2ஆம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இக்காரணங்கள் அனைத்தும் பெண்களின் பலவீனம் அல்ல. அவை பலம் என்று வாதிடும் காலம் வந்துவிட்டது.. இதற்குப் பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன.

ஹெலன் பிஸர் என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க மனித வர்க்கவியல் நிபுணர் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பெண் 21ஆம் நூற்றாண்டின் தலைவியாக வருவாளென்று எதிர்வு கூறுகின்றார். மேலும் அவர் தனது ஆய்வு நூலில் உளவியல் ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பல மடங்கு பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் தலைமைப்பதவியை வகிக்கத் தகுதிபெற்றவர்கள் என்றும் கூறுகின்றார். பெண்களின் தலை சிறிதாக இருப்பதனால் மூளையும் ஒப்பீட்டளவில் ஆண்களின் மூளையைவிட சிறிதாக உள்ளது. ஆனால் மூளையினுள் காணப்படுகின்ற நியூரோன்கள் எனப்படும் நரம்புக் கலங்களின் எண்ணிக்கை பெண்களில் கூடுதலாக உள்ளது. மேலும் ஆண்களின் குருதியில் ஈமோ குளோபினின் அளவு கூடுதலாகவும் பெண்களின் குருதியில் இமினோ குளோபினின் அளவு கூடுதலாகவும் உள்ளது. இதனைப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் தங்களின் பணியை எதுவித ஓசையுமின்றி செய்து முடிப்பதினை வைத்தே கண்டு கொள்ளலாம்.

1995ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் ஓர் பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்பு பயிற்சி எதிலும் ஈடுபடாத 41 பெண்கள் [இதில் மாணவிகள், வழக்கறிஞர்கள், வியாபாரநிலைய ஊழியர்கள், ஆறுமாதகாலத்திற்கு முன்பு, மகப்பேறு அடைந்த தாய்மார்கள் போன்றோர் அடங்குகின்றனர்] யாவரும் ஐந்திலிருந்து ஆறுமாதகாலப் பயிற்சியில் 34 கிலோகிராம் பாரத்தினை தோளில் சுமந்தபடி 3 கிலோமீற்றர் தூரம் ஓடுவதற்கும், 45 கிலோகிராம் எடையைச் சுமந்தபடி நிலத்தில் இருந்து எழும்புவதற்கும் கற்றுக் கொண்டனர். ஆனால் அவர்களைப் போன்ற தரத்தில் உள்ள ஆண்களினால் அப்படி முன்னேற முடியவில்லை என்பதனையும் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும் 1964 தொடக்கம் 1995 வரையான காலப் பகுதியில் மரதன் ஓட்டத்தில் பெண்களின் சாதனை விகித உயர்வு 32 வீதமாகவும், ஆண்களின் விகித உயர்வு 4.5 வீதமாகவும் காணப்பட்டது. இதுவும் பெண்களின் பரிணாம வளர்ச்சியின் மாற்றத்தினை எடுத்துக் காட்டும் ஒரு சான்றாகும்.

இவ்வாறு ஆய்வுகளும் பரீட்சார்த்த செயற்பாடுகளும், பெண்களின் பலத்தினை வெளிக் கொண்டு வந்திருக்கும் இந்த வேளையில் பெண்களும் பல பரிணாம வளர்ச்சிகளைத் தம் செயற்பாடுகளூடாகக் காட்டி வருகின்றனர். எனினும் இன்றும்கூட எம் மத்தியில் பெண்களைப் பலவீனமானவர்களாகவும், இரண்டாந்தர நிலையிலுள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படுகின்றது. இந்த நிலைமாற வேண்டுமாயின் முதலில் பெண்கள் தம் பலத்தினை அறிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்துப் பெண்களைப் பலவீனமாக எடை போடுகின்றனர் என்று அறிந்து அவை, ஏன் பலவீனமான விடயங்களாகக் கருதப்பட்டு வந்தன என்பதையும் நோக்க வேண்டும். மேலும் இந்த விடயங்கள் யாவும், இன்று பலமானவையாகச் செயற்படுகின்றன என்ற விஞ்ஞான ரீதியான ஆய்வு உண்மையையும் அறிந்திருக்க வேண்டும்.

தொடரும்..........



## வேதனை இனியும் வேண்டாம்......



வேதனை வேதனை
வேதனையென வெந்து வெந்து
வெடித்துச் சிதறுதம்மா இதயம்
வேண்டாம் பெண்ணே வேண்டாம்
வேண்டும் எமக்குத் துணிவு
எலிகளுக்கு விடுதலை என்றுமே
பூனைகளிடம் இருந்து
கிடைக்கவில்லை
உன் விடுதலை உன் கையில்தான்
உரிமையுடன் குரல்கொடு
தன்னம்பிக்கையில் வாழ்பவளைத்
தரணி வாழ்த்துமம்மா
விழித்துக்கொள் உன்
விழுமியங்களுக்கு
விடுதலையுணர்வு வேண்டும் உனக்கே
தற்கொலைக்குத் துணிகிறாய் -ஏன்
தன்மதியாய் வாழத்துணியவில்லை
சுமைதாங்கி உன்னைப்போல் -பூமியிலே
யாருண்டு எண்ணியதுண்டா நீ?
அகப்பை பிடித்து அறுசுவை
உணவாக்கி
அன்பாக பகிருகின்ற அணங்கே
உன் வாழ்வின் சுவையதுவை ஏன்?
நீயும் அறியாது மடிகிறாய்?
துவண்டு துவண்டு போய்விட்டால்
துன்பம் உனை துரத்தி வரும்
துணிந்து ஒருமுறை நிமிர்ந்து நில்
துரத்த முடியும் பெண் அடிமையை
சீதனம் சீதனம் என்ற வாழும்
உலகம்
சீ இனியும் வேண்டாம் எமக்கென்று
சிந்திக்கத் தூண்ட முடியும்
பெண்ணால்
துடைத்திடலாம் எம்மினத்தால் பல
பெண் துயரம்
வேண்டும் எம் உரிமைபற்றிய
விழிப்பு
விடியலைத் தேடும் வழியதை
அடக்கி வைப்பது சமூகத்தின்
அறியாமை
அறிய வைத்திடும் அன்னையர்
குழாமே
தடைக்கற்களையெல்லாம்
தகர்த்துவிடு
படிகளை நோக்கி நடந்துவிடு
தரணியே உணரும் நாளை
பெண்களே தான்
உலகின்கண்களென்று

பத்மதிரு (மகள்)
பல்லவராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸீன் யாங்

## சீனாவின் மாற்றான் பிள்ளை






மொழிபெயர்ப்பு - தருமன்

சீனாவின் ஸீன் ஜாங் மாகாணத்தைப் பார்க்கும் போது இப்பகுதி ஊடாக நடந்து வந்த, 'பட்டு மார்க்க' பழைய காலத்தின் நினைவுகளே வரும். சீனாவின் மேற்குப் புறமாக அமைந்துள்ள இந்தப்பகுதி, மலைகளும் பாலைவனங்களும் நிறைந்த பிரதேசமாகும். பாலைவனச் சோலைகளைக் கொண்ட மலைசார் நகரங்கள் பல இப்பிரதேசங்களில் உள்ளன. நகரங்களின் புழுதி படிந்த சந்தைகளில் மந்தைகள் அலைந்து திரியும். தமக்குத் தேவையான கத்திகளை உள்ளூர் கொல்லர்களிடமே செய்விக்கும் பலர் இன்றும் இங்கு காணப்படுகின்றனர். இவ்வகை வாழ்க்கை பல நூற்றாண்டுகளாக அதே தொழில்நுட்பங்களுடன் தொடர்கிறது.

ஸீன் ஜாங் குடியானவர்களின் முகத்தோற்றம், சீனர்களின் போலன்றி, மிகவும் வேறுபட்டு துருக்கி முஸ்லிம்களைப் பிரதிபலிக்கிறது. ஒளி பொருந்திய சாம்பல் நிறக் கோடுகளை கொண்ட, நீல நிறக் கண்களையும் தலைமயிர் மண்ணிறத்திலோ அல்லது கறுப்பிலோ சிலருக்கு பொன்னிறம் கலந்த மண்ணிறத்திலோ அமைந்து, நீளமாகத் தொங்கிக் கொண்டிருக்கும்.

மார்க்கோபோலோவும் அவரைப் போல் பல நூற்றாண்டுகளாக இந்த மாகாணத்தினூடாகப் பயணித்தவர்களும், அப்பகுதியின் இயற்கை அழகால் கவரப்பட்டதுடன், சீனப் பண்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்ட இப்பிரதேச மக்களாலும் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் ஸீன் ஜாங்கின் இன்றைய சீன ஆட்சியாளர்கள் பழைய சரித்திரத்தின் முக்கியத்தை கவனத்தில் எடுக்கவில்லை. அவர்களின் சிந்தனை அப்பகுதியின் அரசியல் எதிர்காலம் பற்றியதாகவே இருக்கும்.

ஸீன் யாங்கின் குடியானவர்களான உஸ்பெக்குகள், அங்கு பெரும்பான்மையானவர்களாக இருந்தாலும் கூட, சீனத்திலிருந்து பெரிதும் வேறுபட்ட தமது மொழியையும் கலாசாரத்தையும் எப்படித்தான் காப்பாற்றப் போகிறோம் என்ற கவலையுடன் காணப்படுகிறார்கள்.

இங்குள்ள சிலருக்கு 60 வருட கம்யூனிஸ ஆட்சி செல்வத்தையும், புதிய நாகரிகத்தையும் தந்திருந்தாலும் கூட, புதிதாகக் குடியேற்றப்பட்டுள்ள சீனர்களுக்கும் உஸ்பெக்குகளுக்கும் இடையே வேற்று மனப்பான்மை நிலவுவதையும் காணக் கூடியதாக உள்ளது.

முன்பு எப்போதுமே நடந்திராத இன மோதல்கள் அங்கு நடைபெற்று அழிவுகள் ஏற்பட்டிருந்தன. அதன் பின் அங்கு சென்று வந்த கியூ-செக்கமாக்கி என்ற ஜப்பானிய புகைப்பட பத்திரிகையாளர் ஸீன் ஜாங்கின் தலைநகராகிய உறுமிக்கில் சஞ்சரித்த போது பல விடயங்களை அவதானித்து வந்துள்ளார். அப்போது கலவரங்கள் ஓய்வடைந்திருந்தன.

ஆனால் உலகில் சைப்பிரசிலிருந்து இலங்கை வரை பல்வேறு வித்தியாசமான பிரச்சினைகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள் பலவற்றிற்கு சென்று வந்த அவருக்கு, ஸீன் ஜாங்கில் இருந்த காலப் பகுதி கலவரத்துடனும் பயத்துடனுமே கழிந்தது. கான் இனச் சீனர்களும், உஸ்பெக்குகளும் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழ விரும்பவில்லை. அவர்களிடையே தொடர்புகள் இல்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும் இல்லை என்கிறார் இந்தப் பத்திரிகையாளர்.

''கள நிலவரங்களின் படி நஷ்டமடையப் போவது உஸ்பெக்குகள் தான்'' - என்கிறார். ஒற்றைப் பரிமாணங் கொண்ட ஒன்றிணைந்த சீனா என்ற சீனக் கொள்கை, உஸ்பெக்குகளை வேறு சமூக நியதிகளைக் கொண்ட ஒரு தனி மனிதக் கூட்டமாகப் பார்ப்பதில்லை. சீனாவின் பலம் பொருந்திய ஊடகத்துறை, உஸ்பெக்குகள் பின்பற்றும் சாத்வீக இஸ்லாத்தையும், ஏன் அவர்களின் பேச்சு சுதந்திரத்தையும் கூட, பயங்கரவாத பட்டியலிலேயே காட்டுகிறது.

இந்த மக்களின் மண்ணாலான குடியிருப்புகளுக்கு ஊடாக குறித்த பத்திரிகையாளர் அலைந்து திரிந்த போது சீன அரசின் புல்டோசர்களால் தரை மட்டமாக்கப்பட்ட உஸ்பெக்குகளின் பழைய குடியிருப்புகளை கண்டு வந்துள்ளார். அவர் எடுத்து வந்துள்ள புகைப்படங்கள் கவலை தரும் ஒரு உணர்வைத் தருகின்றன. அவை துன்பியல் கவிதைகள் போல் உள்ளன. இந்தப் படங்கள் தோல்வியை அடைந்து வரும் மக்களை பிரதிபலிக்கின்றன.

ஸீன் ஜாங்கைப் பற்றி அறிந்து வர விரும்பும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை உள்ளேசெல்ல சீன அரசு அலைக் கழிக்கிறது.

அனுமதி பெறுவது கடினமாகவே உள்ளது. ஸீன் ஜாங்கின் உட்பகுதிகளுக்கு செல்வது ஆபத்தானது என எச்சரிக்கப்படுகின்றனர்.

ஆனால் செக்கமாக்கி அவ்விடங்களுக்கெல்லாம் சென்ற போது, அவர் பிரதேச மக்கள் வரவேற்கும் முறையிலேயே 'அஸ்ஸலாம் அலேக்கும்' எனப் பேச்சை ஆரம்பித்த போது புன்னகையுடன் கூடிய வரவேற்பு அவருக்குக் கிடைத்தது. பின்பு எல்லாத் தடைகளும் உடைந்தன. உரையாடல்கள் தொடர்ந்தன. நடுவிலே இளைஞர்கள் தமது மொழியில் பேசுவதையும் பள்ளி வாசல்களுக்கு செல்வதை தவிர்க்குமாறும் கேட்கப்படுவதாக கூறினார்கள். பட்டுமார்க்க காலத்தில் புகழ்பெற்றிருந்த காஸ்கார், ஹோட்டன் போன்ற நகரங்கள் அவற்றின் பழைய தோற்றங்கள் முற்றாக பாழ்படுத்தப்பட்டு, குடியிருப்புக்கான தொடர் மாடிகள் கட்டப்படுகின்றன.

சீனா பறை சாற்றும் நவீன மயமாக்கலால் ஸீன் ஜாங்கின் பழைய பண்பாடு சிதைக்கப்பட்டு அது மேலும் மேலும் கரைந்து செல்கிறது.

[நன்றி : 'ரைம்' சஞ்சிகை ]

## 2050

ப.அம்பிகை,
கோண்டாவில்



2050 இல் இயந்திரம் மனிதனாகும்
மனிதன் இயந்திரமாவான்
நம் ஆடைகள்
அருங்காட்சியகத்தில்
அழகாய் அடுக்கப்பட்டிருக்கும்
எமது பண்பாடு பழக்கவழக்கங்கள்
புத்தகத்தில் பதியப்பட்டிருக்கும்
மரியாதை மண்புழுவாயிருக்கும்
புன்னகை என்பது
புதருக்குள் புதைக்கப்பட்டிருக்கும்
அன்பு அஞ்ஞாதவாசம் அனுபவிக்கும்
மனிதம் மரணித்திருக்கும்
மதப்போர்வைகள் மறைவின்றி
விரிக்கப்பட்டிருக்கும்
விஞ்ஞானம் துடைக்கும் தூசியாய்
மெஞ்ஞானம் மாறிவிடும்
மனிதனைக் காண்பதே
எட்டா அதிசயமாயிருக்கும்
வீடுகள் கட்டடங்கள் விண்ணைத்தொடும்
விண்வெளிக்கு
விருந்தினராய்ப் பறப்பார்கள்
நயவஞ்சகர்கள் நலமாய் வாழ்வார்கள்
நல்லவர்கள் நலிந்து போவார்கள்
அப்பாவிகள் அழிந்து போவார்கள்
ஆனா[illegible] இருப்பான்
அமைதியாக..........!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

நெடுந் தொடர்

44

அமெரிக்காவில் லிங்கனைப் போல வேறு எந்த ஜனாதிபதியும் அவ்வளவு சர்ச்சைக்குள்ளானதில்லை. அதேபோல், பேசப்பட்டதும் இல்லை. ஜே.மோனாகன் (J.Monaghan) என்பவர் லிங்கனைப் பற்றி வெளிவந்திருக்கும் நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டார். 1939 ஆம் வருடத்துக்கு முன்பு வரை மட்டும் அப்படி வெளியான பட்டியல்கள் அடங்கிய புத்தகத்தின் பக்கங்கள் எவ்வளவு தெரியுமா? 1,079. இவை வெறும் பக்கங்கள்தான், நூலக அடுக்குகளில் பெரிது பெரிதான தொகுதிகளாக எழுதப்பட்ட ஆபிரஹாம் லிங்கனின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்கள் ஏராளம்.



லிங்கன் தன் மனத்துக்குச் சரியெனப் படுகிற எதையும் செய்வதற்குத் தயங்க மாட்டார். அதற்கு உதாரணம் ஃபிராங்க்ளின் டபிள்யூ ஸ்மித் (Franklin W.Smith) என்பவர் மீதும் அவரது சகோதரர் மீதும் தொடரப்பட்ட ஒரு வழக்கு. அதில் லிங்கன் எடுத்த முடிவு. ஸ்மித், பொஸ்டனைச் சேர்ந்தவர். ஸ்மித்தும் அவருடைய சகோதரரும் இராணுவ நீதிமன்றத்தால் கைது செய்யப்பட்டு, பல மாதங்களாகச் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். அரச பணத்தை மோசடி செய்துவிட்டார்கள் என்பது வழக்கு. இந்த வழக்கு லிங்கனின் பார்வைக்கு வந்தது.

லிங்கன் எல்லாத் தகவல்களையும் மிக ஆழமாகப் படித்தார். சம்பந்தப்பட்ட எல்லோரையும் விசாரித்தார். இறுதியாக, ஃபிராங்க்ளின் ஸ்மித்தும் அவருடைய சகோதரரும் நிரபராதிகள் என்ற முடிவுக்கு வந்தார். இந்த முடிவுக்கு வந்ததும் அவர் தயங்கவோ, யாரைப் பற்றியும் பயப்படவோ இல்லை. ஒரு ஆணையைப் பிறப்பித்தார்.

'மேற்குறிப்பிட்ட ஃபிராங்க்ளின் டபிள்யூ ஸ்மித், கப்பல் படைத் தளபதியுடன் ஒன்றே கால் மில்லியன் டொலர் அளவுக்கான தொகைக்குத் தொழில் ரீதியான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார். அந்த நடவடிக்கையின்போது, கால் மில்லியன் டொலர் தொகையைத் திருடுவதுக்கு அவருக்கு வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆனால், அவர் திருடவில்லை. 2,200 டொலர்களைத் திருடிவிட்டார் என்றுதான் அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அவர் திருடியிருப்பார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. இதன்மூலம் அவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பது தெளிவாகிறது. எனவே, இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, அவர்கள் இருவரையும் விடுவிக்க வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.'

பொது வாழ்க்கை எவ்வளவு துன்பமானது என்பது அனுபவப்பட்டவர்களுக்குத்தான் தெரியும். பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களை மட்டுமல்லாது அவர்களுடைய குடும்பத்தையும் சந்திக்கு இழுத்து விடுவார்கள் சில விஷமக்காரர்கள். விமர்சனங்கள் சம்பந்தப்பட்டவர்கள் மேல் மட்டும் பாயாமல், குடும்பத்தில் இருப்பவர்களையும் குறிவைக்கும்போது, எல்லோருமே துடித்துத்தான் போவார்கள். லிங்கன் விடயத்திலும் இதுதான் நடந்தது.

லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது, அவருடைய ஓர் ஆண்டு ஊதியம் 25,000 டொலர்கள். இருந்தாலும் எளிமையாகவே இருப்பார் லிங்கன். ஆனால் மேரி டாட் ஆடம்பரப்பிரியை. அவர் வெள்ளை மாளிகைக்கு வந்ததும் செய்த முதல் வேலை, வெள்ளை மாளிகையைப் புதுப்பித்தது. நியூயோர்க்குக்குப் போனார், புத்தம்புது மேசை, நாற்காலிகள், தரை விரிப்புகள், அலங்காரப் பொருள்களை வாங்கி வந்தார். வெள்ளை மாளிகையை அலங்கரித்தார்.

விடுவார்களா எதிரிகள்? விமர்சனக் கதைகள் பறந்தன. 'வெள்ளை மாளிகையை அலங்கரிக்க, மக்கள் வரிப்பணத்தைத் தன்னிச்சையாகச் செலவழிக்கிறார் லிங்கனின் மனைவி' என்று வரிந்துகட்டிக்கொண்டு, பக்கம்பக்கமாக எழுதித் தீர்த்தன எதிர்க்கட்சிப் பத்திரிகைகள். அதேபோல், மேரி தமது தனிப்பட்ட (பெர்சனல் ஷொப்பிங்) செலவுகளுக்கு, பொதுப் பணத்தில் கைவைக்கிறார் என்றும் பேச்சு எழுந்தது. எதற்கும் கலங்கவில்லை லிங்கன். அவருக்கென்ன மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயப்பட வேண்டும்? ஆனால், ஜனாதிபதியான பிறகும்கூட மேரி டாட் லிங்கனுக்குத் தலைவலியாகத்தான் இருந்தார் என்பது உண்மைதான்.

(மீட்பர் வருவார்)

லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது, அவருடைய ஓர் ஆண்டு ஊதியம் 25,000 டொலர்கள். இருந்தாலும் எளிமையாகவே இருப்பார் லிங்கன். ஆனால் மேரி டாட் ஆடம்பரப்பிரியை. அவர் வெள்ளை மாளிகைக்கு வந்ததும் செய்த முதல் வேலை, வெள்ளை மாளிகையைப் புதுப்பித்தது. நியூயோர்க்குக்குப் போனார், புத்தம்புது மேசை, நாற்காலிகள், தரை விரிப்புகள், அலங்காரப் பொருள்களை வாங்கி வந்தார். வெள்ளை மாளிகையை அலங்கரித்தார். விடுவார்களா எதிரிகள்? விமர்சனக் கதைகள் பறந்தன. 'வெள்ளை மாளிகையை அலங்கரிக்க, மக்கள் வரிப்பணத்தைத் தன்னிச்சையாகச் செலவழிக்கிறார் லிங்கனின் மனைவி' என்று வரிந்துகட்டிக் கொண்டு, பக்கம்பக்கமாக எழுதித் தீர்த்தன எதிர்க்கட்சிப் பத்திரிகைகள். எதற்கும் கலங்கவில்லை லிங்கன்.

■ பா.உண்மை

## மூச்சுவிடுமா முள்ளிவாய்க்கால்...?




காலம் முழுக்க கடற்கரையில்
கால் கடுக்க கை நடுங்க
உப்புக் குளித்த

இரவு முழுக்க
இன்னல்ப்பட்டு
இரைதேடி இடுப்புடைந்து
காய்ந்த களிமண் வீதிகளில்
கனவுகள் கண்ட உணர்வுகள்
எங்கே......???
இத்தனையும் எங்கே.....!!
எமக்கு அமுதூட்டிய
அன்னை மடிகள் எங்கே......!!
எம் மெய் தேய்த்த
தந்தை மெய்கள் எங்கே......??
கண்டேன்
இவர்களின் ஊனங்கள்
வடியக் கண்டேன்
இவர்களின் உணர்வுகள்
உயிரற்றுப் போகக் கண்டேன்
சடப் பொருள்கள்
சண்டை போட்டதைக் கண்டேன்
ஆயினும்
முள்ளிவாய்க்கால்
மூச்சு விட்டதைக் காணவில்லை......!
மூச்சு எப்போ வரும் ......?
மூச்சு எப்போ விடும்.....
இதற்காகவே - நான்
காய்ந்த கட்டுமரங்களில்
எழுது முனையுடன்
கவி எழுதக் காத்திருக்கின்றேன்
இதற்காக மூச்சு விடு
முள்ளிவாய்க்காலே.......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81 ஆண்டுகால டெஸ்ட் வரலாற்றைக் கொண்ட இந்திய அணி, முதல் முதலாக 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டுள்ளது. அதுவும் கிரிக்கெட் உலகின் ஜாம்பவானான ஆஸ்திரேலியாவை. ஆஸ்திரேலிய அணி 43 ஆண்டுகளின் பின்னர் 4-0 என்ற கணக்கில் தொடரைப் பறிகொடுத்துள்ளது. 1970 ஆம் ஆண்டுகளில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 4-0 என்ற கணக்கில் தோல்வியடைந்த பின்னர் இந்தத் தொடரிலேயே அதேபோன்றதொரு தோல்வியை ஆஸ்திரேலிய அணி சந்தித்துள்ளது.




# அடங்குமா ஆணவம்?

■ டிலீப்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஆணவம் இனியாவது அடங்குமா? இல்லை விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப்போல திமிர்த்தனம் தொடருமா? அந்தளவுக்கு வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்திருக்கின்றது ஆஸி. அணி. இந்திய அணியின் இளம் வீரர்களின் சிறப்பான சாதனைகள் ஆஸி. அணியைச் சரித்துப் போட்டிருக்கின்றன.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய அணி 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்றது. ஓர் ஆட்டத்தில் இன்னிங்ஸ் வெற்றியையும் ஏனைய மூன்று ஆட்டங்களில் இந்தியா ஆகக் குறைந்தது 6 இலக்குகளால் வெற்றியையும் பெற்றுக் கொண்டது.

81 ஆண்டுகால டெஸ்ட் வரலாற்றைக் கொண்ட இந்திய அணி, முதல் முதலாக 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டுள்ளது. அதுவும் கிரிக்கெட் உலகின் ஜாம்பவானான ஆஸ்திரேலியாவை. ஆஸ்திரேலிய அணி 43 ஆண்டுகளின் பின்னர் 4-0 என்ற கணக்கில் தொடரைப் பறிகொடுத்துள்ளது. 1970 ஆம் ஆண்டுகளில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 4-0 என்ற கணக்கில் தோல்வியடைந்த பின்னர் இந்தத் தொடரிலேயே அதேபோன்றதொரு தோல்வியை ஆஸ்திரேலிய அணி சந்தித்துள்ளது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டு இறுதியில் தனது சொந்த மண்ணில் வைத்து இங்கிலாந்து அணியிடம் வாங்கிக் கட்டியிருந்தது. இங்கிலாந்து அணி 2011 ஆம் ஆண்டு இங்கிலாந்து மண்ணில் வைத்து இந்திய அணியை துவைத்து எடுத்ததற்கு பழி வாங்கும் தொடர் என்று இந்திய அணி வீரர்கள் தெரிவித்தார்கள். அதற்குமாறாக தனது சொந்த மண்ணில் தோல்வியைத் தழுவியிருந்தது.

இங்கிலாந்து அணியுடனான தோல்வி இந்திய அணியை கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கியிருந்தது. குறிப்பாக இங்கிலாந்து தொடருக்கு முன்பதாக ஆஸ்திரேலிய அணியுடன், ஆஸி.யில் வைத்து தொடரை இழந்தமை என்பன இந்திய அணியின் தலைமைப் பதவியிலிருந்து டோனியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்குமளவுக்கு இருந்தது.

பல்வேறுபட்ட சவால்களையும், அழுத்தங்களையும் எதிர்நோக்கியிருந்தது இந்திய அணி. இந்த நிலையில் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய அணி திமிர்த்தனத்துடனேயே களமிறங்கியது. ஆசிய நாட்டு மைதானங்கள் பொதுவாக சுழலுக்குச் சாதகமானவை.

கடந்த வருட இறுதியில் இடம்பெற்ற இங்கிலாந்துத் தொடரிலும், இந்திய அணி சுழலுக்குச் சாதகமான மைதானங்களையே அமைத்திருந்தது. இறுதியில் சொந்தக் காசில் சூனியம் வைத்ததைப் போல இந்திய அணி தோற்றிருந்தாலும், இப்போது ஆஸ்திரேலிய அணியுடனான தொடரில் வெல்வதற்கு அந்தச் சுழல் மைதானங்களே உதவி புரிந்தன.

ஆஸ்திரேலிய அணி எப்போதும் வேகப்பந்து வீச்சையே தனது பலமாகக் கருதுகின்றது. இந்திய அணியுடனான தொடருக்கும் தனது வேகப் பந்து வீச்சுக் கூட்டணிக்கே ஆஸ்திரேலிய அணி முக்கியத்துவம் கொடுத்திருந்தது. ஆஸி.அணியில் ஷேன் வோர்னுக்குப் பின்னர் மிகச் சிறந்த சுழல் பந்து வீச்சாளர் இல்லையாயினும் நதன் லயோன் ஓரளவு சிறப்பான சுழல் பந்து வீச்சை வெளிப்படுத்தி வருகின்றார்.

இவ்வாறானதொரு நிலையில் நதன் லயோன் என்கின்ற தனியொரு சுழல் பந்து வீச்சாளருடனும் வேகப் பந்து வீச்சாளர்களுடனுமே இந்தியத் தொடரில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி. சென்னையில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆஸி. அணி திணறியது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க கடும் போராட்டம் நடத்தியது ஆஸ்திரேலிய அணி.

அந்த ஆட்டத்தில் அஸ்வின் 12, ஹர்பஜன் சிங் 3, ஜடேஜா 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தனர். இரண்டு இன்னிங்ஸிலும் ஆஸி. அணியின் சகல இலக்குகளையும் இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர்களே சரித்திருந்தனர். இங்கிலாந்து அணியும், இந்தியாவுடனான தொடரின் முதலாவது ஆட்டத்தில் சுழல் பந்து வீச்சால் தோல்வியைத் தழுவியிருந்தது. இரண்டாவது ஆட்டத்திற்கு மொன்டி பனேசரை களமிறக்கிய இங்கிலாந்து அணி அதன் பின்னர் இந்திய அணியைப் புரட்டி எடுத்திருந்தது. ஆனால் ஆஸ்திரேலிய அணி தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பதிலேயே பிடிவாதமாக இருந்தது. முதலாவது ஆட்டத்தில் தோற்ற பின்னரும் திருந்தாத ஆஸ்திரேலிய அணி இரண்டாவது ஆட்டத்தில் லயோனையும் நீக்கி விட்டுக் களமிறங்கியது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்திருந்தது.

இதன் பின்னர் ஆஸ்திரேலிய அணியில் வீரர்களுக்குள் ஏற்பட்ட குழப்பம் அணியை முற்றாகப் பாதித்தது. மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது நாள் முழுவதுமாக மழையால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 4 நாள் நடைபெற்ற போட்டியையும் இந்தியா வெற்றி கொண்டிருந்தது.

இந்தத் தொடர் முழுவதும் ஆஸ்திரேலிய அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தையே முதலில் தேர்வு செய்திருந்தது. ஓர் ஆட்டத்தில் கூட மாற்றத்தைப் பற்றிச் சிந்திக்க ஆஸி. விரும்பவில்லை. இவ்வாறு ஆஸி. அணியின் திமிர்த்தனமே அவர்களை வரலாற்றுத் தோல்விக்குள் தள்ளியுள்ளது.

மறுபுறத்தில் இந்திய அணி அனுபவமற்ற டெஸ்ட் அணியாக களமிறங்கி கலக்கியுள்ளது. இந்திய அணியைப் பொறுத்த வரையில் நல்லதொரு இளம் கூட்டணி டெஸ்ட் ஆட்டத்துக்கும் வாய்த்து விட்டது. இதுவரையில் ஒரு நாள், ரி-'20/20' தொடர்களில் சாதித்த



இந்திய அணியால் டெஸ்ட் ஆட்டங்களில் சாதிப்பது எட்டாக்கனியாக இருந்தது. ஆனால் ஆஸி. தொடரில் மிகச் சிறந்த இளம் கூட்டணி அமைந்து விட்டது.

குறிப்பாக அறிமுக ஆட்டத்தில் அசத்திய ஷிகர் தவான் தனக்குரிய இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். புஜாரா, ஜடேஜா, முரளி, விஜய் என்று இந்திய அணியின் டெஸ்ட் அறிமுகங்கள் கலக்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் சேவாக், கம்பீர், சகீர், ஹர்பஜன் ஆகியோருக்கு இனிமேல் அணியில் இடமில்லை.

நல்லதொரு இளம் கூட்டணியாக அமையப்பெற்றுள்ள இந்திய அணி தனது சொந்த மண்ணில் சாதித்துக் காட்டிவிட்டது. அந்நிய மண்ணிலும் அது தனது சாதனைகளைத் தொடருமா? இல்லை பழையபடி வீட்டில புலி வெளியில் எலி தானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிது. நல்ல நண்பர்கள் இருந்தால், நீங்கள் தனியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்களின் நல்லது கெட்டதைப் பகிர்ந்து கொள்ளும், உங்களின் கஷ்டகாலங்களில் உங்களுடன் நின்று துணைபுரியும், உங்களின் வெற்றியைக் கொண்டாடும் நண்பர்கள் இருப்பது மிக முக்கியமானது. இத்தகைய அரிய நண்பர்கள் இல்லாமல் வாழ முடியாது. இவர்களுடன் இருக்கும் போது நம் வாழ்க்கைக்கே ஒரு புதுப் பொலிவு உண்டாகும்.**

# வெற்றி

## பெறலாம் வாங்க!




ராகவன் அல்பி

### அண்டை வீட்டாருடன் நெருக்கம் கொள்வதற்கான 10 வழிகள்

*பார்ட்டி :-* வீட்டில் பார்ட்டி ஒன்றை ஏற்பாடு செய்து, அண்டை வீட்டார் அனைவரையும் கூப்பிடுங்கள். எளிமையான, ஜாலியான பார்ட்டியாக அது இருக்கட்டும். அண்டை வீட்டாரைச் சந்திப்பதற்கும், மனம் விட்டுப் பேசுவதற்கும் தான் இந்தப் பார்ட்டி. இதன்மூலம் நல்ல நட்பு உருவாகும்.

**தோட்டத்தைப் பராமரித்தல் :-** அண்டை வீட்டார் வெளியூர்களுக்குப் போயிருக்கும் போது, அவர்கள் தோட்டத்தைப் பராமரிப்பதுடன், அவர்கள் வீட்டையும் நீங்கள் பார்த்துக் கொள்ளலாம். அவர்கள் ஊரில் இருந்து வந்ததும் கண்டிப்பாக நன்றி சொல்வார்கள்.

**பகிர்ந்து கொள்ளுங்கள் :-** நீங்கள் கார்பெட் கிளீனர் வாடகைக்கு வாங்கினால், அதைப் பக்கத்து வீட்டுக்காரர் பயன்படுத்தவும் கொடுக்கலாம். ஒரே வாடகையிலேயே அவரும் பயன்படுத்திக் கொள்வார்கள். இதுபோன்று பல பொருள்களைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் பகிர்ந்து கொள்ள முடியும்.

**குழந்தைகள் :-** அனைவரும் குழந்தைகளைக் கூட்டிவந்து ஓரிடத்தில் அமர்ந்து உரையாடலாம். அவர்களுக்குக் குழந்தைகளுக்கான விளையாட்டுக்களையும் சொல்லித் தரலாம். இதனால் அனைவருக்குமே குதூகலமாக இருக்கும்.

**அண்டை வீட்டாரின் வளர்ப்புப் பிராணிகளைக் கவனித்தல் :-** பக்கத்து வீட்டுக்காரர்கள் எங்கேனும் வெளியில் சென்ற நேரத்தில் அவர்களின் வளர்ப்புப் பிராணிகளை உணவிட்டுக் கவனித்துக் கொள்ளலாம். அவர்களாக கேட்கும்வரை காத்திருக்காமல், நீங்களாகவே இந்த உதவியை முன்வந்து செய்யலாம். அவர்களுடைய வளர்ப்புப் பிராணிகளை நீங்கள் பார்த்துக் கொண்டதால், நீங்கள் வெளியூர் செல்லும்போது அவர்களும், உங்களுடைய பிராணிகளைப் பார்த்துக் கொள்வார்கள்.

**பார்சலை வாங்கி வைத்தல் :-** பக்கத்து வீட்டுக்காரர்கள் இல்லாத போது, நீங்கள் வீட்டில் இருந்தால் அவர்களுக்கு வரும் பார்சல், தபால்களை நீங்கள் வாங்கி வைத்துக் கொள்ளலாம். அதே போன்று ப்ளம்பர் மற்றும் இதர வேலைகளுக்கு வருபவர்களுக்கும் அவர்கள் சார்பாக நீங்கள் பதில் சொல்லலாம்.

**திட்டமிடல் :-** நம் வீட்டைச் சுற்றி ஏதேனும் முன்னேற்றம் செய்ய வேண்டுமென நீங்கள் விரும்பினால், அதைச் செய்யலாம். அதற்குப் பக்கத்திலுள்ள அனைவரின் ஒத்துழைப்பையும் கேட்கலாம். மாற்றம் செய்வது குறித்த அவர்களது எண்ணங்களையும் நீங்கள் கேட்டு அறியலாம்.

**காவல் :-** காவல் துறையினர் உங்கள் பகுதியை எவ்வாறு காவல் காப்பது என்பது குறித்துச் சொல்வார்கள். இதில் அனைவருமே இணைந்து செயல்படலாம். உங்கள் பகுதியில் சந்தேகத்துக்குரிய செயல்பாடுகள் நடந்தால், சந்தேகத்துக்குரிய நபர்கள் தென்பட்டால் நீங்கள் அதைக் காவல் துறையினரிடம் தெரிவிக்கலாம். இதுபோன்று செய்வதால் நம் பகுதியில் நடக்கும் குற்றங்கள் குறையும்.


**பொருள்களை வாங்கித் தருதல் :-** பக்கத்து வீட்டுக்காரருக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விடும் போது, அவர்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை நீங்கள் வாங்கித் தரலாம். மற்றவர்களையும் இது போன்று உதவி செய்ய அழைக்கலாம்.

**பேசுங்கள் :-** அண்டை வீட்டாருடன் நன்கு பழகாதவரை மேற்சொன்ன யோசனைகள் எதுவும் நடக்காது. அதனால் தாராளமாகப் போய்ப் பேசுங்கள். உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். நண்பராகுங்கள்.

**உதயனின் ''சூரியகாந்தியில்'' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.**


உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;

சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 259



அனுப்புபவர் பெயர்:.........................................

விலாசம்:.........................................

.........................................

கையொப்பம்:.........................................

### இடமிருந்து வலம்

1. ஆசிரியப்பா வகை இது
4. பாக்கு மரம்
7. வயதான
8. கொல்லன் உலையில் பயன்படுத்தும் சாதனம்
9. வாதம்
11. நிலம்
12. பாவனை பண்ணல்
14. இப்படி நட
16. ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல
17. கருத்தரித்த நிலை
18. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்
20. சிதம்பரம்
21. இன்பம் அல்ல.

### மேலிருந்து கீழ்

1. தேவரை உயிர் வாழ்விப்பது
2. பயிரில் இருந்து வரும்
3. ஒரு கூட்டத்தை அடையாளப்படுத்துவது
4. உயிர்ப்பின் ஆரம்ப நிலை
5. அன்பை வெளிப்படுத்தப் பரிமாறிக் கொள்வது
6. புரவி
8. ஒரு பூச்சி இனம்.
10. கேட்டதை வழங்கும் ஒரு மரம்
13. தந்தை
14. தளர்ந்து போதல்
15. அரி
16. களைப்பால் ஏற்படும் தளர்ச்சி
19. இது அறுபத்து நான்கு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 257 க்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) பிரசவம் (4) மத (6) மழி (7) அன்பு (8)தவிர்த்தல் (11) மலை (12) துரை (13) வர (14) திணை (15) நவன் (16) அரி (17) கவர் (18) அம்புவில் (20) மசி (22) துமி (23) சாவித்திரி

### மேலிருந்து கீழ்

(1) பிரதமர் (2) சமர் (3) வழித்துணை (4) மன் (5) தபுதாரன் (7) அல் (9) விலை (10)தரை (13) வளர்மதி (14) திரிபு (15) நவ (16) அம்மி (17) கல்வி (18) அது (19) விரா (21) சிரி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 259**
நியூ உதயன் பப்ளிகேஷன்
[பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (10.04.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.259இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 14.04.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 257 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**அ.திலகவதி,**
சன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி.

**2 ஆம் பரிசு**

**நூர்தி தாமோதரம்பிள்ளை,**
தாமற்கந்தோர் வீதி, மன்னார்.

**3 ஆம் பரிசு**

**நி.தேவகி,**
இல: 217, ஐயனார் கோவிலடி,
திருநாவற்குளம், வவுனியா.

**4 ஆம் பரிசு**

**திருமதி. ஜீ.தயாபரன்,**
'ஜீவகிரி' சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**

**ச.ரகுநந்தன்,**
இல.101, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**எஸ்.அஸ்வின்,**
**மே/பா ஏ.சூசைப்பிள்ளை,**
புக்கைப்புலோ வீதி, மாதகல்.

**கு.சோபனா,**
வட்டு. வடக்கு, சித்தங்கேணி.

**செ.அ.வரதராஜன்,**
பெரியதம்பிரான் கோவில், தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

## ஏர் சிந்தும் ரத்தம்

இந்த தேசத்தில்
மதிக்கப்பட வேண்டிய
முதல் புரட்சியாளன் நீ தான்
ஆனால் உன்னை
நச்சரிக்கும் கைகளின்
அதிகாரம் அடர்த்தியானது

உனது ஊன்
உதிரம், வியர்வை
இவைகளை உதறிவிட்டாய்;
தேசத்தின் மானிடப் பசிக்கு

உனது வீட்டில்
கொதியுண்ட நெல்லும்
நீ தூவினால் முளைக்கும்

இங்கு சில பேர்
நிலங்களுக்கு அழுகிறார்கள்
நீ தான்
மண்ணுக்கு முதல் ஆடை கட்டியவன்
நீதான்
பூமிக்கு முதல் புன்னகை கொடுத்தவன்

நீ மண்ணை வயிற்றில்
கட்டியபோது உனது இரைப்பை
காணாமல் போனது
இங்கு சில பேர்
அதிகாரத்தால் கட்டினார்கள்
ஓர் இனமே
காணாமல் போனது

போர்களின் போது
கருகிச் செத்துப் போன
வயல் நிலங்கள்
உன் வியர்வைத் துளிகளுக்காகவே
காத்திருக்கின்றன

தரிசு நிலங்களை
தாய்மையாக்கி
சந்தோஷப்பட்டுக் கொள்ள

மீண்டும் மீண்டும்
உன் வயிறுகளில்
கத்தி வைக்கிறது மழை

வங்கிக் கடன்களை
விளைச்சலில் தூவ
கடைசியில் கதிர்களை விட்டு
கடன்களையே
அறுவடை செய்கிறாய்

ஏழ்மை விவசாயிக்கு
உதவிடத்துணியா
அரசியல் கொள்கையுடையோரே
சோற்றை விட்டு
வேறெதையும் உண்ணுங்கள்

எலும்புகளைப் பிடுங்கிய
இவர்களின் அதிகாரம்
கலப்பைக்காரனின்
கண்ணீரில் எரியட்டும்

வயல்களில் நெற்கதிர்களோடு
உன் உறவுகளின்
நெஞ்செலும்புகளையும்
அறுவடை செய்கிறாய்

கலப்பை ஏந்திய கலகக்காரனே!
உனக்கு எதிரான
சுரண்டலுக்கு குழி தோண்டு,
அதன் பின்
உன் வறுமைக்கு வழி தேடு!

எம்.நேதா, நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

31.03.2013 முதல் 06.04.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- மனதில், தெய்வீக சிந்தனை வளரும். இல்லறத்துணையின் கருத்துக்கு, முக்கியத்துவம் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைந்து, தாராள பணவரவு பெறுவீர்கள். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்று, அதிக சம்பளம் பெறுவர். குடும்பப் பெண்கள், தன்னம்பிக்கை நிறைந்து அன்றாட பணிகளை சிறப்புடையதாக உருவாக்குவர். மாணவர்கள் அதிக பயிற்சியால் மட்டுமே, சராசரி தேர்ச்சியை அடையலாம்.

**இடபம்**- திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்ற உங்களிடம் பிரியமுள்ளவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். எதிர்மறை பலன்வராத, சுமுகவாழ்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பாக அரசிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு கூடுதல் சலுகைப்பயன் வந்து சேரும். மாணவர்கள் எளிதாகப் படித்து, அதிக தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**- பேச்சில் நிதானமும் செயலில் அதிக கவனமும் பின்பற்றுவீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீர்பெற, சிறு மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத்துணையிடம், உறவினர்களின் மாறுபட்ட குணம், செயல்பற்றி விவாதிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அதிக ஈடுபாடு கொள்வதால் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சக பணியாளர்களிடம் தகுதிக்கு மீறியளவில் பணம் கொடுக்கல், வாங்கலில் ஈடுபட வேண்டாம். மாணவர்கள் வாகனத்தில் பயணிக்கும்போது மிதமான வேகத்தைப் பின்பற்ற வேண்டும்.

**கடகம்**- நீண்ட நாள் நினைத்த காரியம் ஒன்றை, தகுந்த திட்டமிடுதலுடன் செயற்படுத்துவீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களிடம் உங்கள் மீதான நம்பிக்கை வளரும். எதிரி உங்களின் நல்ல குணம் உணர்ந்து கொள்ள புதிய வாய்ப்பு வரும். இல்லறத்துணையின் அதிக அன்பு, பாசத்தில் மனம் மகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் உருவான போட்டி, பொறாமை குறையும். பணியாளர் சிறப்பாகச் செயற்பட்டு உரிய சன்மானம் பெறுவர். மாணவர்கள் அதிக பயிற்சியால் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்**-நீங்கள் எதிர்பார்த்திராத நன்மைகள் ராஜயோக பலனாக கிடைக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவதுடன், ஓரளவு சமூகப்பணியிலும் ஈடுபடுவீர்கள். எதிர்மனப்பாங்கு உள்ளவர், உங்களிடம் மறைமுகமாக அனுகூலம் பெற முயற்சிப்பர். இல்லறத்துணை புரிதல் தன்மையுடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சிபெற, சிலமாற்றத்தைப் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கவனமுடன் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**கன்னி**-உங்கள் மனதில் தன்னம்பிக்கையும், சுய கௌரவ சிந்தனையும் சம அளவில் கலந்திருக்கும். நண்பர், உறவினர் இல்ல விருந்து விசேஷங்களில், அளவுடன் கலந்து கொள்வீர்கள். உழைப்பதில், கவனம் செலுத்தி, கூடுதல் பணவசதி பெற்று, குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். இல்லறத்துணையிடம், உங்கள் மீது நம்பிக்கை குறைவு வராத வகையில், நடந்து கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள். உத்தியோகத்தர், சிறந்த பணிக்காக சலுகை பெறுவர்.

**துலாம்**- எதிர்பார்த்த பணவரவு, எளிய முயற்சியால் கிடைக்கும். உடல்நல ஆரோக்கியத்திற்கு ஏற்ற, உணவு வகைகள் உண்பது நல்லது. இல்லறத்துணைக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக முயற்சியால் திட்டமிட்ட பணவரவைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, கௌரவமான பதவி கிடைக்கும். மாணவர்கள் சக மாணவர்களிடம் சுமுக நட்புப் பாராட்டுவதால், படிப்பில் கவனம் வளர்ந்து சிறந்த தேர்ச்சி விகிதம் கிடைக்கும்.

**விருச்சிகம்**- நியாய, தர்மகுணம் அதிகம் பின்பற்றுவீர்கள். எதிரியால் உருவாகிற கெடுசெயல், பலமிழந்து போகும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சில சீர்திருத்தம் செய்து உற்பத்தி விற்பனையை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி திட்டமிட்ட இலக்கை அடைவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து வர புதிய மாணவரின் அறிமுகம் கிடைத்து உதவும்.

**தனுசு** - தகுதி, திறமையை நன்கு பயன்படுத்தி மனதில் தன்னம்பிக்கையும், சமூகத்தில் நற்பெயரும் பெறுவீர்கள். கடந்த காலத்தில், எதிர்மறையாக உங்களிடம் பேசிய சிலர் பணிவுடன் பேசி சுயலாபம் பெற முயற்சிப்பர். அவர்களிடம் தகுந்த கவனம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என்கிற கொள்கையைப் பின்பற்றுவீர்கள். மாணவர்கள் சாகச விளையாட்டுகளைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்** - கடந்த காலத்தில் உங்களை அவமதித்தவர் தன் குறை உணர்ந்து அன்பு பாராட்டுகிற நன்னிலை ஏற்படும். சீரான ஓய்வு, உடல்நலம் ஆரோக்கியம் பெற உதவும். இல்லறத்துணை, உங்கள் எண்ணங்களின் மறு பதிப்பாக செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன், வளர்ச்சிப்பணி நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் அதிக பயிற்சி பெற வரும் வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். குடும்பப் பெண்கள், கணவரிடம் நன்மதிப்பு, பாராட்டு பெறுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து திட்டமிட்ட தேர்ச்சி இலக்கை அடைவர்.

**கும்பம்** - உறவினர்களின் மாறுபட்ட செயல்களால் உருவான சிரமங்களைச் சரி செய்வதில் அதிக அக்கறை கொள்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீர் பெற, காலமுறை உணவுப் பழக்கம் பின்பற்ற வேண்டும். இல்லறத்துணை, உங்களின் ஆலோசனையை மதித்து செயற்படுவர். தொழில்,வியாபாரத்தில் உள்ள அனுகூலமான தன்மைகளை அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும். மாணவர்கள் படிப்புக்கான பணவசதி கிடைத்து மனநிம்மதி பெறுவர்.

**மீனம்**- உங்களின் நல்ல குணம், திறமை மிகு பணிகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க தாமதம் ஆவதால் கவலையடைவீர்கள். உண்மை, திறமைக்கு என்றாவது ஒரு நாள் நன்மை கட்டாயம் வந்துசேரும். இளைய சகோதரர் அன்பாக நடந்து கொள்வார். எதிரி, விஷப்பிராணிகளிடம் விலகுவது நல்லது. இல்லறத்துணை உங்களின் மனக்கவலை மாற்றும் வகையில் ஆலோசனை, உதவி வழங்குவார். பணி[illegible] செயற்படுவது அவசியம். மாணவர்கள், கூடுதல் பயிற்சியால் [illegible]

# தேசத்தை மீட்போம்


ஈழதேசம் இனக்கலவர
நாடாக மாறியது ஏன்?
நேற்று வரை நெற்றிப்
பொட்டாக தென்பட்டது
இன்று
இரத்தச் சொட்டாக
மாறியது ஏன்?
வலிக்கிறது இதயம்
இன்றைய நிலையை
நினைக்க,
நெஞ்சம் பொறுக்குதில்லையே
மாதா!
கடலலைகள் இன்னும்
ஓயவில்லை....
விடிவெள்ளியும் இன்னும்
விழுந்துவிடவில்லை....
நம்பிக்கை இன்னமும்
ஒட்டியபடிதான்
நம்தேசம் உயிர்ப்போடு
மீளெழுவதற்கு ....
காத்திருப்போம்
அந்த நாளுக்காய்
தோழர்களே
தோள் கொடுக்க
வாருங்கள் - நம்
தேசத்தை அதிகாரத்தின்
பிடியிலிருந்து மீட்போம்

☐ எஸ்.தமிழ்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியை ஏமாற்றிய ஆமை



அடர்ந்த காட்டில் குள்ள நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த நரிக்குப் பெரிய அகம்பாவம். என்னைவிட ஏமாற்றும் பிராணிகள் இந்தக் காட்டில் இருக்க மாட்டார்கள் என நினைத்து மற்ற மிருகங்களை ஏமாற்றி அந்த மிருகங்களை வேட்டையாடி உண்டு மகிழ்ந்தது.

ஒருநாள் அந்தக் காட்டில் ஒரு மிருகத்தைக் கூடக் காணவில்லை. இதனால் நரி மிக வருத்தத்தாலும், பசியாலும் வாடியது. அந்த நரி ஏதாவது விலங்குகள் இங்கு வந்துதான் ஆக வேண்டும் என நினைத்து பல நேரமாக ஒரு குற்றியில் நின்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தது.

திடீரென நரி ஓர் ஆமையைப் பார்த்துவிட்டது. அந்த நரிக்கு மிகப்பெரிய சந்தோஷமாக இருந்தது. ஆமை நரியைக் காணாது மெது மெதுவாக நகர்ந்தது. நரி ஆமையின் அருகில் வந்தது. ஆமை அதைக் கண்டது. உடனே ஆமை திகைத்து நின்றது. நான் ஓட்டத்தில் கடைசி இடத்தைப் பிடிப்பவன். நான் எப்படி நரியிடமிருந்து தப்பிப்பது என நினைத்து உடனே தன் ஓட்டிற்குள் உடலை இழுத்துக் கொண்டது.

நரி ஆமையின் ஓட்டை உடைப்பதற்காக அதன் மீது பாய்ந்து குதித்தது. ஆமையில் ஒரு சிறிதும் உடையவில்லை. இதனால் ஆத்திரமடைந்த நரி ஆமையின் மீது கடினமாகப் பாய்ந்து கடித்தது. ஆமையின் ஓடு உடையவில்லை. பெரும் கோபம் கொண்ட நரி ஆமையை துக்கிச் சென்று பெரிய பாறையின் மீது ஏறியது.

பாறையின் மேல் இருந்த நரி தன் கையிலிருந்த ஆமையை பலமாக கீழே வீசியது. மகிழ்ச்சி அடைந்த நரி ஆமையின் ஓடு உடைந்திருக்கும் என நினைத்து கீழே சென்று பார்த்தது. கீழே ஒரு ஆமையைப் பார்த்த நரி அதிர்ந்து நின்றது. ஆமையின் ஓடு சிறிதும் உடையவில்லை. நரி பலமாக யோசித்தது. நரிக்கு ஒரு யோசனை தோன்றியது. நரி ஆமையிடம் கூறியது நான் உன்னை நெருப்பில் வீசப் போகின்றேன். நீ எரிந்து இறந்த பின் உன்னை நான் உண்கிறேன் என்றது. ஆமை கூறியது நரி அண்ணாவே என்னை நெருப்பில் போடாதீர்கள்.

அப்படிப் போட்டால் நான் இறக்கமாட்டேன். ஆகையால் என்னை ஏரியில் வீசி விடுங்கள் எனக்கூறியது.

அதற்கு ஆமை சொன்னது என்னை ஏரியில் வீசினால் நான் மூச்சுமுட்டி இறந்து ஏரியின் மேல் மிதப்பேன். நீங்கள் என்னை எடுத்து உண்டு பசி ஆறலாம் எனக்கூறியது. ஆமை கூறியதைக் கேட்ட நரி உடனே ஆமையை ஏரியில் வீசியது. ஆமை மகிழ்ச்சியில் ஏரியில் அடியில் சென்று விட்டது.

நரி ஏரியின் வெளியே காத்துக் கொண்டிருந்தது. பலமணி நேரம் ஆகிவிட்டது. ஆமை வெளியே வரவில்லை. சிறிது நேரத்தின் பின் ஆமை மேலே வந்தது. நரியிடம் கூறியது. முட்டாள் நரியே எனக்குப் பிடித்தது ஏரிதான் என்று உனக்குத் தெரியாதா என்றது ஆமை.

ஏமாற்றத்துடன் நரி அந்த இடத்தைவிட்டு அகன்றது. அன்றிலிருந்து நரியின் அகம்பாவம் உடைந்த கண்ணாடி போல் உடைந்து நொருங்கிவிட்டது.

க.மயூரன், சுழிபுரம்

# ஒழுக்கம்

பெற்றவர் இடத்தில் மரியாதை
பெரியவர் இடத்தில் மரியாதை
கற்றவர் இடத்தில் மரியாதை
காட்டி நடப்பது ஒழுக்கம் என்போம்

நன்மை பயக்கும் சொல்லோடு
நல்லோர் போற்றும் செயலோடு
உண்மை பேசும் துணிவோடு
உலகில் வாழ்வது ஒழுக்கம் என்போம்

மாறும் சுற்றுச்சூழல் நிலையில்
மாசுகள் செய்து கெடுக்காமல்
போற்றும் பொதுச் சொத்(து) அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்.


உதவிக் கரங்கள் நீட்டிடவும்
ஊரார் உன்னைப் போற்றிடவும்
பதவி பெருமை காத்திடவும்
பக்குவப்படுத்தும் ஒழுக்கம் என்போம்

சி.சு.வேத்தா
யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்


# தொகைச் சொல் வர்க்கம்

இருமுது குரவர் - தாய், தந்தை
இரு சுடர் - சந்திரன், சூரியன்
முப்பழம் - மா, பலா, வாழை
ஐங்குரவர் - அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்
ஐம்பொறி- மெய், வாய், கண், மூக்கு, செவி
ஐம்பூதம் - நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்
ஐம்பொன் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்
அறுசுவை - கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு
நவதானியம் - உழுந்து, எள், கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல், பயறு.


ப.அனோஜா, தரம் -9டி,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



எ.றிந்தியா,
தரம்-5சி,
C.G.C




யோ.அரவிந்தன்,
தரம்-5,
யா/ வீரசிங்கம் ஆ.பா.






சி.அகல்யா,
யா/இ.ம.க.



டிசாந்தன், தரம்-9ஏ,
கனகரத்தினம் ம.ம.வி.



எஸ்.அட்சயா,
எலிம் பாலர் பாடசாலை,
மானிப்பாய்.

## விடை தெரியுமா? 204

### உங்களுக்கும் பரிசுகள்

1. கனடா நாட்டின் தலைநகரம் எது?
2. காற்றின் வேகத்தை அறிய பயன்படுத்தும் கருவி எது?
3. யானையின் இளமைப் பெயர் என்ன?
4. வேகமாக வளரக்கூடிய தாவரம் எது?
4. கதிர்கள் ஊடுருவாத உலோகம் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 06.04.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 202

1. சுவிஸ்லாந்து
2. பிகாசோ
3. நியூசிலாந்து
4. [illegible]
5. [illegible]லாந்து

### வெற்றி பெற்றோர் விவரம் (202)


* ரா.றோய்ன்ஸ்றாஜ், தரம் -8, யா/ இ.றோ.க.ம.வி.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.

## வெளிப்படும் விம்பங்கள்



மதுவிழி

திருவிழா முடிந்திருக்கிறது. எல்லோரும் சேர்ந்து இழுத்த தேர் ஏதோ சரியான இடத்தை வந்தடைந்துவிட்டதாய் பல கற்பிதங்கள். வென்றது யார் தோற்றது யார் என்ற வேறுபாடே சரியாக புரிய முடியாத ஒரு இக்கட்டான தருணம். புத்திக்கு படுகின்ற மாதிரி எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய எதிர்வு கூறல்கள். அமெரிக்காவின் பெயரால் ஐ.நா. ஏதோ சாதித்துவிட்டதாயான புலம்பல்கள். இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றங்கள் காலம் கடந்தும் உறுதிப்படுத்தப்பட்டதாயான உதவாத கற்பனைகள். உண்மையில் இலங்கை அரசாங்கம் போர்க்குற்றங்கள் புரிந்திருந்ததா...அவ்வாறு புரிந்திருந்தால் அதில் ஐ.நாவின் பங்கு எவ்வளவு....? பிழை செய்வது குற்றமென்றால் அதை மூடிமறைப்பது என்பது அதைவிட எவ்வளவு பெரிய குற்றம்..? நீயே காவலன் என்று நம்பி வந்த பார்வையற்ற ஒருவனை பெருந்தீக்கிடங்கில் தள்ளி விழுத்தியது மாதிரி ஐ.நா. செய்த இந்த குற்றத்துக்கு என்ன தண்டனை..? எப்போது யார் வாங்கிக்கொடுக்கப்போகிறார்கள்..?

இலங்கையில் தேசிய அரசுக்கும் தமிழ் பயங்கரவாதம் என்று அரசால் கூறப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் இடையில் போர் உக்கிரம் அடைந்திருந்த காலம். இரண்டு தரப்பினருக்குமிடையில் சிக்குப்பட்டுக்கொண்டு மக்கள் உடைமைகளையும் உயிர்களையும் இழந்துகொண்டிருந்த நேரம். வன்னிப்பகுதிகளில் ஐ.நா. அலுவலர்களும் கடமையில் இருந்தனர். ஆனால் 2008 ஆம் ஆண்டின் மத்தியகாலப் பகுதியில் ஐ.நா. பணியாளர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியாது என்றும் அதனால் அவர்களை இலங்கையிலிருந்து வெளியேறும்படியும் அரசு கொடுத்த அறிவிப்பிற்கு அடங்கிபோய் பயந்தோ என்னமோ ஐ.நா. அமைப்புக்கள் வெளியேறிய போது தமிழர்களின் மனநிலையில் பெரியதோர் இடி விழுந்தது.

கிளிநொச்சியிலிருந்த ஐ.நா. அலுவலகம் முன்பாக பொது மக்கள் முற்றுகையிட்டு மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும், எங்களைத் தவிக்கவிட்டுவிட்டு போகாதீர்கள் என வேண்டிய போதும் ஏந்திய அத்தனை கரங்களையும் தட்டிவிட்டுப் போனது ஐ.நா. அதன் பின் நடந்தது என்ன? எப்படி நடந்தது என்பதெல்லாம் இங்கே விளக்கித் தான் மற்றவர்கள் அறியவேண்டுமென்றில்லை.

உண்மையில் ஐ.நா. சபை என்பது என்ன..? அதன் நோக்கம் என்ன என்று நோக்குவோமானால் இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவுற்றதன் பின்னர் பல்வேறு நாடுகளும் அளவுக்கதிகமான உயிரிழப்புக்களையும் உடைமையிழப்புக்களையும் மிகக் கொடூரமான முறையில் அனுபவித்திருந்தன. அத்தகைய ஒரு கொடூரத்தைக் கொடுக்கக் கூடிய இன்னுமொரு யுத்தம் ஏற்படாமல் நாடுகளைப் பாதுகாப்பதோடு நாடுகளிடையே நல்லுறவைப்பேணி சமூக பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தக்கூடிய செயற்றிட்டங்களை முன்வைத்து பூகோள ஒற்றுமையையும் செயற்பாட்டையும் முன்னெடுப்பதே ஆகும். அதனால் தான் இன்றுவரை ஒரு சர்வதேச பொதுமையமாக ஐ.நா. காணப்படுகிறது.

ஆனால், தமிழர்கள் விடயத்தில் ஐ.நா. செய்தது என்ன? சமமான விகிதத்தில் பாரபட்சமின்றி ஐ.நாவின் அகிம்சைக் கண் தமிழர்களை நோக்கியதா என்றால் அதற்கு இல்லை என்பதே பதில். இதற்கு மிக வலுவான ஓர் ஆதாரத்தை நாமிங்கு சுட்டிக்காட்டலாம். 2010 ஆம் ஆண்டு ஐ.நாவின் பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு ஒரு மின்னஞ்சல் வருகிறது, பதவி இராஜினாமா பற்றிய தகவலோடு. குறித்த மின்னஞ்சலை அனுப்பியவர் குறிப்பிட்ட அக்காலத்தில் புருண்டியில் தலைமை ஐ.நா. அலுவலராக இருந்த சார்ல்ஸ் பெட்ரி.சரி, அவர் ஏதோ தனிப்பட்ட காரணத்துக்காக பதவியை விட்டு விலகினாரோ என்னவோ என நீங்கள் நினைப்பது போல அவர் காரணத்தைக் குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிட்ட காரணம் நாங்கள் நினைத்ததற்கு முற்றிலும் மாறாக முரண்பாடாக இருந்தது. அப்படி அவர் என்ன காரணத்தைக் கூறினார்?

அவர் சுட்டிக்காட்டிய காரணம் இதுதான். ''ஐ.நா. தற்போது தொடர்ச்சியாக செயற்பாடற்ற நிலையிலிருக்கிறது. அதன் செயற்பாடு முன்பு போல இல்லை. ''எதுவுமே செய்யாதிருக்கின்ற நிலையில் நான் தொடர்ந்து இப்பதவியில் இருப்பதை விரும்பவில்லை எனக் குற்றம் சாட்டி அவர் தன் இராஜினாமாவிற்கான விளக்கத்தை அளித்திருந்தார். இந்த விடயத் ஐ.நா. தன்னைச் சுற்றி எழுப்பியிருந்த உயர்ந்த மதிலை முதன் முதலில் உள்ளிருந்தே உடைத்தது. இங்கு இன்னும் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம். சார்ல்ஸ் பெட்ரி 2007ஆம் ஆண்டு முதல் இலங்கையின் அரசியல் போர் நிலைமைகள் பற்றிய அசாதாரண விடயங்களை கவனிக்கும் ஐ.நா அலுவலராக பொறுப்பிலிருந்து செயற்பட்டவர். இவர் பின்னர் 2008ஆம் ஆண்டு இலங்கை அரசு ஐ.நா. அலுவலர்களை திரும்பப் பெறச்சொல்லி அறிவுறுத்திய போது பான் கீ மூனால் திரும்பப் பெறப்பட்டு சோமாலியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டவர். அதன் பின் பெட்ரி வகித்த பதவி இந்திய அதிகாரியான விஜய் நம்பியாருக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் ஐ.நா. என்ன நினைத்தது என்பது கொஞ்சம் தெளிவாகிறது.

இதுமட்டுமன்றி உயிரிழப்புக்கள் தொடர்பில் ஐ.நா. வெளியிட்ட தகவல்களும் உண்மை நிலையை குறைத்துக் காட்டவே நினைத்தது. ஆனால் உண்மைத் தரவுகள் பற்றி ஐ.நா நன்கு அறிந்தே வைத்திருந்தது. வேறு நாடுகளில் இத்தகைய தருணங்களில் ஐ.நா. குறிப்பிட்ட இழப்பு தொடர்பான தகவல்களை சரியாக வழங்கியுமிருக்கிறது. ஆனால் இலங்கை விடயத்தில் மட்டும் ஐ.நா. இதயசுத்தியுடன் செயற்படவில்லை. ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கை இறுதிப்போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை 40,000 என்கிறது. இப்போது மெல்ல மெல்லமாக அது 80,000 ஆக வளர்கிறது. இதை ஐ.நா ஏற்றுக் கொள்ள இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். எனினும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர்களால் கொடுக்கப்பட்ட எழுத்துமூல புள்ளிவிபரத்தின்படி 2008ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வன்னிப்பகுதியில் 429,059 பேர் வாழ்ந்ததாகவும், போரின் பின்னர் முகாம்களில் பெற்ற கணக்கெடுப்பின்படி 2009 ஆடியில் பதிவுசெய்த புள்ளிவிவரத்தோடு ஒப்பிடும்போது இறந்த மற்றும் காணாமற்போனோரின் தொகை 146,679 பேர் எனக் கூறுகிறது. இவற்றை வைத்து நோக்கும் போது தொகையை குறைத்து கூறுவதன் மூலம் போரின் உக்கிரத்தை உலக நாடுகளுக்கு குறைத்துக்காட்டவே ஐ.நா முயன்றிருக்கிறது என்றே தோன்றுகிறது.

அதுமட்டுமன்றி இலங்கை பாவித்த ஆயுதங்கள் பற்றி அன்றைய நாட்களில் பல குரல்கள் ஐ.நாவை நோக்கி நீண்டன. கொத்துக்குண்டுகள், கந்தகக் குண்டுகள் உள்ளிட்ட இரசாயன ஆயுதப்பாவனையை இலங்கையை குறைக்குமாறு அவை கோரின. ஐ.நா. செய்தது ''சிறிய ரக ஆயுதங்களைப் பயன்படுத்துங்கள்'' அவ்வளவு தான். ஒன்றாக இருந்த சாவு ஒன்பதாகியது. ''நீ எவ்வளவு பேரையாவது கொல் ஆனால் சத்தமின்றிக் கொல்'' என்பது போல அன்று ஐ.நாவின் கூற்று காணப்பட்டது. இங்கு நாம் இன்னுமொரு விடயத்தையும் கூறலாம். ஐ.நாவின் மனிதநேயப்பணிகளுக்கான முன்னாள் தலைவர் ஜோண் கோம்ஸ் கூறியிருந்த ஒரு விடயம் ''மக்களை பலிகொடுத்தாவது யுத்தத்தை வென்றுவிட வேண்டுமென்றே அரசு நினைத்தது'' என்பது. உண்மையில் இது அப்போதே அவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருந்தது தான். முள்ளிவாய்க்காலில் படுகொலை நடப்பதற்கு ஒருசில நாள்களிற்கு முன் போரின் தீவிரம், அரசின் நிலைப்பாடு எல்லாமே தெரிந்திருந்தும் தான் ஐ.நா. பேசாதிருந்தது. உண்மையைச் சொல்லப்போனால் உலகின் வல்லாதிக்க நாடுகளுக்கு கூட அச்சுறுத்தலாக இருக்கின்ற ஓர் அமைப்பு அழிவதற்காக எத்தனை பொதுமக்கள் இறந்தாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாடே வெளிப்பட்டது எனலாம். இத்தனையும் செய்து தமிழினப்படுகொலைக்கு உடந்தையாய் இருந்த ஐ.நா. இன்று போர் முடிந்து வழமை நாள்கள் திரும்பியதாக கூறப்படுகின்ற நாள்களிலும் என்ன செய்கிறது.?

யுனிசெப்பின்(unicef)காரின் குல்சாப் இலங்கை அரசின் மக்கள் நலப்பணிகள் உலகிற்கு ஒரு நல்ல முன்மாதிரி என்று பாராட்டுகிறார (13-10-2012) ஜோண் கிங் (01-08-2012) இலங்கையின் மனிதநேயப் பணிகள் உலகில் சிறப்பானவை என்று குறிப்பிடுகிறார். இப்போது அமெரிக்கத் தீர்மானமும் மீள்குடியேற்றம் தொடர்பான இலங்கையின் செயற்பாட்டை பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளது. எங்கள் வீடுகள் உயர் பாதுகாப்பு வலயங்களாகவும், பாரிய படை முகாம்களாயும் இருக்கின்ற சூழ்நிலையில் மக்களின் உண்ணாவிரதங்களும் போராட்டங்களும் திட்டமிட்டு இராணுவத்தினரால் சிதைக்கப்படுகின்ற செய்திகளுக்கு மத்தியில் இத்தகைய பாராட்டுக்கள் வழங்கப்படுகின்றன. உண்மையில் இந்த நாடுகள் நினைத்திருந்தால் போர் நடைபெற்ற காலப்பகுதியில் எம் மக்களைக் காப்பாற்றியிருக்க முடியும். ஓர் இனமே உணவின்றி குடிக்க ஒரு சொட்டு நீரின்றி இறந்துபோன போது கைகொடுத்திருக்கமுடியும். இன்றும் காடுகளிலும் அயலவர் வீடுகளிலும் வசிக்கும் எம் மக்களுக்கு மனவுணர்வுடன் உதவ யாருமில்லை. எல்லாம் தத்தம் நலன்நாடிய செயற்பாடே. இராஜதந்திர ஊடாட்டமே. தமிழரின் இரத்தத்தில் நடக்கும் சர்வதேச அரசியலே.


மொத்தத்தில் இலங்கை மட்டுமல்ல, ஐ.நா. என்ன, அமெரிக்கா என்ன எல்லோரும் குற்றவாளிகளே. முகத்தில் ஒட்டியிருக்கும் அழுக்கை புறங்கையால் மறைத்தபடி ஒப்புக்கு சிரிக்கும் பாசாங்குச் சிரிப்பு. காலின் கீழே ஓடி உறைந்த எம்முறவுகளின் இரத்தத்தின் வெம்மைப்பிசுபிசுப்பு இனி நடக்கும் சர்வதேச இராஜதந்திரப்போர். இடைநடுவில் மீண்டும் பகடைக்காயாய் தமிழர்கள்...! ★

> **இலங்கை மட்டுமல்ல. ஐ.நா. என்ன அமெரிக்கா என்ன எல்லோரும் குற்றவாளிகளே. முகத்தில் ஒட்டியிருக்கும் அழுக்கை புறங்கையால் மறைத்தபடி ஒப்புக்கு சிரிக்கும் பாசாங்குச் சிரிப்பு. காலின் கீழே ஓடி உறைந்த எம்முறவுகளின் இரத்தத்தின் வெம்மைப் பிசுபிசுப்பு இனி நடக்கும் சர்வதேச இராஜதந்திரப் போர். இடைநடுவில் மீண்டும் பகடைக்காயாய் தமிழர்கள்...!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 31/03/2013

# 'எங்களூர் பொங்கல்கள்'



## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்

**பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட்புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங்களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.**

'வளர்ந்து'' என்பது வளர்ச்சியை குறிக்கும் பதமாக நாம் கருத முடியும். கிராமத்தின் வளர்ச்சி தொடர வேண்டும்.

மக்கள் வாழ்வு இடைப்பட்ட காலத்தில் தானியத்தோடு இணைந்ததாகவே இருந்து வந்தது. உணவுத் தேடல் மிக முக்கியமான விடயம். பயிர் உழைப்பின் மூலமே உணவை சம்பாதிக்கமுடியும். இதற்கு தெய்வம் துணை நிற்கும் என அக்கால மக்கள் நம்பினார்கள்.

தெய்வத்தின் மூலம் விளைந்த தானியத்தை பொங்கு தெய்வத்திற்கு சமர்ப்பணம் செய்வதே ''வளர்ந்து'' குறித்து நிற்கிறது.

ஆனாலும் இந்த ஆண்டு விளைந்த தானியத்தைவிட அடுத்த ஆண்டு இன்னும் அதிகமாக தானியம் பெருக வேண்டும்' என்பதாலேயே "வளர்ந்து'' என இதை அழைத்தார்கள்.

பனை அறத்தியம்மன் கோயிலில் நானறிய ஏழு வளர்ந்துகள் பொங்கப்பட்டன. முன்னர் சொன்னது மாதிரி வளர்ந்து பானைகள் மண் பானைகள் தான். மண் பானைகள் இலகுவில் உடைந்து விடும். எனவே அவற்றை சரி பார்த்து வாங்கவேண்டும். பொங்கும் போது ஒன்று உடைந்து விட்டாலும் அது அபசகுனமாகப் போய் விடும். ஊருக்கே கேடு வந்து விடும் என்பது நம்பிக்கை.

மண் பானையை சரியாக சரிபார்த்து வாங்குவதில் அறத்தி அம்மன் கோயில் பூசாரியாண்ணை மிகவும் திறமைசாலி

அவர் சொல்வார்.




''சுண்டிப் பார்த்து வாங்க வேணும்''

எனக்கு சிரிப்பாக இருந்தது சுண்டினா சரியாகி விடுமா?

''சுண்டும் போது ''ணங்'' எண்ட நாதம் இழுபட வேண்டும்''

''இழுபடாட்டா?''

''அது கூடாத பானை''

நானறிய அறத்தியம்மன் பொங்கலில் வளர்ந்துப் பானை பிளந்தன இல்லை. வாழ்க்கையும் செழிப்பாகவே இருந்தது.

ஒருமுறை பூசாரியார் நடேசண்ணையிடம் கேட்டேன்.

'' அண்ணை வளர்ந்துப் பானை எப்படி வேணும் உடைஞ்சிருக்கோ''

அவர் என்னைப் பார்த்து இலேசாக ஒரு சிரிப்பை மட்டும் செய்தார். அதில் நிறைய அர்த்தங்கள் இருந்ததாக எனக்கு தோன்றியது.

அம்மம்மா சொல்வார்

"அவன் ஏதோ மந்திரம் சொல்லித்தான் வளர்ந்து நேருவான் அதுதான் உடையிறேல்லை''

மந்திரம்- ஒரு தமிழ் பூசாரியாரிடம் என்ன மந்திரம் இருந்திருக்கப் போகின்றது. எனக்கு அதில் இப்பொழுதும் உடன்பாடில்லை.

வளர்ந்து நேரும் போது நடேசண்ணை அதிகாலை மூன்று மணியளவில் அறத்திக் குளத்தில் தலை முழுகி ஈர வேட்டியுடன் வளர்ந்து நேர்வார்.

வளர்ந்து நேரும் காட்சி பார்க்க அற்புதமாக இருக்கும்.

ஒவ்வொரு திக்கும் நோக்கி அம்மனை வேண்டி அத்திக்குகளில் வாழும் மக்களுக்குரிய அருளை வழங்குமாறு வளர்ந்துப் பானைகளை கையில் வைத்துக் கொண்டு பிரார்த்தனை இடம்பெறும்.

பூசாரியார் ஒவ்வொரு வளர்ந்தாக பிரார்த்தனை செய்த பின் பொங்கல் தொடங்கும்.

வீட்டில் யாராவது பிள்ளைகள் ஏதாவது விடயத்தை செய்து தரும்படி அடம் பிடித்தால்- அது பெற்றோரின் விருப்பம் அற்ற செயலாகவும் இருந்து விட்டால் மறுப்பு தெரிவிப்பார்கள். பிள்ளை முற்றத்தில் நின்று முனகுவான். உடனே யாராவது பெரியவர் குறிப்பாக தாய் சொல்வாள்.

"என்னடா வளர்ந்து நேர்ந்து கொண்டிருக்கிறாய்

ஒண்டும் செல்லாது அங்காலை போ''

என்று திட்டு விழும். வளர்ந்து மக்கள் சொற்களோடும் பேச்சோடும் கலந்த நிகழ்வாக மாறி இருந்தது.

பொங்கலுக்கு போவதென்றால் எங்கள் பாடு கொண்டாட்டம் தான். காலையில் தலைமுழுகி ஆவலாக, தைத்த புது உடுப்பை போட்டுக் கொண்டு போய்விடலாம். இது முன்னர் சொன்னது தான்.

எனக்கு இந்த பொங்கும் நேரம் போக ஆசை. சின்ன வயதில் கேட்டால் அடி தான் நடக்கும். A/L படிக்கும் போது எந்த மாதிரியோ ஒரு வாய்ப்பு வந்தது. நல்ல அனுபவம் தான்.

அனுபவம் என்றதும் ஒரு கதை ஞாபகம் வருகின்றது.

ஏழு அல்லது எட்டாம் வகுப்பாக இருக்கும். படித்துக் கொண்டிருந்த காலம்.

எனக்கு எல்லா தரப்பிலும் நண்பர்கள் இருப்பார்கள். பள்ளிக் கூடம், ரியூசன், கடையடி, சந்தையடி, இது போதாதென்று அறத்தி மணக்காட்டில் மாடு மேய்க்கும் மூன்று நாலு பொடியன்கள். அவர்கள் பெயர்கள் ஞாபகம் இல்லை. வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் சம்பளத்துக்கு மாடு மேய்ப்பார்கள். எனக்கு தோட்டம் போகும் போது நட்பாகி விட்டார்கள்.

பெயர் ஞாபகம் வருகின்றது ஒருவன் முத்து- கிளிநொச்சி திருவையாற்றை சேர்ந்தவன். மிகவும் ஒடிசலான தேகம், பார்க்க பாவமாக இருக்கும். பள்ளிக் கூடம் போக மாட்டார்கள். மற்றவர்களில் ஒருத்தன் - '' கப்புறாளை'' என்ற பட்டம் கொண்டவன், மூக்கினால்தான் கதைப்பான். மற்ற இருவரும் அவனை அப்படித்தான் கூப்பிடுவார்கள்.

மூன்றாமவர் சௌந்திரராஜன் என்ற "ராசு"

'' என்ரை அப்பாவுக்கு சௌந்திரராசனின் பாட்டு நல்ல விருப்பம் அதுதான் இந்தப் பேரை வைச்சவர்.

இவர்கள் சிறு தூண்டில் வைத்திருப்பார்கள் அறத்திக் குளத்திலோ சாலைக் குளத்திலோ கட்டுக்கரைக் குளத்திலோ மீன் பிடித்து- பின் அதை சுட்டுச் சாப்பிடுவார்கள். கூடவே காற்சட்டைப் பைக்குள் உப்பு வைத்திருப்பார்கள். உப்பை தடவி சாப்பிடுவார்கள்.

'' அண்ணே நீங்களும்

ஒருக்க வாங்க மீன் சுட்டு

தெல்லாம் சுப்பரா இருக்கும்''

எனக்கு ஒரு மாதிரி இருந்தது. மீனை சுட்டு சாப்பிடுவதா?

"அண்ணே சாப்பிட்டா விடமாட்டீங்க

நாளைக்கு எப்பிடியும்

வாங்க உங்களுக்கு

நாங்க விருந்து

வைச்சுக் கொடுக்கிறம்''

நானும் அவர்களது ஆசை வார்த்தைகளில் எடுபட்டு சுட்ட மீனின் சுவையை அறிய ஒருநாள் தோட்டக் காவலில் இருந்து தப்பித்து மணற் காட்டிற்கு போனேன். அவர்கள் சொன்னது மாதிரி கொஞ்சம் உப்பும் தூளும் அம்மாவுக்கு தெரியாமல் எடுத்துக் கொண்டேன்.

நான் போய்ச் சேர அவர்கள் ஒரு பத்து மீன் பிடித்து விட்டார்கள். எல்லாம் ஜப்பானும், கெளிறும். கெளிறு மீசையுடன் வடிவாக இருந்தது. முத்து முழுப் பல்லும் தெரிய சிரித்தான்.

''வாங்கண்ணே நீங்க வருவீங்க

எண்டு தெரியும்''

தோட்டக் காவலில் நிற்கம் போது நிறைய புளுக் கொடியல் அவர்களுக்கு கொடுத்திருக்கிறேன். அந்த நன்றிக் கடன்தான் இது. கப்புறாளை என்னிடம் உப்பையும் தூளையும் வாங்கி மீனின் உடல் முழுவதும் பூசி ஒரு தடியில் குத்திக் கொண்டான்.

ராசு பனை ஓலைகளைப் போட்டு தீ மூட்டினான். கப்புறாளை அத்தீயில் மீன்களை வாட்டத் தொடங்கினான். ஒரு விதமான வாசனை எழத் தொடங்கியது. அது நல்ல வாசனையா கெட்ட வாசனையா ஆரம்பத்தில் புரியவில்லை.

''அண்ணே சுடச்சுட சாப்பிட வேணும் சாப்பிடுங்க''

என்று முத்து முதல் மீனைத் தந்தான்.

(பொங்கல் இனியும்...)

# சாவை வென்றவன்

செங்கதிரும் வெண்ணிலவும் சேர்ந்தே ஒளிர்ந்தது
தன்னலமாம் இருளகன்று பொதுநலமே புலர்ந்திட
வஞ்சகரின் செயலகன்று வெற்றியுடன் எழுந்தார்
மாதவன் எழுந்தான் மாபரன் எழுந்தான்
எட்டுத் திக்கும் தனிமுரசு ஒலிக்க
பட்டுத் திங்கள் பனிஒளி பரப்ப
மூட்டும் படையென வானவர் சேர
பட்டின் உடலென மாபரன் உதித்தான்
வீசும் காற்றும் தத்தும் கடலும்
செந்நெல் வயலும் சோலை மலரும்
சோகம் மறந்து சுகந்தம் பெருக
சாவை வென்ற சத்தியன் எழுந்தான்
சங்கத் தமிழும் உன்புகழ் பாடும்

பொங்கும் அலையும் உன்னடி பணியும்
கங்குல் முகடும் பொன்னொளி பரவ
செங்கதிர் சுடரென மாதவன் உயிர்த்தான்
ஆயினை மக்கள் இடையாரும் மகிழ
அலைகடல் மீனவர் துள்ளியே களிக்க
மேழியைப் பிடித்தவர் அகமே மகிழ
பாறைப் பிளந்தொரு முளையென எழுந்தான்
புள்ளும் பூவும் புதுயுகம் காண
கல்லும் கனியும் யுகமாய் மாற
சாவை வென்ற சத்தியன் எழுந்தான்
சாவை வென்ற சத்தியன் எழுந்தான்



-பிரபா, குருநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தியல் வெளி

## சி. விமலனின் கிளை நதியின் பிரவாகம்

■ ந.மயூரரூபன்

சின்னராஜா விமலனின் கட்டுரைத் தொகுதி "கிளைநதியின் பிரவாகம்" நமது இலக்கியச் சூழலில் இலக்கிய விமர்சனக் கட்டுரைகளால் அறியப்பட்டவர் இவர். மல்லிகை, ஞானம் போன்ற பிரபல்யமான மகஸின்களின் மாதிரியாய் இப்போதும் தவறாமல் வெளிவரும் 'ஜீவநதி' எனும் சஞ்சிகையில் முதல் பன்னிரண்டு இதழ்களின் இணையாசிரியர்களில் ஒருவராய் இருந்தவர். அடிப்படை இதழியல் நெறிக்கு விரோதமாகவும், தமது தார்மீக கடமையையும் மறந்து இவருக்கு அறிவிக்காமல் துணையாசிரியராக புதிதாக ஒருவரை ஜீவநதியின் ஆசிரியர் நியமித்தமையால் மனங்கசந்து அக்குழுவிலிருந்து வெளியேறியவர்.

இவரது இத்தொகுதியைப் பார்க்கின்றபோது விமலனின் தீவிர வாசிப்பின் கணங்களை காண முடிகிறது. புத்தகங்கள் மீது தீவிர பற்றுக் கொண்டவர்; அதிக புத்தகங்களையும் சேகரித்து வைத்திருக்கிறார். நாவல்கள், சிறுகதைகள் மீதான இவரது பரந்த வாசிப்பைக் காண முடிந்தாலும் கவிதைகள் மீதான இவரது வாசிப்பைக் கட்டுரை களில் காண முடியாமை சற்று ஏமாற்றமே.

1

"ஒவ்வொரு நாளும் 'தானே' இல் எண்ணிறைந்த அழகுகள் மூழ்குகின்றன. யாருமே அதைக் கவனிப்பதில்லை. அப்படி அதைக் கவனிக்கும் ஒருவர் அவற்றைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டும். அதாவது, தன்னால் எத்தனை முடியுமோ அத்தனை அழகைக் காப்பாற்ற கட்டாயம் முயல வேண்டும். அதுதான் உண்மையில் ஒரு கலைஞனின் பங்களிப்பு."

இது செம்பிய நாவலாசிரியரான 'மிலோராட் பாவிக்' இன் கூற்று ஒரு படைப்பாளியின் வேலை இதுதான்.

விமலனின் படைப்பின் கூறுகளை - அழகை வெளிப்படுத்தலை இந்தக் கட்டுரைகளில்காணலாம். ஒரு கலைஞனின் மனம் இவரது தொகுதியில் வெளிப்படுகிறது.

ஈழத்து இலக்கிய விமர்சன வெளியில் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரது கருத்தியல் செல்வாக்கினை நாம் அதிகம் கண்டிருக்கிறோம். விமலனின் எழுத்துகளிலும் அதற்கான அடிப்படை களை அதிகம் காணலாம். "பேராசிரியர் கைலாசபதியும் தெளிவத்தை ஜோசப்பும்", 'காலமறிந்து கூவிய சேவல்; ஈழநாடு சிறுகதைகள்' என்ற இந்த இரண்டு கட்டுரைகளிலும் கைலாசபதி மீதான ஆழ்ந்த ஈடுபாடு வெளிப்பட்டு நிற்கிறது.

ஓர் எழுத்தாளனின் எழுத்துகளை வாசிக்கிற போது அவன்- அது கொண்டிருக்கிற கருத்தியல் தளம் முன்னிலைப்படுகிறது. முன்னிலைப்படுத்தப்படுகிறது. ஒருவன் கருத்துருவத்தை உருவாக்குவதன் மூலமே தன் சுயத்தினை கட்டமைத்துக் கொள்கிறான். அவன் அகவயத்துடன் வாழ்கிறான் என உணரும் நிலை அவனுக்கான பிரக்ஞையைத் தருகிறது. இதேபோல் நிறுவனமயப்படுத்தப்பட்ட கருத்தியல்கள்; ஒருவனுடைய சுயத்தினை அழித்து விடுகின்றன. மதங்களின் ஆகமங்கள் மத ஒழுக்க கருத்து நூல்கள் என்பன செய்வதும் இதுதான். அதாவது ஆண்டவனிடம் போய் சேருதல் என்பது 'சிறுதன்னிலையிலிருந்து' பெரிய தன்னிலையில் சேருதல் என்பதாகிறது. ஜெயந்தின் 'ஆமென்' எனும் வார்த்தை (அப்படியே ஆகட்டும்) தனிமனிதக் குணத்தை இழக்கச் செய்கிறது.

இங்கு விமலனின் கருத்து நிலை என்ன என்கிற கேள்வி எழுகிற போது; கூறப்பட்ட வழிமுறையினூடாக குறித்த கருத்தியலை நிறுவுகின்ற தன்மை முதன்மைப்படுகிறது. அத்துடன் இலக்கியச் சர்ச்சைத் தன்மையைக் (Polemical) கொண்டு செல்லக்கூடிய போடியும் இவரிடமுண்டு. அதற்கு இவரது முதலாவது கட்டுரையை உதாரணமாகச் சொல்லமுடியும்.

இலக்கியத்தை நுகர்வுப் பண்டமாகப் பார்க்கிற கருத்து நிலையுடன் பயணிப்பவர்விமலன்.

("சாதாரண வாசகர்களின் நுகர்வுத்தனத்தை எந்தளவுக்கு திருப்தியுறச் செய்கிறதென்பதில் இன்றுவரை ஏகோபித்த கருத்து நிலை இருந்ததில்லை"- நித்தில வர்ணனின் புத்தாக்கச் செருகேடு) இதே போல் ஒரு மாபாரந்த இலக்கியச் சட்டகத்தினை தனக்குள் வைத்திருக்கிறார். (மனுக்குலத்தினை மேம்படுத்தலும் சமூக விடுதலையை அவாவி நிற்பதும் இலக்கியத்தின் அடிநாதமாக விளங்கும் பட்சத்திலேயே படைக்கப்படும் இலக்கியங்கள் காலத்தை விஞ்சி நிற்கும் தன்மை வாய்ந்தனவாக திகழ்கின்றன" படைப்புக்களில் செவ்விதாக்கம்)

ஈழத்தின் பெருங்கதையாடல்கள் கொண்டிருக்கும் கருத்தியலோடு இணைந்திருக்கும் அகத்தை விமலன் கொண்டிருக்கிறார்.

2.

"செவ்விதாக்கம்" என்பது தொடர்பாக கொண்டிருக்கக் கூடிய விமலனின் கருத்து, அவரது சுயத்தினை இலக்கியப் பிரக்ஞையை அடையாளப்படுத்தும் ஒன்றாக அமைகிறது. அடிப்படையில் படைப்பின் உயிர்நாடி சிதைந்து போகாவண்ணம் அதனை மெருகூட்டுவதே செவ்விதாக்கம் ஆகும். எந்தவொரு பத்திரிகை ஆசிரியரோ, சிற்றிதழ் ஆசிரியரோ தெரிந்து கொண்டே ஒரு படைப்பின் தரத்தைக் குறைத்துக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட முனைய மாட்டார்கள். அதற்குப் பெயர் செவ்விதாக்கமும் அல்ல"

(2011- சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை) ஆனால், 'ஜீவநதி இரண்டாவது இதழில் என்னுடைய சிறுகதை ஒன்று; செவ்விதாக்கம் என்ற பெயரில் சஞ்சிகையின் போசகர்களாக இருக்கும் தெணியான், கலாமணி ஆகியோரால் கதையின் இறுதி 40% பகுதி வெட்டப்பட்டு அவர்களின் கருத்து அறியச் சுவையூட்டப்பட்ட எழுத்துக்கள் சேர்க்கப்பட்டும், கதையின் தலைப்பு மாற்றப்பட்டும் வெளி வந்த போது விமலன் இணை ஆசிரியர்களில் ஒருவராகஇருந்துள்ளார்.


இங்கு இதனைக்குறிப்பிடுவது ஒரு சஞ்சிகையின் தார்மீகப் பிறழ்வைக் குறிப்பிடுவதற்காகவும், விமலனின் காத்திரமான தீர்மானிக்கும் பொறுப்பு பயன்படுத்தப்படவில்லை- அவரால் வெளிப்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிடுவதற்குமே. அவ்வாறு விமலை பயன்படுத்திருந்தால் ஜீவ நதியின் வெளிப்பபாடு தற்போது சற்றேனும் திருப்தியானதாக அமைந்திருக்கக் கூடும்.

3

விமலனின் எழுத்துக்களின் இன்னொரு முக்கியபண்பு; படைப்பாளிகளின், விமர்சகர்களின், கோட்பாட்டாளர்களின் கருத்துக்களை சான்றுகளுடன் வெளிப்படுத்துவதும் அவற்றை நிறுவுவதுமே. அதே போல் விமர்சகர்கள் கொண்டிருக்கக்கூடிய ஒருநடுநிலையின் இழையினையும் இவரது எழுத்துகளில் காணலாம்.

ஒருபடைப்பாளியின் முன்னைய கூற்றுக்கள், தற்போதைய வெளிப்படுத்தல்களில் முரண்படுகின்றபோது அதனை உரிய சந்தர்ப்பத்தில் ஒப்பிட்டு எடுத்துக்காட்டும் தன்மை இவருக்குத் தனித்துவமாக அமைந்துவிட்டிருக்கிறது. குறிப்பாக உமாவரதராஜனின் 'மூன்றாம் சிலுவை' தொடர்பான பதிவில்; மூன்றாவது மனிதன் (2000) சஞ்சிகையில் உமாவரதராஜன் வழங்கிய நேர்காணலிலும் மூன்றாம் சிலுவைபடைக்கப்பட்ட உணர்வு நிலையையும் ஒப்பீடு செய்து கேள்விக்குள்ளாக்குவது அழகு.

"கலை மக்களுக்காகவே" என்ற கருத்தியலுடன் பயணிக்கும் விமலன்; நவீன இலக்கியங்கள் மீதான சற்று எதிர் மறையான விமர்சனங்களைக் கொண்டிருப்பவராக இங்கு அடையாளப்படுத்திக் கொண்டாலும் இவரது எழுத்துக்கள், படைப்புக்கள் மீதான புதிய கதவுகளை திறப்பனவாகவே அமைகின்றன. ★




ஓர் எழுத்தாளனின் எழுத்துக்களை வாசிக்கிற போது அவன்- அது கொண்டிருக்கிற கருத்தியல் தளம் முன்னிலைப்படுகிறது. முன்னிலைப்படுத் தப்படுகிறது. ஒருவன் கருத்துருவத்தை உருவாக்குவதன் மூலமே தன் சுயத்தினை கட்டமைத்துக் கொள்கிறான். அவன் அகவயத்துடன் வாழ்கிறான் என உணரும் நிலை அவனுக்கான பிரக்ஞையைத் தருகிறது. இங்கு விமலனின் கருத்து நிலை என்ன என்கிற கேள்வி எழுகிற போது; கூறப்பட்ட வழிமுறையினூடாக குறித்த கருத்தியலைநிறுவுகின்றதன்மை முதன்மைப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடங்கள் பல புனைந்து அசத்திய பெரு நடிகர்

சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்

■ வயாவிளான் தவமைந்தன்




ஈழத்தமிழரின் நாடக வரலாற்றில் இடம் பிடித்த நாடகங்களையும் நடிகர்களையும் நெறியாளர்களையும் நாடக எழுத்தாளர்களையும் ஒப்பனையாளர்களையும் நினைவு கூர வேண்டியதும் பாராட்ட வேண்டியதும் எமது கடமையே. ஏனெனில் வசதிகள் குறைந்த அந்தக் காலத்தில் அவர்கள் கலை ஆர்வத்தினாலும் நாடகக் கலை மீது கொண்ட அளவற்ற பற்றினாலும் தமது சொந்தப் பணத்தையே செலவு செய்து நாடகங்களை வளர்த்தெடுத்தமை போற்றப்பட வேண்டியதே.

இந்த வரிசையில் எமது நாடக வரலாற்றில் இடம்பிடித்த சிறந்த நாடகமாகக் கருதப்படும் திப்பு சுல்த்தான் எனும் புகழ் பெற்ற ஆற்றுகையில் கதாநாயகனாகத் தோன்றி பாத்திரத்தின் பெயரையே தனது பெயராக்கிக் கொண்ட இணையற்ற நடிகராகவும் யாழ்.நாடக அரங்கக் கல்லூரியின் நிறுவுனர்களில் ஒருவராகவும் தென்னிந்தியத் திரைப்படங்கள் சிலவற்றில் நடிக்கும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொண்ட கலைஞராகவும் நாடக நெறியாளராகவும் கடந்த அரைநூற்றாண்டிற்கும் மேலாகக் கலைப்பணியாற்றி வருபவர் கலைவாரிதி சு.லோகநாதன்

மறைந்த சுப்பிரமணியம் - நவமணி தம்பதியரின் மகனாக 10.11.1935 இல் வண்ணார் பண்ணையில் இவர் பிறந்தார். யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, வழாலை மத்திய மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கல்வி கற்று எஸ்.எஸ்.சியில் சித்தியடைந்தார். சிறந்த மிருதங்கக் கலைஞராகவும் இசை இரசிகராகவும் இருந்த இவரது தந்தையார் தனது பொழுது போக்கிற்காக கிராமபோனில் பாடல்களைக் கேட்டு வந்த போது அவற்றை மனப்பாடம் செய்து பாடல்களைப் பாடியும் இடையிடையே வருகின்ற வசனங்களை அதே போல் பேசியும் இயல்பாக இருந்த தனது கலைத்திறனை வளர்த்து வந்தார்.

நடிப்புக் கலையில் அதிக ஆர்வம் கொண்டிருந்த இவர் அந்தக் காலத்தில் நாடகக் கலையில் பெயர் பெற்ற நடிகரான எஸ்.சரவணமுத்துவின் நெறியாள்கையில் உருவான காலவருஷி என்னும் நாடகத்தில் இந்திரன் பாத்திரமேற்று முதல் முதலாக நடித்துப் பள்ளிப் பருவத்திலேயே சிறந்த நடிகன் எனும் பெயரைத் தனதாக்கிக் கொண்டது டன் ஈழத்தின் நாடக உலகில் ஆளுமை கொண்ட நடிகராகவும் காலடி பதித்துக் கொண்டார்.

1956இல் இருந்து சில ஆண்டுகள் கொழும்பில் வாழ்ந்த காலத்தில் வானொலி நாடகங்களிலும் மேடை நாடகங்களிலும் அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்த நடிகர்களோடு இணைந்து நடித்து நாடகத் துறையில் ஆழக் கால்பதித்த இவர் 1960ஆம் ஆண்டிலிருந்து தனது கலைப் பணியை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வந்தார்.

1960களில் வண்ணை. கலைவாணர் நாடக மன்றத்தின் நாடகப் பணிகளில் இணைந்து, அம்மன்றத்தால் தயாரிக்கப்பட்ட முக்கியமான நாடகங்கள் அனைத்திலும் பிரதான பாத்திரமேற்று நடித்து வந்தார். அவற்றுள் திப்பு சுல்த்தான், சரியா தப்பா, மண்மேல் ஆணை, இடிந்த கோயில், மிஸ்ரர் கந்தப்பு என்னும் நாடகங்கள் முக்கியமானவைகள் ஆகும். இவற்றுள் திப்புசுல்த்தானாக இவர் நடித்த முறைமைகளும் இவரால் கையாளப்பட்ட அரங்க உத்திகளும் இவரைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றது எனலாம்.

அத்துடன் மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் தயாரித்து 1970களில் மேடையேற்றிய குழந்தை ம.சண்முகலிங்கத்தின் வையத்துள் தெய்வம் எனும் நாடகமானது எஸ்.ரி.அரசுவால் நெறிப்படுத்தப்பட்டு மாபெரும் தயாரிப்பாக மேடையேறிய போது சித்தர்களுள் ஒருவராக நடித்துப் பாராட்டப்பட்டவர். அதே போல் நாடக அரங்கக் கல்லூரியால் மேடையேற்றப்பட்ட கோடை, கூடி விளையாடு பாப்பா, பொறுத்தது போதும், கந்தன் கருணை போன்ற வரலாற்றுப் படைப்புக்களிலும் நடித்து நடிப்புக் கலையில் நிரந்தரமானதோர் இடத்தைத் தனதாக்கிக் கொண்டவர்.

பைலட் பிரேம்நாத், நான் உங்கள் தோழன், நெஞ்சுக்குத் தெரியும் போன்ற தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் மட்டுமல்லாமல் ஈழத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களிலும் நடித்த இவர் கொக்குவில் கலாபவனம், கீதாஞ்சலி நடன மன்றம், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், யாழ்.இரசிக ரஞ்சனசபா, யாழ்.வித்துவசபா, போன்ற இசை, நடன மன்றங்களின் கலைச் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர்.

## திப்புசுல்தான் லோகநாதன்

பாடசாலை மாணவர்களுக்கான நாடகங்களை எஸ்.ரி.அரசுவுடன் இணைந்து நெறிப்படுத்தி மேடையேற்றிய இவர் தனியாகவும் அவ்வாறான நாடகப் பயிற்சிகளை இன்று வரை வழங்கி வருகின்றார். 1962இல் இருந்து 1995 வரை யாழ்.மாநகர சபையில் மின்சாரப் பகுதியில் பணியாற்றிய இந்தக் கலைஞர் ஆலய, சமூகப் பணிகளிலும் தற்போது பெரு விருப்புடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

பல விதமான தொழில்களைச் செய்வோர் தமது தொழிலை முடித்த பின் ஒன்று கூடி இரவிரவாக ஒத்திகைகளை மேற்கொண்டு நாடகங்களை மேடையேற்றிய காலம் மலையேறி விட்டது. கால மாற்றம் என்பது எவரும் எதிர்பார்த்திராத மாற்றங்களையும் வாழ்வியல் முறைமைகளையும் புதிது புதிதாக எம்மிடையே தோற்றுவித்துள்ளமை எமது கலை, பண்பாட்டு மரபிலும் தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன என்றே நான் கருதுகின்றேன்.

எனது இளமைக் காலத்தில் பல நடிகர்களுடன் இணைந்து விடிய விடிய ஒத்திகை பார்த்து நாடகங்களை மேடையேற்றிய அனுபவங்கள் இன்றும் அடிமனதில் தேனாகவே இனிக்கின்றன. தயாரிப்பாளர், நெறியாளர், நடிகர் என்னும் வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் ஒன்றாகச் சென்று நோட்டீஸ் ஒட்டுவதில் இருந்து கடைகளுக்கும் வீடுகளுக்கும் சென்று நுழைவுச் சீட்டுக்களை விற்பது வரையான அனைத்தையும் நாடகப் பணியாகவே மகிழ்வுடன் மேற்கொண்டோம்.

நாடகங்கள் வெற்றி பெற்று மக்களாலும் பெரியோராலும் பாராட்டப்பட்ட போது பாடுபட்ட அனைவரும் அகம் குளிர்ந்து புத்துணர்வு பெற்று அடுத்த நாடகத் தயாரிப்பில் மிடுக்கோடு செயற்பட்டோம். இவ்வாறானதொரு நிலை இன்று இல்லை என்பது உண்மையில் வேதனைக்குரியதே என்று நெகிழ்ச்சியுடன் கூறுகின்றார் நடிகர் ரி.எஸ்.லோகநாதன்.

## பால(க)ச் சந்திரனுக்கு .....



செழித்த அழகு .....
தளிர்த்த புலர்வு .....
விழித்த போதெல்லாம்,
அழியாத நிறைவு !

நெஞ்சைப் புண்ணாக்கி
வெஞ்சமரில் வேகிய - எங்கள்
பிஞ்சுப் பாலகை
கொஞ்சம் நினைக்கையில் .....!

அரசியல் எனும்
அசிங்கத்துக்கப்பால்
சிரசு வெடித்த
சின்ன (ன்/ம்) இது .....!

இயக்க சாயமே
இல்லாத மழலையை
வியக்கும் அப்பாலகு
வினை என்ன செய்தது.....?

வண்ணப் பாலகை
உண்ணக் கொடுத்து
உடலைக் கொன்ற
சின்னத் தனமான எண்ணங்கள் .....
இனிமேல் சீரழியும் .....!

ஆலம் விழுதாகும் - இந்த
பால(க)ச் சந்திரனின்
கோலத்தைக் கண்டும்

கொலை செய்ய நினைத்த
தலை கெட்ட வெறியனே - உனை
தாங்காது இந்த பூமி !

கடல் கடந்து திடம் கொண்டு
உடலத்தை எரிப்பவனுக்கு
தடயங்கள் புரியும் - எம்
தடங்கல்கள் தெரியும் .....!

க்ட்சிகளைக் காப்பாற்றிக் கொண்டு
முடிவற்ற இராச்சியத்தில்
மடிந்து மடிந்து
ஒடிந்து போகின்ற வாழ்க்கை .....

நரக வித்தையில் .....
நகர்ந்த மனிதா
இரக்கம் இல்லையா
இந்த ''முத்தை'' முடித்த மூடன்
இத்தறிக்கும் செத்திருப்பான் .....

- மானிப்பூர் ரட்ணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிக்கலுக்குள்ளாகும் வடக்குத் தேர்தல்



■ அதிரன்

"எமது தலைமைத்துவத்தை நோக்கி ஆயுதத்தைக் குறி வைத்த ஒரு நிர்வாகத்தை நாம் அனுமதிக்க முடியுமா? திட்டம் தீட்டி எதிராகச் செயற்படும் மாகாண நிர்வாகத்தின் கருணையில் செயற்பட நாம் தயாராக இல்லை. வடக்கில் அல்லது கிழக்கில் பகைமை கொண்ட மாகாண நிர்வாகம் ஒன்று உருவாகுமானால் போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய நல்லிணக்கத்துக்கு இது பாதகமாக அமையும். அப்படியான ஒரு நிர்வாகமானது தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட மரபு ரீதியான இராணுவ சவாலுக்கு இணையானதாகவே இருக்கும்"

இவ்வாறு தெரிவித்திருப்பவர் வேறு யாருமல்லர். ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவே இப்படிக் கூறியிருக்கிறார்.

வடக்குத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பரில் நடத்துவதாக இலங்கை அரசு ஜெனிவாவில் உறுதியளித்திருக்கும் நிலையில் இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரியும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருக்கும் இந்தக் கருத்து பல்வேறு சந்தேகங்களை கிளப்புகிறது. வடக்குத் தேர்தலை விரைவில் நடத்துவோம் என்று ஜனாதிபதி தொடர்ந்து கூறி வரும் நிலையில் பாதுகாப்புச் செயலரோ அதற்கு முற்றிலும் மாறாக வடக்குத் தேர்தலை இப்போது நடத்தக் கூடாது என்ற தோரணையில் அடிக்கடி கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

அண்மையில் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே கோத்தபாய இதனைக் கூறியிருக்கிறார்.

செப்ரெம்பரில் வடக்கு மாகாணத்துக்கான நிர்வாக முறை உருவாக்குவதற்கான தேர்தல் நடைபெறும் என சர்வதேச சமூகமும் இந்தியாவும் வடக்கு மக்களும் எதிர்பார்த்திருக்கும் நிலையில் கோத்தபாயவின் இக்கூற்று அந்தத் தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் இல்லை என்பதையே மறைமுகமாக வெளிப்படுத்துகிறது என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

வடக்கு மாகாணத் தேர்தலை நடத்துவதற்காக எழுத்து மூல அறிவித்தல் எதுவும் இதுவரை தனக்கு ஜனாதிபதியிடம் இருந்து கிடைக்கவில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அண்மையில் கூறியிருந்தார். வடக்கு - கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்னர் கிழக்கில் இரண்டு தடவை மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு விட்டது. ஆயினும் வடக்கில் இதுவரை மாகாண சபைத் தேர்தல் நடைபெறவில்லை. மாகாண சபை ஒன்றுக்குப் புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் அது தொடர்பில் ஜனாதிபதி எழுத்து மூலக் கோரிக்கையை தேர்தல் திணைக்களத்துக்கு வழங்க வேண்டும். ஒரு மாகாண சபைக்கு தேர்தலை நடத்துவதானால் அது நடைபெறும் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே தேர்தல் திணைக்களம் அதற்கான பணிகளை ஆரம்பிக்க வேண்டும். ஆயினும் வடக்குத் தேர்தலை செப்ரெம்பரில் நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரை எந்தவித எழுத்து மூலக் கோரிக்கையையும் தனக்கு விடுக்கவில்லை என தேர்தல் ஆணையாளர் கூறியிருந்தார்.

> பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, தேசப்பற்று தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர அடுத்தடுத்து வெளியிட்டுள்ள இந்த எதிர்க்கருத்துக்கள் வடக்குத் தேர்தல் பின்தள்ளிப் போகுமோ என்ற அச்சத்தை இப்பொழுது ஏற்படுத்தியிருக்கின்றன.

அதேவேளை, வடக்கு மாகாண சபை ஒன்று அமைந்தால் அதனூடாக ஈழம் உருவாகுவதை தடுக்க முடியாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகரவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதிகாரப் பகிர்வின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்த சில சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன எனவும் அதற்காகவே வடக்குத் தேர்தலை நடத்துமாறு அவை இலங்கை அரசை வற்புறுத்தி வருகின்றன எனவும் அமரசேகர குற்றம் சாட்டியுள்ளார். வடக்கு மாகாண சபை [illegible] யாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி அங்கு ஜனநாயக சூழல் ஒன்றை ஏற்படுத்துமாறு சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வரும் இந்தச் சந்தர்ப்பத்தில், தேர்தலை நடத்தி வடக்கு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழர்கள் மத்தியில் வலுத்து வரும் இந்தவேளையில், அந்தத் தேர்தலை பின்தள்ளி இழுத்தடிப்பதற்கான இரகசிய முயற்சிகளை அரசு திரைமறைவில் மேற்கொள்கின்றதா என்ற சந்தேகம் இப்போது எழுந்திருக்கின்றது.


பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர என்போர் அடுத்தடுத்து வெளியிட்டுள்ள இந்த எதிர்க் கருத்துக்கள் வடக்குத் தேர்தல் பின்தள்ளிப் போகுமோ என்ற அச்சத்தை இப்பொழுது ஏற்படுத்தியிருக்கின்றது.

அண்மைக்காலமாக வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு எதிரான கருத்துக்கள் அரச உயர் மட்டங்களிலிருந்து வெளியிடப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாண நிர்வாகம் இப்போது முழுமையாக அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. வடமாகாண ஆளுநராக இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சந்திரசிறி செயற்பட்டு வருகிறார். அரசு வடக்கில் எதனையெல்லாம் செய்ய விரும்புகிறதோ அவற்றையெல்லாம் இந்த வடமாகாண ஆளுநர் ஊடாக இலகுவாகச் செயற்படுத்திவிட முடிகிறது. எல்லா அதிகாரமும் ஆளுநர் கையில் உள்ளதால் அவரே அனைத்தையும் தீர்மானிப்பவர் ஆகின்றார். மக்களின் கருத்துக்கு இங்கு இடமில்லை. வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள், தமிழர்களின் நில அபகரிப்புக்கள், அனைத்தையும் இந்த வடமாகாண ஆளுநரே தளகர்த்தாவாக இருந்து செயற்படுத்துகிறார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபைக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட்டால் வடக்கில் அரசு நினைக்கும் எதனையும் இலகுவில் செய்துவிட முடியாத நிலை ஏற்படும். இதனால் அரசின் பிடி வடக்கில் இருந்து பறிபோய்விடும். இது அரசுக்கு நன்கு தெரியும்.

இதனை கருத்தில் கொண்டே வடக்குத் தேர்தலை இழுத்தடித்து இங்குள்ள மக்களை தொடர்ந்தும் பயமுறுத்தி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசு முயற்சிக்கிறது.

இதற்காகவே தனது அரசில் அங்கம் வகிக்கும் அதிகாரிகளை திரைமறைவில் தூண்டிவிட்டு வடக்குத் தேர்தலுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்குமாறு அரசு கூறியிருக்கிறதோ? என எண்ணத் தோன்றுகின்றது. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தும் இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது.



எவ்வாறாயினும் வடக்குத் தேர்தல் விடயத்தில் சர்வதேச சமூகத்தையும் வடக்கு மக்களையும் அரசு தொடர்ந்து ஏமாற்றுமானால் அதற்கான விளைவுகளையும் தாற்பரியங்களையும் அது விரைவில் சந்தித்தே ஆக வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றிலிருந்து பாடம் கற்கத் தவறிவிட்டது இந்தியா

[முதலாம் பக்கத் தொடர்ச்சி...]

### அயலுறவு முக்கியம்

அமெரிக்க படைத்துறை வரலாற்றாசிரியரும் மூலோபாய ஆய்வாளருமான எட்வேர்ட் லுட்வாக் மார்ச் 22இல் 'எக் கொனமிக் டைம்ஸ்' இற்கு வழங்கிய ஒரு செவ்வியில், இந்தியாவானது தனது அயலவர்களைப் பகைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற தொனிப்பட கூறியிருந்தார்.

சீனாவானது வியட்நாம், இந் தியா, ஜப்பான், தாய்வான் போன்ற எல்லா அயலவர்களோடும் சச்சரவுகளில் ஈடுபட்டதன் மூலம் அதன் போக்கில் தன்னைத் தானே எப்படி முடக்கிக் கொண்டதோ அப்படி இந்தியாவும் தனது அயலவர்களோடு பகை நிலைக்குப் போகக்கூடாது என்று எட்வேர்ட் லுட்வாக் கூறுகிறார்.

இலங்கைத் தீவில் சீனா தற்பொழுது உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளில் தான் அதிகம் முதலீடு செய்து வருவதைச் சுட்டிக்காட்டும் எட்வேர்ட் லுட்வாக், இம்முதலீடுகள் பாதுகாப்புத் துறைக்கும் விஸ்தரிக்கப்படுவதைத் தடுப்பதற்காக இந்தியாவானது சிறிலங்காவுடன் நல்லிணக்கத்தைப் பேணவேண்டும் என்றும் கூறுகிறார்.

இலங்கைத்தீவில் மட்டுமல்ல, ஆபிரிக்காவிலும் சீனா பெரியளவில் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளில் தான் முதலீடு செய்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால், அண்மையில், சீன - சிறிலங்கா கூட்டிணை வானது செய்மதித்துறைக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவருவதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

### இரட்டைக் கொள்கை

ஆனால், இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான ஜஸ்வந் சின்கா, இந்தியாவின் தற்போதுள்ள வெளியுறவுக் கொள்கையை ''வஞ்சகமான கொள்கை'' என்று வர்ணித்துள்ளார்.

ஜெனிவாக் கூட்டத் தொடர் பற்றிய நாடாளு மன்ற விவாதங்களில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு கூறியிருக்கிறார். இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டோடு ஒரு மொழியிலும் இலங்கையோடு இன்னொரு மொழியிலுமாக இரட்டை மொழிகளில் பேசிவருகிறது என்று ஜஸ்வந்த் சின்கா குற்றம் சாட்டுகிறார்.

அவர் மேலும் கூறும்போது, இந்திய வெளியுறவுக் கொள்கையானது பயம், உதவியற்றதனம் என்பவற்றிலேயே தளமிடப்பட்டிருப்பதாகவும், அது உறுதி யான நம்பிக்கை மீது தளமிடப் பட்டிருக்கவில்லை என்றும் விமர்ச்சிக்கின்றார். பயம் என்று அவர் கருதுவது கொழும்பை மேலும் நெருக்கினால் அது பீஜிங்கை நோக்கி மேலும் சரிந்துவிடும் என்று இந்தியாவுக்கு உள்ள பயத்தையே.

### தவறிவிட்டது இந்தியா

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று தனிப்பட்ட அனைத்துலக பேரிடர் குழுவின் அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகிறது. ''புலிகள் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின் இந்திய அரசு சிறிலங்கா மீது செல் வாக்குச் செலுத்தக் கிடைத்த சந்தர்ப்பத்தை இழந்து விட்டது. சக்திமிக்க நெம்புகோல் இழக்கப்பட்டு விட்டது'' என்று அது கூறுகிறது.

ஈழத்தமிழர்களின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் பெரும்பாலான ஆய்வாளர்களும் விமர்சகர்களும் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு யதார்த்தங்களை கவனத்தில் எடுத்தே வகுக்கப்பட வேண்டும் என்று கூறிவருகின்றார்கள்.

மேற்கண்ட பல்வேறு தரப்பினருடையதும், கருத்துக்களின் அடிப்படையில் கூறுமிடத்து, இலங்கை தொடர்பிலான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது ஒரு விவாதப் பொருளாக மாறி வருவதைக் காணலாம்.

உண்மையாகவே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ஜஸ்வந்த் சின்கா கூறியதைப் போல பயத்தின் மீது தளமிடப்பட்டுள்ளதா? அல்லது ''நாங்கள் எங்கள் பலத்தை பிரயோகிக்க வில்லை என்றால் நாங்கள் பலமற்றவர்களாக பார்க்கப்படுவோம்'' என்று கன்வல் சிபல் கூறுமளவிற்கு நிலைமை பலவீனமாக உள்ளதா?

### இரும்புத் தலைமை இல்லை

ஒரு பிராந்திய பேரரசின் வெளியுறவுக் கொள்கையானது மூன்று வேறு தவிர்க்கப் படவியலாத யதார்த்தங்களின் மீது தளமிடப்பட்டிருந்தால்தான் அது எதிர்பார்க்கும் வெற்றிகளைப் பெறமுடியும்.

உள்நாட்டு யதார்த்தம், பிராந்திய யதார்த்தம், அனைத்துலக யதார்த்தம் ஆகிய மூன்றுமே அவையாகும்.

மேற்சொன்ன யதார்த்தங்களுக் கிடையில் சமநிலைப் புள்ளிகளைக் கண்டுபிடிப்பதற்கும், அப்புள்ளிகளை இணைத்து துணிச்சலான ஒரு வெளியுறவுக்கொள்கையை வகுப்பதற்கும், உருக்கினாலும், இரத்தத்தினாலும் வார்க்கப்பட்ட ஒரு தலைமைத்துவம் வேண்டும். இந்திரா காந்தியின் காலம் அத்தகையது என்று கூறப்படுவதுண்டு. இந்திரா காந்திக்குப் பின் அத்தகையதொரு தலைமைத்துவம் இந்தியாவிற்குக் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. வீ.பீ.சிங் ஒரு விதிவிலக்கு. அவர் உருக்கினாலும் இரத்தத்தினாலும் வார்க்கப்பட்டவரல்லர். இந்திய ஆன்மிகத்தின் செழிப்பான பகுதிகளின் வாரிசாகத் தோன்றிய அவர், அதிகபட்சம், விட்டுக்கொடுப்புள்ள ஒரு தாராளவாதியாகவே காட்சியளித்தார். அவருடைய காலத்தில்தான் ஐ.பி.கே.எவ். பின்வாங்கப்பட்டது.

இந்திரா காந்தி இரு துருவ உலக ஒழுங்கிற்குரியவர். வீ.பீ.சிங் இரு துருவ உலக ஒழுங்கின் முடிவுக் கட்டத்தில் பதவிக்கு வந்தவர். நரசிம்மராவ் ஒரு துருவ உலக ஒழுங்கிற்குரியவர். அவர் தோற்றத்திலும், நடவடிக்கைகளிலும் உருக்கினாலும், இரத்தத்தினாலும் வார்க்கப்பட்டவராக காட்சியளிக்கவில்லை.

இந்தியாவின் பொருளாதாரத்தை ஒரு துருவ உலக ஒழுங்கின் பொருளாதார அடித்தளத்தோடு இணைத்ததில் நரசிம்மராவின் பங்களிப்பு மிகவும் முக்கியானது. பொருளாதார விவகாரங்களில் அவருடைய ஆளுமை பொருத்தமான தாக இருந்திருக்கலாம். ஆனால், பிற விவகாரங்களில் அவர் முடிவுகளை ஒத்திப் போடும் ஒரு உத்தியைக் கடைப் பிடிக்கும் தலைவராகவே காட்சியளித் தார்.

நரசிம்மராவ் திறந்து விட்ட கதவுகளின் ஊடாக முன்னேறிய இந்தியா உலகின் மிகப் பெரிய, மிக வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக மேலெழுந்தது. நரசிம்மராவின் பொருளாதார சீர்திருத்தங்களை அவரின் நிதியமைச்சராக இருந்து முன்னெடுத்தவரே மன்மோகன்சிங் ஏறக்குறைய நரசிம்மராவைப் போலவே அவரும் காட்சியளிக்கிறார்.

இப்போதிருக்கும் இந்தியத் தலைமைத்துவம் இரு கூறு களை உடையது. பிரதமராக மன்மோகன் சிங் இருக்கிறார். கிங் மேக்கராக சோனியாகாந்தி இருக்கிறார். இந்த இரு வேறு ஆளுமைகள் சேர்ந்தும் உருக்கினாலும், இரத்தத் தினாலும் வார்க்கப்பட்ட ஒரு தலைமைத் துவத்தை வழங்க முடியாது.

### ஏமாற்றிய எதிர்பார்ப்பு

நரசிம்மராவிற்கும் மன்மோகன்சிங்கிற்கும் இடைப் பட்ட காலத்தில் அத்வானியைக் குறித்து அதிகம் எதிர்பார்ப்புக்கள் காணப்பட்டன. தோற்றத்திலும், நடவடிக்கைகளிலும் அவர் உருக்கினாலும், இரத்தத்தினாலும் வார்க்கப்பட்ட ஒரு தலைவராக வரக் கூடும் என்ற நம்பிக்கையூட்டுபவர் போலக் காட்சியளித்தார். ஆனால், அது நடக்க வில்லை.

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதன் பின் இலங்கை தொடர்பில் இந்தியா தெரிவுகளற்ற ஒரு வெளிக்குள் தள்ளப்பட்டு விட்டதாகக் கருதப்பட்டது. நரசிம்மராவ் புதிய தெரிவுகளை உருவாக்க முயற்சிக்கவில்லை.

ஒரு பிராந்திய பேரரசு ஒரு சிறிய அயல் நாட்டைப் பொறுத்து தெரிவுகளற்றுக் காணப்படுவது என்பது அதன் வெளியுறவுக் கொள்கையின் போதாமையைத்தான் குறிக்கும்.

நந்திக் கடற்கரையில் புலிகள் தோற்கடிக்கப்பட்டபோது புதிய தெரிவுகளை உருவாக்கக்கூடிய வாய்ப் புகள் இந்தியாவுக்குக் கிடைத்தன. ஆனால், அனைத்துலக பேரிடர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல சக்தி மிக்க அந்த நெம்புகோலைப் பிர யோகிக்க இந்தியா தவறிவிட்டது.

இப் பொழுது சிங்கள மக்களும் இந்தியாவைச் சந்தேகிக்கிறார்கள். தமிழ் மக்களும் இந்தியாவைச் சந்தேகிக்கிறார்கள்.

### சீனா உதவ முடியாது


இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவென்பது சீனாவிற்கும் வியட்நாமிற்கும் இடையிலான உறவைப் போன்றது என்று கூறுகிறார் தயான் ஜயதிலக. பண்பாட்டுத் தொடர்ச்சி காரணமாக இணக்கமும் வேறு விவகாரங்களில் பிணக்குகளும் இருப்பதாகக் கூறும் அவர், ''இலங்கையின் வெளியுறவுகளைப் பொறுத்தவரை இந்தியாவுடனான உறவை சமாளிப்பது மிக முக்கியத்துவமுடைய ஒரு முனை'' என்றும் கூறுகிறார்.

நாங்கள் இந்தியாவின் வாசல் படியில் இருக்கிறோம். சீனா எங்களிடமிருந்து வெகு தொலைவில் உள்ளது. இந்தியாவிடமிருந்து வரக்கூடிய எந்தஒரு பலப்பிரயோகத்திலிருந்தும் இலங்கையை பாதுகாப்பதற்கு வேண்டிய வான்படையோ கடற்படையோ சீனாவிடம் இப்பொழுதும் இல்லை. இன்னும் சில ஆண்டுகளில் வரப்போவதுமில்லை என்ற தொனிப்படவும் தயான் ஜயதிலக கூறியிருக்கிறார். மார்ச் மாதம் 28ஆம் திகதி டெய்லி மிரருக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

### கில்லாடி இலங்கை அரசு

ஆனால், இலங்கை அரசாங்கமோ மிக நுட்பமான, பொறியை ஒத்த ஒரு போட்டிக்களத்தை இச்சிறு தீவினுள் திறந்து வைத்துள்ளது. இரு பிராந்திய பேரரசுகளிற்கும் இடையிலான தாழ் நிலை பனிப்போர்க் களமொன்றை இச் சிறுதீவினுள் உருவாக்குவதன் மூலம் இலங்கை அரசு தனது பேரம்பேசும் சக்தியை கிழிறங்காமல் பார்த்துக்கொள்ள முற்படுகிறது. இந்நிலையில் இந்தியாவைப் பொறுத்தவரை போட்டியிலிருந்து பின்வாங்கவும் முடியாது. தோற்றுப் போகவும் முடியாது. அதேசமயம் கடந்த நான்காண்டுகளில் வெல்லத் தேவையான புதிய தெரிவுகளை உருவாக்கவும் அதனால் முடியவில்லை.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இறந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்கத் தவறியது சிங்களவரும், தமிழரும், முஸ்லிம்களும் மட்டுமல்ல பிராந்திய பேரரசான இந்தியாவும்தான். ★




> ஈழத்தமிழர்களின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் பெரும்பாலான ஆய்வாளர்களும் விமர்சகர்களும் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு யதார்த்தங்களை கவனத்தில் எடுத்தே வகுக்கப்பட வேண்டும் என்று கூறிவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய புரட்சியாளர்களுக்கு அரபு லீக்கில் கௌரவம்

உலக நடப்புகள் ஒரு பார்வை

■ ரெங்கன்

சிரியாவில் ஆட்சியாளர்களுக்கு எதிரான புரட்சிவாதிகளுக்கு மகிழ்ச்சியும் அதிர்ச்சியும் தரும் இரண்டு சம்பவங்கள் கடந்த வாரம் நடைபெற்றுள்ளன.

இவைகளில் ஒன்றுதான் அரபு லீக் அமைப்பில் காலியாக உள்ள சிரியாவின் இடத்தில் அமரும்படி எதிர்த்தரப்பினருக்கு கிடைத்துள்ள அழைப்பு. டோகாவில் நடைபெற்ற அரபுத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் சிரியாவின் இடத்தில் அமர்ந்து பணியாற்றும்படி புரட்சி வாதிகளுக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது.

சிரியாப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு அரபு லீக் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றாது போனமைக்காக அதிபர் பாஷார் அல் அசாத்தின் அரசை அரபு லீக் தனது அமைப்பிலிருந்து 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வெளியேற்றியது. இப்பொழுது அந்த இடத்தை அரபு லீக் சிரிய புரட்சி வாதிகளுக்கு வழங்கியுள்ளது.

சிரிய எதிர்த்தரப்பினருக்கு கவலையளிக்கும் விடயம் என்னவென்றால் சிரிய எதிர்த்தரப்பினரின் தலைவர் மோஆஸ் அல்காதிப் தேசிய கூட்டணியில் இருந்து விலகப் போவதாக அறிவித்திருப்பதாகும்.

தலைமைப் பொறுப்பிலிருந்து நான் விலகிக் கொள்வதாக அறிவிக்கிறேன். அப்பொழுதுதான் என்னால் சுதந்திரமாக பணியாற்றமுடியும் என்று தமது பேஸ்புக் இணையத்தில் அறிவிப்பை கடந்த ஞாயிறன்று அவர் வெளியிட்டார்.

தேசிய கூட்டணியின் பொது மாநாடோ, அதிபர் காரியாலயமோ இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் சில கூட்டணி உறுப்பினர்கள் அவரை மீண்டும் தமது பதவியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுள்ளார்கள். காதிப்பின் பதவி விலகலை ஏற்பதா இல்லையா என்பது குறித்து இன்னமும் கூட்டணி முடிவு எதுவும் எடுக்கவில்லையென்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரபு லீக் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு சிரியாவின் இடத்தில் அமரும்படி கோரப்பட்டிருப்பதை சிரிய எதிர்த்தரப்பு கூட்டணியினர் வரவேற்றுள்ளதுடன், கொடுங்கோல் மற்றும் ஒடுக்கு முறைகளில் இருந்து விடுதலையை நோக்கி சிரிய புரட்சி முன்னேறிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இது ஒரு பிரதான முன்னேற்றப்படியாகும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்கு தங்களது இடைக்காலப் பிரதம மந்திரி கஸன் ஹிட்டோ அனுப்பப்படுவார் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

கூட்டணி தலைமைப் பதவியில் இருந்து விலகிப் போவதாக அறிவித்துள்ள மோஆஸ் அல்-காதிப், சில நாடுகள் குறிப்பாக கட்டார் எதிர்த்தரப்பினரைக் கட்டுப்படுத்த முனைகின்றன. ஹிட்டோவை அவர்களே எதிர்த்தரப்பு கூட்டணிக்குள் திணித்திருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டியிருப்பதாக சில எதிர்த்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**பாகிஸ்தானைக் காப்பாற்ற வந்திருக்கும் பர்வேஸ் முஷராப்**

நான்கு ஆண்டுகாலம் வெளிநாட்டில் வாழ்ந்துவிட்டு நாடு



பாகிஸ்தான் முன்னாள் ஆட்சியாளர் முஷாரப் நாடு திரும்பியபோது அவருக்கு வரவேற்பு அமோகமாக இருந்தது.

திரும்பியுள்ள முன்னாள் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப் விடுத்துள்ள அறிக்கையில் நாட்டைக் காப்பாற்றுவதற்காக தமது உயிரைப் பணயம் வைத்துநாட்டுத் திரும்பி வந்திருப்பதாக அறிவித்துள்ளார்.

முஷாரப் நாட்டுக்குத் திரும்பி வரக் கூடாது. அப்படி வந்தால் கொலை செய்வோம் என்று பாகிஸ்தான் தீவிரவாதிகள் அறிவித்திருந்ததையும் புறக்கணித்து விட்டு முஷாரப் நாடு திரும்பியிருக்கிறார்.

நான் இன்று நாடு திரும்பியிருக்கிறேன், நான் திரும்பியே வரமாட்டேன் என்று கூறியவர்கள் எல்லோரும் எங்கே போனார்கள் என்று கராச்சி விமான நிலையத்தில் வந்திறங்கிய பின் கேட்டார் முன்னாள் சர்வாதிகாரியான முஷாரப். எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தோடு அவர் நாடு திரும்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

முஷாரப் 1999 ஆண்டு இராணுவத் தளபதியாக இருந்தபோது அதிகாரத்தைக் கைப்பற்றினார். 2008 ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறினார். ஆசிப் அலி சர்தாரி தமது மனைவி பூட்டோ கொலையுண்டதை அடுத்து ஜனாதிபதியானார்.

**வடக்கு- தெற்கு கொரியாக்கள் போருக்கு ஆயத்தம்**

வடகொரியா தென்கொரியாவுடன் கொண்டிருந்த இராணுவ தொலைத் தொடர்புகளை கடந்த புதன் கிழமையுடன் துண்டித்துக் கொண்டது.

ஏற்கனவே தென்கொரியாவுடனான செஞ்சிலுவை தொலைத் தொடர்புகளை துண்டித்திருந்த வடகொரியா இப்போது தென் கொரிய அரசோடும் இராணுவத்தோடும் கொண்டிருந்த சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டுள்ளது.

இப்போதுள்ள புதிய சூழ் நிலையில் இரு நாடுகளுக்கு மிடையில் போர் ஒன்று திடீரென வெடிக்குமானால் இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவ தகவல் பரிமாற்றம் எதுவும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது என்று வடகொரிய அதிகாரபூர்வ செய்தி முகவர் நிலையம் இராணுவ பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி

> அணு குண்டை முதலில் வீசும் நாடு அதேமாதிரியான ஒரு எதிர்த் தாக்குதலை எதிர்பார்க்கவே வேண்டும். அது அந்தப் பகுதியைப் பேரழிவில் கொண்டுபோய்விடும் என்பதைக் கூறத் தேவையில்லை.

அறிவித்துள்ளது. தென்கொரியாவின் அராஜகத்தன்மையான பகை நடவடிக்கைகள் நீடிக்கும் வரை தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டே இருக்கும் என்று வடகொரிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையில் ராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்புகளை [illegible] லுவை தொடர்புகளையும் வடகொரியா சில வாரங்களுக்கு முன்பு துண்டித்து விட்டமை நினைவுகூரத்தக்கது.

இப்போது உள்ள நிலையில் இரு தரப்பிலும் பதற்றம் மேலோங்கியுள்ளது. வடகொரியா தென்கொரியா மீது ஏவுகணை அல்லது அது ஏற்கனவே அச்சுறுத்தியிருப்பதுபோல் அணுகுண்டை வீசுமானால் தீபகற்பம் பெரும் கொந்தளிப்புக்குள்ளாகும். தென்கொரியா தாக்கப்படுவதை பார்த்துக் கொண்டு அமெரிக்காவும் வாளாவிருக்கமாட்டாது.


அணு குண்டை முதலில் வீசும் நாடு அதேமாதிரியான ஒரு எதிர்த் தாக்குதலை எதிர் பார்க்கவே வேண்டும். அது அந்தப் பகுதியைப் பேரழிவில் கொண்டு போய்விடும் என்று கூறத் தேவையில்லை.

**முதலமைச்சர் ஆகிறார் ஒரு பத்திரிகையாளர்**

பாகிஸ்தானில் பிரபல பத்திரிகையாளர் ஒரு மாகாணத்தின் முதலமைச்சராகபதவியேற்றுள்ளார். பஞ்சாப் மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் பிரபல பத்திரிகையாளர் நஜாம் சேதி என்பவர் இடைக்கால நிர்வாகத்தை நடத்துவதற்கான முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார். சேதி உள்ளூர் ஆங்கில பத்திரிகையொன்றின் பிரதம ஆசிரியராவார்.

**தாய்லாந்து புரட்சிவாதிகளுடன் பேச்சுவார்த்தை**

தாய்லாந்தின் தென்பகுதியில் செயற்பட்டு வரும் புரட்சி



போராளிக் குழுக்களுடன் அமைதி பேச்சுக்களை அரசு ஆரம்பித்துள்ளது.

கடந்த ஒன்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் கிளர்ச்சிகளினால் இதுவரை சுமார் 5,500 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இராணுவ கொண்டாட்டத்தில் ஆங்சாங்சூகி**

கடந்த புதன்கிழமை நடைபெற்ற மியன்மாரின் இராணுவ வருடாந்த அணி வகுப்பு நிகழ்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி ஜனநாயக தலைவி ஆன் சாங்சூகி சிறப்பு அளித்தார். இராணுவத்துடன் இணக்கமான போக்கைத் கடைப்பிடிக்கும் அவரது விருப்பத்தை இது காட்டுவதாக இருந்தது.

பல வருடங்களாக தம்மை வீட்டுக்காவலில் வைத்து வருத்திய ஆட்சியாளர்களுடன் இணங்கிப் போக சூகி விரும்புவதை இது காட்டுவதாகக் கூறப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியும் காங்கிரஸும்: அகிம்சையும் அராஜகமும்

■ தகனன்

காந்தி, காமராஜ் என்று அடிக்கடி பிதற்றிக் கொள்ளும் காங்கிரஸ் காரர்கள், பொதுவாகவே அகிம்சா வாதிகளாக நடந்து கொள்வதில்லை. சென்னை சத்யமூர்த்திபவனில் நடக்கும் கட்சிக் கூட்டங்கள் கூட, ரத்தசரித்ரா ரகத்தில் நிறைவு பெறுவதே வழக்கம். அங்கு நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளவரும் காங்கிரஸ் தலைவர்கள்கூட. ''முன்ஜாக்கிரதை ''யாகவே வருவார்கள்.

என்ன முன்ஜாக்கிரதை? இடுப்பில் ஒரு வேட்டி கட்டியிருந்தாலும், காரில் ஒருசெட் வேட்டி-சட்டைகூடவே வைத்திருப்பார்கள். ஏனென்றால் கூட்டத்தில் வேட்டி டர்ர்.... என்று கிழியும் என்பதுஅவர்களுக்குத் தெரியும்.

தமிழகத்துக்கு வந்து பார்த்தபின் மகாத்மா காந்தி சட்டை அணிவதை நிறுத்தினார். தமிழக காங்கிரஸாரை பார்த்தபின் மன்மோகன் சிங், வேட்டியே அணிவதில்லையாம். (இணையத்தில் படித்தது)

காந்தியவாதிகளாக தங்களை மக்களுக்கு வெளிப்படுத்தி வந்த காங்கிரஸ் கட்சியினரின் உண்மை முகம் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக தலைகாட்டத் தொடங்கியுள்ளது.

தற்போது தமிழகத்தில் நடைபெற்று வருகின்ற மாணவர் போராட்டங்களில் காங்கிரஸ் கட்சியினர் குழப்பங்களை ஏற்படுத்துவது தொடர் கதையாகிவிட்டது.

**மாணவர்கள் நையப்புடைப்பு**

தமிழக காங்கிரஸ் கட்சி சார்பில் திருச்சி, கரூர், பெரம்பலூர் மக்களவைத் தொகுதிக் குட்பட்ட நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் திருச்சி எல்.கே.எஸ். மகாலில் புதன்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்தக் கூட்டத்தையொட்டி மண்டத்தைச் சுற்றிலும் காங்கிரஸ் கட்சியினர் கொடிகள், வரவேற்பு பதாகைகள் மற்றும் தலைவர்களின் பதாகைகளை வைத்திருந்தனர்.

இதனையறிந்த மாணவர்கள் சிலர் மண்டபத்தின் முன்னால் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தத் தீர்மானித்தனர். காலை 10.40 மணியளவில் கறுப்புக்கொடிகளுடன் அங்கு வந்த 15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள், இலங்கைக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறி, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக கோசங்களை எழுப்பினர்.

அங்கே 'கட்டவுட்' இல் சிரித்துக் கொண்டிருந்த காங்கிரஸ்காரரைப் பார்த்த சில மாணவர்கள், ஈழத் தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டு, கட்-அவுட்டில் சிரிக்கும் இவங்களை பாருங்கடா'' என்று கோபத்துடன் கத்தினார்கள். அதற்குமேல் என்ன நடந்திருக்கும்? ஆம், அங்கிருந்த பதாகைகள் மற்றும் 'கட்டவுட்'டுக்களை மாணவர்கள் அடித்து நொறுக்கினர்; கிழித்தனர். தகவல் காங்கிரஸ் கட்சியினருக்கு தெரிவிக்கப்பட்டது. வெள்ளை வேட்டியுடன் நின்றிருந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டுவந்துமாணவர்களைமுற்றுகையிட்டனர்.

இதற்கிடையில் சிலர் கட்சி அலுவலகத்திலிருந்து உருட்டுக் கட்டைகளை எடுத்துவந்தனர். பிறகென்ன தாக்குதல் தொடங்கப்பட்டது. மாணவர்களின் சட்டைகளைக் கிழத்து கட்டைகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. காவலுக்கு நின்றிருந்த பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். மாணவர்களுக்கு தப்பித்து ஓடுவதைத் தவிரவேறு வழி இருக்கவில்லை.

இந்த தாக்குதலில் காயமடைந்த கஜேந்திரபாபு, முகம்மது ஷரீப், சத்தியகுமரன் ஆகிய மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

**உருட்டுக் கட்டை காங்கிரஸ்காரர்கள்**

திருச்சியில் மாணவர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து, நெல்லையில் காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப் போவதாக நெல்லை மாவட்ட மாணவர் கூட்டமைப்பினர் அறிவித்து இருந்தனர்.இதனால் நெல்லை கொக்கிரகுளத்தில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்துக்கு யாரும் செல்ல முடியாத அளவுக்கு பொலிஸார் தடுப்பு வேலி அமைத்து இருந்தனர்.

காலை 10-30 மணிக்கு மாணவர் கூட்டமைப்பினர் 21 பேர், மாணவர் மரியதங்கராஜ் தலைமையில் கொக்கிரகுளம் பஸ் நிறுத்தத்தில் இருந்து காங்கிரஸ் அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அவர்களைப் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் தடுத்து நிறுத்திக் கைது செய்தனர். கைதானவர்களில் 4 மாணவிகளும் இருந்தனர்.

இதேபோல் நெல்லை சட்டக்கல்லூரி மாணவர்கள் 13 பேர் நெல்லை வண்ணாரப் பேட்டையில் இருந்து காங்கிரஸ் அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அவர்களையும் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் தடுத்து நிறுத்திக் கைது செய்தனர். இரண்டு இடங்களிலும் கைது செய்யப்பட்ட 34 பேரும் அங்குள்ளஒரு திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிடுவதைத் தடுக்கும் வகையில் பொலிஸாருக்கு மேலதிகமாக நெல்லை மாவட்ட காங்கிரஸ் அலுவலகம் முன்பு காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலர் திரண்டு நின்றனர். சில காங்கிரஸ் நிர்வாகிகள் கையில் உருட்டுக் கட்டையுடன் வந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

> “காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிடுவதைத் தடுக்கும் வகையில் பொலிஸாருக்கு மேலதிகமாக நெல்லை மாவட்ட காங்கிரஸ் அலுவலகம் முன்பு காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலர் திரண்டு நின்றனர். சில காங்கிரஸ் நிர்வாகிகள் கையில் உருட்டுக் கட்டையுடன் வந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.





இவ்வாறு பல இடங்களிலும் மாணவர்கள் போராட்டத்திற்கு காங்கிரஸ் கட்சியினர் இடையூறுசெய்துவருகின்றார்கள்.

**ஊடகங்களுடனும் காங்கிரஸார் சண்டித்தனம்**

மாணவர்களுடன் மட்டுமல்லாது ஊடகங்களுடனும் காங்கிரஸ் கட்சியினர் சண்டித்தனம் புரிய ஆரம்பித்துள்ளனர். தமிழகத்தின் முக்கிய செய்தித் தொலைக்காட்சியாக இருக்கின்ற 'புதியதலைமுறை' தொலைக்காட்சியில் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பான விவாதம் ஒன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்த விவாதத்தில் தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மத்திய முன்னாள் அமைச்சருமான ஈ.வி.கே.எஸ் இளங்கோவனும் கலந்து கொண்டிருந்தார். அந்த விவாதத்தை ஒழுங்கு செய்து நடத்திக் கொண்டிருந்த ஊடகவியலாளருடன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அநாகரிமாக நடந்து கொண்டார். 'புதியதலைமுறை' தீவிரவாத அமைப்புகளின் துணையோடு மாணவர் போராட்டத்தைத் தூண்டுவதாகவும், இதன் விளைவாக சி பி ஐ சோதனையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் அவர் ஊடகத்தை பகிரங்கமாக எச்சரித்திருந்தார்.

இலங்கைத் தமிழர் விவகாரம் இந்திய அரசியலில் இன்னும் தீவிரமடையும் சாத்தியம் உள்ளநிலையில், காந்தியவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் காங்கிரஸாரின் அராஜகங்கள் இன்னும் தொடரும் என்றே நம்பலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org